# தமிழரசு

பிப்ரவரி 1உ இதழும்
16உ இதழும் இணைந்து

கண்கவரும் வனப்புடன்
ஏராளமான பக்கங்களுடன்

# சாதனை
## மலராக

வளர்ச்சித் திட்டப்பணி விவரத் தொகுப்பாக

**வெளிவருகிறது!**

குவித்துள்ள வெற்றிகளின் பட்டியல்
மட்டுமல்ல!
நம் முன்னேற்றத்தின் அடையாளச்
சின்னமிது!




விலை 50
காசு

உங்கள் பிரதிக்கு
விற்பனையாளரிடம்
பதிவு செய்க!

# விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்!

தமிழ்நாட்டில் 1967—68-ஆம் ஆண்டில் நடைபெற்ற நெல், சோளம், கேழ்வரகு, கம்பு ஆகிய பயிர்களின் விளைச்சல் போட்டியில் கீழ்க்கண்டவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள்.

## நெல்

**முதற் பரிசு**

திரு சு. நாராயணசுவாமி,
த/பெ. சுப்பராஜா,
திம்மநல்லூர் (அஞ்சல்),
திண்டுக்கல் வட்டம்,
மதுரை மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 4,788·8 கிலோ நெல் விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 2,000 பரிசு அளிக்கப்படும்.

**இரண்டாம் பரிசு**

திரு ரா. முத்துக்கவுண்டர்,
த/பெ. ராமசாமிக் கவுண்டர்,
அரூர்,
தருமபுரி மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 4,556 கிலோ நெல் விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 1,000 பரிசு அளிக்கப்படும்.

**மூன்றும் பரிசு**

திரு என்.எஸ். பெரியசாமி,
த/பெ. சுப்பராயன் கவுண்டர்,
அரூர் (அஞ்சல்),
தருமபுரி மாவட்டம்,

இவர் ஒரு ஏக்கரில் 4,440 கிலோ நெல் விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 500 பரிசு கொடுக்கப்படும்.

## சோளம்

**முதற் பரிசு**

திரு கு. நல்ல கவுண்டர்,
த/பெ. திரு குட்டிய கவுண்டர்,
அக்கரி நெகமம்,
உத்தண்டியூர் (அஞ்சல்).

இவர் ஒரு ஏக்கரில் 2,875 கிலோ சோளம் விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 2,000 பரிசு அளிக்கப்படும்.

## கம்பு

**முதற் பரிசு**

திரு பெரியண்ண கவுண்டர்,
த/பெ. திரு காவ கவுண்டர்,
மல்லிகுட்டை(அஞ்சல்),
(வழி) தாரமங்கலம்,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 1,556·5 கிலோ கம்பு மகசூல் எடுத்துள்ளார். இவருக்கு ரூபாய் 2,000 பரிசு அளிக்கப்படும்.

**இரண்டாம் பரிசு**

திரு கே.ஏ. ஜெயராமன்,
த/பெ. கே. அப்பாய் செட்டியார்,
துலுக்கனூர் கிராமம்,
ஆத்தூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 1,321·7 கிலோ கம்பு விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 1,000 பரிசு அளிக்கப்படும்.

## கேழ்வரகு

**முதற் பரிசு**

திரு பி.கே. நரசிம்மன்,
த/பெ. திரு கந்தசாமி கவுண்டர்,
பாப்பாரப்பட்டி (அஞ்சல்),
தருமபுரி மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 2,574·8 கிலோ ராகி விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 2,000 பரிசு அளிக்கப்படும்.

பரிசு பெற்ற உழவர் பெருமக்களை 'தமிழரசு' சார்பில் வாழ்த்துகின்றோம்.

(குறிப்பு : பரிசுத்தொகை பொருள்களாகவே கொடுக்கப்படும். இதற்கெனப் பரிசு அளிக்கும் விழா பின்பு நடைபெறும்.)

**வீ**டு கூப்பிடு தூரத்திலேயே இருந்தாலும், என்றைக்குமே பள்ளிக்கூட நேரத்தில் வீட்டிற்கு வரமாட்டாள் ஆசிரியை கற்பகம். ஒரு சொல்லுக்கு இடம் வைத்துக் கொள்ளக்கூடா தென ஆரம்பத்திலேயே பாட்டி கண்டித்திருக்கிறாள்.

காலையில், பள்ளியில் வகுப்புத் தொடங்கிச் சற்று நேரத்திற்கெல்லாம், உடன் பணி



# என்றும் நிறைந்திருப்பாள்

குறுநாவல்

## சோம. மகாதேவன்

யாற்றும் ஆசிரியர் சங்கரன், கற்பகத்தைத் தேடி வந்து, அந்தத் தகவலைச் சொன்னான்.

தலைமை ஆசிரியரிடம் சொல்லி விட்டுப் பரபரப்புடன் வீட்டை நோக்கி நடந்தாள் கற்பகம்.

அவள் காது கேட்கவே, எத்தனையோ பேசி, பயமுறுத்திச் சலித்துப் போன உறவு முறையார்கள், இன்றைக்கு நேரடிப் போராட்டத்தில் இறங்கி விட்டார்களாம். பாட்டியும்-பேத்தியும்தானே, என்ன செய்து விடுவார்கள் என்ற தைரியம் —இன்றைக்குத்தான் வந்திருக்கிறது.

நெஞ்சு பதைபதைக்க வீட்டிற்குள் நுழைந்தாள் கற்பகம்.

உள் நடையிலே பாட்டி அமைதியாகவே உட்கார்ந்திருந்தாள். திரும்பிப் பார்த்து, பேத்திப் பெண் வந்து நிற்கும் அவசரத்தைக் கண்டும், அமைதியாகவே, '' உங்கிட்டேயும் வந்து சொன்னாங்களா ? '' என்று கேட்டாள்.

மலையே அசைந்து வந்தாலும், இந்தப் பாட்டி கலங்கவே கலங்காது. பாட்டியின் இந்தப் பண்பு, ஊரறிந்தது.

பாட்டியின் அமைதியைக்கண்டு கற்பகத்தின் படபடப்புச் சற்றுத் தணிந்தது.

பாட்டி மேலும் சொன்னாள்.

'' கொள்ளிக்குப் பிள்ளை இல்லாத சொத்து; இந்த மாதிரித் தகராறு வரத்தான் செய்யும். வரட்டும் '' என்றாள் சாவதானமாகவே.

'' வெளியூரிலேயிருந்து இருபது பேருக்கு மேலே ஆளுகளைச் சித்தப்பா கொண்டாந்திருக்காராம். ஏன் பாட்டி— போலீசிலே சொல்லுவோமா ? '' என்று கேட்டாள் கற்பகம்.

'' இதுக்கெல்லாம் ஊரைத் தாண்டிப் போகணுமா ?

நாமே தான் தீர்த்துக்கணும்'' என்றாள் பாட்டி.

''நானே போகட்டுமா பாட்டி.?'' என்று அவசரத்துடனே கேட்டாள் கற்பகம்.

பாட்டி கற்பகத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

''அந்த மடப்பய வெறியேறிப்போய் நிக்கிறான். நான் போகாம இந்தப் போராட்டம் தீரப்போகுதா? நாம பேசாம இருந்தாலும் சூறையாடிப் போடுவாங்க'' என்று சொன்ன பாட்டி, எழுந்து புறப்பட்டவளாக, ''நீ வரவேண்டாம்மா-நானே போயிட்டு வாரேன்'' என்று சொல்லிவிட்டு, அப்படியே தலைவாசலை நோக்கி நடந்தாள்.

வாசல் வரை பின்தொடர்ந்து வந்த கற்பகம் தயங்கி நின்றாள்.

வெட்டுக்குத்து என்றெல்லாம் அவர்கள் பேசிக்கொள்கிறார்களாமே! பாட்டி தனியாகப் போறாங்களே!

கற்பகத்தின் கண்கள் கலங்கின.

பார்த்துக்கொண்டே இருந்தாள்.

இரண்டு வீடு கடந்து செல்லுவதற்குள்—பாட்டியுடன் நாலைந்து பேர் சேர்ந்து கொண்டார்கள்.

தர்மம்—என்றைக்கும் தலை குனியாது.

கற்பகம் குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

2

இன்று, தகராறுகளுக்குள் சிக்கி இருக்கும் சொத்துக்களைப் பாடுபட்டுத் தேடிக் கொண்ட வெள்ளைச்சாமிக்கு, அந்த நாளையிலிருந்தே யாரையும் அதட்டிப் பேசத் தெரியாது. பெரும்பாலும் வயல் வரப்புக்களில்தான் அவனைக் காண முடியும். பள்ளிக்கூடம் என்று எதற்குள்ளும் நுழைந்தவனல்ல. தாய்மொழியில் எழுத்துக் கூட்டியாவது படிக்கவும், நாலு வார்த்தை எழுதவும், திருமணத்திற்குப் பிறகுதான், அதுவும் மாலையிட்டவளிடம் கற்றுக்கொண்டவை.

நாகம்மாள் எட்டுப் படிப்புப் படித்தவள். படித்ததைப் புரிந்துகொள்ளவும்—நினைத்ததை நன்கு எழுதவும் அவளுக்கு ஞானம் உண்டு. மணமான புதிதில், ஓய்ந்த நேரத்தில் பெரிய பெரிய புத்தகங்களை வைத்துப் படித்துக்கொண்டிருப்பாள். இது, வெள்ளைச்சாமிக்கு வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். கிராமத்தில், பெண்களின் தொடர்பான எந்த நல்ல காரியத்திலும் நாகம்மாளின் தலை தெரியும். வெள்ளைச்சாமிக்குப் பெருமையாகவே இருக்கும்.

சிறுகச் சிறுகச் சேர்த்து, முதலில் ஒரு ஏக்கர் நன்செய் வாங்கினான். அது பெருகி வந்தது. ஆனால் நரைகண்ட போதும் பெயர் சொல்ல ஒரு பிள்ளையேனும் பிறக்கவில்லை. இதைப் பற்றியும்—கணவனும் மனைவியும் தீவிரமாகச் சிந்திப்பதும் இல்லை.

தற்செயலாகவே தான் அதுவும் நடந்தது.

நாகம்மாளின் உடன் பிறந்த தங்கையின் பெண் வயிற்றுப் பேத்தி, ஐந்து வயதுச் சிறுமி, பெற்றவர்களை இழந்து அனாதையாக நின்ற போது, இழவுக்குச் சென்றிருந்த நாகம்மாள், சிறுமி கற்பகத்தையும் கூடவேஅழைத்து வந்தாள்.

கற்பகம் வந்த பிறகு அந்த வீடே நிறைந்தது.

வெள்ளைச்சாமி, மேலும் இரண்டு ஏக்கர்கள் நன்செய் வாங்கினான். வீட்டையும் ஓரளவு எடுத்துக் கட்டினான்.

கற்பகத்தைப், பெற்ற தாயினும்மேலாகப் போற்றி வளர்த்தாள் நாகம்மாள். பள்ளி இறுதி வகுப்பு வரையிலும் படித்து, ஆசிரியர் பயிற்சியும் முடித்து, ஈராண்டுகளாகவே, உள்ளூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியில் வேலையும் பார்க்கிறாள் கற்பகம்.

எங்கிருந்தோ வந்து வெள்ளைச்சாமி வீட்டிலே வளர்ந்த பெண், அவனுடைய சொத்துக்களுக்கு உரிமைக்காரியாகி விடமுடியுமா?

இரண்டு வருடங்களுக்கு முன்னால், எதிர்பாராத விதமாக அந்த வெள்ளைச்சாமிக் கிழவன் மாரடைப்பால் காலமான தினத்திலிருந்துதான் பிரச்சனைகள் மூண்டு வந்தன!

இழவு வீட்டிலேயே கிழவனுக்கு யார் கொள்ளிவைப்பது என்ற கேள்வி தலை தூக்கியது.

கிழவனோடு பிறந்தவன்—முன்னரே போய்ச் சேர்ந்துவிட்டான். அவன் மகன் சின்னச்சாமி—பெரியப்பனுக்குக் கொள்ளிவைக்கும் உரிமைக்காரனாக, முன்னாலே வந்தான். கிழவன்—முப்போகம் விளையும் நன்செய் அல்லவா—சேர்த்து வைத்துவிட்டுப் போயிருக்கிறான்?

அப்போதிருந்த நிலையில் நாகம்மாப் பாட்டி—எதையுமே தட்டிச் சொல்லவில்லை.

பெரியப்பனுக்குச் சின்னச்சாமியே முடியெடுத்துக் காரியங்களைச் செய்தான்.

அதன் பிறகு, இரண்டொரு மாதங்கள், தானாகவே முன் வந்து, இங்கே விவசாயக் காரியங்களை எல்லாம் கவனிக்கத் தொடங்கினான் சின்னச்சாமி. அவனுக்கும் முப்பத்தைந்து வயதாகிறது. சொத்து, சுகம் என்றும் தனியே இருக்கத்தான் செய்கிறது. என்னதான் இருந்தாலும் வருவதை விடமுடியுமா?

ஆனால்—நாகம்மாள் பாட்டி விவரம் தெரிந்தவள். எதிலும் கணக்காகவே இருந்தாள். எல்லாமே அவளது கைக்குள்ளே இருந்தது.

பெரியப்பன் வீட்டுக்குப் போவதில்லை என்றநிலை ஏற்பட்ட பிறகு, அங்கேயும், இங்கேயுமாக நின்று பேசஆரம்பித்தான் சின்னச்சாமி. இந்தப் பொல்லாத கிழவி, கூப்பிட்டு வைத்து, இன்னார்க்கு இன்னது என்று பேசி முடித்துக் கொள்ளும் என்று எதிர்பார்த்தான். நாகம்மா பாட்டியிடம் அவனது பாய்ச்சல் எதுவும் பலிக்கவில்லை.

நாகம்மாப் பாட்டிக்கு அந்த வட்டாரத்திலேயே நல்ல செல்வாக்கு உண்டு. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இந்தக் கிராமத்திலே மகளிர் மன்றம் ஆரம்பித்து இன்று வரை தொடர்ந்து போட்டியில்லாமல், தலைவியாக இருந்துவரும் காரியக்காரக் கிழவி. எந்தப் பொதுக்காரியமாயினும் கிழவி இல்லாமல் எங்கே நடக்கிறது?

பிள்ளையில்லாத சொத்துப் பிரிவினை பற்றிப் பாட்டியிடம் தூதுபோய் வந்த நபர்களும், ''கிழவியிடம் பேசிப் பலன் காணமுடியாதய்யா, அது தானாகக் கனியாதய்யா'' என்ற முடிவையே சின்னச்சாமியிடம் சொன்னார்கள்.

சின்னச்சாமி ஆத்திரக்காரன். அவனுக்கும் பக்க பலமாக நாலுபேர் சேராமல் இருப்பார்களா?

முதல் அடி இந்தக் கிழவிக்கு மட்டுமல்லாமல், கிராமத்தில் எல்லாருமே, இந்தப் பிரச்சனையில் கவனம் செலுத்தும் விதமாகத் திட்டத்தை நடைமுறையில் செயல் படுத்த ஆரம்பித்து விட்டான் சின்னச்சாமி.

கிராமத்திலுள்ள மந்தைக் களத்தருகே, இரண்டொரு தென்னை மரங்களுடன் வெள்ளைச்சாமிக் கிழவனுக்குச் சொந்தமான மனையடி இருக்கிறது. பல வருடங்களாகவே அந்த நிலத்தையும் களத்தோடு சேர்த்து, கிராமமே பயன்படுத்தி வருகிறது.

பெரியப்பனுக்குச் சொந்தமான இந்த மனையடியில் வாணம் பிரித்து, மாட்டுத் தொழுவம் கட்டப் போவதாகஆரம்பித்தால் பொதுவில் நாலுபேர் சேர்ந்தாவது, சொத்து விவகாரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கை சின்னச்சாமிக்கு!

தனக்கு உரிமை இருப்பதாகச் சொல்லி, எதற்கும் தயாராகவே நிற்கிறான் சின்னச்சாமி.

நாகம்மாப் பாட்டியும் வருகிறாள்.

நெல்லே விளையுமோ-நெருஞ்சிதான் பூக்குமோ— யாரே அறிவார்

## 3

இன்றைய பொழுது பரபரப்புடன்தான் விடிந்திருக்கிறது.

தெருவிலும், திண்ணைகளிலும் கூடி இருந்தவர்கள், சற்று நேரத்தில் நடக்கப் போகும் காரியத்தைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பிள்ளை இல்லாதவன் சொத்தை மறிக்கவேண்டுமென்று நினைத்தால் அதற்கு வயற்காடு இல்லையா? அதிலே போய் நின்று ஏர் பூட்ட வேண்டியதுதானே! கிழவனுக்குச் சொந்தமாக இருந்தாலும், களத்தோடு சேர்த்து, வசதியாக ஊருக்குப் பயன்படும் இடத்தில் மாட்டுத் தொழுவம் கட்டப்போவதாக நிற்கிறானே இந்தச் சின்னச்சாமி!

உடையவர்கள் அல்லாது, இந்த அடாதுடிக்காரனிடம் வேறு யார் கேட்க முடியும்?

நாகம்மாப் பாட்டி வராமலா நின்று விடும்!

மந்தைக் களத்திலே பெரிய கும்பல் சேர்ந்து விட்டது. அருகில் நெருங்காமலே, எட்ட நின்று, ஆணும் பெண்ணுமாக, வேடிக்கையாகவே பார்த்துக் கொண்டிருந்தனர்.

மண் வெட்டி, கடப்பாறைகளோடு, வாட்ட சாட்டமாக, இருபது ஆட்களுக்கு மேலாகவே எங்கிருந்தோ அழைத்து வந்திருக்கிறான் சின்னச்சாமி. இந்த ஊரை நினைக்கவில்லை. கிழவிக்கு இவ்வளவு போதும் என்றே நினைத்திருப்பான்!



**ஐக்கிய நாடுகள் சபையில் ஒற்றுமையைக் குறிக் கோளாகக் கொண்டு பணி யாற்றினாலும்— அனைத்து நாட்டுக் கொடிகளும் வெளியே பறக்க—உள்ளே பேசிவிட்டு வெளியே வந்தாலும் எந்த நாட்டின் மீது யார் படையெடுப்பார்களோ என்ற பேச்சும் இருக்கும்! ஆனால் உண்மையான ஒற்றுமை உணர்வினை "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற பொன் மொழியில் வடித்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தந்த தமிழரின் பெருந்தன்மையை எண்ணி எண்ணி நெஞ்சம் விம்முகிறது.**

செய்வதையும், முறையுடனே தான் செய்கிறான் சின்னச்சாமி.

கிழக்கு மூலையில் மஞ்சள் பிடித்து வைத்து—மாலையிட்டுத் தேங்காய் உடைத்துக் கற்பூரமும் கொளுத்துகிறான்.

கொத்தன் மனையடியை அளந்து, நூல் அடிக்கவும், சந்தனம் பூசிக்கொண்ட ஆட்கள் வாணம் தோண்ட ஆரம்பித்த போது, பாட்டியும் வந்து விட்டாள். கூடவே கிராமத்தின் சர்க்கார் நாட்டாண்மையும், குறிப்பிடத்தக்க சிலரும் வந்தனர். இவர்களோடு, ஆங்காங்கே சுற்றி நின்ற கும்பலும் நெருங்கி வந்தது.

நாட்டாண்மை முன்னால் வந்து, ''சின்னச்சாமி! வேலையை நிறுத்தச்சொல்லு'' என்றார்.

''ஏன் நிறுத்தணும்? இது எங்க பெரியப்பன் சொத்து. நான் கொள்ளி வச்சிருக்கேன்'' என்று தலை நிமிர்ந்தே பதில் சொன்னான் சின்னச்சாமி.

பாட்டி, இவனைக் கவனிக்கவில்லை. அவள், வேலையாட்களின் பக்கமாகப்போய் நின்றாள்.

''இந்தக் காரியத்தைச் செய்யிறதுக்கு— வெளியூரிலே இருந்து நீங்க வரலாமா? பாருங்க— இங்கே இருக்கிறவங்க கண்ணுக்குத் தெரியலையா?'' என்று கேட்டாள்.

வேலையை ஆரம்பித்தவர்கள் திகைத்து நின்றனர்.

''எதுவும் தகராறு இல்லையின்னுதான் ஐயா சொன்னாரு; நாங்க வந்திருக்கோம்'' என்று முன்னால் வந்து நின்று சொன்னான், அவர்களிலே சற்று வயதானவன்.

''இதிலே விவகாரம் இருக்கு! இதை எங்க ஊருக்குள்ளே நாங்களேதான் தீர்த்துக்கணும். நீங்க போங்க'' என்றாள் பாட்டி.

''எங்களுக்கு எதுக்குங்க அம்மா இந்த வம்பு? நாங்க விலகிக்கிறோம்'' என்று சொல்லி, வந்திருந்த கொத்தன் சற்றுத்தள்ளிப்போய் நின்றான்.

கொதிப்போடு, பாட்டியின் முன்னால் வந்து நின்றான் சின்னச்சாமி.

''என் உடம்பிலேயும் வலு இருக்கு. நானே செய்யிறேன். யாரு குறுக்கே வர்றது......?

வாங்க'' என்று சொல்லி, பக்கத்தில் கிடந்த மண் வெட்டியை எடுத்து, ஆவேசம் கொண்டவனாக வெட்ட ஆரம்பித்தான் சின்னச்சாமி.

நாட்டாமை முன்னுக்கு வந்தார்.

''கொஞ்சம் பொறுமையா இரு சின்னச்சாமி. இந்த இடம் உன் பெரியப்பன் சொத்தாவே இருந்தாலும்—இப்ப ஊருக்கே பொதுவா இருக்கு. கூட்டடியிலேயிருந்து, மேடேறி வந்து, மாடுக நிக்கிறது இந்த இடத்திலே தான்! இதிலே தொழுவம் கட்டணும்னு நினைக்கிறது நல்லா இருக்கா?'' என்று கேட்டார்.

பள்ளம் தோண்டுவதை நிறுத்தித் தலை தூக்கிப் பார்த்தான் சின்னச்சாமி.

''என் பெரியப்பன் சொத்துன்னு ஒத்துக்கிட்டிங்கல்ல, அது போதும். நீங்க விலகுங்க. யாரு நெருங்கி வந்தாலும் கொலைதான் விழுகப் போகுது'' என்று கோபக் குறியுடனே சொல்லிவிட்டு, மேலும் தொடர்ந்து வெட்ட ஆரம்பித்தான் சின்னச்சாமி.

எல்லாருடைய கண்களும் பாட்டியின் மீதே இருந்தன.

அவனுக்கு வெறி பிடித்திருக்கிறது. தலையில் ஓங்கிப் போட்டாலும் போடுவான்.

தலையாரி செல்லக்கண்ணுவின் கையில், எப்பொழுதும் நீண்ட தடியிருக்கும். அவன் பாட்டியின் பின்னால் வந்தான்.
பாட்டி அமைதியாகவே, சின்னச்சாமிக்கு முன்னால் போய் நின்றாள்.

''நீ—இவ்வளவு நல்ல முடிவுக்கு வருவேன்னு—நான் நினைக்கவே இல்லை சின்னச்சாமி! பெரியப்பனுக்குக் கொள்ளி வச்சதுக்கு இந்த இடமே போதுமா உனக்கு?'' என்று பாட்டி கேட்டபோது, சின்னச்சாமி வேகம் குறைந்து தலை நிமிர்ந்தான்.

கிழவியின் பேச்சு அவனைத் தடுமாற வைத்தது.

''இதே எப்படி முடிவாகிப் போகும்? இப்பத்தான் ஆரம்பமாகி இருக்கு!'' என்றான் கடுப்போடு.

''யோசனை செய்து—நல்லாவே ஆரம்பிச்சிருக்கே. நடத்து! யாரும் குறுக்கே வரமாட்டாங்க'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி, ''வாங்க நாட்டாமை'' என்றவாறு முன்னால் நடந்தாள் பாட்டி.

பாட்டியின் குறுக்கு வெட்டிலே சின்னச்சாமி மயங்கி நிற்பதைக் கண்ட நாட்டாமை, உள்ளுக்குள்ளே சிரித்துக்கொண்டு ஒன்றும் பேசாமலே பாட்டியைப் பின் தொடர்ந்தார்.

கும்பலும் நகர்ந்தது.

விலகி நின்ற கிழவனொருவன், திகைத்து நின்றுவிட்ட சின்னச்சாமியின் பக்கமாக நெருங்கி வந்தான்.

''கிழவி இப்பத்தான் பிடி கொடுத்திருக்கு. நாளை மறுநாளு எனக்கு என்ன வழி சொல்றிங்கன்னு பதமாக் கேளு. ஊரடி நஞ்சையெல்லாம் கிடக்கிறப்ப—இந்த மனையடியிலே நிக்கிறியே!'' என்று மெதுவாகச் சொன்னான்.

மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டு, சின்னச்சாமி திரும்பிய போது, வெளியூரிலிருந்து அப்போதுதான் வந்திருந்த, அவனது மாமனார் துரைச்சாமி, அவசரத்துடனே மருமகனைத் தேடிக் கொண்டு அங்கே வந்துவிட்டார்.

''நான் வர்றதுக்குள்ளே நீங்க முந்திக்கிட்டிங்க. நடந்ததும் நல்லதுக்குத்தான். வேறே வழி இருக்கு. வாங்க வீட்டிலேபோய்ப் பேசிக்கலாம்'' என்று அழைத்தார் துரைச்சாமி. அவர் நெல் வியாபாரி. நாலு திசையும் போய் வருபவர்.

''என்ன வழி இருக்கு?'' என்று அந்த இடத்திலேயே நின்று கேட்டுக் கொண்டிருக்காமல், மாமனாரைப் பின்தொடர்ந்து சென்றான் சின்னச்சாமி.




வீட்டிற்குள் நுழைந்த போதே, சின்னச்சாமியின் மனைவி முத்தம்மாள் அங்கலாய்த்துக் கொண்டாள்.

''நம்ம காரியம் ஆகுற வரைக்கும் கிழவி கிட்ட பயந்து நயந்துதான் போகணும்னு நான் சொல்லவும் செய்தேன்! ரெண்டு நாளைக்குள்ளே திட்டம்போட்டு, ஊரே பாக்க—களத்து மேட்டிலே இத்தனையும் நடத்தி வச்சுப் போட்டிங்க'' என்று சொல்லியே வரவேற்றாள்.

''அதுக்கு என்ன இப்ப? இந்த உயிரு எதுக்காக இருக்கு? என்ன நடக்கப் போகுதுன்னு நீயும் பாக்கத்தான் போறே!'' என்று சொல்லிச் சீறினான் சின்னச்சாமி.

''நீ சும்மா இரும்மா'' என்று சொல்லி, முதலில் மகளை மடக்கினார் துரைச்சாமி.

''வந்து உட்காருங்க. அமைதியாப் பேசலாம். இந்தக் கிழவி எத்தனை காலத்துக்கு ஆளப் போகுது? செத்த சவத்துக்கு நாம ஏன் உயிரைக் கொடுக்கணும்?'' என்று பக்குவமாகச் சொல்லி, மருமகனைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு ஆரம்பித்தார்.

''இந்த மட்டுக்கும்—காலையிலே நடந்தது, அடிதடியின்னு ஆகாம முடிஞ்சதும் நல்லதுக்குத் தான். நேத்துத்தான் அந்தத் தகவல் என் காதிலே விழுந்திச்சு. நான் நினைச்சபடியே, கிழவன் சொத்தின் பேரிலே பத்திரம் பதிஞ்சிட்டுத் தான் போயிருக்கான்'' என்றார்.

''யாரு பேரிலே'' என்று ஆவலோடு கேட்டான் சின்னச்சாமி.

''அந்தப் பொண்ணு கற்பகத்தின் பேரிலே ரெண்டு ஏக்கரும், கிழவிக்குச் சா முதலுக்கு ஒரு ஏக்கரும் எழுதி வச்சிருக்கான்.''

''எழுதிவச்சாச் செல்லுமா?''

''பூர்வீகச் சொத்துன்னா செல்லாது. எல்லாமே கிழவன் சம்பாத்யம்தானே! தன் விருப்பத்துக்கு எழுதி வைக்கிறது செல்லும்'' என்றார் துரைச்சாமி.

''இப்ப என்ன செய்யறது?'' என்று திகைப்போடு கேட்டான் மருமகன்.

''திட்டத்தோடதான் வந்திருக்கேன். கற்பகத்தை, உன் மச்சினன் ரத்தினத்துக்குக் கட்டிப் போடலாம். இப்ப—அந்தப் பெண்ணை உள்ளே இழுத்துப் போட்டுக்கிட்டா எல்லாப் பிரச்

சனையும் சுலபமாத் தீர்ந்து போகும்'' என்று மேலும் சொன்னார் துரைச்சாமி.

சின்னச் சாமிக்கு இது நல்ல யோசனையாகவே பட்டது.

''நீங்க நேற்றே வந்திருந்தா —இன்னிக்கி நடந்ததை நிறுத்தி இருக்கலாமே!'' என்றான்.

''எதுக்கும் அப்பாவை வரச் சொல்லிக் கலந்துக்கிட்டுச் செய்யுங்கன்னு நான் சொல்லலையா? அதுக்குள்ளே உங்களுக்கு அவசரம். முன்கோபம்தான் முன்னுக்கு வருது. வீட்டிலே பொம்பளை சொல்றதையும் கேட்கணும்'' என்று சொல்லிச் சந்தர்ப்பத்தை அனுசரித்து முன்னுக்கு வந்தாள் முத்தம்மா.



''இப்பவும் எதுவும் கெட்டுப் போகலே! சத்தமில்லாம இருந்தாலும் கிழவியும் மசியாது. நாம நாளை மறுநாள் பொண்ணு கேட்டுப் போகணும்'' என்றார் துரைச்சாமி.

''போகலாம்; முறையும் இருக்கிறப்ப பொண்ணு இல்லையின்னு சொல்லிப்போடும் கிழவி?'' என்றான் சின்னச்சாமி.

உள்ளுக்குள் —கற்பகத்துக்குக் கிழவன் நிலத்தை எழுதி வைத்து விட்டான் என்ற செய்தி அதிர்ச்சியாகவே இருந்தது. அவனுக்குக் கற்பகத்தைக் கண்டால் கட்டோடு பிடிக்காது. அவளது போக்கைக் குறித்து, சில பேச்சுக்களும், அவனது காதில் விழுந்திருக்கிறது.

மாமனார்—இவ்வளவு தூரம் காரியத்தோடு, பெண் கேட்க முனைந்து வந்திருக்கும்போது, இடையில், வேறெதையும் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? அப்படியே—மச்சினனுக்குக் கற்பகத்தை முடித்தாலும், நன்செய் இவன் கைக்குள்ளேதானே இருக்கப்போகிறது?

முத்தம்மாள் தனது அபிப்பிராயத்தையும் சொன்னாள்.

''கற்பகமும் நல்ல அடக்கமான பொண்ணு. பிள்ளைங்களுக்கு அவ்வளவு அக்கறையோட பாடம் சொல்லிக் கொடுக்குமாம்! எல்லாரும்தான் சொல்றாங்க. எங்கேயும் கண்டாலும் எங்கிட்டயெல்லாம் வலிய வலிய வந்து பேசும். இவருதான் எப்பவும் —அந்தப் பொண்ணு ஆவியே ஆகாதும்பாரு'' என்றாள்.

''கிழவி சம்மதம்ன்னு சொல்லிட்டா, பொங்கல் கழிச்சு முறையோட நிச்சயத்தைச் செய்துக்கலாம்'' என்று சொல்லி, முடிவுக்குப் போனார் துரைச்சாமி

அதற்கு மேலும் சின்னச்சாமியைப் பேசவிடாமல், ''சாப்பிட வாங்க—இலை போடுறேன்'' என்று சொல்லி விட்டு வீட்டிற்குள் சென்றாள் முத்தம்மா.

5

அதிகாலையில் எழுந்து, குளித்து முடித்து, பாட்டிக்குக் காபி பலகாரமெல்லாம் மிக விரைவில் செய்து கொடுத்து, பின் அந்தக் கையுடனே சமையலையும் செய்து முடித்துவைத்து விட்டுத்தான் கற்பகம் பள்ளிக் கூடம் போவாள்.

அன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை. அவசரமின்றியே சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள் கற்பகம்.

நாகம்மாப் பாட்டி, சமையலறைக்கு முன்பாக இருந்த திண்ணையில் உட்கார்ந்திருந்தாள்.

இந்தப் பேத்திப் பெண்ணின் சுறுசுறுப்பைக் காணும்போது எப்போதுமே பாட்டிக்குப் பூரிப்புத்தான்.

கற்பகத்தை ஐந்து வயதுச் சிறுமியாக இங்கே அழைத்து வந்தது. இவள் வந்த பிறகு தான் இந்த வீடே நிறைந்தது. அவருக்கும் சொத்துச் சேர்ந்தது.

கற்பகம் சிறு வயதிலிருந்தே படிப்பில் கெட்டிக்காரி. மேலேயும் படிக்கவைக்கத்தான் அவர் விரும்பினார். ஆனால், இவளுக்கு இந்த டீச்சர் வேலைதான் பிடித்திருக்கிறது. அவர் கண்ணுக்குப் பிறகுதான் கற்பகத்துக்கு உள்ளூரிலே வேலை கிடைத்தது. இவளது வகுப்பில் பிள்ளைகளைச் சேர்த்து விட, இப்போது அவ்வளவு போட்டியாம்! அடங்காத பிள்ளை கூட, இவளிடத்தில் படிந்து பாடம் கற்றுக் கொள்கிறதாம்.

இதையெல்லாம் நினைக்கும் போது பாட்டிக்குப் பெருமை.

என்றென்றும் இந்தப் பெயருக்கு இழுக்கு ஏற்படாமல் இருந்தால் சரி, வேறென்ன வேண்டும் ?

பாட்டி, சமையலறைக்குள் திரும்பிப் பார்த்தாள்.

கற்பகத்தின் முதுகு மட்டுமே தெரிந்தது. தலை முடி கலைந்து சரிந்திருந்தது.

இரண்டு நாட்களாகவே இவள் தெளிவாகவே இல்லை. எதை நினைத்துக் கொண்டிருக்கிறாளோ?

“கற்பகம்” என்றழைத்தாள் பாட்டி.

“என்ன பாட்டி ?” என்றாள் அவள், உள்ளிருந்தபடியே.

“ஏம்மா சோர்ந்து போயிருக்கே?”



'' ஏன் பாட்டி—தாத்தா இருந்தப்பவெல்லாம் பெட்டிப் பாம்பா இருந்தவங்க— இப்ப எப்படியெல்லாம் மாறிட்டு அடிதடிக்கு வராங்க?'' என்ருள் கற்பகம்.

'' இப்ப இதை நினேச்சுக் கவலேப்படுறியாம்மா ?'' என்று கேட்டாள் பாட்டி.

கற்பகம் எழுந்து வெளியே வந்தாள்.

'' இதை உங்க கிட்டச் சொல்லலே பாட்டி. பத்து நாளேக்கு முன்னுலே—பள்ளிக்கூடம் விட்டு நான் வெளியே வந்துக் கிட்டிருந்தேன். எதிர்முகமா சின்னச்சாமிச் சித்தப்பா வந்துக் கிட்டிருந்தாரு. என்னேக் கண்டதும் விலகி நடந்து, காறித் துப்பிட்டுப் போனுரு. பாட்டி—உண்மையிலே என் மனசிலே இருக்கிறதைச் சொல்றேன். நமக்கு இந்தச் சொத்தெல்லாம் வேண்டாம். நான் வேலேயிலே இருக்கேன். இதுவே நமக்குப் போதும் பாட்டி '' என்ருள்.

பேத்தியின் அன்பு முகத்தைப் பார்த்துப் பாட்டி சிரித்தாள்.

'' இதையெல்லாம் மனசுக்குள்ளே வச்சுக் கலங்கிக்கிட்டிருந்தா வாழ முடியாதும்மா. எல்லாத்தையும் இவனுக்குக் கொடுக்கிறதுக்கா— அந்த மனுசன் அரும்பாடுபட்டுத் தேடி வச்சிட்டுப் போனுரு?'' என்று பாட்டி சொல்லி வந்தபோது, தலேவாசல் பக்கமிருந்து ஆளரவம் கேட்டது.

கற்பகம் எட்டிப் பார்ந்தாள்.

சின்னச்சாமியின் தலேதான் முன்னுல் தெரிந்தது.

''அவருதான் வந்திருக்காரு. கூடவே யார் யாரோ வந்திருக்காங்க பாட்டி '' என்று சொல்லிப் படபடப்புடன் திரும்பினுள் கற்பகம்.

பாட்டி, எழுந்து, பதட்டமின்றியே தலேவாசலே நோக்கி நடந்தாள்.

சின்னச்சாமியோடு, சம்பந்தி துரைச்சாமியும், வேறு சிலரும் உள்ளே நுழைந்தனர்.

'' வாங்க-எல்லாரும் வாங்க '' என்று திகைப்பின்றியே வரவேற்ருள் பாட்டி.

தலேவாசலே அடுத்த கூடத்தில், எப்பொழுதுமே, வருபவர்கள் உட்கார்ந்து பேச, பாய் விரித்துக் கிடக்கும்.

வந்தவர்கள் உட்கார்ந்ததும் எதிரே சுவரோரமாக உட்கார்ந்து கொண்டாள் பாட்டி.

வேறு எதைப் பற்றிப் பேசப் போகிருர்கள்—இந்தச் சொத்து விவகாரத்தைத் தவிர!

'' நீங்க எப்ப வந்தீங்க '' என்று துரைச்சாமியைப் பார்த்துக் கேட்டாள் பாட்டி.

'' நான் நேத்து மதியம்தான் வந்தேன். அதுக்குள்ளே பாருங்க களத்து மேட்டிலே அவ்வளவும் நடந்துபோச்சு'' என்று மெதுவாக ஆரம்பித்தார் துரைச்சாமி.

சின்னச்சாமி தலே குனிந்திருந்தான்.

'' இதனுலே எனக்கு எந்த மன வருத்தமும் இல்லே'' என்ருள் பாட்டி.

'' உங்க மனசு எனக்குத் தெரியும். வந்ததிலேயிருந்து அதைச் சொல்லித்தான் சின்னச்சாமியைச் சத்தம் போட்டிருக்கேன். எது இருந்தாலும், அதை நமக்குள்ளே தீர்த்துக்கலாம்; தெருவுக்குப் போகணுமா ?'' என்று மேலும் சொல்லிக் கனிந்தார் துரைச்சாமி.

பாட்டி ஒன்றும் பேசவில்லே. 'இவர்கள் சுற்றி வளேப்பது எதற்காகவோ ' என்ற சிந்தனேயில் மூழ்கி இருந்தாள்.

துரைச்சாமி மருமகனேப் பார்த்தார். அவன் ' நீங்களே கேளுங்க ' என்பது போல் கண் சாடை காட்டினுன்.

துரைச்சாமியே ஆரம்பித்தார்.

'' இப்ப நாங்க வந்திருக்கிற காரியமே வேறே! சொத்து விவகாரம் உங்க விருப்பம்போல செய்யுங்க. என் மகன் ரத்தினத்துக்கு, உங்க் பேத்தியைக் கட்டிவைக்கணும்னு விருப்பம் இருக்கு. பையன் பள்ளி இறுதி வகுப்புப் படிச்சிட்டு, என்னேட வியாபாரத்திலே இருக்கிருன் '' என்ருர்.

மாமனுரைத் தொடர்ந்து குனிந்த தலே நிமிராமலே, ''நடந்தது எதையும் மனசிலே வச்சுக்காம, இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கணும் பெரியம்மா'' என்று சின்னச்சாமியும் கேட்டுக்கொண்டான்.

இவர்கள் இவ்வளவு அவசியத்தோடும், அவசரத்தோடும் பெண் கேட்டு வந்திருப்பது, பாட்டிக்கு வியப்பாக இருந்தது. சற்று முன்பு தானே கற்பகம் சொல்லி முடித்தாள்—இந்தச் சின்னச்சாமியைப் பற்றி. சிறு வயதிலிருந்தே இவன் குணம் தெரிந்ததுதானே! எதிலும் நிதானம் இருக்காது. ஆத்திரமும் அவசரமும் அடிக்கடி இவனுக்குக் கோபத்தைக் கொண்டு வந்துவிடும்.

''என்ன பெரியம்மா—பேசாம இருக்கிங்க ?'' என்று மேலும் கேட்டான் சின்னச்சாமி.

பாட்டி பதருமலே சொன்னுள்.

''இந்த நல்ல காரியம் ஒண்ணு தான் கண்ணுலே பார்த்திட்டுப் போறதுக்கு இருக்கு. ஆனு இதைப் பின்னுலேதான் முடிவு செய்யணும் '' என்ருள்.

''பின்னுலேன்னு—எப்ப ? '' என்று சின்னச்சாமியே கேட்டான்.

'' அதையெல்லாம் இப்பவே குறிச்சுக் கொடுக்க முடியுமா?'' என்று கேட்டாள் பாட்டி.

'' நீங்க சும்மா இருங்க மாப்பிள்ளே'' என்று சொல்லி, சின்னச்சாமியைக் கையமர்த்திவிட்டு, ''சொந்த பந்தத்தோட தான் இந்தச் சம்பந்தம் செய்யணும்னு நினேக்கிருேம். இப்ப உங்க வாயாலே ஒரு நல்ல உறுதிப்பாடு இருந்தாப் போதும். காரியத்தைப் பின்னுலே வச்சுக்கலாம் '' என்ருர் துரைச்சாமி.

'' இப்பவே—அந்த மாதிரி உறுதிசெய்து கொடுக்கணும்னு எந்த அவசரமும் இல்லேயே!'' என்று நிதானமாகவே சொன்னுள் பாட்டி.



பூவுக்குப் பூ பறந்து தேன் உண்ணும் சிறிய பறவை தேன் சிட்டு. இதனை அனைவரும் பார்த்திருப்பார்கள். ஆனால் அந்தத் தேன் சிட்டுகளில் சில, மணிக்கு 50 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கக் கூடியவை என்பது பலருக்குத் தெரிந்திருக்காது. தேன் சிட்டு முன்னால் பறப்பது போல், பின் நோக்கியும் பறக்கக்கூடியது. அது பறக்கும்போது மனிதனைவிடப் பத்து மடங்கு சக்தியைப் பயன்படுத்துகிறது என்று ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். 75 கிலோ கிராம் (165 பவுண்ட்) எடையுள்ள மனிதன் பல்வேறு பணிகள் செய்வதால் செலவாகும் சக்தி 3,500 கலோரி. ஆனால் வானில் பறந்து திரியும் இந்தத் தேன் சிட்டுக்குச் செலவாகும் சக்தி 1,55,000 கலோரி. இவ்வளவு சக்தி வேண்டுமென்றால் ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 130 கிலோ இறைச்சி அல்லது 165 கிலோ வேகவைத்த உருளைக்கிழங்கு அல்லது 60 கிலோ ரொட்டி சாப்பிடவேண்டும். ஆனால், அவன் சாதாரணமாக ஒரு நாள் உட்கொள்ளும் உணவு 1 கிலோ. ஆனால் இந்தச் சின்னஞ் சிறு சிட்டு உண்பதோ மிகமிகக் குறைந்த அளவுத் தேன். ஆராய்ச்சியாளரை இக் கண்டுபிடிப்பு வியக்கச் செய்தது.

“பெண்ணு கொடுக்கச் சம்மதமில்லையின்னு நேரடியாவே சொல்லிப் போடுங்களேன்” என்றான் சின்னச்சாமி, சற்று உரத்த குரலில்.

“இவனை முன்னாலே வச்சு— நீங்க வந்திருக்க வேண்டியதே இல்லை” என்றாள் பாட்டி, துரைச்சாமியைப் பார்த்து.

இதைக் கேட்டதும் சின்னச்சாமிக்குக் கோபம் பொங்கித் தட்டி விட்டது. உட்கார்ந்திருந்தவன் எழுந்தான். “மாப்பிள்ளை, என்ன நீங்க” என்று கேட்டுக் கொண்டே துரைச்சாமியும் எழுந்தார். அதற்குள்ளாகச் சில வார்த்தைகளைச் சிந்தி விட்டான் சின்னச்சாமி.

“ஆமா பெரியம்மா. நான் பக்கத்திலே இருந்து எல்லாத்தையும் பார்த்துக் கிட்டுத்தானே இருக்கேன்! நீங்க ரொம்ப ஒசந்த இடத்திலே மாப்பிள்ளை பார்த்து வச்சிருக்கும் போது, நான் குறுக்கே வர்றது தப்புத்தான்” என்றான்.

“நிதானமாப் பேசு” என்றாள் பாட்டி கடுமையாக.

“உங்க பேத்தியும்—அந்த வாத்தியார் சங்கரனும்—பேசித் திரியறதைப் பார்த்து ஊரே சிரிக்குது. நீங்களும் சிரிங்க. நம்ம குலத்துக்கே பெருமை” என்று மேலும் கொந்தளிப்போடு கொட்டினான் சின்னச்சாமி.

“நீங்க வாங்க—பேச வேண்டியதைப் பின்னாலே—கோர்ட்டிலே பேசிக்கலாம்” என்று சொல்லிச் சின்னச்சாமியை வாசலுக்கு இழுத்தார் துரைச்சாமி.

“நீ நினைக்கிறது என்னிக்கும் ஈடேறாது. இதைத் திண்ணமா நினைச்சுக்கோ” என்று இத்தனை காலமும் இல்லாத விதமாக, ஏக வசனத்தில், பெருங் குரலெடுத்துச் சொல்லிக் கொண்டே போனான் சின்னச்சாமி. மற்றவர்கள் அவனைத் தள்ளிக் கொண்டே தான் போனார்கள்.

கற்சிலையாக அமர்ந்திருந்த பாட்டி திரும்பியபோது, பின்னால், கலங்கிய கண்களுடன் கற்பகம் நின்றுகொண்டிருந்தாள்.




இரவு வெகு நேரமாகி விட்டது.

முன்னிரவிலேயே பாட்டியும் பேத்தியும் படுத்து விட்டார்கள். விடி விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

இருவருமே கண்ணயரவில்லை. காலையில் பெண் கேட்டு வந்தவர்களின் அந்த ஏச்சுக்குப் பிறகு இதுவரையிலும் கற்பகத்திடம் ஒன்றுமே கேட்கவில்லை.

சூழ்ந்திருந்த அமைதி கற்பகத்தின் நெஞ்சைப் பிழிந்தது. சாப்பிடவே தோன்றவில்லை. அப்படியப்படியேயெடுத்து வைத்து விட்டுச், சீக்கிரமாகவே அவள் படுத்து விட்டாள்.

நீண்ட நேரமாகவே, ஒருச்சாய்ந்து படுத்து—சற்றுத் தள்ளிக் கட்டிலிலே படுத்திருந்த பாட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கண்களிலிருந்து வடிந்த கண்ணீர்—தலையணையில் வட்டமாகக் கசிந்திருந்தது.

பாட்டியிடம் எதையும் இவளாகவே எப்படித் துணிந்து சொல்ல முடியும்?

பாட்டி கட்டிலிலே எழுந்து உட்காருவது தெரிந்தது. கற்பகம் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

எதிர்பார்த்தபடி “கற்பகம்” என்றழைத்தாள் பாட்டி.

கற்பகத்துக்கு ‘குப்’ பென்று வியர்த்தது, “என்ன பாட்டி?” என்றதோடு, எழுந்து பாட்டிக்கு முன்னால் போய் நின்றாள்.

அந்த விடிவிளக்கின் மங்கிய ஒளியில் பாட்டியின் முகம் அவளுக்குத் தெரிய வில்லை.

பேத்தியை ஏறிட்டுப் பார்த்த பாட்டி, “உட்காரம்மா” என்றாள்.

கற்பகம் குனிந்த தலையோடு முன்னால் உட்கார்ந்தாள்.

“இந்த நெருப்பு அவன் நெஞ்சிலே கனிஞ்சுக்கிட்டே

இருந்திருக்கு. இது எனக்குத் தெளிவாத் தெரியுது'' என்று அமைதியாகவே சொன்னுள் பாட்டி.

கற்பகம்—மெதுவாகத் தலை நிமிர்ந்து பாட்டியைப் பார்த்தாள். பாட்டியின் உருவம் தெரியவில்லை. விழிகள் கண்ணீரில் மூழ்கி விட்டது பாட்டிக்குத் தெரிந்திருக்காது.

'' அந்த ஆத்திரத்திலேதான் பாட்டி, கத்திட்டுப் போருரு'' என்று மெதுவான குரலில் சொன்னுள் கற்பகம்.

'' அவன் ஆத்திரத்துக்கும் காரணம் இருக்கு. இல்லையாம்மா?'' என்று கேட்டாள் பாட்டி.

'' பள்ளிக்கூடத்தில் என்றைக்காவது நானும் அவரும் பொதுவா பேசிக்கிட்டிருப்போம். அது இவ்வளவு தூரத்துக்கு வந்திருக்கு பாட்டி'' என்ருள் கற்பகம்.

'' அவர்ன்ஞ யாரம்மா?''

கற்பகம் தயங்கினுள். மட்டியைக் கடித்துக் கொண்டாள்.

'' என்னம்மா ? '' என்று மீண்டும் கேட்டாள் பாட்டி.

''சங்கரன் வாத்தியார் '' என்ருள் கற்பகம், தடுமாற்றத்துடன்.

நீண்ட பெருமூச்சு பாட்டியின் உடலையே அசைத்தது.

அவனது பெயர் சொல்லவே இவளுக்கு இவ்வளவு தயக்கமா?

சிறிது நேரம் பாட்டி ஒன்றும் பேசவில்லை. கற்பகமும் குனிந்த தலை நிமிரவில்லை.

'' மேலே சொல்ல வேண்டியிருந்தால் சொல்லம்மா '' என்ருள் பாட்டி.

'' உங்களை மறந்து— ஒதுக்கிட்டு—நானுவே எதையும் மனசாலே கூட நினைச்சதில்லை பாட்டி'' என்று உணர்ச்சிப் பெருக்கோடு சொன்ன கற்பகம், முன்னுல் கவிழ்ந்து, பாட்டியின் மடியில் முகம் புதைத்து விம்மினுள்.

அவளது குலுங்கிய தோளைப் பற்றியவாறு பாட்டி சொன்னுள்.

'' பெண்ணுக்கு வாழ்வுங்கிறது இதிலே இருந்துதான் ஆரம்பமாகுது. இது வாழ்நாள் பூராவும்— அறுந்து போகாம நிலைச்சு நிக்க வேண்டிய பிணைப்பு. இதிலே அடியெடுத்து வைக்கிறப்ப விழிப்போட இருக்கணும் '' என்ருள்.

கற்பகம் தலை நிமிர்ந்தாள். மெல்லிய இமைகள் படபடக்கப் பாட்டியைப் பார்த்தாள். உதடுகள் துடித்தன. அவளுக்குப் பேச முடியவில்லை.

பாட்டி மேலும் ஆரம்பித்தாள்.

''உற்றம் சுற்றமெல்லாம் கூடி நின்று பேசப்போறது வேறே இருக்கு. நான் எவ்வளவு காலத்துக்கு இருக்கப் போறேன்? எனக்குப் பிறகு, தனியாவே நின்று போராடக்கூடிய தைரியம் இருக்கா உனக்கு?'' எனக் கேட்ட பாட்டி, சற்று நேரம் கழித்து, ''நான் எதை நினைச்சுச் சொல்றேன்னு உனக்கும் புரியும். சங்கரன் தாழ்ந்த சாதிக்காரன்'' என்று முகம் பார்த்துச் சொன்னுள் பாட்டி.

கற்பகம் பேசவில்லை.

ஆழ்ந்த அமைதிக்குப் பிறகு— ''போய்ப்படுத்துக்கோ—சொல்ல வேண்டியதைக் காலையிலே சொல்லம்மா'' என்ருள் பாட்டி.

கற்பகம் இயந்திரம் போல் எழுந்து, நடந்து தனது படுக்கையில் படுத்துக் கொண்டாள்.

நெஞ்சிலே படபடப்பு நிறைந்திருக்கும்போது, படுத்தவுடன் தூக்கம் வந்து விடுமா?

''சொல்லவேண்டியதெல்லாம் காலையிலே சொல்லம்மா'' என்ற பாட்டியின் வார்த்தைகள் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தன.

திரும்பிப் பார்த்தபோது, பாட்டியும் படுத்துவிட்டார்கள்.



அந்தப் பெருமூச்சு—இரவின் அமைதியிலே மிகத் தெளிவாகக் கேட்டது.

பாட்டிக்கும் இமைகள் பொருதவில்லை.

இது, எதிர்பாராத, உடனடியாக இறக்கி வைக்கவேண்டிய சுமை.

மற்றவர்களுக்காக நாம் எவ்வளவோ புத்திமதிகளைச் சொல்லலாம். சீர்திருத்தம், முன்னேற்றம் என்றெல்லாம் பேசலாம். அதுவே தன் வீட்டிற்குள்ளேயே முளைத்து வரும்போது ஆசியளிக்க முடிகிறதா? தயக்கத்தில்—கோழைத்தனம் சேர்ந்து கொள்கிறது. சுயநலம் குறுக்கிடுகிறது.

பெயர் சொல்ல இருக்கும் ஒருத்தியையும்— தவிக்க விடுவதா? இவளை நிம்மதியாக வாழ விடுவார்களா?

புரண்டு படுத்து—பேத்தியைப் பார்த்தாள் பாட்டி.

கற்பகம் தூங்கி இருப்பாளா?




நடுப்பகல் அந்தப் பள்ளிக்கூடத்திலே மதிய உணவுதரும் நேரம்.

குழந்தைகளுக்கு, இருப்பதைப் பகிர்ந்து போட்டு முடிப்பது தினமும் பிரச்சனையாகவே இருக்கும்.

பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் போக, மற்ற நேரங்களில் இந்தப் பக்கமே வராத குழந்தைகள்— மதிய உணவு நேரத்தில், அலுமினியத்தாலான தட்டுக்களையும் கோப்பைகளையும் கைகளில் தூக்கிக்கொண்டுவந்து விடுவார்கள்.

இந்தப் பட்டாளத்துக்கே சோறு போட முடியுமா?

கடைநிலை ஊழியர் முனுசாமி வாசலில் நின்று, வெளியிலிருந்து வரும் குழந்தைகளை உள்ளே விடாமல் தடுத்துக் கொண்டிருந்தான்.

மதிய உணவு மேற்பார்வையெல்லாம்—தினத்துக்கு இருவர் என்ற முறையுண்டு. இன்றைக்குத் தலைமையாசிரியர் சுந்தரமூர்த்தியும், ஆசிரியர் சங்கரனும்!

உள்ளே தாழ்வாரத்தில் குழந்தைகளை வரிசைப்படுத்தி உட்கார வைத்துக்கொண்டிருந்தான் சங்கரன்.

இந்த நேரத்தில் நாகம்மாப் பாட்டி அந்த வழியாக வருவதைக் கண்டு, முனுசாமி குழந்தைகளை அதட்டுவதை நிறுத்தி ஏறிட்டுப் பார்த்தான்.

வாசலுக்கு வந்த பாட்டி—அந்தக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டே தயங்கினாள். பிறகு முனுசாமியை ஏறிட்டுப் பார்த்து, ''இதுகளை உள்ளே விடாமத் தடுக்கத் தான் நீ நிக்கிறியா? போகட்டும் விடு'' என்றாள்.

முனுசாமி, பாட்டியின் சொல்லுக்கு ஒதுங்கிக் கொண்டான். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் அவசரத்தோடு உள்ளே ஓடின.

பாட்டியும் உள்ளே நுழைந்து குழந்தைகளுக்குப் பின்னால் நடந்தாள். முனுசாமி ஒன்றும் பேசாமலே தொடர்ந்து சென்றான்.

நாகம்மாப் பாட்டி எப்போதாவது பள்ளிக்கூடத்துக்கு வருவார்கள். அப்போது பள்ளி ஆய்வாளரே வந்து விட்டதைப் போல, பள்ளிக்கூடமே, அமைதியாகவும் விறுவிறுப்பாகவும் நடக்கத் தொடங்கும். பாட்டி, நேருக்கு நேராக, மனத்தில் பட்டதைச் சொல்லிவிடும்போது—யாரும் தலைகுனியத்தான் வேண்டும்.

பாட்டியை அங்கே கண்டதும் "அம்மா—வாங்க'' என்று சொல்லி முன்னால் வந்தான் சங்கரன்.

''இன்றைக்கு உங்க முறையாக்கும்'' என்று கேட்டுக்கொண்டே பக்கத்தில் சென்று, குழந்தைகள் உண்பதைப் பார்த்தாள் பாட்டி.

வயிறு பசித்திருக்கும்போது—எதிலும் ருசியே மிகுந்திருக்கும். அள்ளி உண்பதில் இந்தக் குழந்தைகளுக்கு எவ்வளவு அவசரம்!

''நாற்பது குழந்தைகளுக்குத் தான்—நம்ம பள்ளிக்கூடத்துக்கு உதவி கிடைக்குது; ஆனா அறுபது குழந்தைகள் சாப்பிடுறாங்க. இதற்கு மேலேயும் வரும்போது சமாளிக்கவே முடியலே'' என்றான் பாட்டியின் பின்னால் நின்ற சங்கரன்.

பாட்டி திரும்பவில்லை. போட்டதைத் தின்றுவிட்டு, வயிறு நிறையாமல், கையை நக்கிக் கொண்டிருந்த ஐந்து வயதுச் சிறுவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இந்தப் பையனுக்கு இன்னும் கொஞ்சம் சோறு போடச் சொல்லுங்கள்'' என்று சொல்லிவிட்டு, சங்கரனைத் திரும்பிப் பார்த்தாள் பாட்டி.

''பாத்திரங்கள் எல்லாம் அப்பவே கிணத்தடிக்குப் போயிருச்சு,'' என்று சுருக்கமாகவே சொன்னான் சங்கரன்.

''போடுவதிலும் அரைகுறையோட போடணுமா? அறுவடை சமயத்திலே எல்லாருமா சேர்ந்து களத்திலே நின்னு நெல் வாங்கணும்,'' என்ற பாட்டி, திரும்பித் தலைமை ஆசிரியரின் அறையை நோக்கி நடந்தாள்.

சங்கரனும் பின் தொடர்ந்தான்.

'' பருவம் தப்பாம நாங்களும் நன்கொடையின்னு வரத்தானே செய்யிறோம். எல்லோருமே கொடுக்கிறதில்லையே! இடையிலே எங்களாலே என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

அதற்குள்ளாக, குரலைக் கேட்டதும், உள்ளே ஏதோ எழுதிக் கொண்டிருந்த தலைமையாசிரியர் சுந்தரமூர்த்தி — வாசலுக்கே வந்து, பாட்டியைக் கண்டதும் முகம் மலர, '' வாங்க—சாயந்திரமா நாங்கள்லாம் வந்து உங்களைப் பார்க்கிறதா இருக்கோம். இடையிலே நீங்களே வந்திருக்கீங்க. வாங்க'' என்று சொல்லி வரவேற்றார். சுந்தரமூர்த்தி இந்த ஆசிரியர் பணியில் இருபது ஆண்டுகள் உருண்டு விட்டவர்.

பாட்டியிடம் எப்பொழுதுமே பற்றுதல் உண்டு. பள்ளியின் தொடர்பாக எந்தக் காரியம் நடந்தாலும்—பாட்டியின் முழு ஒத்துழைப்புத்தான் முன்னால் நிற்கும்.

'' நானும் உங்களைப் பார்க்கத் தான் வந்தேன். முதல்லே உங்க குழந்தைகள் மதிய உணவுக் காட்சியைப் பார்க்கும் படியாகவும் ஆச்சு'' என்று சொல்லிக் கொண்டே, அறைக்குள் நுழைந்து நாற்காலியில் உட்கார்ந்தாள் பாட்டி.

சங்கரனை மதிய உணவுக்கு அனுப்பி விட்டு, தனது ஆசனத்தில் வந்து உட்கார்ந்தார் சுந்தரமூர்த்தி. அவருக்குத் தலைக்கு மேல் ஒரு காரியம் இருந்தது. இந்தப் பாட்டியை முன்னால் நிறுத்தித்தான் அதைச் சாதிக்க வேண்டும். அவர் தொடங்குவதற்கு முன்பாக, ''இந்தச் சங்கரனைப்பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?'' என்று கேட்டாள் பாட்டி.

'' நல்ல ஆசிரியன். இந்தப் பள்ளியிலேயே — சங்கரனோட வகுப்பும்—உங்க கற்பகத்தோட வகுப்பும் தான் நல்ல முறையிலே சோடை இல்லாமல் இருக்கு'' என்று களங்கமில்லாமல் சொன்னார் சுந்தர மூர்த்தி.

''சங்கரனுக்குப் பூர்வீகம் எந்த ஊராம்?'' என்று மேலும் கேட்டாள் பாட்டி.

'' தெற்கே இராமநாதபுரம் மாவட்டம். சங்கரன் படிச்சுக் கிட்டிருந்தப்ப—அந்தக் கிராமத்திலே நடந்த சாதிச் சண்டையிலே, தாயையும் தகப்பனையும் கொன்று போட்டாங்களாம். இவனாவேதான் படிச்சுத் தேறி ஆசிரியரா வந்திருக்கான். ரொம்பப் பொறுப்பானவன்'' என்றார் சுந்தரமூர்த்தி.

பாட்டி யோசனையிலிருந்தாள்.

''உங்களுக்கும் தெரியுமே, சங்கரன் வந்த ஆரம்பத்திலே இங்கேயும் தகராறு நடந்திச்சே! நீங்க தலையிட்ட பிறகு தானே ஒதுங்குனாங்க!'' என்று மேலும் சொன்னார் சுந்தரமூர்த்தி.

''நல்லா நினைவிருக்கு'' என்று மட்டும் சொல்லி நிறுத்திக் கொண்டாள் பாட்டி.

பாட்டி தீவிரமாக யோசித்துக் கொண்டிருப்பது எதை என்பது சுந்தரமூர்த்திக்குப் புரியவில்லை.

''வர்ற புதன்கிழமை பொங்கல் வருது. வழக்கமா நம்ம பள்ளியிலே குழந்தைகளுக்கு இனிப்புக் கொடுத்து வர்றோம். இந்த வருடம் பொங்கல் விழாவையும் சிறப்பாக் கொண்டாடணும்னு இருக்கோம். நீங்க முன்னாலே நின்னுத்தான் நினைக்கிறது வசூலாகும்'' என்று சொல்ல நினைத்ததைச் சொல்லி முடித்து விட்டார் சுந்தரமூர்த்தி.

சிந்தனையிலிருந்து விடுபட்டுத் திரும்பினுள் பாட்டி.

''இங்கேயே வந்திருக்கேன். என்ன செய்யணும் சொல்லுங்க''? என்று கேட்டாள்.

சுந்தரமூர்த்தி தயங்கினுர்.

எப்பொழுதுமே இந்த மகராசியிடம் வாய் திறந்து கேட்பது கிடைக்கும்.

அவரைப் பார்த்துப் பாட்டி சிரித்தாள்.

''இந்த வருடம் வசூலுக்கே போக வேண்டியதில்லே. எல்லாச் செலவையும் நானே தாரேன். போதுமா ?'' என்று கேட்டாள் பாட்டி.

''நீங்க நெடுநாள் வாழணும் அம்மா'' என்று நன்றிப் பெருக்கோடு சொன்னுர் சுந்தரமூர்த்தி.

''பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு வாங்க. எவ்வளவோ பேச வேண்டியதிருக்கு. இந்தப் பொங்கல் விழாவைத், தலைமுறை தலைமுறைக்கு மறக்காம இருக்கும் அளவுக்குக் கொண்டாடிப் போடுவோம்'' என்று சொன்ன பாட்டி, எழுந்து புறப்பட்டு விட்டாள்.

''அவசியம் வாரேன்'' என்றதற்கு மேல் வேறு ஒன்றும்சொல்லத் தோன்ருமல், வாசல் வரை வந்து வழியனுப்பிவிட்டு நின்ருர் சுந்தரமூர்த்தி.

ஒரு நொடியில்—நினைத்த காரியம் முடிந்து விட்டதே என்பதில் அவருக்கு மகிழ்ச்சி.

''என்ன சார் இங்கே நின்னுட்டீங்க?'' என்று கேட்டவாறு அருகில் நெருங்கிவந்தான் சங்கரன்.

பிற்பகல் — பள்ளி தொடங்கும் அறிகுறியாக—மணியோசையும் ஒலித்தது.




பொங்கல் விழாவுக்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன.

அந்தக் கிராமம் மட்டுமல்லாமல், செய்தி எட்டிய அளவுக்கு,



வட்டாரமே, விழாவை எதிர்பார்க்கும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

அன்று மாலை, பாட்டியுடன் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பிய பிறகு, கிராமத்து வெட்டியானைத் தேடிப் பிடித்து, சொல்ல வேண்டிய வாசகத்தை, அவனுக்கு மனப்பாடமே செய்து வைத்து, பொழுதுவிடிய, வீதிக்கு வீதி நின்று, சொல்லிச் சொல்லித் தண்டோராப் போடவைத்து விட்டார் சுந்தரமூர்த்தி.

''நமது பள்ளிக்கூடத்தில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்படும். நாகம்மாப் பாட்டி தனது செலவிலேயே குழந்தைகளுக்குப் புத்தாடையும் இனிப்பும் வழங்குவார்கள். அத்துடன் விழாவில் ஒரு அங்கமாக நாகம்மாப் பாட்டியின் சொத்து விவகாரமும் தீர்த்து வைக்கப்படும்'' என்பதாக அழுத்தம் திருத்தமாகச் சொல்லிச் சென்ருல்—பரபரப்பு ஏற்படாதா ?

கேட்பவர்களுக்கெல்லாம் ஒரே பதிலைத் திரும்பத் திரும்பச் சொல்லி அலுத்துப் போய்விட்டது சுந்தரமூர்த்திக்கு.

நாகம்மாப் பாட்டி சொன்ன தன் பேரிலேயே தண்டோரா அடிக்கப்பட்டதாகவும், இதைத் தவிர, அந்தச் சொத்து எந்த விதமாகப் பிரிக்கப்படப்போகிறதென்பதெல்லாம் தனக்குத் தெரியாதென்றும், சுந்தரமூர்த்தி, சின்னச்சாமியிடம் சத்தியம் கூடச் செய்துவிட்டார்.

சின்னச்சாமிக்கு ஒன்றுமே புரியவில்லே. யார் யாரிடமோ யோசனை கேட்டான். அவர்களுக்கும்தான் புரியவில்லே.

கற்பகம் இரண்டு நாட்களாக வெளியே வரவில்லே. பாட்டியும் தான்—இருவருமாக வீட்டிற்குள்ளேயே உட்கார்ந்து என்ன பேசினுர்களோ ?

உற்றவர்கள் பாட்டியிடம் வந்து, ''பொங்கல் விழாவுக்கும் சொத்துக்கும் என்ன இருக்கு?'' என்று கேட்டுப் பார்த்தார்கள்.

''நாளைக்குத் தெரியத்தானே போகுது ?'' என்று மட்டுமே சொன்னுள் பாட்டி.

இரண்டு நாட்களாகவே கிராமத்தில் இதை விட ருசிகரமான பேச்சு வேறென்ன இருந்தது ?

பொழுது விடிந்தால் பொங்கல் திருநாள்.

பாட்டிக்காக, கிராமத்து நாட்டாமை விழாவுக்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

இரவிலேயே சமையல் ஆட்கள் வரவழைக்கப்பட்டு, மதிய உணவுக்கான சமையலறையில் பூந்தி தயாராகிக் கொண்டிருந்தது.

பள்ளியின் முன்னுல்—பெரிய அலங்காரப் பந்தல் வேலே இரவோடிரவாகவே முடிந்து—ஆசிரியர்களும் மாணவர்களும் — வாழை, கமுகு, முதலானவற்றைப் பந்தல் கால்களில் இணைத்துத் தோரணங்களைக் கட்டி முடிக்கப் பொழுது விடிந்து விட்டது.

அப்போதிருந்தே — கூட்டம் சேர ஆரம்பித்து விட்டது.

வருடா வருடம் இந்த விழாவுக்குப் பள்ளிக்கூடமே போதுமானதாக இருந்தது. யாராவது ஊருக்கு முன்னுல் இருப்பவர்கள், ''காணி விளையணும் நாடு செழிக்கணும்'' என்று நாலு வார்த்தை சொல்லுவார்கள். பிறகு குழந்தைகள் கையில் மிட்டாய் களைக் கொடுத்து, அனுப்பிவைத்து விடுவார்கள்.

ஆனுல், இப்போது நடப்பது, இது வரை இந்தக் கிராமத்தின் வரலாற்றிலே இல்லாதது.

பாட்டி சொன்னது போல், என்றைக்கும் நினைவிருக்கும் என்று எண்ணத் தக்கவாறு காலே எட்டு மணிக்கெல்லாம், பள்ளியின் முன்பாகக் கூட்டத்தைச் சமாளிக்கப் போலீஸார் வர வேண்டியதாயிற்று.

இதையெல்லாம் பார்க்கும் போது தலைமையாசிரியர் சுந்தரமூர்த்திக்குப் பெருங் கவலே சூழ்ந்து கொண்டது.

சிறிய அளவில் வழக்கம்போல் செய்ய நினைத்தது—எங்கோ போய்க் கொண்டிருக்கிறதே! வந்து மோதப் போகும் கும்பலைச் சமாளிக்க முடியுமா? ஊரிலுள்ள விவகாரத்துக்குப் பள்ளிக்கூடம் இரையாகி விடக் கூடாதே! நாகம்மாப் பாட்டி எதையோ சொல்லப் போக, இது எதிலே போய் முடியப் போகிறதோ ?' என்றெல்லாம் நினைத்துத் தத்தளித்துக் கொண்டிருந்தார் சுந்தரமூர்த்தி.

காலை ஒன்பது மணிக்குப் பிறகு, வழி நெடுகக் கூடி இருந்தவர்கள் எல்லாம் வியப்போடு விலகிநின்று பார்க்க, பாட்டியும் பேத்தியும், நடந்தே விழா நடக்கும் மேடைக்கு வந்தார்கள். கற்பகம் பாட்டியிட மிருந்து பிரிந்து, பெண்கள் அமர்ந்திருந்த பகுதியில் முன்னால் உட்கார்ந்துகொண்டாள்.

பாட்டி மேடையிலே உட்கார்ந்தாள். மேடையில் நாட்டாமையும் இன்னும் சில பெரிய மனிதர்களும் இருந்தார்கள்.

சுந்தரமூர்த்தி—பாட்டியிடம்- குனிந்து, யார் யார் பேசவேண்டுமென்று கேட்டார். அப்போதே அவர் வியர்த்துப் போயிருந்தார்.

''வேறே யாரு பேசப் போறாங்க? நீங்களும்-நானும் தான். நீங்க ஆரம்பிச்சு வையுங்க; நான் கதையை முடிக்கிறேன்'' என்று சொல்லிச் சிரித்தாள் பாட்டி.

சுந்தரமூர்த்தி மைக்கின் முன்னால் போய் நின்றார்.

பந்தலையும் கடந்து, கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் கூட்டம்; யார்-யார் எங்கே இருக்கிறார்கள் என்றே கண்டுகொள்ள முடியாது.

ஒரு சுற்றுப் பார்த்தபொழுதே சுந்தரமூர்த்திக்குக் கண்கள் இருண்டு வந்தன. நாக்கு மேலண்ணத்தோடு அப்படியே ஒட்டிக் கொண்டது. எப்படியோ இழுத்துப் பிடித்து, ''பேரன்பு மிக்க பெரியோர்களே, தாய்மார்களே'' என்று ஆரம்பித்தார்.

அவரது அங்க அசைவுகளைக் கண்டு, மாணவர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு கை தட்டினர்கள்.

இந்த இடை வெளியில்-இருந்த தைரியத்தையெல்லாம் ஒன்று திரட்டி, மேலும் ஆரம்பித்தார் சுந்தரமூர்த்தி.

''இது வரையிலும், நம்ம ஊரிலே பொங்கல் விழா இவ்வளவு சிறப்பான முறையிலே நடந்ததே இல்லை. இதுக்காக நாமெல்லோருமே நாகம்மா பாட்டியவர்களுக்கு நன்றி கூறணும். இதுக்குமேலே என்ன பேசறதுன்னு எனக்குத் தெரியலே. அம்மா பேசுவாங்க. உண்மையிலே அவங்க என்ன பேசப் போறாங்கன்னு கேட்க எனக்கும் ஆவலாக இருக்கு'' என்று கூறி முடித்து, வியர்த்துப்போன முகத்தைத் துடைத்தவாறு திரும்பினார் சுந்தரமூர்த்தி.

பாட்டி எழுந்தாள்.

மகளிர் மன்றங்களிலும், கிராமப் பஞ்சாயத்துக்களிலும் பேசிப் பேசிப் பாட்டிக்குப் பழக்கமே ஆகிவிட்டது. பதட்டமில்லாமே 'மைக்'கின் முன்னால் போய் நின்றாள்.

குழந்தைகளும் கூடப் பேசுவதை விடுத்து வியப்போடு பாட்டியைப் பார்த்தனர்.

மேடையில் அமர்ந்திருந்தவர்கள் உட்பட—அனைவரது கவனமும் பாட்டியின் மீதே இருந்தது.

அவையடக்கம் கூறிக் கொண்ட பின், சற்றுத் தயங்கி, நிதானமாக ஆரம்பித்தாள் பாட்டி:

''இதுக்கு முன்னாலே எதுக்காகவும் இப்படி ஒரு கூட்டம் நம்ம கிராமத்திலே கூடினதே இல்லை. நானும் எதிர்பார்க்கலே. இந்தப் பொங்கல் நாளிலே, எங்க குடும்பத்திலே இருக்கிற சொத்து விவகாரம் தீரப் போகுதுன்னு சொன்ன




சொல்—இவ்வளவு கூட்டத்தைக் கூட்டியிருக்கு. யாருக்கு வெற்றி தோல்வின்னு பார்க்கிறதிலே எல்லோருக்குமே மிகுந்த ஆர்வம் இருக்கு.

நல்ல முடிவுங்கிறது அதுக்குன்னு ஒரு சந்தர்ப்பம் வர்றப்ப, கொஞ்ச நேரத்திலே ஏற்பட்டுப் போகுது. வேறே ஒரு காரியத்துக்காக, நம்ம வாத்தியாரையா வைப் பார்க்க, இங்கே வந்திருந்த போது, தற்செயலாகவே குழந்தைகள் சாப்பிடுறதையும் பார்க்க வேண்டி வந்தது. அரையும் குறையுமாகக் குழந்தைகள் தட்டு முன்னாலே உட்கார்ந்திருந்தது என் நெஞ்சைத் தொட்டது.

எனக்கு இப்ப வயசு அறுபதை நெருங்குது. குழந்தையே இல்லை. இந்தக் கவலை எனக்கு உண்டாகும் போதெல்லாம், அவர் ஒரே பதிலைச் சொல்லித்தான் என்னைத் தேற்றுவார். ''கிராமத்திலே இருக்கிற எல்லாக் குழந்தைகளும் நம்ம குழந்தையின்னு நினைச்சுக்கோ —பிள்ளை இல்லையேங்கிற கவலை வரவே வராதுன்னு'' அவர் அடிக்கடி சொல்லுவார். அந்தக் குழந்தைகளைப் பார்த்தப்ப, அவர் சொன்னது தான் என் நினைவுக்கு வந்தது.

நம்ம ஊரைச் சுற்றி வயல் இருக்கு. இரண்டு போகமும் நெல் விளையுது. ஆனா, படிக்கிற ஏழைக்குழந்தைகளுக்குப்பசியாற நம்மாலே சோறுபோடமுடியலே! சர்க்காரை எதிர்பார்க்கிறோம், அமெரிக்காவிலேயிருந்து வராதான்னு திரும்பிப் பார்க்கிறோம், என்றெல்லாம் அந்தக் குழந்தைகளைக் கண்டபோது நினைச்சுப் பார்த்தேன். அப்பத்தான் அந்த நல்ல முடிவு ஏற்பட்டது.

இப்பத் தகராறுன்னு நிக்கிற சொத்தில்—மூன்று ஏக்கர் நஞ்சை நிலம்தான் குறிப்பானது. இது, அவர் பாடுபட்டுத் தேடிக் கொண்ட சுய சம்பாத்தியம்.

குறிப்பிட்ட எல்லைக்கு மேலே நம்ம வாழ்வு நிலைக்கிறதே இல்லை. ஆனா, நாம செய்யும் காரியம் என்றைக்கும் நிலைச்சிருக்கும். தலைமுறை தலைமுறைக்கும்இந்தக் கிராமத்திலே பிறக்கும் குழந்தைகளுக்கெல்லாம் பயன்படும் படியா—நஞ்சை நிலத்திலே இரண்டு ஏக்கர், இன்றைக்குப் பொங்கல் தினத்திலேயிருந்து




# சரியான காலடிவைப்பு

உங்களுடைய பம்பு செட் அடிக்கடி பழுதடையாமல் ஒழுங்காக இயங்கி வயலில் தங்கு தடையின்றி தண்ணீர் கிடைக்க வேண்டும் என்று நீங்கள் எண்ணிஞல் அதற்காக சரியான நடவடிக்கை எடுங்கள். அதாவது, உங்கள் பம்பு செட்டின் மோட்டாருக்கு பூர்ண பாது காப்பளிக்க 'எல் அண்ட் டி' (L & T) ஸ்டார்ட்டர் பொருத்துங்கள்.

ஓவர்லோட் ஏற்பட்டாலோ, கரெண்டின் வோல்டேஜ் குறைந்தாலோ இந்த ஸ்டார்ட்டர் உடனேயே மோட்டாரை லைனிலிருந்து விடுபடுத்தி அது எரிந்துவிடாமல் பாது காக்கும். இந்த ஸ்டார்ட்டர் நெடுநாள் உழைக்கிறது. ஏனென்ருல் இதன் காண்டாக்டுகள் அசல் வெள்ளியால் தடிப்பாக செய்யப்பட்டவை. லார்ஸன் அண்ட் டூப்ரோவின் பெயரே இதன் உயர்தரத்திற்கும் நம்பகத் தன்மைக்கும் உறுதி. டைரக்ட்-ஆன்-லைன், ஸ்டார்-டெல்டா போன்ற எல்லா ரகங்களிலும் 'எல் அண்ட் டி' ஸ்டார்ட்டர்கள் கிடைக்கின்றன. உங்கள் தேவைக்கு ஏற்றதைத் தேர்ந்தெடுங்கள்.





ஸ்விட்ச்கியர் டிவிஷன்

**லார்ஸன் அண்ட் டூப்ரோ லிட்.**

தபால் பெட்டி 278, பம்பாய்-1
தபால் பெட்டி 619, கல்கத்தா-16
தபால் பெட்டி 323, புது டெல்லி-1
தபால் பெட்டி 5247, மதராஸ்-2

LT-9588

நம்ம பள்ளிக்கூடத்தின் பெயருக்கு, என்றைக்கும் குழந்தைகள் மதிய உணவுக்குப் பயன்படுத்தும் படியாகவும், மீதமுள்ள ஒரு ஏக்கரும், என் கண்ணுக்குப் பிறகு, பள்ளிக்கூடத்துக்கே சேரணும் என்றும், நாளையே பத்திரப்பதிவு செய்து தரப் போறேன்'' என்று பாட்டி சொல்லி வந்த போது, வியப்புடன், அமைதியில் மூழ்கி இருந்த அந்தப் பெருங் கூட்டத்திற்கு மத்தியிலே சின்னச்சாமி எழுந்தான்.

''என் பெரியப்பன் சொத்து இது. இதைத் தானம் கொடுக்க உனக்கென்ன உரிமை இருக்கு?'' என்று கொந்தளிப்போடு முழங்கினான் சின்னச்சாமி.

பாட்டி அமைதியாகவே சொன்னாள்.

''இப்படியெல்லாம் கேள்வி பிறக்கும்னு தெரிந்துதான் முன்னாலேயே, அவர் இந்த நஞ்சை நிலத்தையெல்லாம், கிரயப் பத்திரமாகவே எனக்கு எழுதிக் கொடுத்திருக்காரு. அதை என் விருப்பம்போல என்ன செய்யவும் எனக்கு உரிமை இருக்கு. நடக்கிறதையெல்லாம் பார்த்துத் தெளிவடையத்தான் நானும் காத்திருந்தேன்'' என்றாள் பாட்டி.

தொடர்ந்து இங்கும் அங்குமாக எழுந்த வாழ்த்தொலிகள் சலசலப்பை உண்டாக்கின. அத்தனைக்கும் பிறகு சின்னச்சாமி அங்கே உட்கார்ந்து கொண்டிருப்பானா?

உணர்ச்சிப் பெருக்கால் கண் கலங்க, சுந்தரமூர்த்தி எழுந்து முன்னால் வந்தார்.

''விவரம் புரியாம, இந்த விழாவை நடத்திக் கொடுத்ததுக்கே, ஆரம்பத்திலே நன்றி சொல்லிட்டேன். இப்ப நீங்க செய்திருக்கிற தர்மத்துக்கு, இந்தக் கிராமமே என்றைக்கும் உங்களுக்கு நன்றி சொல்லுமே அம்மா'' என்று கை கூப்பிய படிச் சொல்லிய சுந்தரமூர்த்தி, மேஜையின் மீதிருந்த மாலையை எடுக்கப் போனார்.

பாட்டி திரும்பினாள்.

''இன்னும் கதை முடியலையே. நன்றி சொல்றதை முடிவிலே மொத்தமாச் சொல்லுங்க'' என்று சொல்லிப் பாட்டி சிரித்தாள்.



எழுந்த பரபரப்பை உள்ளடக்கிக் கொண்டு, மீண்டும் உட்கார்ந்தார் சுந்தரமூர்த்தி.

பாட்டி, மேலும் பேச ஆரம்பித்தபோது, கூட்டத்தில் மறுபடியும் அமைதி நிலவியது.

''இந்தப் பள்ளிக்கூடத்திலே ஆசிரியராக இருக்கும் சங்கரனை எல்லாருக்கும் தெரியும். அவர், இங்கே வேலைக்கு வந்த ஆரம்பத்திலே, அவர் தாழ்ந்த சாதியிலே பிறந்தவர் என்பதற்காக, குடியானத் தெருவிலே குடியிருக்க விடக்கூடாதுன்னு, பலர் போராட்டமே நடத்தினாங்க. அப்ப சங்கரனுக்கு ஆதரவா நான் பேசின போது, ''ஏன், பெண்ணையும் கொடுத்து, வீட்டோட வச்சுக்கிறதுதானேன்னு'' அதிலே ஒருத்தர் கேட்டார். ஆனா அந்த நேரத்திலே இந்த வார்த்தைகளைப் பெரிதா எடுத்துக்கலே. அதே சொல்லை நேற்று முன்தினம் மறுபடியும் நினைக்க வேண்டி வந்தது.

நடக்கவே கூடாததை, முடியாததை யாரும் சொல்லலையே! உயர்ந்தவன் - தாழ்ந்தவன்ங்கிற சாதி முறையெல்லாம், நாமாக வகுத்து வச்சுக்கிட்டதுதான். பிறவியிலே இருக்க முடியுமா? இப்ப, இந்தச் சாதிப் பூசல் நம்ம உடல்லே தொழு நோயாகவே ஒட்டி இருக்கு. இதை ஒழிக்கணும். நாம துணிஞ்சு செய்யிற காரியம், பின்னாலே வர்றவங்களுக்கு, 'ஒரே இனம்' என்கிற உணர்வைக் கொடுத்து நிம்மதியான வாழ்வுக்கு வழி வகுக்கும்.

இந்தப் பொங்கல் விழாவை என்றைக்கும் மறக்க முடியாதபடி, இன்னொரு நல்ல காரியமும் இங்கேயே நடக்க இருக்கு. ஆசிரியர் சங்கரனும், என் பேத்தி கற்பகமும் ஒருவரையொருவர் மனப்பூர்வமா விரும்புறாங்க. இடையிலே, இந்தச் சொத்துக்களைப் பற்றியெல்லாம் அவங்க நினைக்கலே. நானும் இவங்க விருப்பத்துக்குக் குறுக்கே நிக்கலே. இப்ப, இந்த மேடையிலேயே, உங்க முன்னாலே இந்தத் திருமணமும் நடக்கப் போகுது'' என்று பாட்டி சொன்னபோது, மாணவ மாணவியரின் மகிழ்ச்சி ஆரவாரம் விண்ணை எட்டியது.

தோழியரெல்லாம் கற்பகத்தைச் சூழ்ந்து கொண்டனர். பாட்டியின் பேச்சிலே மெய்ம்மறந்து, கண்கலங்க நின்ற சங்கரனை மேடைக்கு அழைத்து வந்தார்கள். மணப்பெண்ணும் குனிந்த தலையுடனே தொடர்ந்து வந்தாள்.

பாட்டி, திரும்பி, நாட்டாமையைப் பார்த்து, ''நீங்களே திருமணத்தை நடத்தி வையுங்க'' என்று கேட்டுக் கொண்டதோடு, மடியிலேயே, தயாராக வைத்திருந்த தாலிச் சரட்டை எடுத்து, முன்னாலிருந்த, தேங்காய் பழத் தட்டில் வைத்து விட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டே உட்கார்ந்தாள்.

உணர்ச்சிப் பெருக்கால்-நாட்டாமைக்குப் பேச வாயெழவில்லை.

''நாகம்மாப் பாட்டி-என்றைக்கும் மக்களோட மனசிலே நிறைஞ்சிருப்பாங்க. பாட்டியின் துணிவு நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கணும்'' என்று மட்டுமே சொல்லி, மணவினையை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார்.

கூடியிருந்தோர் உவகைப் பெருக்கோடு நெருங்கிவந்து, மணமக்களுக்கு வாழ்த்துக் கூறிய போது, 'யாருக்கு நன்றி சொல்லுவது' என்பது புரியாமல் தவித்துப்போனார் சுந்தரமூர்த்தி.

'நீர் இன்று அமையாது உலகு' என்று இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருவள்ளுவர் நீரின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

மக்களும், மாக்களும், புல்களும், பூண்டுகளும் உயிர் வாழ்வதற்கு நீர் இன்றியமையாததாகும். நீர் இல்லாவிட்டால், இவ்வுலகில் எந்தவகை உயிரினமும் வாழுதல் அரிது. எனவேதான் நீர்வளம் பெருக்கி, நிலவளம் செழிக்க அரும்பாடு பட்டுவரும் தமிழ்நாடு அரசு, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் (Protected drinking water) பாமர மக்களுக்கும் எளிதில் கிடைத்திட வேண்டும் என்பதற்காக, முழு மூச்சுடன் உழைத்து வருகிறது.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்ட தமிழ் நாடு அரசு, உணவுக்கு அடுத்த முக்கியமான குடிநீர் வழங்குவதிலும் பெரு வெற்றி பெற்றுவிடும் என்பதில் ஐயமில்லை.

பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர், போதிய வடிகால் வசதி ஆகியவைகளை நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் ஒரே மாதிரியாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தில், சென்ற ஆண்டு, முதன்முதலாக உள்ளாட்சி நிறுவனங்களின் குடி நீர், வடிகால் திட்டங்களுக்காக, இந்திய ஆயுள் காப்புக் கழகத்திடம் (Life Insurance Corporation of India) கடன் கேட்கப்பட்டது. இந்திய ஆயுள் காப்புக் கழகம் பெருமளவில் கடனுதவி அளிக்க முன் வந்தது.

ஆயுள் காப்புக் கழகத்திடம் இருந்து கீழ்க் கண்ட 22 குடி நீர்த் திட்டங்களையும், 4 வடிகால் திட்டங்களையும் 1969-70-ஆம் ஆண்டில் நிறைவேற்ற, ரூபாய் 192·33 லட்சம் கடனாகப் பெறப்பட்டது.

## குடி நீர் வழங்கும் திட்டங்கள்

| ஊரின் பெயர் | கடனாக வழங்கப்பட்ட ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|
| ஆலந்தூர் | 10·00 |
| செங்கற்பட்டு | 3·33 |
| தாம்பரம் | 6·67 |
| திருக்கோவிலூர் | 4·33 |
| கள்ளக்குறிச்சி | 3·00 |
| ஆம்பூர் | 8·67 |
| திருப்பத்தூர் | 5·00 |
| வாணியம்பாடி | 6·67 |
| மேல் விசாரம் | 3·33 |
| சேலம் | 33·33 |
| ஆத்தூர் | 6·67 |
| கிருஷ்ணகிரி | 8·83 |
| திருவாரூர் | 6·67 |
| ஈரோடு | 4·00 |
| பெருந்துறை, சென்னிமலை, கருமாண்டி செல்லிப்பாளையம். | 8·67 |
| பொள்ளாச்சி | 5·33 |
| உதகமண்டலம் | 14·67 |
| மதுரை | 8·00 |
| ராமநாதபுரம் | 8·00 |
| கடயநல்லூர் | 4·33 |
| கோவில்பட்டி | 17·33 |
| விக்கிரமசிங்கபுரம் | 4·00 |



## வடிகால் வசதி ஏற்படுத்தும் திட்டங்கள்

| | |
|---|---|
| காஞ்சிபுரம் | 2·67 |
| திருச்சி | 6·67 |
| கோயம்புத்தூர் | 1·33 |
| மதுரை | 1·33 |

ஆயுள் காப்புக் கழகக் கடன் உதவியுடன் 1969-70-ல் 26 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனல் 1970-71-ல் 52 புதிய

குடி நீர், வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஓர் ஒருங்கிணைந்த திட்டம் தீட்டப் பட்டது. 1970 ஜூலைத் திங்களில் 52 புதிய குடி நீர், வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூபாய் 140·83 லட்சமும், 22 முடிவுபெறாத திட்டங்களுக்காக (இரண்டாம் தவணை) ரூபாய் 155·46 லட்சமும், ஆக மொத்தம் ரூபாய் 296·29 லட்சம் ஆயுள் காப்புக் கழகத்திடம் கடனாகக் கேட்கப்பட் பட்டது.

ஆனால் ஆயுள் காப்புக் கழகம், இணைப்பில் கண்டபடி 50 உள்ளாட்சி நிறுவனங்களுக்கு 50 குடி நீர், வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூபாய் 270·78 லட்சம் கடன் கொடுக்க அனுமதித்துள்ளது. அத்துடன் மீதியுள்ள 24 திட்டங்களை இந்த ஆண்டில் செயல்படுத்த, அரசாங்க நிதியிலிருந்தோ அல்லது உள்ளாட்சி நிறுவனங்களின் நிதியிலிருந்தோ எவ்வளவு செலவு செய்யப்பட்டிருந்தாலும் அதில் 66⅔ சத அளவை, 1971-72-ஆம் ஆண்டிற்குக் கடன் கேட்கும் சமயத்தில் கொடுத்துதவுவதாக உறுதி அளித்துள்ளது. எனவே, இந்த ஆண்டில் (1970-71) ஆயுள் காப்புக் கழகம் கடன் வழங்கியுள்ள 50 திட்டங்களும் நிறைவேற்றப்படுவதுடன், எஞ்சியுள்ள 24 திட்டங்களும் முடிந்த அளவுக்கு நிறைவேற்றப்படும்.

ஆயுள் காப்புக் கழகத்தின் உதவி பெற்றுள்ள திட்டங்களுடன், வேறுபல குடிநீர், வடிகால் திட்டங்களும் நிறுவன நிதி உதவி இல்லாமலேயே செயல்படுத்தப்படுகின்றன. குடிநீர், வடிகால் திட்டங்களுக்காக இந்த ஆண்டில் ரூபாய் 6 கோடி செலவு செய்ய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மிகவும் குறைந்த காலத்தில் தமிழ் நாட்டில் உள்ள நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் குடிநீர், வடிகால் வசதிகளை அளித்திட வேண்டும் என்பதற்காகவே, கீழ்க்கண்ட கருத்தினைத் தமிழ்நாடு கொண்டிருந்தது.

(1) தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம் சட்டமுறையான அடிப்படையில் தன்னாட்சி உரிமையுடைய அமைப்பாக அமைக்கப்படுமானால் திட்டமிடுதல், ஆராய்தல், திட்டங்களை நிறைவேற்றல் ஆகியவற்றில் விரைவாகச் செயல்படமுடியும்.

(2) தன்னாட்சி உரிமையுடைய அமைப்பாக இருந்தால், நிதி உதவும் நிறுவனங்கள், பொது மார்க்கட்டுகளிலிருந்து தேவையான மூலதனங்களைத் திரட்டிட இயலும்.

(3) தமிழ் நாட்டில் உள்ள உள்ளாட்சி நிறுவனங்களின் குடிநீர், வடிகால் திட்டங்களை நிறைவேற்ற ஒரேவழி, ஒரு செயலாண்மை நிலையமே (Agency) இருக்க வேண்டும்.

இக்கருத்துக்களின் அடிப்படையிலேயே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செப்டம்பர் 1969-ல் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியச் சட்டம், தமிழ்நாடு சட்ட மன்றத்தில், 2—12—70 அன்று கொண்டுவரப்பட்டது. சட்ட மன்றத்தின் இரு அவைகளிலும் இச்சட்டம் நிறைவேறியது. விரைவில் இச்சட்டம் செயலாகும்.

தமிழ்நாடு அரசு 1972 ஆம் ஆண்டிற்குள் தமிழ் நாட்டின் கிராமங்கள் அனைத்திற்கும் மின்சாரம் வழங்கிவிட முடிவுசெய்து விரைந்து செயல்படுகிறது. அதேபோல், வெகுவிரைவில் தமிழ்நாட்டின் மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழிசெய்யும். தமிழ்நாடு அரசின் இம்முயற்சிகளுக்கு தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## குடிநீர் வழங்கும் திட்டங்கள்.

| உள்ளாட்சி நிறுவனத்தின் பெயர். | கடனாக வழங்கப்படவிருக்கும் ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|
| 1. ஆலந்தூர் .. .. | 15·67 |
| 2. செங்கற்பட்டு .. .. | 5·34 |


நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath

| | | |
|---|---|---|
| 3. | கள்ளக்குறிச்சி | 0·50 |
| 4. | ஆம்பூர் | 3·76 |
| 5. | திருப்பத்தூர் | 9·99 |
| 6. | மேல்விசாரம் | 0·67 |
| 7. | சேலம் | 2·69 |
| 8. | ஆத்தூர் | 1·49 |
| 9. | திருவாரூர் | 2·95 |
| 10. | ஈரோடு | 1·17 |
| 11. | பெருந்துறை | 2·79 |
| | சென்னிமலை | 3·60 |
| | கருமண்டிசெல்லிபாளையம். | 3·61 |
| 12. | பொள்ளாச்சி | 6·66 |
| 13. | உதகமண்டலம் | 4·90 |
| 14. | மதுரை | 3·33 |
| 15. | இராமநாதபுரம் | 2·73 |
| 16. | கடையநல்லூர் | 7·46 |
| 17. | கோவில்பட்டி | 7·72 |
| 18. | விக்ரமசிங்கபுரம் | 9·31 |
| 19. | உத்திரமேரூர் | 9·33 |
| 20. | பூந்தமல்லி | 3·00 |
| 21. | பண்ணுருட்டி | 8·00 |
| 22. | சிதம்பரம் | 1·00 |
| 23. | காவேரிப்பாக்கம் | 1·00 |
| 24. | சோளிங்கர் | 1·67 |
| 25. | சேலம் | 4·00 |
| 26. | மேட்டூர் | 3·33 |
| 27. | பள்ளிபாளையம் | 1·00 |
| 28. | மோகனூர் | 0·50 |
| 29. | அறந்தாங்கி | 1·05 |
| 30. | சீரங்கம் | 3·33 |
| 31. | புஞ்சை புகளூர் | 4·00 |
| 32. | குளித்தலை | 2·00 |
| 33. | இலப்பைக்குடிக்காடு | 0·50 |
| 34. | திருப்பூர் | 2·00 |
| 35. | புஞ்சை புளியம்பட்டி | 8·67 |
| 36. | காங்கேயம் | 12·00 |
| 37. | சிறுமுகை | 2·60 |
| 38. | நிலக்கோட்டை | 3·00 |
| 39. | ஒட்டன்சத்திரம் | 2·00 |
| 40. | காரைக்குடி | 12·67 |
| 41. | சிவகங்கை | 14·00 |
| 42. | கீழக்கரை | 6·67 |
| 43. | திருப்பத்தூர் (ராமநாதபுரம் மாவட்டம்). | 3·33 |
| 44. | புளியங்குடி | 2·00 |
| 45. | காயல்பட்டினம் | 2·00 |
| 46. | செட்டிகுளம் | 1·00 |

**வடிகால் வசதித் திட்டங்கள்.**

| | | |
|---|---|---|
| 47. | காஞ்சிபுரம் | 13·33 |
| 48. | திருச்சிராப்பள்ளி | 27·98 |
| 49. | கோயம்புத்தூர் | 8·81 |
| 50. | மதுரை | 8·67 |
| | மொத்த ரூபாய் | 270·78 |



# வெண்பாப் போட்டி

## 6. 'பொங்கல்' எனத் தொடங்கிக் 'கரும்பு' என முடித்தல்

பொங்கல் திருநாளில் பூவுலகத் தூசகற்றும்
துங்கமனத் தூய்பணிசெய் ஊழியர்கள்— பொங்குகென்று
தையில் கலைஞர் தரும்ஊ தியஉயர்வு
கையிற் கொடுத்த கரும்பு.

—திருமதி கு. அமுதவள்ளி, ஆனைமலை

பொங்கல் மணக்குதடி பொன்மயிலே! என்றேன்நான்
பொங்கல் தமிழுணர்வாய்ப் பூக்கட்டும்— எங்கணவ!
உண்டிடுக; செந்தமிழை ஓங்கும் பயில்மொழியாய்க்
கண்டிடுக என்றாள் கரும்பு.

—சி. காமாட்சி, ஈரோடு-3.

பொங்கல் புதுநாளிற் போற்றுங்கள் நம்மரசைத்
திங்கள் தொறும்புதிய திட்டங்கள்— பங்கீடாய்த்
தீட்டித் துயர்தீர்த்துத் தென்னகத்தின் நல்வளத்தைக்
காட்டும் கருணைக் கரும்பு.

—வை. நடராஜன், திருமலைராயன்பட்டினம்.

பொங்கல் நிறம்போலப் பொங்கும் நகையோடே
எங்கும் சமுதாயம் ஏற்றமுற— மங்கும்
உழைப்பாளர் முப்போதும் உண்டிட்டார் என்னக்
கழறுமச் சொல்லே கரும்பு.

—கி. க. இராசேந்திரன், பி.எஸ்ஸி., சென்னை-7.

பொங்கலை என்மழலை பூசினன் மெய்யெல்லாம்
தங்கையால் என்வாயில் தந்தானே— சிங்க
விழிதன்னைக் கூராக்கி 'அப்பா' வெனவழைத்த
மொழியன்றோ கட்டிக் கரும்பு?

—வெ. இரா. இராசகோபாலன், காவேரிநகர்.

பொங்கலைத்தான் வைத்துத்தான் பொங்கித்தான் உண்ணத் [தான்
எங்களைத்தான் வைத்தானா இப்புவியில்?— பொங்குநெஞ்சின்
ஆசையைத்தான் போக்கத்தான் ஆரைத்தான் நம்புவதோ?
காசேதான் யார்க்கும் கரும்பு.

—பெ. துரைசாமி, சந்தைப்பேட்டைப்புதூர்.

பொங்கல் சுவையேதான் பூவையவள் வாய்ச்சொற்கள்!
தங்கம் அவள்மேனி; தண்முகமோ— திங்கள்!
இனியவளின் புன்னகைக்கோ ஈடில்லை! கொவ்வைக்
கனியிதழோ கட்டிக் கரும்பு!

—மு. சிவலிங்கம், சிவகாசி.

பொங்கல் திருநாளில் புன்னகை வெல்லத்தை
எங்கள் தமிழன்னை ஈவாள்காண்— சங்கத்தில்
வீற்றிருந்த அன்னை வெற்றிபெறும் நாளன்றோ
ஏற்றதொரு செந்தேன் கரும்பு?

—செல்வி கு. லீலா, மணியக்காரன்பட்டி.

பொங்கல் பெருநாளில் புத்தாடை தானுடுத்திச்
சிங்கமென வந்தெனது சிந்தைதனைச்— சங்கிலியால்
கட்டி யிழுத்திட்ட; கண்ணில் நிறைந்திட்ட
கட்டழகன் தானென் கரும்பு.

—துரை, அருவன்காட்டு வலசு.

பொங்கல் விழாக்கோலம் பூண்டு மனையெல்லாம்
தங்கநிறப் பானை ததும்புதடி— எங்கும்
படித்தார் தமிழ்வாழ்த்துப் பாற்பொங்கல் உண்டே
கடித்தார் இனிய கரும்பு.

—என். அன்னபூரணி, சென்னை-14.

பொங்கல் இனியதுதான், பொன்னிப் புனற்சுவைதான்
தெங்கின் இளநீருந் தேனினிதே— இங்கெமக்கோ
ஓவியமாய்ப் பூத்து ஒளிசிதறப் புன்னகைக்கும்
காவியச் செல்வன் கரும்பு.

—கி. சு. பாலசுப்பிரமணியம், புதுக்கோட்டை-2.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

திருமதி கு. அமுதவள்ளி
நெ. 66 பொள்ளாச்சி ரோடு
ஆனைமலை (அஞ்சல்)
பொள்ளாச்சி (வட்டம்).

பொங்கற் புதுநாளில் மாக்கோலம் தானெழுதிச்
செங்கை வருந்தச் செயல்புரிந்தாள்— தங்கையவள்
பொங்கும் புதுநிலவு ! போனளே புத்துலகுத்
திங்களே ! தீண்டேன் கரும்பு.

—வித்துவான் சு. சுப்பையா. மதுரை-16.

பொங்கல் எனத்தொடங்கிப் போற்றுமொரு வெண்பாவைச்
சங்கத் தமிழ்மொழியில் சாற்றிவிடின்— இங்கு
பரிசுதனைப் பெற்றிடலாம் என்றுவந்த செய்தி
கருத்தில் இனிக்கும் கரும்பு.

— ஆசா, வத்தலக்குண்டு.

பொங்கல் திருநாளில் பூவையர்கள் பட்டுடுத்தித்
திங்கள் ஒளிமுகத்தின் சேல்காட்டி— தங்கத்
தளிர்க்கரத்தால் தாளமிட்டுத் தைத்திங்கள் அன்று
களிகொள்ளும் காட்சி கரும்பு.

—நா. விசாலாட்சி, கோவை-1.

பொங்கற் சுவையைப் புறங்காணச் செய்யுமுயிர்ச்
சங்கத் தமிழ்மொழிதான் கல்லூரி— எங்கணுமே
முட்டின்றிப் பாடமொழி யாகுமெனி லச்செய்தி
கட்டோடு தின்னும் கரும்பு.

—புலவர் துரைமுருகு, திண்டுக்கல்-1.

பொங்கல் இனியேது, புத்தாடை ஏதென்ற
தங்க உழவர் தடுமாற்றம்— மங்க,
இடனுதவி யோடுநம் இன்னரசு தந்த
கடனுதவி யன்றோ கரும்பு ?

—ம. சூரியகாசன், திருச்சிராப்பள்ளி-3.

பொங்கற் திருநாளில் பொன்னனைய மாணவர்காள் !
சிங்கம்போல் சீற்றமுற்றுச் சூளுரைப்பீர்— இங்கெமக்கோ
கற்கும் பயிற்சிமொழி கண்ணனைய செந்தமிழே
கற்கண்டு பாகு கரும்பு

—வி. மு. உலகநாதன், சென்னை-17.

பொங்கலாம் தைப்பாவை பொன்மேனி நெல்மணியே
மங்கை அவள்முகமோ மஞ்சளாம்— எங்கள்
குடில்தோறும் வந்தினிதாய்க் கொஞ்சுதமிழ் நங்கை
கடிகமழும் சொல்லோ கரும்பு.

—ந. செனர்த்தனன், அரக்கோணம்.

பொங்கலின் புத்துணர்ச்சி பொன்னுளாம் பேரின்பம்
மங்காப் பெருந்தொண்டு மாண்புறவே— தங்குபுகழ்
துன்னும் பெருநாளில் தோன்றும் இனிப்பெல்லாம்
கன்னித் தமிழாம் கரும்பு.

—நா. தண்டபாணி, வடகாடு.

பொங்கல் விருந்தே ! புதுப் பொன்னி வெள்ளமே !
கங்குல் விலக்கும் கதிர்ஒளியே !— மங்கையே !
மாதையின் வாழ்த்தான மாதே ! மலர்ச்சரமே !
காதற் கிளிநீ கரும்பு.

—நாவுக்கரசன், தேவகோட்டை.

பொங்கல் அமுதொத்த புத்தறிவு தான்கொடுத்துத்
தங்கும் புகழ்படைத்துச் சாய்ந்ததுவே— பொங்கித்
திரைமோதும் சென்னைத் திருவார் மெரீனுக்
கரைமீது தூங்கும் கரும்பு.

—கா. ப. சவுண்டப்பா, நரிக்கல்பட்டி.

பொங்கலெனத் தித்திக்கும் பொய்யா மொழிக்குறளும்
சங்க இலக்கியமும் சாத்திரமும்— பங்கமிலா
வண்டமிழர் தங்கட்கு வண்டினங்கள் பாட்டிசைக்கக்
கண்டுயிலு கின்ற கரும்பு.

—நாவரசு, விழுப்புரம்.

பொங்கலிடப் புத்தரிசி பொற்குடத்தில் தாங்கியவள்
அங்கமெலாம் இன்பமுற ஆடிவரும்— திங்களொளி
இன்முகத்தில் ஆசையினை ஏற்றுநிற்கும் என்னினைவுக்
கன்னி யுளமோ கரும்பு.

—ச. ஜெயலட்சுமி, ஈரோடு.

பொங்கல் திருநாளில் பொன்னேர் தமிழுழவர்
எங்கும் தமிழறிஞர் ஏற்ற'தை'— மங்கலமாய்
இன்று மகிழ்ந்தார்த்து எங்கள் 'தமிழ்வாழ்க'
என்றுமென்று தின்போம் கரும்பு.

—புலவர் சி. இரத்தினவேலனுர், சென்னை-19.

பொங்கல் இனிப்பாகப் போற்றும் அகச்சுவையில்
தங்கி மகிழ்ந்திடுவார் தாம்மகிழ— தங்கநிறச்
சீதமதி போன்று சிரிக்கும் சிறுகுழந்தை
காதலர்க்குக் கட்டிக் கரும்பு.

—புலவர் தமிழ்மணி, திருச்செங்கோடு.

பொங்கல் வழிகாட்டப் புத்துணர்ச்சி ஓங்கிவர
எங்கும் இயற்கை எழிற்காலம்— பொங்கிவர
வாட்டும் குளிர்பனியாம் வாடை தொழுதோடக்
காட்டும் திருநாள் கரும்பு.

—கே. சின்னசாமி, காட்டுஎடையார்.

பொங்கள் திருநாளின் பொன்னுன வாழ்த்துக்கள்
எங்கள் ' தமிழரசே ' ஏற்றிடுக — எங்கும்
செழிப்பாலே செந்நெல்லின் பொங்கலும் உண்டு,
களிப்பால் கடிப்போம் கரும்பு

—பா. சுப்பராஜ், குமரை.

பொங்கற் புதுப்பெண்ணின் புத்தகமே ' வாழி ' உன்
மங்கலச்சீர் மானபை வியவாரார் ?— எங்குமுள
ஏழைமுகப் பூவோ டெழிலார் தொழில்வளமே
வாழையொடு செந்நெல் கரும்பு.

—பா. வே. பாலகுரு, நத்தம், கோவில்பட்டி.

பொங்கல் புகைச்சலுடைப் பொல்லா மனமுடையார்
இங்குநாம் வாழ இடந்தாரார்— தங்காமல்
மண்ணுலகி னின்றும் மடிந்தொழிவோம் நம்காதல்
கண்ணே கசந்த கரும்பு.

—குழ. அண்ணாமலை, கோவை-1.

பொங்கல் மணக்கப் புதுமை நடைபோட
எங்கும் வறுமை இருள் அகல— மங்கை
உளமெலாம் பூக்க உழவர் குவிப்பார்
களமெலாம் செந்நெல் கரும்பு.

—வீ. இரத்தினம், பெங்களூர்-21.

பொங்கலோ பொங்கலென் றார்க்கும் தமிழோசை
எங்கெங்கும் கேட்கின்ற இந்நாளில்— மங்கை
வடித்தெடுத்த பொங்கலை வாயிலிட்டால் கைப்பாம்
கடித்துச் சுவைக்கும் கரும்பு.

—கோ. பாவை, ஆயங்குடிப்பள்ளம்.

பொங்கல் மணமகளைப் பொன்வாழைச் சேலைகட்டித்
தங்கநிற மஞ்சளைத் தான்பூசி— செங்கதிர்முன்
இவ்வாசல் நிற்கவைத்(து) ஏருழவர் பூட்டினர்
நெல்இஞ்சி நீண்ட கரும்பு.

—கதிரவன், பிரம்மபுரம்.

பொங்கற் பரிசாகப் பொங்குபுகழ் நம்மரசு
பங்கமிலா ஊழியர்க்குப் பாங்குடனே— பொங்கலில்
எத்திக்கும் போற்ற உயர்த்திடுதல் ஊதியத்தை
தித்திக்கும் செய்தி கரும்பு.

—ச. பு. செய்யது முகம்மது, மேலப்பாளையம்.

பொங்கல் சிரிப்பாளே ! பூங்கொடியே ! கார்குழலே '
திங்கள் முகத்தாளே ! செந்தேனே !— மங்காத
மைவிழியே ! மானே ! மரகதமே ! நீஎன்றன்
கையில் இருக்கும் கரும்பு !

—கோ. புகழேந்தி, புதுவை-4.

பொங்கல் தமிழர்க்குப் ; பொன்மழலை பெற்றவர்க்குச்
சங்கத் தமிழ்ப்பாடல் சான்றோர்க்குப்— பங்கமிலாத்
தண்ணிலவு காதலர்க்குத் தாயன்பு சேய்களுக்கே
எண்ண இனிக்குங் கரும்பு.

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்-2 .

பொங்கல் படைப்பதற்கும் புத்தரிசி இல்லையென்றே
மங்கும் நிலையதனை மாற்றியதால்— எங்களுக்குத்
'' தேம்பலாமா ? '' என்றுகுறை தீர்க்குந் ' தமிழரசு '
தேம், பலா, மா, வாழை கரும்பு.

—கோ. கலியாணசுந்தரன், திருமணமங்கலம்.

பொங்கல் புளிப்பாகும் பொன்னூர் தமிழ்ச்சுவைமுன் ;
எங்கும் தமிழிருத்தல் இன்பன்றோ !— மங்காத
பல்கலைகள் நந்தமிழில் பண்ணுய் ஒலித்திடுமேல்
கல்லும் நமக்குக் கரும்பு.

—அரிமதி. தென்னகன், புதுச்சேரி-1.

பொங்கல் திருநாளில் பூமுகத்தாள் நீள்விழியில்
'சங்கதி' யைக் கோடிட்டுச் சாற்றிவிட்டாள்— வெங்களத்தில்
சென்னிகளைப் பந்தாடும் சிங்க இளைஞனுக்குக்
கன்னியவள் நல்ல கரும்பு.

—வி. ஆர். துரை, திருப்பத்தூர்.

பொங்கலுக்கு மாண்பளிக்கப் புத்தரிசி எங்குமுண்(டு)
எங்களுக்கு மாண்பளித்த இன்னுயிராம்— தங்கமலர்
அண்ணாவோ ஈண்டில்லை ! அன்னவரின் நோக்கெல்லாம்
கண்டோர் விரும்பும் கரும்பு.

—க. சி. சுப்பிரமணியம், பி.ஏ., பி.டி. ஈரோடு-1.

பொங்கலெனும் நல்லவளே ! போற்றும் வளமகளே !
மங்கலஞ் சேர்க்கும் மதிமகளே — எங்கே
உழைப்புண்டோ அங்கே உயர்வுண் டென்றே,நீ
கழறும் மொழியே கரும்பு.

—மா. கணபதி, சங்கமங்கலம்.

பொங்கல் திருநாளைப் போற்றுந் தமிழ்நாடு
திங்கள் வளர்ந்தன்ன சீரோங்கும்— மங்கலத்து
நன்னாளைப் போற்றிடவே நம்மரசும் நத்தியதே
கண்மணியே தின்போம் கரும்பு.

—எ. பழனியாண்டிச்செட்டியார், அம்பாத்துரை.

பொங்கற் புதுநாளும், பொங்க அரிசியின்றித்
தங்கக் குடிசையிலாத் தாழ்நிலைபோய்ப்— பொங்குமின்பம்
நாடெல்லாம், வீடெல்லாம், நல்ல தமிழரசால்
காடெல்லாம் செந்நெல் கரும்பு.

—அறிஞரடியான், அரிக்காரன்வலசு.

பொங்கல் விருந்தாகும் புன்னகை; நாணமது
மங்கள மஞ்சள்; முகமோபால்— சிங்கநிகர்
தென்னவரின் தீந்தமிழ்போல் தித்திக்கப் பேசுகிற
கன்னியவள் சொல்லே கரும்பு.

—வாதிராஜ், பி. எஸ் ஸி., பழநி.

பொங்கல் அரும்பிவரப் புன்னகையால் அத்தானை
அங்கம் நெகிழ அரவணைக்கப்— பொங்கிவரும்
செவ்விதழில் தேனுண்ட செவ்வண்டாய் ஆனவனுக்
கெவ்வா றினிக்கும் கரும்பு?

—கே. மருதைசாமி, திண்டுக்கல்-2.

பொங்கல், எருதுகட்டும் பொன்னொளி ஞாயிறுக்கும்
மங்காத நன்றிசொல்லி மாண்புறும்நாள்— நங்காய்!
திருத்தமுறச் சான்றோர் தெளிந்த முறைமை
கருத்தில் இனிக்கும் கரும்பு.

—ச. நடராஜன், பி. ஏ., புரிசை.

பொங்கல் கரும்பென்று பொன்மழலைச் சொல்லுதிர்க்கச்
செங்கமல வாய்திறக்கும் சிட்டுப்போல்— இங்கே
செவிக்கின்பம் நல்கும் சிறப்பறியோம் என்று
கவிழ்ந்ததுவோ நாணிக் கரும்பு?

—சு. நாராயணசாமி, திருச்சி-3.

பொங்கல் வருமென்றே பொன்னிக் குலக்கொடியாள்
தங்கக் கதிரோன்பால் தான்கூடி— எங்கும்
அழகொளிரத் தோகை அசைந்தாடும் வண்ணம்
கழனிகளில் தந்தாள் கரும்பு.

—சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

பொங்கல் வருவதனால் பொற்கொடியர் வாழ்வெல்லாம்
மங்கல மாக மலருமே— சிங்கநிகர்
காளையர் பாய்ந்தோடிக் காளை யடக்குவதே
பூவையர் போற்றுங் கரும்பு!

—இரா. கூத்தரசன், காவேரி நகர்.

பொங்கல்தைப் பொங்குநெய்யுள் பொங்கரிசி— பொங்கு மணம்
பொங்குதடி உன்னின்பப் பொங்கலினை— பொங்குமெழில்
நாணில்வா! பூக்கரத்தால் நாச்சுவைக்க ஊட்டியென்
காணிநிலம் தந்த கரும்பு!

—வெ. கலைக்கூத்தன், பம்பாய்-19.

பொங்கல் சிறக்கவே பொய்யாத வான்வேண்டும்!
எங்கும்நாம் ஏற்றமுற என்வேண்டும்?— மங்காத
ஒற்றுமை, வாய்மை உறுதிஇவை வேண்டுமென்றாள்!
கற்பரசி வார்த்தை கரும்பு!

—க. து. மு. இக்பால், சிங்கப்பூர்.

பொங்கல் புதுப்பானை பொங்கி வரும்பொழுதில்
எங்கும் ஒலிமுழக்கம் எட்டிடுமே— மங்கையர்கள்
தங்கள் மழலைகள் தாவி மடியமரப்
பங்கிடுவீர் பன்னீர்க் கரும்பு.

—திருமதி கங்கா, இரும்பேடு.

பொங்கல் விழாவெடுக்கும் பொன்னார் தமிழ்மகனே
செங்கைப் புயம்விம்மச் சீறிடுவாய்— இங்குநம்
மங்காத் தமிழ்வீழ்ந்தால் மானம் விலைபோகும்
உங்கட் குயிரோ கரும்பு!

—புலவர் இரா. செயபால் சண்முகம், சென்னை-17.

பொங்கல் திருநாளில் பூவுடனே கொத்துமஞ்சள்
எங்கு மிலங்குதற்போல் ஏற்றமுட— னிங்கே
குடியர சாளும் கலைஞரவர் கொள்கை
கடிக்க இனிக்கும் கரும்பு.

—வே. பாலசுப்பிரமணியன், பட்டுக்கோட்டை.

பொங்கல் திருநாளில் பொன்னார் தமிழ்ப்பண்பு
பொங்கும் விதத்தினிலே பூங்கொடியார்— மங்கலஞ்செய்
தங்கள் கிளைபிறர்க்கும், தந்தனரே பொங்கலுடன்
தங்கக் கரத்தால் கரும்பு.

—சுப்பராயலு, பி. ஏ., பெரியகுளம்.

பொங்கல்! மனம்புழுங்கல்!! பொன்தேடி வந்திரண்டு
திங்களில் செய்வேன் திருமணந்தான்— மங்கையென
நீயுரைத்துச் செல்வாய் நெடுந்தோளாய்! இன்றிவளைக்
காயுமதன் கையில் கரும்பு.

—புலவர் த. வாசுதேவன், பி. ஏ., கீழச்செருவாய்.

பொங்க லெனத்தொடங்கிப் பூக்கும்வெண் பாக்கொடுக்கும்
தங்கக் கருவூலம் தாங்கித்தை— பொங்க
உலகவாம் ஏடாய் ஒளிதரும் நீயே
கலைகமழ் கின்ற கரும்பு.

—நக்கீரன், நரிக்கல்பட்டி.

பொங்கலோ பொங்கலென்று புத்துணர்வோ(டு) ஆர்த்திடுவோம்
எங்கும் எவர்க்கும் இயம்பிடுவோம்— தங்குபுகழ்
பல்கலையை நற்றமிழில் பாங்காய் வழங்குவதே
கல்விவலார் கண்ட கரும்பு.

—சி. துரைமாணிக்கம், புள்ளான்விடுதி.

பொங்கல் மலர்ந்திடவே புன்னகை பூத்திடவே
மங்கை தமிழ்த்தாய் மாண்புறவே— இங்குநம்
தண்டமிழ்த் தாய்மொழியில் தாயகமும் பேர்சூட்டக்
கண்டோம் தமிழ்ச்சொற் கரும்பு.

—எஸ். இரத்தினம், ஒடையகுளம்.

பொங்கல்தான் வேண்டுமென்றேன்; கொண்டுவந்தாள் என்மனைவி
பொங்கலிது வேண்டாமே நம்வாழ்வில்— பொங்கவேண்டும்
மண்பயனும் பொன்வளமும் மானமிகு பண்புமென்றேன்
கண்புதைத்தாள் வீட்டுக் கரும்பு.

—நா. சுப்பையா, தே. கல்லுப்பட்டி.

பொங்கு தமிழ்போற்றிப் பூதலத்தோர் தாங்களிக்கத்
தங்கு புகழரசைத் தந்திட்ட—நங்குரவர்
அண்ணு அறவழியே ஆற்றுந் தமிழரசே
கண்ணுக நின்ற கரும்பு.

—புலவர் மு. ஆறுமுகம், ஒடுகத்தூர்.

பொங்கலெனும் புத்தாண்டு மங்கை பொலிவுநலந்
தங்கும் முகமலர்ந்து தான்மொழிவாள்—இங்கிதமாய்
ஏற்றமளி சாதனைகள் ஈட்டுந் தமிழரசு
சாற்றின்பம் ஈயும் கரும்பு.

—ஜி. எம். இராசகோபால், சென்னை-23.

பொங்கல் நறும்படைப்பு பூங்கொடியர் புன்சிரிப்பு;
திங்கள் முழுவடிவம் சின்னமுகம்—அங்கண்
படிக்கக் குறையாப் பழந்தமிழ்நூல்; மேனி
கடிக்கக் குறையாக் கரும்பு.

—புலவர் தமிழ்வடிவு, தாராபுரம்.

பொங்கல் நிலாவழகைப் பூத்த மலரழகைத்
தங்கப் பரிதி தழைப்பழகை—மங்கா
மலையழகை மண்ணழகைப் பண்ணழகாய் மாற்றும்
கலைகொஞ்சும் நெஞ்சம் கரும்பு.

—புலவர் முத்துவெங்கடேசன், திருமயம்.

பொங்கல் இனிக்கப் பொழிந்திடுவீர் பேரன்பை;
எங்கும்அன் பால்பொங்க எண்ணிடுவோம்—மங்காதே
அண்டை அயலாரும் ஆன்றோராய் வாழ்ந்துவரின்
கண்டிடலாம் வாழ்வுக் கரும்பு.

செல்வி லட்சுமி மீனுட்சி, எம். ஏ., நாகர்கோவில்.

பொங்கல் பெருநாளைப் போற்றுமுயர் பண்பாலே
தங்கத் தமிழ்நாடு தந்தஅண்ணு—எங்கும்
அருணே தயச்சீர்காண்! ஆங்குழைக்கும் தம்பியெலாம்
கருணை நிதிதேர் கரும்பு.

—ந. கணபதி செட்டியார், காட்டுப்புத்தூர்.

பொங்கல் புதுச்சோறு பூங்குழந்தை புன்முறுவல்;
தங்கத் தளிர்ச்சேர்க்கை தண்மேனி—தங்கும்
குளிர்மதியம் கொஞ்சுமுகம்; குண்டுமலர்க் கூர்ங்கண்,
களிமழலை கட்டுக் கரும்பு.

—புலவர் ப.ப. இராமசாமி, எலுகாம்வலசு.

பொங்கல் திருநாளில், பொற்பரிசைக் ''காவலர்''பின்
தங்கியோர், ஊழியர்க்குத் தாம்தந்தார்—எங்கள்
நிலையுணர்ந்து துன்பங்கள் நீக்கிவிட்ட தங்கக்
கலைஞரா் கட்டிக் கரும்பு.

—மு. தங்கவேல், வேடசந்தூர்.

பொங்கல் திருநாளில் பொங்கும் உணர்வோடே
எங்கும் களங்காண்பாய் ஏற்றமுடன்—சிங்கமே! நீ
இன்பத் தமிழ்காக்க இன்னுயிரை ஈந்திடுவாய்
கன்னித் தமிழ்தீங் கரும்பு.

—மு. தாமசு தமிழ்ச்செல்வன், சென்னை-7.

பொங்கல் சுவைத்தமிழைப் போதனைக் கேற்றிவிட்டால்
சிங்கநிகர் மாணவர்காள் சீர்பெறுவீர்—உங்களது
நாமணக்கும் பார்முழுதும் நல்லதமிழ்ப் பாமணக்கும்
காமணக்கும் கட்டிக் கரும்பு.

—பூ. அ. துரைராஜா, இராஜபாளையம்.

பொங்கலென்றூர் மண்சேற்றைப் பூமணலைக் கூட்டென்றூர்;
தெங்கென்றூர் கட்டிகளை; செங்கல்தூள்—குங்குமமாம்;
சின்னவண்ணச் செப்புகளைச் சேர்த்துவைத்துக் கொண்டாடும்
சுன்றுகட்(கு) ஆட்டம் கரும்பு.

—அ. வே. காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

பொங்கல் புதுநாளில் புத்தாடை பூண்டெங்கும்
மங்கா ஒளிவிளக்காய் மங்கையர்கள்—தங்கையால்
பொன்னிப் புனலெடுத்துப் பொங்கல் சமைத்தளிக்கும்
கன்னல் சுவையே கரும்பு.

—மணியரசன், புதூர்.

பொங்கல் உலையிலிடப் புத்தரிசி தேடிநாம்
எங்கும் அலைந்தநிலை இன்றில்லை;—பொங்கிக்
குவியும் விளைபொருளைக் குன்றுகக் கூட்டும்
கவின்றமிழ் ஆட்சிக் கரும்பு.

—சரசுவதிமணாளன், சென்னை-28.

பொங்கல் பரிசுவைத்தல் போற்றிக் குறள்பரப்பல்
தங்கும் மனைப்பட்டா தான்வழங்கல்—எங்கும்
படித்தவர்க்கு வேலை பலபநிக ளெல்லாம்
கடித்துச் சுவைக்குங் கரும்பு.

—புலவர் சோ. பா. வேதாரண்யம்.

பொங்கலெனத் தித்திக்கும் பூவிதழ்; சுட்டெடுத்த
தங்கமென மின்னும் தளிருடல்;—செங்கழுத்துப்
பூணொளிர் நித்திலம் புன்சிரிப்பு; என்செல்வி
காணக் கிடைக்காத கரும்பு.

—மு. அ. முகில்வண்ணன், செய்துங்கல்லூர்.

பொங்கற் புதுநாளாம் பூமகட்குப் பொன்னுளாம்
தங்கத் தமிழனின்தாய் நாளிலின்று—தங்கள்
புனிதப் பொருளெனப் போற்றுவதி லொன்று
கனியமுதம் நல்கும் கரும்பு.

—புலவர் வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.




அமிழ்தினும் இனிய கரும்பை, அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் அரசனே தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்து பரவச்செய்ததாக ஔவையார் பாடியுள்ளார் (புறம் 99; 392) புறநானூற்றுக் காலத்திலேயே கரும்பு தமிழ் நாட்டில் பயிராகியது என்பதற்குப் பல பாடல்கள் ஆதாரமாக உள்ளன.

கரும்பு விளைந்து நன்கு முற்றிய வுடன், அதன் கணுக்கள் தூர் விட்டுச் சர்க்கரை முத்துக்களைத் தெறிக்குமாம்! அம் முத்துக்களைக் கரும்பு வயலில் உள்ள கொக்குகள், விரைவாகக் கொத்தி எடுத்து விழுங்குமாம்! விரைவின் காரணமாக விழுங்க முடியாமல் கக்கி, விக்குமாம்! இப்படித் தமிழ் நாட்டின் கரும்பு வளத்தைப் பழந்தமிழ்ப் பாடல் ஒன்று சிறப்பாகக் கூறுகிறது. அப்பாடலில் கரும்பு 'இக்கு' என்று கூறப்பட்டுள்ளது. அப்பாடல் இதோ; படித்துச் சுவையுங்கள்!

இக்கு முற்றிக்
கணுச்சற்று விட்டுத்
தெறித்திட்ட முத்தை
கொக்கு மொக்கிக்
கக்கி விக்குமக்
குறுஞ்சோலைக் குறுங்குடியே!

இறைவனை வர்ணிக்கும்பொழுது இராமலிங்க அடிகளார் ''இதந் தரு கரும்பிலெடுத்த தீஞ்சாறே'' என்றே கூறியுள்ளார்.

இராமாயண காலத்திலேயே கரும்பு இருந்ததாகவும் தெரிய வருகிறது. சீதை இராமனுடன் காட்டிற்குச் செல்லும் போது, வழிநெடுக அமைந்திருந்த கரும்புச் சாறு பிழியும் பொறிகளைக் கண்டு கவலை மறந்து சென்றதாகவும் கூறப்படுகிறது.

இத்தகைய இலக்கியச் சிறப்பு மிக்க கரும்புக்குத் தமிழ் மொழியில் 'வேய்','புனர்பூசம்' கன்னல்' என்ற வேறு பெயர்களும் உண்டு. மற்ற மொழிகளில் கரும்புக்குப் பின்கண்டவாறு பெயர்கள் உள்ளன.

ஆங்கிலம்—சுகர்கேன் (Sugar Cane).

ஜப்பான்—கேன.
சமஸ்கிருதம்—இக்ஷுசல.
அராபி—காசபஸ்-சாகர்.
பெர்ஷியன்—நை-சாகர்.
துருக்கி—கண்தா.
இந்தி—கண்ணு.
தெலுங்கு—செருகு, கனுபுல செருகு.
கன்னடம்—கப்பு.
மலையாளம்—கரிம்ப்.

கரும்பின் பிறப்பிடம் இந்தியா வென்றே கருதப்படுகிறது. இந்தியாவில் பழங்காலத்தில் பயிராகிய மெல்லிய தண்டும், முரட்டுத் தன்மையும் வாய்ந்த கரும்புகள் 'சக்கேரம்' (Saccharum) என்ற வகையையும் (Genus), அதன் உட்பிரிவான 'பார்பரி' (Barberi) என்ற இனத்தையும் (Species) சேர்ந்தவையாகும். இவ்வகைக் கரும்புகள் இந்தியாவிலிருந்து ஏழாம் நூற்றாண்டில் எகிப்து நாட்டிற்குப் போயின. அதன் பின் அங்கிருந்து ஸ்பெயின், மேற்கு இந்தியத் தீவுகள், பிரேசில், மோரிஸ் தீவு ஆகிய இடங்களுக்கும் கரும்பு பரவிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கனமாகவும், சாறு நிறைந்தும் உள்ள 'சக்கேரம் அபிசினேரம்' (Saccharum officinarum) என்னும் பருங் கரும்புத்தினுசுகள் இந்தியாவிற்குக் கொண்டுவரப் பட்டன. அவற்றிற்கு 'மேன்மையான கரும்புகள்' (Noble Canes) என்று பெயர். அவை பொடிக் கரும்புகளைப் போல முரட்டுத் தினுசுகள் அல்ல; ஆயினும் நீர்வளம் நிறைந்த இடங்களில் அவை செழிப்பாக வளருகின்றன. பருங்கரும்புகளின் பிறப்பிடம் பாலினேசியன் தீவுகள் என்று கூறப்படுகிறது.

தற்பொழுது நாட்டுக் கரும்பு என்று கூறப்படுகிற 'வெள்ளை' பூவன் தினுசு மோரிஸ் தீவிலிருந்து வந்ததாகும்.

பல்வேறு நாடுகளிலிருந்தும் இந்தியாவிற்குக் கொண்டுவரப் பட்ட பல வகைகளில் பி.ஓ.ஜே.

2878 என்ற ஜாவா நாட்டின் அதிசயக் கரும்பும் (Wonder cane of java), பி. 208 பார்படாஸ் கரும்பும், பிஜீ.பி. (Figi B.) என்ற குள்ளக் கரும்பும் தென் இந்தியாவின் கால நிலைகளுக்கு இயைந்து மகசூலை அளித்தன. இதனால் பழைய பொடிக் கரும்புகளின் சாகுபடி குறைந்து விட்டது.

முளைக்குந் திறனுடைய கரும்பு விதைகளும், கரும்பு நாற்றுகளும் உற்பத்தி செய்து கரும்பு அபிவிருத்தியில் ஓர் புதுமையை 1888-ஆம் ஆண்டில் ஏற்படுத்தியது ஜாவா. இதற்கு 20 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவில் கரும்பு விதை உற்பத்தி துவங்கப்பட்டது. அந்தக் காலத்தில் கோயம்புத்தூரில் கரும்பு சிறப்பாகப் பூ எடுத்துக் கொண்டிருந்தது. எனவே, 1912-ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. அங்கு, தகுதியான கரும்புத் தினுசுகளுக்குள் அயல் மகரந்தச் சேர்க்கை ஏற்படுத்தி, வட இந்தியாவில் சாகுபடி செய்வதற்கேற்ற புதிய பொடிக் கரும்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

தர்ப்பை (Saccharum Spontaneum) என்பது கரும்புடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு முரட்டுப்புல். இது கரும்பின் வகையைச் (Genus) சேர்ந்தது என்றாலும், இனம் (Species) வேறு. தர்ப்பையின் முரட்டுத் தன்மை, சீர்கேடான காலநிலையைத்தாங்கிக் கொள்ளும் திறன் ஆகியவைகளையும், கரும்பின் குண நலன்களையும் ஒரே பயிரில் சேர்த்து அமைக்கும் நோக்கத்துடன், தர்ப்பைப் புல்லிற்கும் கரும்பிற்கும்மகரந்தச் சேர்க்கை ஏற்படுத்திய பொழுது இரு பிறவிக் (Hybrid) கரும்புகள் உருவாயின. இந்த இரு பிறவிப் பொடிக் கரும்புகள் 'கோயம்புத்தூர்' அல்லது 'கோ. கரும்புகள்' என்று அழைக்கப்பட்டன. இவைகள் வடநாட்டில் சாகுபடி செய்வதற்கு ஏற்றவைகளாக இருந்தன. நாட்டுக்கரும்புகளைக் காட்டிலும் 'கோ. கரும்புகள்' 60 முதல் 70 சதவீதம் அதிக மகசூல் அளித்த படியால், அவை வெகு விரைவில் நாட்டுக் கரும்புகளுக்குப் பதிலாகப் பரவின.

பருங்கரும்புகளின் அபிவிருத்தி 1920-ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் துவக்கப்பட்டது. இதன் பயனாய்ப் புதுப் பருந்தினுசு 'கோ-கரும்புகள்' உருவாயின. அவைகளே இப்பொழுது தென் இந்தியாவில் முக்கியமாகப் பயிராகின்றன. இதன் காரணமாக, நாட்டுக் கரும்புகள் மறைந்து விட்டன.

அயல்நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட கோயம்புத்தூர் பருங் கரும்புகளும், பொடிக் கரும்புகளும் அங்குள்ள புதிய சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு அமைந்து நல்ல மகசூல் கொடுத்து வருகின்றன. தற்பொழுது 'கோ. கரும்புகள்' 40 நாடுகளில் பரவியுள்ளன. 'கோ. கரும்புகள்' அயல் மகரந்தச் சேர்க்கைக்கு ஏற்றவை என்ற தனிச் சிறப்பைப் பல நாடுகளிலும் பெற்றுள்ளன.

உலகத்திலேயே முதன் முதலாகக் கரும்பில் பிறவகைச் சேர்க்கையை (Inter generic crosses) ஏற்படுத்திய பெருமை சர் டி. எஸ். வேங்கட்டராமன் அவர்களையே சாரும். அவர் தமிழ் நாட்டைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் கரும்பிற்கும், சோளம், மூங்கில், மக்காச் சோளம் போன்ற பிறவகைப் பயிர்களுக்கும் செயற்கை முறையில் மகரந்தச் சேர்க்கை ஏற்படுத்தி. மாற்றுப் பிறவிக் (Cross-bred) கரும்புகள் உற்பத்தி செய்தார். கோ. 351–357 கரும்புகளெல்லாம் சோளம்-கரும்புச் சேர்க்கையினால் உற்பத்தி செய்யப்பட்டவைகளாகும். அவைகள் குறுகிய காலப்பயிர்கள். மைசூரில் மக்காச் சோளத்துடன் நெருங்கிய தொடர்புடைய 'டியோசின்ட்' ( Teosinte ) என்ற பயிருடன் மகரந்தச் சேர்க்கை ஏற்படுத்தி அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எச். எம். 661 என்ற முரட்டுத் தினுசுக் கரும்பு உருவாக்கப்பட்டுப் பயிரிடப்படுகிறது.

கரும்பு என்பது சாற்றை உள்ளே அடக்கிக் கொண்டிருக்கிற நார் சம்பந்தமுள்ள திசுக்களாலான ( cells ) ஒரு கூடு. கரும்பில் கீழ்க் கண்ட பொருள்கள் அடங்கியுள்ளன:—

| பொருள்கள் | சதவீதம். |
|---|---|
| தண்ணீர் | 74·50 |
| தாதுப்பொருள் | 0·50 |
| நார் | 10·00 |
| சுக்ரோஸ் | 12·50 |
| டெக்ஸ்ட்ரோஸ் | 0·90 |
| லெவ்வுலோஸ் | 0·60 |
| நைட்ரஜன் ஐக்கியப் பொருள். | 0·40 |
| கொழுப்பு, மெழுகு | 0·20 |
| பெக்டின் | 0·20 |
| பிரிந்த அமிலங்கள் | 0·08 |
| ஐக்கியமாக உள்ள அமிலங்கள். | 0·12 |

கரும்பில் உள்ள சுக்ரோசுக்குக் 'கரும்புச் சர்க்கரை' என்று பெயர். சுக்ரோசு உள்ளஅளவைப் பொறுத்தே கரும்பு மதிப்பிடப்படுகிறது. சுக்ரோசுக்கு இனிப்புச் சுவையும், படிகமாகும் தன்மையும் உண்டு; ஆனால் ஈரத்தை உறிஞ்சாது. கருப்பஞ்சாற்றிலுள்ள குளுக்கோசும், அமிலங்களும், தாதுப் பொருட்களும், சுக்ரோசு படிகமாவதைஓரளவிற்குத் தடை செய்கின்றன. கருப்பஞ்சாற்றிலுள்ள சர்க்கரை விகிதம் தினுசுகளுக்கு ஏற்ப மாறுபடும். அது 13 முதல் 23 சதவிகிதம் வரை மாறுபடலாம்.

கரும்பின் சாற்றில் சர்க்கரை 13 முதல் 16 சதவிகிதம் இருந்தால் அதை எளிய கரும்பென்றும், 17 முதல் 20 சதவிகிதம் இருந்தால் சுமாராகச் சிறந்த கரும்பென்றும், 22 சதவிகிதத்திற்கு மேல் இருக்கும் பொழுது மிகச் சிறந்த கரும்பென்றும் அழைக்கப்படுகிறது.

கரும்பைச் சாறு பிழிந்தபின் மிஞ்சுகிற நார்ப் பொருளுக்குச் சக்கை (Megasse or begasse) என்று பெயர். மென்மையான கரும்புகளில் நார் 10 சதவிகிதமும், கடுங் கரும்புகளில் 12 முதல் 14 சதவிகிதமும் இருக்கும்.

கருப்பஞ்சாற்றில் உள்ள டெக்ஸ்ட்ரோஸ், லெவ்வுலோஸ் ஆகிய இரண்டையும் சேர்த்துக் 'குளுக்கோஸ்' என்று கூறப்படுகிறது. குளுகோசில் இனிப்புச் சுவை குறைவு. அது படிகமாகாமல் ஈரத்தை உறிஞ்சிக் கொண்டு நீர்த்துப் போகும் தன்மையுடையது. அது வெல்லத்தை மென்மையாக்குகிறது. கருப்பஞ்சாற்றில் குளுக்கோஸ் அதிகமாயிருக்கும் பொழுது வெல்லம் இளக்க

மாயிருப்பதுடன் சரியாகவும் உறையாது.

கரும்பின் சுவையைப் பாராட்டாதவர்கள் இருக்க முடியாது. கரும்பு நேரடியாகவே தின்பதற்கும் சாறு பிழிந்து வெல்லம், ( Jaggery ) பொடி வெல்லம், ( Brown Sugar ), 'பூராச் சர்க்கரை', சீனி எனப்படும் வெள்ளைச் சர்க்கரை ( White Sugar ) ஆகியவைகளை உற்பத்தி செய்வதற்கும் பயன்படுகிறது.

கரும்பு தின்பதால் பல் தூய்மை பெறுவதாகவும், இரத்தம் தூய்மை அடைவதாகவும், மார்புச்சளி நீங்குவதாகவும் மருத்துவ நூல்கள் கூறுகின்றன. கருப்பஞ் சாறு குடிப்பதனுல், உடலில் உள்ள சூடு தணிந்து குளிர்ச்சி ஏற்படுகிறது. கரும்புடன் எலுமிச்சம் பழம், மிளகாய் இஞ்சி ஆகியவைகளைச் சேர்த்துச் சாறு பிழிந்து குடித்தால், நீர் வேட்கை தீர்வதுடன், களைப்பும் நீங்கும். கருப்பஞ்சாற்றுடன் பனை நுங்கு நீரைச் சேர்த்துச் சாப்பிட்டால் மிகுந்த சுவையாக இருக்கும் என்றும், புத்துணர்வு பிறக்கும் என்றும் புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகிறது.

கருப்பஞ்சாறும், வெல்லமும், சர்க்கரையும் மருந்துப் பொருட்களுடன் சேர்ந்து பயன்படுவதுடன், பல்வேறு இனிப்புப் பொருட்களான மிட்டாய், சாக்லட், பிஸ்கட், ரொட்டி, 'கேக்' போன்றவைகள் தயாரிக்கவும் பயன்படுகின்றன.

சர்க்கரை, அன்றாட வாழ்வில் பல்வேறுவகையில்பயன்படுகிறது. சர்க்கரை ஓர் சத்துள்ள உணவு என்றும், அதிலிருந்து கிடைக்கும் சக்தி (கலோரி) மிகவும் அதிகம் என்றும் ஆராய்ச்சி மூலம் தெரிய வருகிறது. பல்வேறு சுவைநீரும், உணவுப் பண்டங்களும் தயாரிக்கச் சர்க்கரை உதவுகிறது.

பாகு, சக்கை, 'பில்டர்பிரஸ்' கழிவு, கரும்புத் தோகை ஆகிய துணைப் பொருள்களும் கரும்பிலிருந்து கிடைக்கின்றன.

சர்க்கரை ஆலைகளில், சர்க்கரையைப் பிரித்தெடுத்த பின்பு மிஞ்சுகிற கூழ் போன்ற பொருளுக்குப் 'பாகு' ( Molasses ) என்று கூறப்படுகிறது. இதிலிருந்து ஆல்கஹால், ஈஸ்ட், கால்நடைத் தீவனம் ஆகியவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

சாறு பிழிந்தபின் கிடைக்கும் சக்கை அடுப்பெரிக்கவும், மட்டரகக் காகிதங்கள், சீலோடெக்ஸ் ( Celotex ) போன்ற செயற்கைப் பலகைகள் ( Artificial fibre boards ) செய்யவும் பயன்படுகிறது. கரும்புச்சக்கையின் தூளையும், பாகையும் சம அளவில் கலந்து மாடுகளுக்குத் தீவனமாகக் கொடுக்கலாம். கோதுமைத் தாளில் உள்ள சத்துக்களைவிட இவ்வாறுதயாரிக்கப்பட்ட மாட்டுத் தீவனத்தில் 2 மடங்குச் சத்து அதிகமாக உள்ளது. இத்துடன் நிலக்கடலைப் பிண்ணாக்கையும் சேர்த்தால் மாடுகள் விரும்பித் தின்னும்.

சர்க்கரை ஆலைகளின் வடிகட்டுகிற இயந்திரங்களில் 'பில்டர் பிரஸ்மட்' எனப்படும் கழிவு மிகுதியாகச் சேருகிறது. இவைகளைச் சேகரித்து மக்க வைத்து உரமாகப் பயன்படுத்தலாம்.

கரும்பின் நுனிக் குருத்துகளை மாடுகள் தின்னும். கரும்பின் தோகை காய்ந்தபின்பு, வெல்லம் காய்ச்சும் அடுப்பெரிக்கவும், கிராமங்களில் கூரை வீடுகளை வேய்வதற்கும் பயன்படுகிறது. இத்தோகைகள் எளிதில் மக்காது. காய்ந்த தோகைகளைப் பன்றி எரு கரைத்த தண்ணீரில் நனைத்து மக்கச்செய்து உரமாக்கி வயல்களுக்குப் பயன்படுத்தலாம்.

ஸ்வீடன் நாட்டில் சிறைச் சாலைகளில் போதிய அளவு அறைகள் இல்லாததால் சில சமயங்களில்குற்றவாளிகளுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டால், உடனடியாக அவர்களைச் சிறையில் போட்டு விடுவதில்லை. அதற்குப்பதில் அவர்களுக்கு அதிகாரியிடமிருந்து கடிதம் வரும். "அறை காலியாகும்வரை நீங்கள் உங்கள் தண்டனையை அனுபவிக்கக் காத்திருப்பீர்களேயானல் அது எங்களுக்கு மகிழ்வைத் தரும்" என்று பண்பு கலந்த வாசகம் அதில் எழுதப் பட்டிருக்கும்.

இப்படிப் பல்வேறு வகைகளில் பயன்படும் கரும்பு, வெப்பநாடுகளில் ஒரு முக்கிய வாணிகப் பயிராக (Commercial Crop) விளங்குகிறது. இன்று உலகில் சர்க்கரைத் தொழில் ( Sugar Industry ) ஒரு மாபெரும் தொழிலாக மலர்ந்துள்ளதற்குக் காரணம் கரும்பே என்ருல் தவறல்ல. பெருகிவரும் மக்கட் தொகைக்கேற்ப, சர்க்கரையின் தேவையும் வளர்ந்து வருகிறது. இதனுல் கரும்பு சாகுபடியாகும் பரப்பும் பெருகிவருவதுடன், ஏக்கர் உற்பத்தியும் உயர்ந்து வருகிறது. ஆண்டிற்கு ஆண்டு கரும்பு உற்பத்தியில்பலமுன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன; அதே போல் கரும்பு சம்பந்தமான தொழில்களும் கணக்கின்றிப் பெருகி வருகின்றன.

உலகத்திலேயே கரும்பு உற்பத்தியில் இந்தியாதான் முதலிடம் வகிக்கிறது. 1965-66-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி, இந்தியாவில் 2,749,000 ஹெக்டர் பரப்பில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. 1,705,000 ஹெக்டரில் கரும்பு பயிரிட்டு பிரேசில் இரண்டாவது இடத்தையும், 1,500,000 ஹெக்டரில் பயிரிட்டு கியூபா 3-வது இடத்தையும் வகித்துள்ளன. இந்தியாவில் கரும்பு உற்பத்தி ஹெக்டருக்கு 42.26 மெட்ரிக் டன்னுகவே உள்ளது. ஆனுல் ஹாவாயில் ஹெக்டருக்கு 198.68 மெட்ரிக் டன்னுகை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவில் 1949-50-ல் 1,467,000 ஹெக்டர்களில் மட்டுமே கரும்பு பயிரிடப்பட்டது. ஆனுல் 1968-69-ல் 2,461,000 ஹெக்டர்களில் கரும்பு பயிராகியுள்ளது. இதனுல் 1949-50-ல் 50,173,000 டன் கரும்பு உற்பத்தியாகியதற்கு மாருக, இந்த 1968-69-ல் 1,17,572,000 டன் கரும்பு உற்பத்தியாகி உள்ளது.

இந்தியாவின் கரும்பு உற்பத்தியில் உத்திரப் பிரதேசம் முதல் இடத்தையும், மராட்டிய மாநிலம் 2-வது இடத்தையும், ஆந்திர மாநிலம் 3-வது இடத்தையும், மைசூர் 4-வது இடத்தையும், தமிழ்நாடு 5-வது இடத்தையும் வகிக்கின்றன. (1968-69-ஆம் ஆண்டின் புள்ளிவிவரம்)

தமிழ்நாட்டில் 1949-50-ல் 32,000 ஹெக்டர்களில் மட்டுமே கரும்பு பயிராகியது. அதனால் 1969-70-ல் 1,35,000 ஹெக்டர்களில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 1969-70-ல் 91·10 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1970-71-ல் 94·60 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது தமிழ்நாட்டில் கரும்பு ஆராய்ச்சிக்காக கோயம்புத்தூர், கடலூர், சிறுகமணி, குடியாத்தம் ஆகிய இடங்களில் ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. கரும்புச் சாகுபடியை மேம்படுத்துவதற்காகத் தமிழ்நாட்டில் தற்பொழுது 39 வளர்ச்சி நிலையங்களும், 8 மும்முரச் சாகுபடிப் பிரிவுகளும், ஒரு முன்னோடிக் கட்புல விளக்க நிலையமும் செயல்பட்டு வருகின்றன. ஏக்கர் உற்பத்தியைப் பெருக்குவதையே தலையாய கடமையாகவும், நோக்கமாகவும் கொண்டு மும்முரச் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கரும்பைத் துளைத்துப் பாதிக்கக்கூடிய பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த ஆண்டில் 6 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களைத் தொடங்கவும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

பயிரிடப்படும் கரும்பை விரைந்து ஆலைகளுக்கு எடுத்துச் செல்வதற்கான வசதிகளைச் சீராக்கும் நோக்குடன் சென்ற ஆண்டில் ரூபாய் 28 லட்சம் செலவில் 8 புதிய சாலைகள் அமைக்கப்பட்டன. இந்த ஆண்டில் இவ்வகைச் சாலைகள் அமைக்க ரூபாய் 36·51 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது தமிழ்நாட்டில் 15 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவைகளில் 6 கூட்டுறவுத் துறையினைச் சேர்ந்ததாகும். 15 சர்க்கரை ஆலைகளும் ஆண்டிற்கு 2·4 லட்சம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்கின்றன. இதில் 40 சத அளவைக் கூட்டுறவுத் துறையின் ஆலைகளே உற்பத்தி செய்கின்றன. விரைவில் மேலும் 4 சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவுத்துறை மூலம் அமைக்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்து வருகிறது. அவைகள் கோயம்புத்தூர், தர்மபுரி வேலூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் அமையும்.



முன்காலத்தில் மனிதன் கோயில் மணியோசையைக் கேட்டு நேரத்தை அறிந்தான். இன்றைய மனிதன் ஆலையின் சங்கொலி கேட்டு நேரத்தை அறிந்து கொள்கிறான். இவனுக்குக் கோயில் மணியோசை காதில் விழாத அளவுக்கு இவன் தரம் குறைந்துவிட்டது என்று சொன்னால், அது எப்படிச் சரியாகும்?

நானும்கூட என் மகன் படிப்பைப் பார்த்து "இவன் என்ன படிக்கிறான்—நான் அந்தக் காலத்தில் படிக்கும்போது," என்று சொல்வேன். இப்படி ஒவ்வொரு தலைமுறையினரும் அடுத்துவரும் தலைமுறையினரைப் பார்த்து இப்படியே சொல்லக்கூடும். இப்படிச் சொல்வதால் நாம் வளருகிறோம் என்பதால் அதைப் பொறுத்துக் கொள்கிறோம். ஆனால் அதில் பொருள் இருப்பதாகக் கொள்ளமுடியாது.

தற்பொழுது, சாகுபடியில் உள்ள கரும்புத் தினுசுகளில் சர்க்கரைச் சத்து மிகவும் குறைவாகவே உள்ளது. இக்குறையைப் போக்கக் கோயம்புத்தூரில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் மூன்று அல்லது 4 புதிய தினுசுகளைச் சோதனை செய்து வருகிறது.

கரும்புச் சாகுபடி செய்பவர்களுக்குத் தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு ரூ. 400 வீதம் கடன் கொடுக்கப்படுகிறது. மற்றும் கூட்டுறவுத் துறை மூலமும், சில வணிக வங்கிகள் மூலமும் கரும்புச் சாகுபடி செய்யக் கடன் கிடைக்கிறது.

தரமான விதைக்கரணைகளும், பூச்சி பூஞ்சாள மருந்துகளும், தூவிகள் மற்றும் தெளிப்பான்களும், தொழில் நுணுக்க உதவிகளும் வேளாண்மைத்துறை மூலம் உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கின்றன.

கரும்பு உற்பத்தியைப் பெருக்கக் கீழ்க்கண்ட திருந்திய சாகுபடி முறைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

## பட்டமும் தினுசுகளும்

முன்பட்டம் (நவம்பர் முதல் ஜனவரி முடிய) : கோ. 658, கோ. 449.

நடுப்பட்டம் (பிப்ரவரி முதல் மார்ச் முடிய : கோ. 449, கோ. 740.

பின்பட்டம் (ஏப்ரல் முதல் மே முடிய) : கோ. 419, கோ. 853.

தனிப்பட்டம் (ஜுன் முதல் அக்டோபர் முடிய) : கோ. 658, கோ. 853.

## நிலம் தயாரித்தல்.

நிலத்தை நன்கு புழுதியாகும் வரை டிராக்டர் அல்லது இரும்புக் கலப்பையால் உழவு செய்யவும். அதன்பின் 1 மீட்டர் இடைவெளிக்கு ஒன்றாக, 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) ஆழம் உள்ள சால்களை அமைக்கவும். வயலைச் சுற்றிலும் உள்ள வரப்பின் ஓரங்களிலும், வயலில் 10 மீட்டர் இடைவெளிக்கு ஒன்றாகவும் 45 முதல் 50 சென்டி மீட்டர் ($1\frac{1}{2}$ முதல் $1\frac{2}{3}$ அடி) ஆழமுள்ள வடிகால் வாய்க்கால்களை அமைக்கவும். நீர்ப்பாசனம் செய்வதற்கு வசதியாகத் தனி வாய்க்கால்களைத் தகுந்த இடைவெளியில் அமைத்துக் கொள்ளவும்.

## விதையும் விதைப்பும்

குறுகிய கால (6 முதல் 8 மாதம்) வயதுடைய கரும்பிலிருந்து விதைக்கரணைகளைத் தயாரிக்க வேண்டும். ஒரு ஏக்கர்

கரும்பு நடுவதற்கு 15,000 மூன்று பருவுள்ள கரணைகள் அல்லது 22,500 இரு பருவுள்ள கரணைகள் தேவைப்படும்.

கரணை அழுகல் நோயைத் தடுப்பதற்கு 112 கிராம் அரிட்டான் அல்லது 224 கிராம் அகலால் மருந்தை 45 லிட்டர் தண்ணீரில் கரைத்து, அதில் கரணைகளின் இரு முனைகளையும் நனைத்து நடவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் கரணைகளின் முளைப்புத்திறனும் அதிகமாகிறது.

கரையானால் ஏற்படும் சேதங்களைத் தவிர்க்கக் கரும்பு நடுவதற்கு முன்பு சால்களில் ஏக்கருக்கு 15 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதத்தூளையோ அல்லது ஹெப்டோகுளோர் 3சதத் தூளையோ தூவலாம்.

சால்களில் தண்ணீர் விட்டு, கரணைகளைச் சால்களில் ஒரே வரிசையாக நடவு செய்து அரை அங்குல மண், மேலே மூடும்படிச் செய்ய வேண்டும். கரணைகளில் உள்ள பருக்களைப் பக்கவாட்டத்தில் வைத்து நட்டால் தான், எல்லாப் பருக்களும் எளிதில் வளரும். ஒருபக்கத்துப்பருக்கள் கரணையின் மேலே இருந்து, மறுபக்கத்துப்பருக்கள்கரணையின் அடியில் இருந்தால், கரணையின் அடியில் இருக்கும் மறுபக்கத்துப் பருக்கள் முளைத்துக் கரும்பைச் சுற்றிக் கொண்டு மேலே வர முடியாது. எனவே கரணைகளை நடும்பொழுது பருக்கள் கரணைகளின் பக்கவாட்டில் இருக்குமாறு வைத்து நடவு செய்ய வேண்டும்.

### உரமும், உரமிடுதலும்

கரும்பு பயிரிடுவதற்கு முன்பு எப்பொழுதுமே பசுந்தாளுரப் பயிர்களைப் பயிரிட்டு அவைகளை உழுது மடக்கி விடுதல் சிறந்தது. கடைசி உழவுக்கு முன்பு, அடி உரமாக 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது 20 வண்டி (10 டன்) ஆலை அழுக்கு இடவேண்டும். 28 கிலோ மணிச்சத்து கொடுக்க 175 கிலோ சூப்பர்பாஸ்பேட் உரத்தைக் கரும்பு நடுவதற்கு முன்பு சால்களில் தூவி மண்ணுடன் கலக்கச் செய்தல் வேண்டும்.

தென்னார்க்காடு, திருச்சி மாவட்டங்களில் கரும்பு நட்ட 45-வது நாளில் முதல்முறையாக 56 கிலோ தழைச்சத்து அளிக்க 280 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 124 கிலோ யூரியாவையும், 14 கிலோ சாம்பல் சத்து அளிக்க 24 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் மேலுரமாக இட வேண்டும். உரத்தை வைத்தவுடன் களைக் கொத்தினால் மண்ணை இழுத்து மூடவேண்டும். அடுத்துக் கரும்பு நட்ட 90-வது நாளில் இரண்டாம் முறையாக 56 கிலோ தழைச் சத்து அளிக்க 280 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது124 கிலோ யூரியாவையும், 14 கிலோ சாம்பல் சத்து அளிக்க 24 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் மேலுரமாக இடவேண்டும். உரம் வைத்தவுடன் பழைய பார் கரைகளை உடைத்து அந்த மண்ணைக்கரும்பு வரிசைகளில் அணைக்க வேண்டும்.



இந்த அரசு ஆட்சிக்கு வந்தபின் தமிழ்நாட்டில் 88 புதிய தொழிற்சாலைகள் தொடங்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் 40தொழிற்சாலைகள் தொடங்கத் தமிழக அரசு அனுமதி கொடுத்திருக்கிறது.

1967-க்குப்பின் இந்தத் தொழில்களின் மொத்த முதலீடு சுமார் 110 கோடி ரூபாய் இருக்கும்.

தமிழகத்தில் தொழில் அமைதி இருப்பதால் தான் இதுபோன்ற தொழில் வளர்ச்சிக்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

(அனைத்திந்திய, தொழில், விவசாயப் பொருட்காட்சித் துவக்க விழாவில்)

இதர மாவட்டங்களில் கரும்பு நட்ட 45-வது நாளில் முதல் முறையாக 45 கிலோ தழைச் சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியாவையும், 14 கிலோ சாம்பல் சத்து அளிக்க 24 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் மேலுரமாக இடவேண்டும். கரும்பு நட்ட 90-வது நாளில் இரண்டாம் முறையாக 45 கிலோ தழைச்சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியாவையும், 14 கிலோ சாம்பல் சத்து அளிக்க 24 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் மேலுரமாக இடவேண்டும்.

யூரியா உரத்தைத் தண்ணீரில் கரைத்துக் கரும்பின் தோகைகளில் தெளிப்பதனால் ( Foliar Spraying ) கரும்பிற்குத் தேவையான மொத்தத் தழைச்சத்தில் ¼ பங்கை மீதப்படுத்தலாம் என்பது ஆராய்ச்சியின் மூலம் புலனாகியுள்ளது. இம்முறை மூலம் கரும்புக்கு உரமிடும் செலவில் ஏறத்தாழ ஏக்கருக்கு ரூபாய் 100 வரை மீதப்படுத்த முடிகிறது. இம்முறையில் இரண்டாம் முறையாக 45 கிலோ தழைச் சத்து அளிப்பதற்குப் பதிலாக, 22·5 கிலோ தழைச்சத்தை இரண்டு முறையாக (90-வது நாளும், 100-வது நாளும்) யூரியா கரைசலாகக் கரும்பின் தோகைகளில் தெளிக்கப்படுகிறது. அதாவது கரும்பு நட்ட 90-வது நாளில் 11·25 கிலோ தழைச்சத்து அளிக்க 25 கிலோ யூரியாவை 1,000 லிட்டர் (220 காலன்) தண்ணீரில் கரைத்து காலை 10 மணிக்கு முன்பு அல்லது மாலை 3-மணிக்குப் பின்பு, கரும்புத் தோகைகளின் மீது ஒரே சீராகத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். யூரியா தெளிப்பதற்கு முன்னும் பின்னும் நிலம் குளிர, நீர்பாய்ச்சுதல் அவசியமாகும். இதேபோல் 100-வது நாளிலும் 11·25கிலோ தழைச்சத்து அளிக்க 25 கிலோ யூரியாவை 1,000 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிக்கவும். இவ்வாறு யூரியா தெளிப்பதனால் ஏக்கருக்கு 22·5 கிலோ (50 பௌண்டு) தழைச்சத்து அல்லது சுமார் ரூபாய் 100 மீதமாகிறது.

கரும்புக்குச் செய்ய வேண்டிய பின்செய் நேர்த்தி முறைகளும், பயிர்ப் பாதுகாப்பு முறைகளும் 'தமிழரசு' இதழில் தொடர்ந்து வெளிடப்படும்.

# உறவின் வெள்ளம்

கையளவு நெஞ்சத்தில் கவலை என்னும்
  கடலைதான் ஒருநாளில் மோதிப் பார்க்க,
மெய்சோர்ந்து போய்விட்டேன் ; வியர்வை என்னும்
  வெண்முத்தம் நெற்றியெலாம் பற்றிக் கொள்ளும் !
பொய்யான வாழ்வென்று புலம்பித் தீர்க்க,
  போக்கற்ற பரதேசி யா நான் ? நாளும்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்ளு தற்கே
  குயில்மனையாள் எனக்குண்டு ; மகனும் உண்டு !

ஆதலினல் இல்லத்தை நாடிச் சென்றேன்
  அதுபோதில் என்மனைவி, பிள்ளைக் குப்பால்
காதலினல் கொடுத்துக்கொண் டிருந்தாள் ;அன்புக்
  கனிமழலைத் திருச்செல்வன் களிப்பில் ஆடி
நாதமழை பொழிந்தபடி கிடந்தான் ; அந்த
  நறுங்காட்சி என்மனத்திற் கெதையோ சொல்லும்!
ஓதலுணர் வள்ளுவனர் மூன்ரும் பாலில்
  உரைத்துவைத்த ஓர்சேதி நினைவில் மின்னும் !
கண்டுகேட்டும் உண்டுயிர்த்தும் மற்றும் நெஞ்சக்
  கனிவுடனே உற்றறியும் புலன்கள் ஐந்தும்
ஒண்டொடியாள் தன்னிடத்தே உளதாம் என்றே
  உயர்தலைவன் புகல்கின்ருன் மூன்ரும் பாலில் !
அன்புடைய தலைவனவன்—உள்ளக் கோயில்
  அமர்ந்திருக்கும் தலைவிக்கே இதமாய்ச் சூடும்
சொன்மாலை ! புகழ்மாலை ! எனினும் அந்தச்
  சுகமாலை பிஞ்சுகளும் சொல்லக் கூடும் !

பெற்றெடுத்த பிஞ்சுதனைக் கண்ணுற் கண்டும்
  பிரியமுடன் அன்புமொழி பேசிக் கொண்டும்
பற்றிக்கொண் டிருக்கின்ற மூச்சால் நாளும்
  பாசத்தை வானத்து மழைபோல் பெய்தும்
உற்றதொரு மேனியினல் மகவைத் தீண்டி
  ஓயாத களிப்பதனை இயல்பாய்ச் சேர்த்தும்
மற்றவர்கள் அறியாமல் தனியி டத்தே
  மார்புப்பால் தான்கொடுத்தும் இன்பம் ஈயும்

அன்னையினைச் சிறுகுழவி புகழ்வ தாக
  அமைந்துள்ள பாடலிது என்றே சொன்னல்
நுண்ணளவும் தவறுண்டோ ? பொருத்தம் இன்ரே ?
  நோகின்ற நிலையேதும் இதனு லுண்டோ ?
மின்னைநிகர் தலைவிக்கும் தலைவ னுக்கும்
  விளைந்துள்ள உயிருறவின் உரிமை எல்லாம்
அன்னைக்கும் சேய்க்குமுண்டு ; சிலநே ரத்தில்
  அன்னையவள் தந்தையின்தாய் ஆவ துண்டு !

இல்லத்தில் என்மனையாள், செல்வ னுக்கே
  இனிதாகப் பால்கொடுத்த காட்சி என்றன்
உள்ளத்தில், மேற்சொன்ன எண்ணம் சேர்க்கும் !
  உயர்வான தாய்மைக்கே புகழைச் சேர்க்கும் !
பள்ளத்தைக் கண்டோடும் தண்ணீர் ; ஆழ்ந்த
  பாசத்தைக் கண்டோடும் உறவின் வெள்ளம் !
உள்ளத்தைக் கொள்ளையிடும் ஆற்றல் எல்லாம்
  உயிரான தாயினுக்கும் உரிமை ஆகும் !

புலவர் தமிழ்ப்பித்தன்





# வையம் வழக்கும்

தென்னை பனைமரத்தின் ஓலைச் சிறுநுனியில்
பின்ன முடியாத பேரழகுக் கூட்டையெலாம்

சிட்டுக்கள் பின்னிக் குடிஇருக்கும் சிற்றூர்போல்
கட்டி அமைத்துக் கலகலப்பைத் தேக்கியே

பாடி இணைந்து பறந்து திரிந்துமே
கூடி இனம்பெருக்கும் கொள்கை எதனாலாம் ?

உன்பெயர்த்தி சின்ன உளிபோன்ற கண்ணழகி
அன்னை அருகில் அமர்ந்துட லாட்டிநற்

பாவை பரிந்தெடுத்து நீராட்டிப் பாலூட்டிக்
கோவை இதழ் ஊன்றிக் கொஞ்சுவதும் ; கொஞ்சிப்பின்

கண்ணுறங்கக் காலிடையில் இட்டுத்தா லாட்டியே
கண்ணுறங்கிக் கொண்டிருக்கும் காட்சிதான் என்னேடி ?

பாட்டி திருநாளில் பாவாடை சுற்றிநம்
வீட்டுக் கிணற்றோரம் மேல்குளித்துக் கொண்டிருந்தாள்;

மஞ்சள் அரைத்தாள்; வரிவீழ்ந்த தன்முகத்தில்
அஞ்சு விரல்கொண்டே அப்பினாள்; நான்சிறுவன்,

''பாட்டி இதுவென்ன பாங்'' கென்றேன்; அக்கிழவி
நீட்டிய சொல்லால் ''பழைய நினை''வென்றாள்

சாயும் நிலவொத்த தண்மதியே ! நீபுதுப்
பாயாய் இருந்து பழம்பாயாய்ப் போய்விட்டாய்

ஆனால் வயதிற்கும் அன்பிற்கும் நற்றொடர்பு
கூனாய் விடுவதில்லை ; கூறக்கேள்; நான்கிழவன்

என்றாலும் அன்போ இளமை நிறைந்ததுவாம் !
பொன்றும் துணையும் புதுப்பொலிவு கண்டதுவாம் !

சிற்பி செதுக்கிச் சிலையாக்கி வைத்தநற்
பொற்புடைய கல்லின் புதுச்சிலையாய் நின்றாய்நீ !

கண்டேன் ; களிகொண்டேன் ; கண்மணியின் ஊடேநான்
கொண்டேன் ; உனைநான் அடையும் குறிக்கொண்டேன்

வந்தேன் ; இருந்தேன் ; வழிபார்த்து நின்றிருந்தேன் ;
செந்தேன் அடைகாக்கும் சிறுவண்டைப் போலுன்தாய்

அண்டை இருந்தாள் ; அவளையும் ஏமாற்றிக்
கெண்டை விழிகாட்டிக் கீழ்நோக்கி மேல்நோக்கித்

தண்டெடுத்து வந்த தமிழச்சி போலொருநாள்
வண்டொலிக்க வந்த வழியை மறப்பேனோ !

சித்திரைத் திங்கள் திருக்குளத்துப் பூப்போலச்
சித்திரைத் திங்கள் திருமுகத்தால் என்னை

வரவழைத்தாய் ; வந்தேன் ; மறைவிடத்தில் நின்றே
குரைத்திருக்கும் நாய்காட்டிக் கொல்லாமல் கொன்றே

# வழி

மறைந்தாய் மலர்க்கொடியே ! நான்மறக்கப் போமோ !
நிறைந்தாய் உளத்தில் ; நிலைத்தது நல்லன்பாம் !

வண்டோச்சி வந்து மருங்கணையும் செய்தியெலாம் ;
பண்டைத் தமிழ்நூல் படித்ததுண்டு ; செய்ததில்லை ;

நீர்க்குடத்தைத் தாங்கா நிலைகுலையும் உன்இடையைச்
சீர்செய்வ தாய்ச்சொல்லிச் சிற்றிடையை நான் அணைத்தேன்;

அம்மம்மா ! நீசிரித்த அந்தச் சிரிப்பொலியை
எம்மால் மறந்திருக்க எந்நாளும் ஆகா !

வருவாய் எனஅழைத்தேன் ; உன்வருவாய் என்ன
தருவாய் எனக்கேட்டாய் ; என்வருவாய் உன்றன்

செவ்வாய்ச் சிரிப்பென்றேன் ; சீறிச் சிலைத்துமே
அவ்வாயும் இவ்வாயும் செவ்வாய் புதனும்போல்

சேர்ந்திருக்க வேண்டுமென்றாய் ; செப்பக்கேள் அந்நிகழ்ச்சி
யார்மறுக்கக் கூடும் ? அதுதானே அன்பின்

வழிய துயிர்நிலை என்றே வகுத்திங்(கு)
அழியாப் புகழை அளித்தார்நம் வள்ளுவனார் !

வற்றி வறண்ட மறிகடலும் ; பூக்கள்மேல்
சுற்றித் திரியும் சுரிவண்டும் ; வானில்

நிலவும் நிலவும் நிறைகதிர் ஞாயி(று)
உலவும் உலகம் உருண்டோடிக் கொண்டிருக்க

செய்யும் செயலெல்லாம் செந்தமிழே ! நல்லன்பால்
வையம் வழங்கும் வழியென்றே வள்ளுவனார்

அன்பின் வழிய துயிர்நிலை அஃதில்லார்
என்புதோல் போர்த்த உடம்பென்றார் ; என்றும்

இணைந்திருக்க அன்பே இனித்திருக்க அன்பே
துணையிருக்கும் என்றே துணி !

புதுமைக் கவிஞர்

வாணிதாசன்



# தமிழது எங்கும் பொங்க...



முக்கனிச் சாறும் தேனும்
முதிர்ந்ததீங் கரும்பின் சாறும்
சர்க்கரைப் பாலும் சேர்த்துச்
சரிநிகர் சமமாய் எல்லா
மக்களும் பருகும் நாளாய்
மலர்கவே! பொங்கல் எங்கும் !
செக்கர்வான் கதிரோன் வாழ்க !
செழுமை பொழிக எங்கும் !

மழையினை வெயிலைப் பாரா
மக்களுக் குழைத்த சீரார்
உழவர்தாம் வாழ்க ! என்றும்
உதவிய எருது வாழ்க !
அழகுறு கலைகள் பொங்க
அருந்தமிழ் முழக்கம் எங்கும்
விழைவுறப் பொங்கு மாறு
வேண்டுதும் பொங்கல் நாளில் !

கன்னலைக் கொணர்வோம்; வாழைக்
கனியொடு மஞ்சள் வைப்போம்
செந்நெலை அரிசி யாக்கிச்
சித்திரப் பானை யிட்டு
கன்னியர் குரவை யார்க்கக்
கறந்தபால் பொங்கக் கண்டு
நன்னயத் தமிழில் பாடி
நாடெலாம்பொங்கல் காண்போம்

தொழிலுடன் உழவு பொங்கத்
தோழமை உலகிற் பொங்க
விழவினே டாடல் பாடல்
வீதியில் மலிந்து பொங்க
அழகுறு தமிழும் பொங்கி
ஆணவம் மங்கி மாய்க !
விழைவுறு தமிழே எங்கும்
விளங்கிடும் வீறு பொங்க !

பொங்கலோ பொங்கல் என்றே
பூவைய ரோடும் நாமும்
மங்கல முழக்கம் செய்வோம்
மகிழ்ந்துதான் ஆடிப் பாடி
தங்கமே அனைய அன்னைத்
தமிழது எங்கும் பொங்க !
இங்குநாம் உறுதி கொள்வோம்
இதனினும் பெரிதிங் குண்டோ ?

அன்பது பொங்கச் செய்வோம்
அறமது பொழிய மக்கள்
இன்புடன் வாழச் செய்வோம்
யாவரும் ஒன்றே என்ன
மன்பதை உலகம் வாழும்
வழியது மலரச் செய்வோம்
துன்பதை ஒழித்தே என்றும்
தூயராய் வாழ்வோம் நாமே !

பா.செ.ஸ

# சாதனைச் சரிதம்

நந்தம் செந்தமிழ்நாடு நீண்ட கால வரலாற்றையும் நீடு புகழ் ஆட்சி முறையையும் கொண்டது. மொழிப் பெருமையையும் பண்பாட்டுச் சிறப்பையும் பேணிக் காத்திடும் உறுதியுடனும் மக்களின் நலனை மேம்படுத்தும் தூய நோக்குடனும் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்த புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டது. 1967-ஆம் ஆண்டில் மாநிலப் பொறுப்பை ஏற்று, நான்கு ஆண்டுக் காலம் முடிந்துள்ளது.

இந்தியா உரிமை பெற்றுக் கடந்த 23 ஆண்டுகளில், குறுகிய காலப் பகுதியான நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு ஆற்றிவரும் பணிகள் செயற்கரியன; மற்றைய மாநிலத்தார் பாராட்டற்குரியன; பொது நோக்குடையார் நாளும் வியந்து ஏத்தவல்லன.

ஆட்சிக் காலத்தில், மூன்று ஆண்டுகள் 9 மாதம் என்பது மிகக் குறுகிய காலமாகும். அறிஞர் அண்ணா அவர்கள் மறைவிற்குப் பின்னர் கலைஞர் கருணாநிதி அவர்கள் முதல்வர் பொறுப்பேற்றார். இவர்களின் சீரிய அறிவாற்றலாலும் முயற்சியாலும் தமிழகம் எய்திய முன்னேற்றம் பல திறப்பட்டவையாகும்.

புதிய அரசு, பொறுப்பேற்கும்போது, மத்திய அரசு, கோடி கோடியாகப் பணம் கொடுத்து நிறைவேற்றிடும் ஐந்தாண்டுத் திட்டம் செயல்படவில்லை.

மாநில அரசே திட்டங்களைத் தீட்டி, அதற்கேற்ற நிதி ஆதாயத்திலிருந்து நிறைவேற்ற வேண்டியிருந்தது. எனினும் இந்த மூன்றாண்டுக் காலத்தில் எய்திய முன்னேற்றம், சரிதம் காணாச் சாதனையாகும்.

### வேளாண்மையில் தாளாத முன்னேற்றம் காணீர் !

• வேளாண்மை, தொழில், நீர்ப்பாசனம், மின்சாரம், சமூக நலம், கல்வி ஆகிய துறைகளில் இன்று தமிழ் நாடு பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் மக்களின் இன்றியமையாத் தேவையான உணவுப் பிரச்சனையில் அரசு நாட்டம் செலுத்தியது. மக்கள் அரிசிக்காக அல்லற்பட்டுத் தெருவில் நின்ற காட்சியை அடியோடு ஒழித்துத் தமிழகம் உணவுத் துறையில் தன்னிறைவு பெறப் பல திட்டங்களை வகுத்தது.

வரலாறு போற்றும் பசுமைப் புரட்சியைத் துவக்கியது. 1967-68-ல் உணவு உற்பத்தி 57·6 லட்சம் டன்னாக இருந்தது. 1969-70-ல் 63·5 லட்சம் டன்னாக உயர்ந்தது. இருபோகச் சாகுபடித் திட்டம் தஞ்சைத் தரணியில் செயல்படுத்தப்பட்டு 1967-68-ல் 2·1 லட்சம் ஏக்கரிலும் 1968-69-ல் 5·53 லட்சம் ஏக்கரிலும் 1969-70-ல் 5·65 லட்சம் ஏக்கரிலும் இருபோகச் சாகுபடி செய்யப்பட்டது

1970-71-ஆம் ஆண்டில் 12 லட்சம் ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறுவைச் சாகுபடியின் கீழ் அதிக அளவு நிலப்பரப்பைக் கொண்டு வந்து உற்பத்தியைப் பெருக்க முனைந்தது குறிப்பிடத்தக்கதாகும். உலக வங்கியின் நிதி உதவியுடன் இந்த மூன்று ஆண்டுகளில் 22,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளது. 1966-67-ல் 5·2 லட்சம் ஏக்கரில் குறுவைச் சாகுபடியைத் தொடங்கி 1968-69-ல் 18·10 லட்சம் ஏக்கரிலும் 1969-70-ல் 24·55 லட்சம் ஏக்கரிலும் அமோக விளைச்சலை ஏற்படுத்தத் திட்டம் வகுத்துச் செயல்பட்டு வருகிறது. திட்டமிட்டதற்கும் மேலாக 1969-70-ல் 30·4 லட்சம் ஏக்கரில் பயிரிடப் பட்டுள்ளது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இத்திட்டத்தின்கீழ் 78 சதவீதம் அதிகப் பரப்பளவில் அமோக விளைச்சல் ரகங்கள் பயிரிடப்பட்டன. 1970-71-ல் 37·50 லட்சம் ஏக்கரில் உயர் ரக நெல் விளைவிக்கத் திட்டம் உள்ளது.

**'தமிழரசு' அடுத்த இதழ் சாதனை மலராக வெளிவருகிறது. தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள சாதனைச் சரிதங்களைத் தொகுத்துக் கூறும் அந்தப் புனிதப் படையலுக்கு இக் கட்டுரை முன்னோடி— விடிவெள்ளி ! ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். அது போல், இந்த முன்னோடிக் கட்டுரை பதமாக-அதே நேரத்தில்-இதமாக அமைந்திருக்கிறது.**

இம்மட்டோ! அன்று; ஐ.ஆர். 8 நெல் வகையில் நாம் கண்டுள்ள முன்னேற்றம் பெருமையளிப்பதாகும். ஐ.ஆர். 8 நெல் முதலில் 3·5 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டது.

இப்போது 5·70 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டு வருவது அரசின் விரைந்த சாதனைக்குப் பெருமை தருவதாகும்.

விவசாயிகளுக்குக் கடன் வசதி, ரசாயன உர வகைகள் வழங்குதல், பொறுக்கு விதைகளைக் கூட்டுறவு மூலம் அளித்தல் ஆகிய செயல்களில் பெரும் விரைவும் ஏற்றமும் ஏற்பட்டுள்ளதை விவசாயிகள் உணர்ந்துள்ளனர். அண்மையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் அகரம் கிராமத்தில் நீர்ப்பாசனம் வழங்கும் முறையில் புதுமுறை காணப்பட்டது. கூட்டுறவு முறையில் சின்னஞ்சிறு விவசாயிக்கும் பயன்படும்



இந்த வகையிலான வடிமுனைக் குழாய்க் கிணறுகளின் பலன், விரைவில் மற்ற மாவட்டங்களுக்கும் பரவலாக்கப்படும். உரம், பூச்சி கொல்லி மருந்துகள் உழவர்களின் வீட்டு வாசலிலேயே கொண்டு போய்க் கொடுக்கப்பட்டன. எதிர்பாராத முறையில் நாட்டில் வறட்சி ஏற்பட்ட காலத்திலும் 1968-69-ல் சாகுபடியில் இருந்த 17·08 லட்சம் ஏக்கர் 24 லட்சம் ஏக்கராக உயர்ந்தது அரசின் செயல்திறனுக்கு எடுத்துக்காட்டாகும். அரிசி கிடைக்கவில்லையென்ற மக்களின் இடர்ப்பாட்டு நிலையை மாற்றியதுடன் உணவுக் கட்டுப்பாட்டையும் அரசு அகற்றியது. அந்த அளவு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண அரசு முயன்று வெற்றி கண்டது. இதனால் உழவர் பெருமக்களின் வருமானம் உயர்ந்தது. பஞ்சம் என்ற சொல்லும் பட்டினி என்ற ஓலமும் தமிழகத்தில் தலையெடுக்காமலிருக்க அரசு ஆவன செய்து வருகிறது. வேளாண்மைத்துறையில் அரசு இந்த 4 ஆண்டுக் காலத்தில் ஆற்றிய சாதனைகளைச் சற்று நோக்குவீர் :

விவசாயக் கருவி, டிராக்டர் விற்பனைக்கு 6 நிலையங்கள் அமைக்கிறது. இவற்றிற்கு ரூ. 55 லட்சம் செலவாகும்.

கோதுமை விளையும் மாநிலத்தில் விற்பனை செய்யும் விலையை விடத், தமிழ் நாட்டில் 16 காசு குறைவாகவே விற்கப்படுகிறது.

தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு அவசரச் சட்டம் மூலம் கூலி நிர்ணயம் செய்து, அமைதி காத்தது— உற்பத்தி பெருகுகிறது. 45 கோடி உலக பாங்க் உதவி— தமிழ்நாடு விவசாயப் பணிக்கு கிடைக்கும். இதற்கு முன்னோடியாக உலக பாங்க் குழுவினர் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வளர்ச்சிப்பணிக்கு வழி செய்துள்ளனர். சேலம், வடஆர்க்காடு மாவட்டங்களில் விவசாய முன்னோடித் திட்டத்திற்கு மத்திய அரசிடம் 2 கோடி ரூபாய் மான்யம் பெற்றுத் தந்துள்ளது.

தீவிர விவசாயத்திட்டங்கள் அமுல் நடத்தப்படும் பகுதிகளில் உள்ள குடும்பங்களின் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 2,620 ஆக உயர்த்தியுள்ளது.

குறுவை நெல் விற்பனை செய்ய விவசாயிகளுக்கு வசதியாகத் தஞ்சை மாவட்டத்தில் அரசு 70 'வாங்கும் நிலையங்களை' அமைத்துள்ளது. 3,000 டிராக்டர்கள் வாங்க உலக வங்கிகள் கடன் வழங்கச் சம்மதித்துள்ளது. ஏ.டி.டி. 27, ஐ.ஆர் 8, 'கருணா' ஆகிய உயரின, நெல் வகைகளைப் புகுத்தி உணவு உற்பத்தியைப் பல மடங்கு உயர்த்தியது. ரூ. 2 கோடி செலவில் ''கோவை விவசாயப் பல்கலைக் கழகம்'' வரும் ஆண்டு முதல் செயல்படும். கம்பம் பகுதியில் விவசாயத் துறையில் நல்ல திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 4-வது திட்டத்தில் ரூ. 2 கோடி அளவில் இத்திட்டம் செயல்படும். வேளாண்மைத் தொழில் கழகம் 600 டிராக்டர்களை விற்பனை செய்துள்ளது. உயர் ரகங்களை மக்களுக்கு வழங்கி உற்பத்தியைப் பெருக்கிட, மாநில விதைப் பண்ணைகளை அமைத்திட்டது. சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள் பட்டா செய்யப்பட்டன.

*1967-68— 22,849* ஏக்கர்

*1968-69— 51,852* ஏக்கர்

*1969-70—1,55,813* ஏக்கர்

பயனடைந்த குடும்பங்கள் *1,03,361.*

விவசாயிகளுக்கும், குத்தகைக்காரர்களுக்கும் நியாயவாரம் கிடைக்க வழி செய்தது. 72-க்குள் கொடுக்கத் திட்டமிட்ட நில அளவு 4,34,900 ஏக்கரில் 16,000 ஏக்கர்கள் நிலப்பட்டா செய்யப்பட்டுள்ளன.

உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கரும்புத் தோட்டங்கள், மேய்ச்சல் நிலங்களுக்கு அளிக்கப்பட்ட விதி விலக்கை நீக்கியது.

விவசாயிகளின் நன்மைக்காகப் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரி முற்றிலும் நீக்கப்பட்டது.

இருபோக, முப்போக சாகுபடித் திட்டம் ஊக்குவிக்கப்பட்டு, உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.

கழக அரசு ஆண்டுதோறும் உணவு உற்பத்தியைப் பன்மடங்காகப் பெருக்கி வருகிறது.

**எடுத்துக் காட்டு :**

1. 1968-69-ல் 53 லட்சம் டன் உற்பத்தியானது. இதில் 35·5 லட்சம் டன் அரிசி.

2. 1969-70-ல் 65 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்தது.

3. 1970-71-ல் உணவு தானிய உற்பத்திக்கான திட்ட இலக்கு 67 லட்சம் டன். இதில் 47 லட்சம் டன் அரிசி உற்பத்தி அடங்குகிறது.

தமிழ்நாட்டில் நெல் சாகுபடி நடைபெறும் மொத்தப் பரப்பு 66 லட்சம் ஏக்கர், இதில்

37·5 லட்சம் ஏக்கரில் விளைச்சல் ரகங்களைப் பயிரிடும் திட்டம் செயல்படுகிறது.

பின்தங்கிய புதுக்கோட்டைப் பகுதியை வேகமாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு குடுமியான் மலை 1,000 ஏக்கர் 'அண்ணா பண்ணை'யில் விவசாய ஆராய்ச்சிக் கழகமும், விவசாயக் கல்லூரியும் அமைத்திட ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஒரு கோடி ரூபாய் செலவில் புஞ்சைப் பண்ணை விரிவுபடுத்தப்படும். விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்காகப் பல லட்சம் ஏக்கரில் விமானம் மூலம் மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே மிக அதிக அளவு முந்திரிப் பருப்பைத் தமிழ் நாடு உற்பத்தி செய்கிறது. தீவிர முந்திரிச் சாகுபடித் திட்டத்தின் கீழ் திருச்சி, தென்னார்க்காடு மாவட்டத்தில் புதிதாக 20 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் முந்திரி சாகுபடி செய்கிறது. முந்திரி உற்பத்தியை மேலும் விரிவு படுத்தவும், ஊக்குவிக்கவும் ''முந்திரி கார்ப்பரேஷன்'' ஒன்றை அமைக்குமாறு மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளது.

நீலகிரி, கன்னியாகுமரி, மதுரை மாவட்டங்களில் தீவிர தென்னைச் சாகுபடித் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.

மண்ணின் வகை தெரிந்து, விவசாயிகள் தக்க பயிரினைப் பயிரிட வழி செய்யும் பொருட்டு மண்வளம் பற்றிய மாதிரி சர்வேயை அரசு தயாரித்து வருகிறது. வரும் ஆண்டு விவசாயிகளுக்கு உதவியாக வழங்கப்படும்.

வாழை உற்பத்தியை அரசு அதிகம் ஊக்குவித்து வருகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் வாழைப் பழத்திற்கு, ஜப்பான், ரஷ்யா, இதர ஐரோப்பிய நாடுகளில் நல்ல கிராக்கியுள்ளது. எனவே, ஜப்பானுக்கு வாழைப் பழம் நிறைய ஏற்றுமதி செய்யத் தமிழ் நாடு அரசு, வகை செய்துள்ளது.

தூத்துக்குடிப் பகுதியில் 6,000 ஏக்கரில் வாழை பயிர் செய்யும் பொருட்டு ரூ. 4 கோடியே 40 லட்சம் விவசாய நிதி உதவிக் கழகம் அளிக்கிறது. தூத்துக்குடியிலிருந்து ஜப்பானுக்கு வாழைப்பழம் அனுப்பப் படுவதன் மூலம் ஆண்டு தோறும் ரூ. 6 கோடி அந்நியச் செலாவணி கிடைக்கும்.

இவ்வாண்டு வடஆர்க்காடு மாவட்டத்தில் விரைவில் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைத்திடவிருக்கிறது.

கரும்பு உற்பத்திப் பெருக்கால் சீனி, கட்டுப்பாடின்றித் தாராளமாகக் கிடைப்பதுடன், கட்டுப்பாட்டு விலைக்கே பொதுச் சந்தையிலும் கிடைக்கும் வகை செய்திட்டது.

தமிழ்நாட்டில் மொத்தம் 50 ஆயிரம் ஏக்கரில் இன்று மஞ்சள் சாகுபடி நடக்கிறது.

கோவை மாவட்டத்தில் ஈரோடு, கோபிச்செட்டிப்பாளையம் பகுதியில் 2,500 ஏக்கரில் புதிய அதிதீவிரச் சாகுபடித் திட்டத்தின்கீழ் மஞ்சள் சாகுபடி நடைபெறுகிறது.

மஞ்சள் சாகுபடிக்காக, ஏக்கருக்கு ரூபாய் 1,800 கூட்டுறவுக் கடனுதவி அளிக்கப்படுகிறது. இவ்வகையில் இதுவரை ரூ. 40 லட்சம் அளிக்கப்பட்டுள்ளது. ரூ. 248 லட்சம் மதிப்புள்ள 10,556 பம்பு செட்டுகள் (1968-70) வழங்கப்பட்டன.

ரூபாய் 87 லட்சம் மதிப்புள்ள 221 டிராக்டர்கள் (1968-70). 748 டிராக்டர்கள் ரொக்க விலைக்கு அளிக்கப்பட்டன.

4,633·76 ஏக்கரில் தமிழ் நாடு முழுதும் மொத்தம் 62 அரசுப் பண்ணைகள் உள்ளன.

விவசாயிகட்கு நல்ல ரக விதைகளை வழங்கிட ''மாநில விதைப் பண்ணைகள்'' பல தொடங்கப் பட்டுள்ளன. 4-வது திட்ட காலத்தில், விதைப் பண்ணைகள் ஏற்படுத்தும் பொருட்டு, வருடந்தோறும் 2,780 டன் நெல், 505 டன் எண்ணெய் வித்துக்களும் வழங்கத் திட்டமிடப்பட்டது. 25 ஏக்கர் பரப்புள்ள 230 விதைப் பண்ணைகள் அமைக்கப் படும். பொருளாதார நிலையை உயர்த்த மண்வளக் காப்பு நடவடிக்கை, பாசன வசதிகள் ஆகிய திட்டங்களில் 1968-69-ல் அரசு விதைப் பண்ணைகளிலிருந்து கிடைத்த லாபம் ரூபாய் 7,61,190. விதைப் பண்ணைகளின் ஊழியர்களுக்கு உற்சாகமூட்ட 'திறமைப் பரிசுகள்' ரொக்கமாக வழங்கப் படுகின்றன.

வட ஆர்க்காடு நவலோக்கில் உள்ள அரசு விதைப் பண்ணையில் வித்துப்பதனப்படுத்தும் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது.

தரமான விதைகளை விவசாயிகட்கு நேரிடையாக வழங்க, பொறுக்கு விதை, நடவு விதைகள் உற்பத்தியாகின்றன. 1968-69-ல் 2,855 டன் 'முதல் நிலை' நெல் வித்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. 1969-70-ல் 2,738 டன் பகிர்ந்தளிக்கப் பட்டது.



வித்துக்களின் தரத்தை நிலை நிறுத்தும் நோக்கத்துடன் 'விதைச்சான்றிதழ்' திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

விதைகளின் தரத்தைப் பரிசோதனை செய்யக் கோயம்புத்தூரில் ஆய்வுக்கூடம் நிறுவப் பட்டுள்ளது.

பத்திரப் பதிவுக் கட்டணம், நிலத் தீர்வை அடிப்படையில் நிர்ணயிக்கவேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை அரசு ஏற்றுச் செயல்படுத்துகிறது.

தர்மபுரி மாவட்டத்திலுள்ள பின்தங்கிய வகுப்பினருக்கு, இலவசமாக உழவு மாடுகள் வழங்குவதற்காக ரூ. 12,000, பழங்குடியினருக்கு ரூ. 2,800 அளித்துள்ளது.

செங்கை மாவட்ட நாடோடிகள் நல்வாழ்வுத் திட்டத்திற்கு ரூபாய் 75,000 வழங்கியுள்ளது.

வேளாண்மை உற்பத்தி பெருக வேண்டுமானால் நிலம் வளமாக வேண்டும். நிலவள உரிமைகளிலும் நிலஉடைமைகளிலும் அடிப்படை மாற்றம் காண அறிஞர் அண்ணா விரும்பினர். அதன் அடிப்படையில் நில உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கராக அரசு துணிந்து குறைத்தது. ஏழை, பாட்டாளி மக்களின் நல்வாழ்வில் மலர்ச்சி காண விழையும் அரசின் சாதனை இது.

வேளாண்மையிலும் தொழில் வளர்ச்சியிலும் குறுகிய காலத்தில் முன்னேற்றம் கண்ட, கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமையில் இயங்கும் அரசு, மக்களின் நீண்டகால விருப்பத்தையும் நிறைவேற்றத் தவறவில்லை. மொழியை விழியென்று காக்கும் கலைஞர் அரசு, தமிழ் மக்களின் ஏற்றத்தையும் மொழியின் மேம்பாட்டையும் உயர்த்த ஏற்ற நடவடிக்கை எடுத்தது.

**தமிழர் செவியில் இன்பத் தேன் பாயுது!**

'சென்னை ராஜ்யம்' என்ற பெயரைத் தமிழ் நாடு என மாற்ற வேண்டி, முன்பிருந்த ஆட்சியில் எத்தனையோ முறை வேண்டப்பட்டது. தியாகி சங்கரலிங்கனார் உயிர் துறந்தார். அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோதே 'சென்னை ராஜ்யம்' என்ற பெயர் 'தமிழ் நாடு' என்று மாற்றப்பட்டது. தமிழர்களின் செவியில் அவர் தேனைப் பாய்ச்சினார். பின்னர் எல்லாத் தொடர்புகளிலும், 'சென்னை மாநிலம்', 'தமிழ் நாடு' என்று மாற்றப்பட்டு இன்று நமது தாய் நாட்டின் பண்டைய பெயரே எங்கும் வழங்கிவரும் வகையில் அரசு செயலாற்றியதைப் பொது நோக்குடையார் மறந்திருக்கமாட்டார்கள்.



'வானொலி' என்ற தமிழ்ச் சொல்லிருக்க 'ஆகாஷ்வாணி' என்ற கடுஞ்சொல் செவியைத் துளைத்து வந்தது. இதற்குக் கலைஞர் அரசு முயன்று 'வானொலி' என்ற சொல்லைப் பயன்படுத்தச் செய்தது.

பகுத்தறிவு அடிப்படையில் சுயமரியாதைத் திருமணம்செய்து கொண்டவர்களைச் சட்டப்படி ஏற்கவேண்டுமென்று பல ஆண்டுகளாகத் தமிழகத்தில் வலியுறுத்தப்பட்டு வந்தது. முன்னைய அரசு செவிமடுக்கவில்லை. மக்கள் துயர் போக்கும் இந்த அரசு, சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்படி செல்திறனாக்கிச் சட்டம் வகுத்து நிறைவேற்றியது.

**தமிழ் முழக்கம் செழிக்கச் செய்தோம்!**

தமிழ் மாமுனிவர் வள்ளுவப் பெருந்தகையின் சிறப்பைச் சாதாரண மக்களும் உணரும் வண்ணம் அரசுப் பேருந்துகளில் வள்ளுவரின் குறட்பாக்கள் எழுதப்பட்டன. திருவள்ளுவர் புகழை நினைந்து பெருமை கொள்ளும் வகையில் நினைவு நாளை விடுமுறை நாளாக அரசு அறிவித்துள்ளது. பயணிகள் இல்லங்களில், அரசு அலுவலகங்களில் திருவள்ளுவர் படம் வைக்கப்பட அரசு ஆணையிட்டுள்ளது.

வள்ளுவர் நாளுடன் நபிகள் பிறந்த தினத்தையும் விடுமுறை நாளாக அரசு அறிவித்துள்ளது. தொழிலாளர் நலம் காக்கும் அரசு, மே தினத்தையும் விடுமுறை நாளாகச் செயல்படுத்தியது.

மக்களுக்கு நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் இருப்பதுடன் தேசியத் தலைவர்களை மதிக்கும் உணர்வும், அவர்களுக்கு நன்றி காட்டும் உளப்பாங்கும் வேண்டும்.

இந்தியாவிலேயே இதைச் செயலாக்கியது தமிழ்நாடு அரசு தான். விடுதலைநாள், குடியரசு தினம், காந்தி பிறந்த நாள், நேரு பிறந்த நாள் ஆகிய நாட்களை அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சீரோடு நடத்தி வருகிறது கலைஞர் தலைமையில் இயங்கும் தமிழ் நாடு அரசு.



உலகம் வியக்கும் வண்ணம் உயரிய முறையில் தமிழின் சிறப்பை அவனியெங்கும் அறிவிக்க உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டிய பெருமையையும் புகழையும் தமிழ்மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

கலைஞர் கருணாநிதி தலைமையில் இயங்கும் அரசு, தேசியத் தலைவர்களை மதித்துப் போற்றுவதுடன் மாற்றுக் கட்சிக்காரர்கள் ஆயினும் காங்கிரஸ் தியாகிகளுக்கும் பெரிதும் நன்மை செய்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் காங்கிரஸ் தியாகிகள் 107 பேர் மட்டுமே ஓய்வூதியம் பெற்று வந்தனர். இன்று கழக ஆட்சியில் 6,002 காங்கிரஸ் தியாகிகள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

முன்னாள் அரசவைக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, பரலி சு. நெல்லையப்பர் ஆகியோருக்கு மாதாமாதம் உதவிப் பணம் வழங்கி வருகிறது. தஞ்சையில் தில்லையாடி வள்ளியம்மையின் நினைவாக, நகர் அமைக்க ரூபாய் 5 லட்சம் வழங்கியுள்ளது அரசு. கட்டபொம்மன் சந்ததியினருக்கும் உதவிப் பணம் வழங்கி வருகிறது.

**அரசுக்கு யாவரும் சமம்!**

எதிர்க்கட்சித் தலைவருக்குத் தக்க மதிப்பை அளிக்கும் வகையில் மாதச் சம்பளம் ரூ. 500, வீட்டுப்படி ரூ. 100, வண்டிப்படி ரூ. 100 அளித்து வருவதும் இந்த அரசின் செயலாகும். அத்துடன் அரசு செலவில் கார் வழங்கியும், சுருக்கெழுத்தாளர் அமர்த்தியும், இம்மாநிலம் மக்களாட்சிக்கே நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ வகைசெய்துள்ளது.

வேளாண்மைத் துறையில் பெரும் முன்னேற்றம் கண்டு வரும் கழக அரசு, தொழில்




...றையில் முனைந்து பல சாதனைகளை ஆற்றி வருகிறது. வெளிநாடுகளுக்குச் சென்ற போது நமது முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அங்குள்ள தொழிலதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்தார். தமிழகம் தொழில் வளர்ச்சிபெற்று வேலை வாய்ப்பும் அதிகரிக்க வேண்டி அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஐம்பது கோடி செலவில் ஏற்படவிருக்கும் சென்னை ரசாயனத் தொழிற்சாலைத் திட்டம் முடியும் நிலையிலுள்ளது.

**எண்ணிலாத் தொழில்கள் இங்கு**

நாக்பால் பெட்ரோ கெமிக்கல் சுத்திகரிப்பு நிறுவனம் என்ற 5 கோடி செலவிலான மற்றொரு திட்டமும் செயற்படுத்தப்படவிருக்கிறது. சென்னை உரத் தொழிற்சாலைக்கான பணிகள் விரைந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தனியார் துறையில் பிளாஸ்டிக் பொருள்கள், ரசின்கள், ரசாயனப் பொருள்கள் இவற்றை உற்பத்தி செய்வதற்கான புதிய திட்டப் பணி ஒன்றும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தூத்துக்குடி துறைமுகத் திட்டம் ரூ. 7 கோடி செலவில் செயல் பட்டு வருகிறது. சேலம் இரும்பாலைத் திட்டம் தமிழ் மக்களின் கனவாக இருந்துவந்தது; கழக அரசு முனைந்து நனவாக்கியது பெருமைக்குரியது. ரூ. 100 கோடி செலவில் இயங்கவிருக்கும் சேலம் இரும்பாலைத் திட்டத்தை இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்துள்ளார். பூர்வாங்க வேலை நடைபெறுகிறது. ஆலங்குளத்தில் சிமண்டுத் தொழிற்சாலையை ரூபாய் 6.77 கோடி செலவில் அரசே அமைத்து நடத்துகிறது. இதில் நாளொன்றுக்கு 600 டன் சிமிட்டி தயாராகின்றது. விரைவில் தினம் 1,200 டன் சிமிட்டி உற்பத்தி செய்யும் வகையில் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கனவு பலித்தது.**

ஏழு கோடி செலவில் வார்ப்பு இரும்பாலை அரக்கோணத்தில் ஏற்பட்டு வருகிறது. நைலான் மின் வலை தயாரிக்க ரூ. 15 லட்சம் செலவில் தொழிற்சாலை அமைக்கிறது. ரூபாய்1.75 கோடி செலவில் கடலூர் துறைமுகத் திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெட்ரோ கெமிக்கல் தொழில்களைத் தமிழகத்தில் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

‘தொழிலாளர் அரசு’ எனப்படும் வகையில் அரசு தொழிலாளர்களின் நலனைப் பேணி வருகின்றது. கோவையில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, தொழிலாளர்கள் அல்லற்பட்டனர். தமிழ் நாடு அரசின்அயராத முயற்சியால் கோவையில் ஆலைகள் திறக்கப்பட்டன. இந்த ஆலைகளுக்கு விற்பனை வரி, மின்சார வரிச் சலுகைகள் கொடுக்க அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

**நெசவாளர் துயர் களைந்தது !**

கைத்தறித் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதில் கழக அரசு பெரும் நாட்டம் செலுத்தி வருகிறது. கைத்தறி விற்பனையை ஊக்குவிக்க ரூபாய்க்கு 10 காசு தள்ளுபடி அளிக்கிறது. இந்தியாவிலேயே கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக அளவில் உதவி வருவது தமிழ்நாடுதான். 20,000 விசைத் தறிகளைப் புகுத்திக் கைத்தறி உற்பத்தியைப் பெருக்கியது தமிழ் நாடு அரசு.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டத்தை அரசு ஊக்குவித்துச் செயற்படுத்துவதால் 16 லட்சம் தொழிலாளர்கள் மருத்துவ வசதி பெறுகின்றனர்.

கோவையில் அரசின் முனைப்பால் திறக்கப்பட்ட 14 தொழிற்சாலைகள் மூலம் 9,413 தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெற்றனர். தொழிற்சாலைகள் சீரிய வகையில் இயங்கத் தமிழ் நாடு அரசு பஞ்சாலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. தூத்துக்குடியில் ரூ. 52 கோடி செலவில் கூட்டுறவுத் துறை உதவித் திட்டம் ஒன்றிற்கான பணிகளைத் தொடங்கியுள்ளது அரசு.

தமிழ்நாட்டில் பல பயனுள்ள புதுத் தொழிற்சாலைகளைத் தொடங்குமாறு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள தொழிலதிபர்களைத் தமிழக முதல்வர் அழைத்துள்ளார். அதற்காக வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும் வாக்களித்துள்ளார்.

**சென்னை மாநகர் அழகு ! அழகு !!**

தமிழ் நாட்டின் தலைநகரம் சென்னை. இந்நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யவும் வெளிநாட்டினர் நாட்டத்தை ஈர்க்கும் வண்ணம் அழகுமிக்க நகராக்கவும் அரசு முயன்று வருகிறது. குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய ரூ. 21 கோடியே 3 லட்சம் செலவில் உள்ள திட்டம் ஒன்றை அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கிவைத்தார்கள். இது, வீராணம் திட்டமாகும். 66 அங்குலக் குழாய்கள் மூலம் நீண்ட தொலைவிலிருந்து குடிநீர் பெறும் இத்திட்டம் உலகிலேயே மிகப் பாராட்டப்படும் தமிழக அரசின் சாதனையாகும். இத்திட்டத்தின் பூர்வாங்கப் பணிகள் நடந்து வருகின்றன.

கூவம் சீரமைப்புத் திட்டம் சென்னை நகருக்கு அழகைச் சேர்ப்பதுடன் நீண்ட காலமாக இருந்த கனவை நனவாக்கக் கூடியதாகும். ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் செயலாற்றப்படும் இத் திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இரண்டாவது கட்டப் பணியும் நிறைவேறி வருகிறது.

சென்னை மாநகரின் மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் குடிசைகளில் வாழ்கின்றனர்.






இவர்களின் குடிசைகளில் அடிக்கடி தீப்பற்றிக் கொள்கிறது. 1970-ஆம் ஆண்டுவரை 3,895 தீப்பற்றாத வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மற்றொரு பெருந் திட்டம், சென்னை நகரில் குடிசைகளை அகற்றிக் குடிசை வாழ்வோருக்கு மாற்று வீடுகள் கட்டித் தரும் திட்டமாகும். இத்திட்டம் சென்னை நகரின் அழகைக் கூட்டுவதுடன் சுகாதாரத்தையும் பேணும். அண்மையில் இந்தக் குடிசை மாற்று வாரியத் திட்டத்தை முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் துவக்கி வைத்தார்கள். குடிசைகளின் சீரமைப்புக்கும் அவற்றை மாற்றியமைப்பதற்கும் உள்ள இந்த வாரியம், இந்தியாவில் முதன்மையானது. இதற்கென ரூபாய் 40 கோடியில் சுழல் நிதி ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வறட்சியின் காரணமாகச் சென்னை மாநகரில் குடிநீர்த் தட்டுப்பாடு வந்துற்றபோது, 10 நாட்களில் குடிநீர் வசதிக்காக 12 ஆயிரம் குழாய்கள் அமைக்கப்பட்டுக் குடிநீர்த்தட்டுப்பாட்டை அரசு போக்கிய சாதனையைச் சென்னை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

**மின்சார வசதி எங்கும்! எங்கும்!!**

தமிழ் நாடு, மின்சாரத்துறையில் இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கும் அளவிற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டது சிறப்பிற்குரியதாகும். 1972-ஆம் ஆண்டுக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்க வேண்டுமென்ற அரசின் குறிக்கோள் நிறைவேறிவருகிறது. இந்த இலக்கு வெற்றியடையும் நிலை ஏற்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 40 கிராமங்கள் வீதம் மின் ஒளி வழங்கப்பட்டு வருகிறது. எங்கும் மின்ஒளி வழங்கும் முனைப்புத்திட்டத்தைச் செயற்படுத்தப் புதிதாக 1,500 ஊழியர்களும் 500 பொறியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப் பட்டு வருகிறது. இந்தியாவில் உள்ளவற்றில் மூன்றில் ஒரு பங்கு விசையேற்றங்கள் (பம்பு செட்டுகள்) தமிழ்நாட்டில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். சுருளி மலையில் மின்சார வசதிக்காக ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கோதையாறு நீர் மின்திட்டம் ரூ. 14 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 93.1 சதவீத அளவுநீர்ப்பாசன வசதியைப் பயன்படுத்திக்கொள்ள அரசு வழி கண்டு சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

ஆண்டுக்கு 44 கோடி யூனிட் மின்சக்தியைத் தமிழ் நாடு மின் இணைப்புக்கு அளிக்கக் கூடிய பாண்டியாறு, புன்னம்புழா மின் திட்டத்திற்கு ரூ. 15 கோடி செலவில் வகைசெய்து திட்டக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு மின்சாரம் அளிப்பதில் இந்தியாவில் தமிழ்நாடு தான் வழி காட்டியாகத் திகழ்கிறது.

தமிழ் நாடு மின்சார வாரிய ஊழியர்களின் குறைகளைப் போக்க அவர்களது ஊதியத்தை அரசு உயர்த்தியது சீரிய சாதனையாகும். இதனால் ஆண்டுக்கு ரூபாய் 4 கோடி செலவாகிறது.

**தாயகம் திரும்பியோர்**
**மறுவாழ்வு கண்டனர்!**

வெளிநாடுகளிலிருந்து தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்படும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொறுப்பையும் கழக அரசு செவ்வனே ஆற்றி வருகிறது. பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் இதுவரையில் ஒரு லட்சத்து 14 ஆயிரம் பேர் தமிழ் நாட்டிற்குத் திரும்பியுள்ளனர். பர்மாத் தமிழர்களுக்கு உதவிட ரூபாய் 1½ கோடி திட்டம் ஒன்றை மத்திய அரசு வகுத்துள்ளது. இவர்களுக்கும் இலங்கையிலிருந்து திரும்பியுள்ள 22 ஆயிரம் தமிழர்களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி மறுவாழ்வு அளித்திட ரப்பர் தோட்டங்களும் தேயிலைத் தோட்டங்களும் பயிரிடப்பட விருக்கின்றன.

குமரி மாவட்டத்தில் 1 கோடியே 25 லட்சம் செலவில் மத்திய அரசின் உதவியுடன் ரப்பர் தோட்டம் அமைக்கப்படுகிறது. தாயகம் திரும்பிய பர்மா, இலங்கைத் தமிழர்களுக்கு வியாபாரம் செய்வதற்குக் கடனுதவியும் அரசு வழங்குகிறது.

நீலகிரி மலையில் ரூபாய் 93 லட்சம் செலவில் தேயிலைத் தோட்டம் பயிரிடப்பட்டுள்ளது.

பிச்சைக்காரர்களின் தொல்லையை நீக்கிடவும் தொழுநோய் பீடிப்பாளர்களுக்குத் தனியிடம் அமைத்திடவும் அரசு முனைந்து செயற்பட்டுவருகிறது. பிச்சைக்காரர் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றி அவர்களுக்குத் தனியிடம் அமைத்து அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள அரசு திட்டம் தீட்டிச் செயற்படுத்தியுள்ளது. இதற்கென ரூபாய் 40 லட்சம் வழங்கியுள்ளது.

'வன்முறை தவிர்த்து வறுமையை ஒழிப்போம்' என்பது நம் அரசின் குறிக்கோள். ஏழை, எளிய, பாட்டாளி மக்களின் துயர் களைந்து சமதர்ம அரசை ஏற்படுத்த வேண்டிய நோக்கோடு, அரசு செயல் திட்டத்தை வகுத்துப் பாடுபட்டு வருகிறது.

**ஏழையென்றும் அடிமையென்றும்**
**இங்கு இல்லையாகுக!**

சமுதாயத்தில் பிந்திக் கிடக்கும் சமூகத்தினருக்கும் தாழ்த்தப்பட்டு வருந்தும் அரிசன மக்களுக்கும் எந்தெந்த வகையில் முன்னேற்றத் திட்டங்களை வகுக்க இயலுமோ அவற்றையெல்லாம் நமது அரசு செயற்படுத்தி வருகிறது.

ஏழைகள் பெரும்பான்மையுள்ள சமுதாயத்தில், ஏழையர்க்கு நிலம் அளித்து, அவர்களுக்கும் வாழ்வளித்துத் தரிசு நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டுவர அரசு சீரிய சாதனை கண்டது.



தமிழ் நாட்டு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தமிழகத்தின் பல இடங்களுக்குச் சென்று ஏழையர்க்குப் பட்டா வழங்கிய சிறப்பு, வேறெங்கும் காணாத ஒன்றாகும். கழக அரசின் இச் சாதனையைப் பொதுமக்கள் பெரிதும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

சமுதாயத்தில் பின்தங்கிக் கிடக்கும் ஏழை, எளிய, நடுத்தரக் குடும்பத்தினரின் வாழ்வைச் சிறக்கவைக்க வேண்டுமென்று திட்டங்கள் வகுத்துச் செயல்படும் கலைஞர் தலைமையிலான அரசு, அதன் ஊழியர்களின் துன்பங்களையும் பிரச்சினைகளையும் தீர்க்கப் பெரும் சாதனை ஏற்படுத்திக் காட்டியது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழ் நாடு அரசு இந்த வகையில் சரிதம் படைக்கும் சாதனையை உருவாக்கியுள்ளதை எவரும் மறந்திலர்.

**அரசு ஊழியர்கள் உவகையில் இன்பம் காணும் அரசு.**

இரண்டாவது சம்பள ஆணைக் குழுவை அமைத்து, அரசு ஊழியர்களின் எல்லா வகைக் குறைகளையும் சரிசெய்ய முனைந்த அரசு இது. 1971-ஆம் ஆண்டு சனவரி 2-ஆம் நாள் தமிழ்நாடு முதல்வர், அரசு ஊழியர்களின் புதிய சம்பள விகிதத்தை அறிவித்தது ஊழியர்களின் ஒருமித்த பாராட்டுதலைப் பெற்றது. ''எதிர்பார்த்ததற்கும் மேலாகவே முதல்வர் பெருமனத்துடன் செய்துள்ளார்'' என்று அரசு ஊழியர் பிரதிநிதி பாராட்டியுள்ளார். இந்தச் சாதனையைச் சற்று நோக்குவீர்! கலைஞர் ஆட்சியின் சிறப்பினை, நடு நிலையுடன் சிந்தித்துப் பாருங்கள்!

அரசு ஊழியர்கள் முறையிட்டுக் கொண்டதை உன்னிப்பாக ஆராய்ந்து, இரகசியக் குறிப்பேடு முறையை நீக்கிப் பகிரங்கக் குறிப்பேடு முறையைச் செயல்படுத்தியது இந்த அரசு.



அரசு ஊழியர்களுக்கு ரூபாய் 2,000 வீதம் திருமணக்கடன் வழங்கி அவர்களின் பொருளாதாரத் தொல்லையில் பங்கு கொண்டது தமிழக அரசு.

ஓய்வூதியத்தை ரூ. 20-லிருந்து ரூ. 30 ஆக உயர்த்தியது, இந்த அரசு.

மிகக் குறுகிய காலத்தில் அரும்பணியாற்றும் தமிழ் நாடு அரசு, நெடுங்காலமாகத் துயரில் ஆழ்ந்திருந்த ஆசிரியப் பெருமக்களின் இடர் களைந்தது. இப்போது அறிவிக்கப்பட்டுள்ள சம்பள விகிதம் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட . உயர்வின் சிறப்பை விளக்கும். வேலையில்லாதிருந்த இடைநிலைக் கல்வி, பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலைதரும் புரட்சித் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு 6,000 ஆசிரியர்களுக்கு வேலை அளித்தது. இந்த ஆண்டும் 6,000 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கத் திட்டமிட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆசிரியர் ஓய்வு இல்லம் கட்ட ரூபாய் 50 ஆயிரம் வழங்கி அடிப்படைப் பணியைத் துவக்கியுள்ளது அரசு.

நகராட்சி, பேரூராட்சி மன்றப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மாதத்தின் முதல் நாளே சம்பளம் பெறுவதற்கான வழியைச் செய்துள்ளது அரசு.

ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு ரூ. 20, ஓய்வூதியம் வழங்கி வருவது இந்த அரசு.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் வீட்டு வாடகைப்படி விகிதத்தைப் போல் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

இந்தியா முழுமையிலும் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தமிழ்நாடு அரசு பெருமளவில் தீர்த்துள்ளது பெருமைப்படத்தக்க சாதனையாகும்.

600 பொறியியல் பட்டதாரிகளுக்கும் 1,000 டிப்ளமா பயிற்சியாளருக்கும் 800 தொழிற் கல்வி பயின்றோருக்கும் பயிற்சியளிக்க அரசு ஆணையிட்டது.



இவர்களுக்குப் பயிற்சிக் கால உதவி வழங்கிடவும் அரசு முன் வந்தது.

கல்லூரியில் புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்க வகை செய்தது இந்த அரசே.

கல்விக்காக இந்த அரசு, ஆண்டுதோறும் ரூபாய் 67 கோடி அளவில் செலவிடுகிறது.

1970-ல் 6 புதிய கல்லூரிகளைத் திறந்துள்ளது.

இந்த நான்குஆண்டுகளில் முன்னைய ஆட்சியின்போது முயன்று முடியாமற்போன பல செயல்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளுக்கு விடிவு ஏற்பட்டுள்ளன. ஏழைகள் வாழ்வில் நம்பிக்கை மலர்ந்துள்ளது. தொழிலாளர் வர்க்கம், தங்கள் நலம்பேணும் சமதர்ம அரசு அரசோச்சுவதாக மகிழ்கின்றனர். ஆசிரியப் பெருமக்கள் தங்கள் கனவு நிறைவடைந்து, சமுதாயத்தில் தமக்குரிய தகுதிப்பாடு கிடைப்பதை உன்னி உன்னி உவகை கொள்கின்றனர். எல்லாத் தரப்பு மக்களின் குறைகளைக் களையவும் அரசு ஆவன செய்துள்ளது.

பின்னிலை வகுப்பினரின் நலனைக் கண்டு, தீர்வு காணப், பின்னிலை வகுப்பினர் ஆணைக் குழுவும், தனித் துறையும் கண்டது இந்த அரசு. தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையைப் பல வழிகளிலும் உயர்த்துவதற்கே பாடுபட்டு வருகிறது.

இன்னும் அரசு ஆற்றியுள்ள சாதனைகளைவிரித்துரைக்கின்பெருகும். தமிழ் மொழி வளர்ச்சிக்காக இந்த அரசு செய்துள்ள



பணிகள் ஏராளம். 40 ஆயிரம் டாலர் ஐ.நா. உதவியுடன் உலகத் தமிழ்ஆராய்ச்சிக் கழகம் சென்னையில் தொடங்கிட அரசு முனைந்துள்ளது. இந்த நிலையம் அமைத்திடும் பணிக்கு, கிண்டி அருகே 40 ஏக்கர் நிலமும், கட்டடம் கட்ட ரூபாய் 50 லட்சமும் அரசு ஒதுக்கியுள்ளது.

நல்ல தமிழில் கோப்புகளை எழுதும் அரசு ஊழியர்களுக்கு ரூ.500 பரிசு வழங்கிட அரசு அறிவித்துள்ளது. நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்கும் வகையில் பரிசுத் திட்டம் கொண்டு வந்துள்ளது.

பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி கற்பிக்கப்படுவதுடன் தமிழாராய்ச்சிக்கும் அரசு நிதி வழங்கியுள்ளது.

சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கிடைத்த நிதியிலிருந்து ரூபாய் 9 லட்சம் சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களுக்கு அளித்துக் குறள் ஆராய்ச்சி நடத்த ஆவன செய்தது இந்த அரசு.

தமிழில் அர்ச்சனைசெய்ய அரசு வழிகோலியது. சாதி பேதம் நீங்கிட வேண்டும் என்ற முயற்சி வெற்றிபெறக் கலப்புத் திருமணத்திற்கு ஊக்கம் அளித்துக் கலப்பு மணம் செய்துகொள்பவர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கி வருகிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் சமுதாயத்தில் தொண்டுள்ளம் மிக்கவர்களைப் பொதுப் பணியில் ஈடுபடுத்த விரும்பிச் சீரணிப்படை அமைத்தார். இன்று இந்த சீரணிப் படையினர் ஊதியம் கருதாது பல பொதுப்பணிகளில் ஈடுபட்டு அரிய சாதனை புரிந்து வருகின்றனர்.



சட்டம், ஒழுங்கு தமிழகத்தில் சீராகவும் சிறப்பாகவும் பேணப்பட்டு வருகிறது. நக்சல்பாரிகளின் ஊடுருவல் தமிழகத்தில் இல்லா வண்ணம் செய்யத் தமிழ்நாடுஅரசு விழிப்பாக இருந்து வருகிறது. தமிழ் மக்கள் 1967-ஆம் ஆண்டில் உறுதியாக அமைத்த அரசு, அவர்களின் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் உரிய வகையில் எல்லாத் துறைகளிலும் அரிய பெரும் சாதனைகளை ஆற்றிப் புதிய சரிதம் உருவாக்கி வருகிறது. இருள் நீக்கி உதய சூரியன் எழுவது போல், இந்த அரசின் அயராமுயற்சியால்-குன்றா உழைப்பால் தமிழர் தம் உள்ளத்தைக் கப்பிய இருள் தொலைந்து ஒளி பிறந்துள்ளது. அந்த ஒளி மேலும் சுடர்விடும் என்பது திண்ணம்.

## மண் பரிசோதனைக்கு ஆக்கம் தருவது தமிழ்நாடு அரசு!

உடல் நலங்குன்றுிருக்க உடலை வைத்தியரிடம் காட்டியே மருந்து சாப்பிடுகிறோம்! அதுவே சிறந்த முறையும் கூட! அதுபோல் மண் வளம் குன்றுிருக்க, மண்ணைப் பரிசோதனை செய்து பார்த்தே தேவையான இரசாயன உரங்களை இடவேண்டும். இவ்வாறு செய்தால், விளைபொருளின் உற்பத்தியை வெகுவாக உயர்த்த இயலும். எனவே தமிழ்நாடு அரசு, உழவர்களின் வயலில் உள்ள மண்ணைப் பரிசோதனை செய்வதில் தீவிரக்கவனம் செலுத்தி வருகிறது.

தற்பொழுது தமிழ்நாட்டில் எட்டு, மண் பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த ஆண்டில் திருச்சியில் ஒன்றும், இராமநாதபுரத்தில் ஒன்றுமாக இரண்டு மண் பரிசோதனை நிலையங்களை அமைக்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்து வருகிறது. இத்துடன் மூன்று நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களை அமைப்பதிலும் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தி வருகிறது.

# உழவர் உலகம்

வாய்க்காலின் தாலாட்டில் கிடந்து றங்கும்
  வயல்வெளியோர் தனியழகாம், கதிரோன் இன்னும்
மாய்க்காத வல்லிருளே கிழிந்தி றைந்து
  வழிநெடுக வீழ்ந்தாற்போல் கிடக்கும் நீழல் ;
சாய்க்கின்ற கபிலைதரும் புனலும் அங்கு
  சலிக்காத உழவன்வாய்ப் பாட்டும் எங்கோ
போய்க்கனவில் கிடந்தான்போல் என்னை மாற்றிப்
  புரிகின்ற பேரின்பம் சொல்லப் போமோ !

அலையொத்த கூந்தலினைத் திருகுக் கொண்டை
  ஆக்கியிளம் உழவுப்பெண் சிறுவ ரப்பில்
அலைபுரளும் மனத்தாவல் அடக்கி மெல்ல
  அசைந்துவரும் ஒயில்கண்டே உழவன் தோளும்
மலையாகப் பூரிக்கும், நெஞ்சில் ஊறி
  மடிப்பலையாய்ப் பேரின்பம் விழித்துக் கொள்ளும்!
குலையாத, நல்லமைதி வாழ்வாம், இன்பக்
  குலையான கனிவாழ்வாம் சிற்றூர் வாழ்வே !

பால்பதிந்த விழியிரண்டில் சேல்ப திந்த
  பருவக்கண் பார்வையினால் ஒய்வில் லாது
சால்மிதித்துத் திரும்புகின்ற அத்தா னுக்குத்
  தனிவிருந்து முன்கொடுத்துப் பசித ணித்தாள் ;
கால்வயிறாய் வயிறிருக்க உழைப்பில் ஓங்கும்
  கன்மலையாய்த் தோளிருக்கக் கண்டு கண்டு
வேல்விழியால் கொத்தியின்பம் அடைவாள் ; அந்த
  விரிமார்பன் சிந்துகின்றான் இளஞ்சி ரிப்பை !

மின்னூர் சீனிவாசன்



# அமைதி வழி காண்போம்

நாடாளுமன்ற மக்களவை கலைக்கப்பட்டதை யொட்டி, இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் வானொலி வாயிலாகவும், அறிக்கை வாயிலாகவும், தான் எடுத்த முடிவுக்கான விளக்கத்தை அறிவித்துள்ளார்கள்.

நாடாளுமன்றங்கள், சட்டமன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள் என்னும் அமைப்புகள், மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை விளக்குவனவாகும். அந்தத் தத்துவம் செயல்பட இந்திய நாட்டு மக்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் தங்கள் ஒத்துழைப்பைத்தந்து வந்திருக்கிறார்கள்.

நாடு சுதந்திரம் பெற்றது. ஆம், காரிருள் விலகிக் கதிரொளி பரவிடத் தொடங்கிற்று. ஆயினும் இயற்கையின் எத்தனையோ கோர விளையாட்டுக்களின் காரணமாக, உலகின் அமைப்பே மாறி விடுவதுபோல், வறுமைப் புயல், சோகச் சூறாவளி, உணவு, உடை, உறையுள் என்ற மூன்று இன்றியமையாத் தேவைகளில் கூட, மனநிறைவு அடையமுடியாத மக்களின் மனக் கொந்தளிப்பு; இவைகளால் சமுதாய அமைப்பில் எத்தனையோ ஏற்றத்தாழ்வுகள்.

புதியதோர் சமுதாயம்—புத்தொளி பாய்ச்சும் விழிபடைத்த மக்கள்—பூரிப்புத் தவழ வாழும் ஏழை எளிய, நடுத்தரக் குடும்பங்கள்—இல்லாமை, இல்லாமையாகி, இயலாமை, மறைந்தொழிந்து எங்கும் இன்பம் பொங்கிடும் சூழ்நிலை. இதனைக் காணத்தான் இந்தப் பெருநாட்டின் தலைவர்கள் தியாக முத்திரைகள் பலவற்றைப் பொறித்த சரித்திரக் கதாநாயகர்களாகத் தொண்டாற்றியிருக்கிறார்கள்.

மக்களாட்சி முறையில், கொள்கைச் சுதந்திரம், நாட்டின் பாதுகாப்பையும் ஒருமைப்பாட்டு உணர்வையும் பாதிக்காத அளவில் அனுமதிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் பல்வேறு கொள்கையுடைய அரசியல் இயக்கங்கள் உருவாகின்றன; அவர்களில் யார், தங்கள் கருத்துக் கேற்பக் கொள்கை கொண்டு, அவைகளைச் செயல்படுத்துகிறார்களோ-அவர்களைத் தேர்ந்தெடுக்க மக்களுக்கு உரிமையுண்டு. அதனால்தான் அந்த மக்களை மனத்தில் வைத்து எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் என்று பாரதியார் பாடினார்.

அந்த மன்னர்கள் தங்களுக்கு மாடமாளிகை, கூட கோபுரம், மந்தகாச வாழ்வு கேட்காவிட்டாலும், அமைதியும், வசதி வாய்ப்பும் நிறைந்த, பசி, பட்டினி, பஞ்சமில்லாத வாழ்வு வேண்டுமென்று கோருகிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு, அரசு, தான் வகுத்திடும் கொள்கைத் திட்டங்களை உடனுக்குடன் நிறைவேற்றிடத் தடையாக அடிக்கடி தேர்தல்கள் குறுக்கிடக்கூடாது என்பது என் கருத்து.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் நாடாளுமன்றத்திற்கு மட்டும் தேர்தல் எனில்; அடுத்த ஆண்டு 72-ல் சட்டமன்றத் தேர்தல், அடுத்து 73-ல் நகராட்சித் தேர்தல், அதற்கடுத்து 74-ல் உள்ளாட்சித் தேர்தல், மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல்—இப்படி ஒன்றையொன்று தொட முடியாத அளவுக்குக் குடைராட்டினத்துக் குதிரைகள் போலத் தேர்தல்கள் நடைபெற்றால், மக்களாட்சித்தத்துவம் பாழ்பட்டு விடும். அரசாங்க நிர்வாகச் சக்கரம் மெதுவாகக் கூடச் சுழல முடியாத சங்கடம் ஏற்படும்.

என்றும் தேர்தலைப் பற்றிய நினைவும், வேட்பாளர்களின் படையெடுப்பும், அரசியல் காழ்ப்புணர்ச்சிகளும், மக்களைப் பிடித்தாட்டுமே தவிர, முற்போக்கான திட்டங்களுக்கு அரசும் முயல் வேகத்தில் ஈடுபட முடியாது. மக்களும் அவைகள் ஈடேறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிட இயலாது.

இதனை எண்ணி எண்ணிப் பார்த்துத்தான் ஓராண்டு காலம் பெரும்பான்மை பலத்தோடு, பதவியில் தொடர்ந்து இருக்க முடியுமென்றாலும் கூட, அதனைப் பொருட்படுத்தாமல் மக்களுக்கு 12 மாதங்களில் ஒரு முனையில் நாடாளுமன்றத் தேர்தலும், மறு முனையில் சட்டமன்றத் தேர்தலும், ஆக இரு தேர்தல்களின் சங்கடம் கூடாது; அதனைத் தவிர்க்க வேண்டுமென்று கருதி, இரு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் வைத்துக்கொள்ளும்

# அறவழிகள் கடைப்பிடிப்போம்!



எண்ணமுடன், தமிழகச்சட்ட மன்றத்தைக் கலைத்திடும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

சோறு கொதிக்க ஒரு முறை அடுப்பை மூட்டுவது, பின்னர் அதனை அணைத்துவிட்டுக் குழம்பு வைக்க மீண்டும் அடுப்பை மூட்டுவது என்பதைச் சிக்கனமாகக் குடும்பம் நடத்த எண்ணும் எந்தப் பெண்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் அல்லவா? அது போலத்தான் நாடாளுமன்றத்திற்கும், சட்ட மன்றத்திற்கும் தனித்தனித் தேர்தல் நடைபெறுவதில் விரயமாகும் அரசாங்கச் செலவையும், இந்த முடிவின் மூலம் சிக்கனப்படுத்தியிருக்கிற மகிழ்ச்சி எனக்கு ஏற்படுகிறது.

தேர்தல் களத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் நிற்கின்றன. இன்று தமிழகத்தில் அரசு நடத்துகின்ற எமது கட்சியில் உள்ளோர் உட்பட அனைத்துக் கட்சியினரும், தமது கொள்கை விளக்கங்களைத் தரக்குறைவு சிறிதும் ஏற்படாவண்ணமும் தமிழகத்தின் பாரம்பரியப்பண்பாடு எள்ளளவும் பாதிக்காத அளவிலும் அளிப்பதற்கேற்றவகையில், தங்கள் தங்கள் கட்சிகளின் பிரச்சார யந்திரங்களைக் கண்காணித்து வருவார்கள் என்ற நம்பிக்கை கொள்வதோடு, அவ்வாறு அனைவருமே நடந்துகொள்ள வேண்டும் என்று பணிவன்பான வேண்டுகோளையும் விடுத்திடுவது என் கடமையென்று கருதுகின்றேன்.

ஒழுங்கும், அமைதியும் கட்டுப்பாடும் குலையாத மாநிலங்களில், தமிழ்நாடு ஒன்று எனத் தலைமைத் தேர்தல் அதிகாரி திரு சென்வர்மா குறிப்பிட்டுள்ள உண்மையை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், தேர்தலின் போது எல்லாக் கட்சித்தொண்டர்களின் நட்புறவும், பொது மக்களின் ஒத்துழைப்பும் அமைந்திடல் வேண்டும். அமைந்திடும். அதில் ஐயமில்லை. கருத்து வேறுபாடுகள்—கலவரங்களின் மூலம் தீர்க்கப்பட வேண்டுமென்று நாட்டின் அமைதியில் நாட்டமுடைய யாரும் விரும்பிடத் துணியார்.

"ஆலயங்கள் முதல் அனைத்திடத்திலும் தீண்டாமை, சாதி, சமய உணர்வுகள் இருத்தலாகாது" என்று காந்தி அடிகளும், அவர் வழி வந்தவர்களும் வடித்தளித்த கருத்துக்கள், தேர்தல் நேரத்து, வகுப்பு உணர்வுகளால் பாழ்பட்டுப் போய்விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு நம் அனைவர்க்கும் இருக்கிறது.

தேர்தலின் வெற்றி தோல்விகளைக் கணக்கிடுவதும், அதுபற்றி விமர்சனங்கள் செய்துகொண்டிருப்பதும், விழாக்கள் எடுத்திடுவதும் தேர்தல் முடிந்த சில நாட்கள்வரையில்தான் நினைவில் நிற்கும். ஆனால் இந்த மகத்தான சோதனையில் எல்லாக் கட்சிக்காரர்களும், தமிழ்நாட்டின் பண்பாட்டையும், அரசியல் நாகரீகத்தையும், அமைதியான சூழ்நிலையையும் பேணிக் காத்தனர் என்பதுதான், நாம் ஏற்றி வைக்கும் அணையாத விளக்காகும். எழுதி வைக்கும் அற்புத சரித்திரமாகும்.

இன்றைக்கு ஒருவருக்கொருவர் கட்சிப் பிரச்சினைகளுக்காகப் பிரிந்து நிற்போர், ஒரு நாள் பொதுப் பிரச்சினைகளுக்காக ஒன்று கூடக் கூடியவர்கள் என்ற எண்ணம்; நான் உட்பட நம் அனைவர்க்கும் இருந்திடுமானால், கசப்பும், காழ்ப்பும், வெறுப்பும், விரோதமும் வளர்ந்திடவே வழியில்லாமற் போய்விடும்.

மிகச் சாதாரணமான நான், மிகப்பெரும் மேதைகளின் தலைமைகளில் இயங்குகின்ற பல்வேறு கட்சிகளின் மதிப்பு மிகுந்த தொண்டர்களுக்கு ஏதோ, அறிவுரை கூறுகிறேன் என்று தவறியும் எண்ணிட வேண்டாம். அந்த முதுபெரும் தலைவர்கள் விரும்புவதையே, ஒரு பொறுப்பில் இருப்பவன் என்கிற முறையில், அவர்க்கும் நினைவுபடுத்திட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டேன்.

அமைதிவழி தேர்தல் நடைபெற,
அறவழிகள் கடைப்பிடிக்கப்பட,
கொடும்பகை உணர்வு ஒழிந்து,
கொள்கைப் பற்றுணர்வே மிகுந்து,

கட்சிகள் வேறு வேறு இருக்கலாம்—ஆனால் கருத்தொருமித்த நட்பு வளர்ந்திட வேண்டும், என்ற சூளுரையை அனைவரும் எடுத்துக் கொண்டு தேர்தலில் ஈடுபடுவோம்.

**மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு! அதற்குக் கட்டுப்படுவோம்! வணக்கம்.**

(தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 6-1-71 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய சொற்பொழிவு.)

# செய்திகள்!

# செய்திகள்! செய்திகள்!

## பேசும் மொழி பத்தாயிரம்

உலகம் முழுவதிலும் சுமார் 10 ஆயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. உலகில் முதலில் தோன்றிய மொழி எதுவென்று தெரியவில்லை. ஏனெனில் சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மொழி பிறந்துவிட்டது. ஆனால் சரித்திர 'ஆராய்ச்சி மூலம் நமக்கு மொழியின் வரலாறு தெரியும் காலம் சுமார் ஐயாயிரம் ஆண்டுகள்தான்.

உலகில் உள்ள மொழிகளை எல்லாம் 10 பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) இந்தோ-ஐரோப்பிய மொழிவகை (2) உரோ-ஆல்டேக் (3) பர்மிய-திபெத்திய மொழிகள் (4) சினம் (5) திராவிட மொழிகள் (6) பாண்டு (7) ஆப்பிரிக்க-ஆசிய மொழிகள் (8) ஜப்பானிய மொழிகள் (9) புஷ்மேன் வகை (10) மலாயா-பாலி மொழிகள்.

5 கோடிக்கு மேல் பேசப்படும் மொழிகள் மொத்தம் 13. அவை சினம் (70 கோடி மக்கள் பேசுவது); ஆங்கிலம் (25 கோடி); இந்தி (16 கோடி); ரஷிய மொழி (14 கோடி); ஸ்பானிய மொழி (11 கோடி); ஜெர்மன் (10 கோடி); ஜப்பானிய மொழி (9 கோடி); பிரெஞ்சு ($7\frac{1}{2}$ கோடி); மலாய் (6 கோடி); வங்காளி (6 கோடி); போர்த்துகீசிய மொழி ($5\frac{1}{2}$ கோடி); இத்தாலியன் ($5\frac{1}{2}$ கோடி); அரேபிய மொழி (5 கோடி).

## மீன் தோலில் பை

மீனின் தோலைத் தனியாகப் பிரித்து எடுக்க முடியாது.

ஆனால் ஓநாய் மீன் என்ற ஒருவகைக் கடல் மீனின் தோல் மிகவும் கனமானதாக—உறுதியானதாகவுள்ளது. பை செய்யவும், புத்தகங்கள் 'பைன்ட்' செய்யவும், மற்றும் சில தோல் பொருட்கள் செய்யவும் இதனைப் பயன்படுத்துகின்றனர்.

வட அட்லாண்டிக் கடல் பகுதியிலுள்ள ஓநாய் மீன்கள் 3 அடி நீளம் இருக்கும். வட பசுபிக் கடலில் உள்ளவை 8 அடி நீளம்கூட இருக்கின்றன.

இதனுடைய பயங்கரத் தோற்றமும் காட்டுமிராண்டித் தனமான தாக்குதலுமே இதற்கு ஓநாய் மீன் என்று பெயர் வரக் காரணம்.

## 10 டன் எண்ணெய்

ஒரு பெரிய திமிங்கலத்திலிருந்து சோப்பு செய்ய 10 டன் எண்ணெய்யும், உரம் உற்பத்தி செய்ய 6 டன் எலும்புகளும், உணவுக்கான 6 டன் இறைச்சியும் கிடைக்கின்றன.

முன் காலத்தில் திமிங்கல எண்ணெய்யை விளக்கு எரிக்கப் பயன்படுத்தினர். தற்போது சோப்புத் தயாரிக்கவும், தோல் துணிகள் தயாரிக்கவும், தையல் இயந்திரம், கைக் கடியாரங்கள் ஆகியவற்றிலுள்ள மிக நுண்ணிய இயந்திரங்களுக்குப் பயன்படுத்தவும், வாசனைப் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

இதன் எலும்பு உரத்திற்குப் பயன்படுவதோடு குடை, கம்புகள் மற்றும் பல அழகுப் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றன.

## பூ மாநிலம்

அமெரிக்காவிலுள்ள பிளாரிடா மாநிலத்திற்குப் பூமாநிலம் என்று பெயர். அதற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது? 1513-ஆம் ஆண்டில் ஸ்பானிஷ் ஆராய்ச்சியாளர் ஒருவர் பூத்துக் குலுங்கும் இந்த நாட்டின் அழகைப் பார்த்து விட்டு "பாஸ்கா பிளாடோ" என்று பெயரிட்டார். ஸ்பானிஷ் மொழிச் சொல்லான இதற்கு "பூ விருந்து" என்று பொருள்.

## ஒரு நாள் வாடகை ரூ. 1,400

மியாமி கடற்கரையிலுள்ள உல்லாச மாளிகையின் வசதியான தங்கும் அறையின் (சூட்) ஒரு நாளைய வாடகை ரூ. 1,400 வரை ஆகும். பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள் இந்த அழகிய கடற்கரையைப் பார்த்து ரசிக்கவும், கடலில் குளித்து மகிழவும் ஆயிரக்கணக்கில் வருகின்றனர்.

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக, எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.

# டெக்ஸ்டூல்

TEXTOOL

நாங்கள் 3. H.P
5. H.P & 10. H.P.
"டெக்ஸ்டூல்"
என்ஜின்களைத்
தயாரிக்கிறோம்





## டீசல் என்ஜின்கள்

## உழைப்பிற் சிறந்தவை

டெக்ஸ்டூல் என்ஜின்கள் அரசாங்கக் கடனுதவி கொண்டு வாங்க மத்திய சர்க்காராலும், மாகாணசர்க்கார்களாலும் அங்கீகாரம் பெற்றவை. இப்படி வாங்கப்பட்ட ஏராளமான டெக்ஸ்டூல் என்ஜின்கள், எல்லா மாகாணங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஜில்லாவாரியாக ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைகளுக்கு விண்ணப்பிக்கவும்

## டெக்ஸ்ட்டூல் கம்பெனி லிட்

### கோயமுத்தூர்-6

PHONE: 26231, 26232, 26233. GRAMS 'TEXTOLCO'

முத்து

# பொங்கல் திருநாளில் செங்கரும்புப் பரிசுகள்...



தமிழ்நாடு அரசு அழைக்கிறது!
மாபெரும் பொங்கல் குலுக்கல்—
இலட்சக்கணக்கான ரூபாய் பரிசுகளைப் பெற்று
வெற்றி வாகை சூடிட!

## சிறப்புப் பரிசுகள். ரூ. 30 லட்சம்.

முதல் பரிசு ரூ. 10 லட்சம்

இருவருக்கு இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 லட்சம் வீதம் ரூ. 10 லட்சம்

ஐவருக்கு மூன்ருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 2 லட்சம் வீதம் ரூ. 10 லட்சம்

இது தவிர வழக்கமான பரிசுகள் ரூ. 35 லட்சம்
ஆக மொத்தம் ரூ. 65 லட்சம்.
பரிசுகள் எண்ணிக்கை=6118
குலுக்கல் நாள் 31-1-71.

*இதுவரை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு உருவாக்கிய லட்சாதிபதிகள் எண்ணிக்கை=208*
ரூபாய் இரண்டு உங்களை லட்சாதிபதி ஆககுகிறது. **பரிசுச்சீட்டு ஒன்றின் விலை. ரூ. 2 தான்**

**இன்றே வாங்குங்கள்**
# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

செலவு இரண்டு ரூபாய்




வரவோ பல லட்ச ரூபாய்

வெளியீடு: இயக்குநர், செய்தி விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.


தமிழரசு

## உறுதியான கட்டடங்கள்: *பொதுப்பணியில்-2*





சாலச் சிறந்த சாலைகள் அமைக்க

# சங்கர் சிமெண்ட்

IS:269

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

**ISI** மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

IS:269

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

23 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1447TM

* 1967-ல் பதவியேற்ற அண்ணா அமைச்சரவை *





1967 பொதுத் தேர்தலுக்குப் பிறகு 6-3-67 அன்று தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ருர் பேரறிஞர் அண்ணு



1969-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10-ஆம் நாள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ருர் கலைஞர் மு. கருணுநிதி.


காணிக்கை


அன்பு நெஞ்சங்களே!
அகங்கனிந்த வணக்கம். நமது அரசு
நான்கு ஆண்டுகளில் ஆற்றியுள்ள
அரும்பணிகளைத் தொகுத்துச் சுருக்கமாக
உங்களுக்குக் காணிக்கையாக
அளிக்கிறோம்.

## இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான்_

# தமிழ்நாட்டில் பசுமைப்புரட்சி

புன்செய்
நிலங்களுக்கு
வரி
நீக்கம்

ஐந்து
ஏக்கர்
வரை
நன்செய்க்கும்
வரி நீக்கம்!

மிக விளைச்சல் தரும் புதிய
ரகம் அதிகப் பரப்பில்
பயிராகிறது!



மின்
இணைப்புப்பெற்ற
பம்புசெட்டுகள்
அதிகம்!





வானவெளி மருந்து தெளிப்பு மிகுந[illegible]றது...

பலமுறை பயிரிடும் திட்டம் பரவி வருகிறது...

இருபோக சாகுபடி [illegible]கிவருகிறது.........



அன்று அரிசி கிடைக்கவில்லையே என்று
ஏங்கினோம்!

இன்று அண்டை மாநிலங்களுக்கு அரிசி
அனுப்புகிறோம்!

இந்நிலை எப்படி வந்தது?

அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட துரித
முன்னேற்றம் பாரீர்!

1966-67-ஆம் ஆண்டில் உற்பத்தியான
அரிசி......37.91 லட்சம் டன்கள்.

1969-70-ஆம் ஆண்டில் உற்பத்தியான
அரிசி......45.32 லட்சம் டன்கள்.

1970-71-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும்
அரிசி உற்பத்தி......49.00 லட்சம் டன்கள்.

1973-74-ஆம் ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய
குறிக்கோளை

1970-71-ஆம் ஆண்டிலேயே அடைந்திடத்
திட்டமிடும் தமிழ்நாடு!

உயர்விளைச்சல் சிறுதானியங்களைத் தமிழ்நாட்டில் 1973-74-ஆம் ஆண்டில் சாகுபடி செய்ய மைய அரசு நிர்ணயித்த குறிக்கோள்.......2.50 லட்சம் ஏக்கர்

ஆனால், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை 1970-71-ஆம் ஆண்டிலேயே உயர் விளைச்சல் சிறுதானியங்களைப் பயிரிடத் திட்டமிட்டுள்ள குறிக்கோள்...2.50 லட்சம் ஏக்கர்

இந்த இலக்கில் 26-12-70 வரை எய்தியுள்ள பரப்பு ........................ 2.06 லட்சம் ஏக்கர்

எஞ்சியுள்ள காலத்தில் குறிக்கோளை விஞ்சிடுவோம்!

## இலக்கினை விஞ்சுவது தமிழ்நாடே!

மைய அரசின் குறிப்பிற்கிணங்கவும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் படியும் 1973-74-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் உயர் விளைச்சல் நெல் தினுசுகளைப் பயிரிட வேண்டிய பரப்பு........................................33.50 லட்சம் ஏக்கர்

தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை 1970-71-ஆம் ஆண்டிலேயே உயர் விளைச்சல் நெல் தினுசுகளைப் பயிரிடத் திட்டமிட்டுள்ள பரப்பு...37.50 லட்சம் ஏக்கர்

இந்த இலக்கில் 26-12-70 வரை எய்தியுள்ள பரப்பு.......................36.67 லட்சம் ஏக்கர்

1973-74-ஆம் ஆண்டில் அடைய வேண்டிய இலக்கினை 1970-71-ஆம் ஆண்டிலேயே அடைந்திருப்பதோடு, மேலும் விஞ்சியுள்ளோம். மற்ற மாநிலங்களுக்கெல்லாம் தமிழ்நாடு அரசு முன்னோடியாக உள்ளது என்பதை இச்சாதனை காட்டுகிறது.

### உணவு உற்பத்தியை உயர்த்திட உதவும் உயர் விளைச்சல் தரும் ரகங்கள் பரவுதல் காணீர்!

| ஆண்டு | பயிராகிய பரப்பு (லட்சம் ஏக்கர்) |
|---|---|
| 1966-67 | 5.28 |
| 1967-68 | 12.80 |
| 1968-69 | 17.10 |
| 1969-70 | 30.46 |

1970-71-ஆம் ஆண்டில் பயிரிடத்திட்டமிட்டுள்ள பரப்பு......40 லட்சம் ஏக்கர்.

26-12-70 வரை பயிரிடப்பட்டுள்ள பரப்பு......38.73 லட்சம் ஏக்கர்.

### உணவு உற்பத்தித் துறை மூலம் புதிய கிணறு மானியத் திட்டத்தின்கீழ் 1-4-68 முதல் நவம்பர் 1970 வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்

1. தோண்டப்பட்ட புதிய கிணறுகள்......23,854.
2. புதிய கிணறுகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை......ரூபாய் 718.20 லட்சம்.
3. புதிய கிணறுகளுக்கு வழங்கப்பட்ட மானியத் தொகை......ரூபாய் 166.19 லட்சம்.

## உணவு உற்பத்தியில்
## தமிழ்நாடு தன்னிறைவு!

1966-67-ஆம் ஆண்டில் உற்பத்தியான
உணவு தானியங்கள்......54.58 லட்சம் டன்கள்.

1969-70-ஆம் ஆண்டில் உற்பத்தியான
உணவு தானியங்கள்......63.00 லட்சம் டன்கள்.

இதன் பயனாய்,

1. உணவுக் கட்டுப்பாடு அகற்றப்பட்டது!
2. கட்டாயக் கொள்முதல் நீக்கப்பட்டது!
3. பொது ஏலத்தில் அரிசி விற்கும் நிலை மலர்ந்துள்ளது!
4. பிற மாநிலங்களுக்கு அரிசி அனுப்ப முடிந்துள்ளது.
5. பற்றாக்குறை நீங்கி, உபரி மாநிலமாக உயர்ந்துள்ளது!

1970-71-ஆம் ஆண்டில் உற்பத்தியாகும் என்று
எதிர்பார்க்கும் அளவு......67 லட்சம் டன்கள்.

1971-72-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்ய
திட்டமிட்டுள்ள அளவு......71 லட்சம் டன்கள்.



இச்சாதனை தமிழ்நாடு அரசின்
செயல்திறனுக்குச் சான்று!

விண்ணில் பறந்தும்
மருந்து தெளிப்போம்-
பயிர்களைக்
கண்ணின் மணிபோல்
காத்திடுவோம்!



**1971**க்குள் மின்சார வசதி பெருத கிராமமே தமிழகத்தில் இருக்காது.

கிராமப்புறங்களுக்கு மின்வசதி அளிப்பதில் கேரளம், அரியாஞ தவிர மற்ற எல்லா மாநிலங்களை யும் தமிழகம் விஞ்சிவிட்டது.

கேரளம், அரியாஞ மாநிலங் களில் உள்ள கிராமங்கள் சில ஆயிரமே. கேரளத்தில் 1573 கிராமங்கள்தான் உள்ளன.

ஆனல், தமிழகத்தில் 341 நகரங் களும், 14,124 கிராமங்களும், 42,000 குக்கிராமங்களும் உள்ளன. கிராமங்களை ஒட்டி, 20,200 அரி சனக் குடியிருப்புகளும் உள்ளன.

### 30-4-70ல்

தமிழகத்தில் உள்ள எல்லா நகரங் களுக்கும் 10,126 கிராமங்களுக்கும் (71.9 சதவிகிதம்) 25,031 குக் கிராமங்களுக்கும் (59.6 சத விகிதம்) மின் வசதி அளிக்கப்பட்டு விட்டது.

கடந்த நான்காண்டுகளில், கிராமங்களுக்கு மின்வசதி அளிப் பதில், தமிழகத்தில் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம்.

மார்ச் 67 நிலவரப்படி ஒப்பிட் டுப் பார்த்தால், அடைந்துள்ள முன் னேற்றம் 58.71 சதவிகிதம் அதிகம்.

மின்வசதி அளிக்கப்பட வேண் டிய கிராமங்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமே.

இது மகத்தான சாதனை. இந் தியாவில் எந்த மாநிலத்தையும் விட, இத்துறையில் தமிழகம் கண் டுள்ள சாதனை மிகப் பெரிது.

அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் சாரம் வழங்கத் தமிழக அரசு முன் னின்று பாடுபடுகிறது.

1970-71 முடிய, 4,300 அரி சனக் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் சாரம் வழங்க உதவித் தொகை அளிப்பதில், கடந்த நான்காண்டு களில், தமிழக அரசு முன் நிற்கிறது.

### இதோ புள்ளிவிவரங்கள் :—

1-3-67 முதல் 31-10-70 வரை அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் சாரம் வழங்க அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 29.47 இலட் சம்.

31-10-70 வரை அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகை ரூ. 49.57 இலட்சம்.

மார்ச் 67 வரை அளிக்கப்பட்ட உதவித் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், 134% அளவு உயர்வுக்கு உதவித் தொகை கடந்த மூன்றரை ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டுகளில், முந்திய ஆண்டுகளைவிட, இந்த உதவித் தொகை மிகப் பெரிய அளவில் உயர்ந்துள்ளது.

1957-58லிருந்தே இவ்வுதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. ஆனல், கடந்த மூன்றரை ஆண்டு களில்தான் மிகப் பெரிய அளவில் இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

1-3-67 முதல் 31-12-70 வரை மின்வசதி அளிக்கப்பட்ட அரிசனக் குடியிருப்புகள் — 3,577.

31-12-70 வரை அவற்றின் மொத்த எண்ணிக்கை — 5939.

| | மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள் | சதவிகிதம் |
|---|---|---|
| 31.3.51-ல் | 1,495 | 10.6 |
| 31.3.56-ல் | 2,430 | 17.2 |
| 31.3.61-ல் | 5,919 | 42.0 |
| 31.3.66-ல் | 7,203 | 51.0 |
| 31.3.70-ல் | 10,116 | 71.8 |




இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு!
சிறு சேமிப்பு
நாட்டுக்கும், வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே தூற்றவேண்டும்
காசுள்ளபோதே சேர்க்கவேண்டும் அல்லவா!
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க.
இயக்குநர்: சிறுசேமிப்பு நிறுவனம்

ஆனால் 67 மார்ச் முதல் 31-12-70 வரை இந்த **மூன்றரை ஆண்டுக் காலத்தில்** மட்டும் மின்விசை பொருத்தப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை 5, 10, 019 ஆக உயர்ந்துள்ளது.

இது மகத்தான சாதனை! இத்துறையில் நாட்டிலேயே தமிழகம் தான் முன்னோடியாக நிற்கிறது.

ஏழை எளிய மக்களின் அரசு தமிழக அரசு.

அவர்கள் வாழ்விலே ஒளியேற்றுவதையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளது தமிழக அரசு.

அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க அயராது தமிழக அரசு பாடுபடும்!

தமிழகத்தில் 1966-67 வரை மின்விசை பொருத்தப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை — 2,89,903.

31-12-70 வரை மின்விசை பொருத்தப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை — 5,10,019.

1-3-67ல் இருந்ததைவிட, இப்பொழுது ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் சதவிகித அளவு—75.2

1959-60 இறுதியில் மின்விசை பொருத்தப்பட்ட விசையேற்றங்கள் 97,476 மட்டுமே.

இது 1966-67 இறுதியில், **ஏழு ஆண்டுக் காலத்தில்** 2,89,903 ஆகத்தான் உயர்ந்தது.

ஏழை எளிய மக்களின், அரிசன மக்களின் அரசு, தமிழக அரசு. ஏழை எளிய மக்களின் வாழ்விலே ஒளிவீசச் செய்யத் தமிழக அரசு அரும்பாடு படுவதில் வியப்பொன்றுமில்லை!

விசையேற்றங்களுக்கு மின்விசை பொருத்துவதில் தமிழகத்திற்கு நிகர் தமிழகம்தான்!

31-12-70 வரை மின்வசதி பொருத்தப்பட்ட விசையேற்றங்கள்— 5,10,019.

இது, நாட்டின் மொத்தத்தில் 40 சதவிகிதத்துக்கும் மேலாகும்!

இத்துறையில் எந்த மாநிலமும் தமிழகத்தை விஞ்சமுடியாது என்பதுதான் அப்பட்டமான உண்மை.





# புதிய புதிய தொழிற்பேட்டைகள்

**த**மிழகத்தில் நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு தொழில்கள் பெருகி வருகின்றன. தமிழ்நாடு அரசு, தொழில் வளர்ச்சியில் காட்டி வரும் தனி ஆர்வமே இதற்குக் காரணம்.

குறிப்பாக 1968-70ல் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியில் புதிய வேகம் ஏற்பட்டது. எங்கெங்கு தொழில்கள் பெருக வாய்ப்புக்கள் உள்ளனவோ அவற்றையெல்லாம் ஆய்ந்து புதிய தொழிற் கூடங்களை உருவாக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தது அரசு.

திருச்சி கொதிகலன் தொழிற்சாலை, நெய்வேலி போன்ற மிகப் பெரிய தொழிற்கூடங்களுக்குச் சில சிறிய இயந்திரத்தின் பாகங்கள், கருவிகள்தேவை என்பதனைக்கண்டு, ஆங்காங்கு அதற்கான துணைத் தொழிற் பேட்டைகளை (ancillary Industrial Estates) அரசு நிறுவியது.

கொதிகலன் தொழிற்சாலையையும், திருவெறும்பூரில் 10 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டை ஒன்றையும், நெய்வேலி மட்பாண்டத் தொழிற்சாலைக்காக வடலூரில் 6 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற் பேட்டை ஒன்றையும் அரசு நிறுவியது.

திருவெறும்பூரில் 10 கூடங்களும் கட்டப்பட்டுச்சிறு தொழில்தொடங்குபவர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பொறியியல் கல்வி பயின்றவர்களே இதனை எடுத்து நடத்துகிறார்கள்.

இந்தத் தொழிற் கூடத்தின் மூலம் பொறியியல் பயின்றவர்கள் 200 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வடலூரில் 4 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு, அவற்றுள் 3 வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

இதே போல் உதகையில் இந்துஸ்தான் புகைப்படச்சுருள் தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகளைத் தயாரிக்க ஒரு தொழிற்பேட்டை நிறுவவும் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

தொழிற் பேட்டைகளில் மற்றொருவகை, குறிப்பிட்ட தொழில்களுக்காக நிறுவப்படும் தொழிற்பேட்டைகளாகும் (Functional Industrial Estates). ஏற்கனவே மட்பாண்டப் பொருட்களுக்காக விருத்தாசலத்திலும், தோல் பொருட்களுக்காக மாதவரத்திலும் தொழிற்கூடங்கள் இயங்கி வருகின்றன. 1968-70ல் விருத்தாசலம் தொழிற்பேட்டையில் மேலும் 4 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டன. இதன் மூலம் சுமார் 500 பேருக்கு வேலை கிடைத்தது.

அதே போன்று 1968-70ல் மாதவரத்தில் புதிதாக 4 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டன. இதன் மூலம் 500 பேருக்கு மேலாக வேலை வாய்ப்புப் பெற்றனர்.

நாட்டின் தற்போதைய பெருகி வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தொழில்களில் தனிக் கவனம் செலுத்தத் தமிழ்நாடு அரசு விரும்பியது.

எனவே 1968-69ல் 12 லட்சம் ரூபாய் செலவில் திருவள்ளூரை அடுத்ததாகவுள்ள காகலூரில் மின் சாரப் பொருட்களுக்கான தொழிற் பேட்டை நிறுவியது. இங்கு 10 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டு தயாரிப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மின்சாரக் கம்பிகள், மின் விசிறிக்கான பாகங்கள், போன்றவை இங்கு தயாரிக்கப்படும். ஆரம்பக் கட்டத்தில் 100 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ள இந்தத் தொழிற்கூடத்தில் நாளடைவில் 100 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

இன்றைய அரசு ஏற்படுத்தும் மற்றொரு முக்கிய தொழிற்பேட்டை 'எலெக்டிரானிக்'' பொருட்களுக்காகச் சென்னை அடையாறில் நிறுவப்படும் தொழிற்கூடமாகும். 39 லட்சம் ரூபாய் செலவில் உருவாகும் இந்தத் தொழிற்பேட்டையில் பல நவீன நுணுக்கமான பொருட்கள் தயாரிக்கப்படுவதோடு பொறியியல் கல்வி பயின்றவர்கள் சுமார் 2000 பேருக்கு வேலையும் கிடைக்கும்.

இவை தவிர மதுரையருகே வத்தலக் குண்டில் உணவு—பழப் பொருட்களுக்கான தொழிற் பேட்டை ஒன்று ரூ. 15 லட்சம் செலவில் தற்போது நிறுவப்பட்டு வருகிறது.

அதேபோல் அம்பத்தூரில் மருந்துகள் தயாரிக்கும் தொழிற்பேட்டை ஒன்று நிறுவப்படும்.

இந்தத் தொழில்களைப் பெருக்குவதற்காக ஆங்காங்கே பல ஆய்வுக் கூடங்களை அரசு ஏற்படுத்தி இவை பற்றித் தீவிரமாக ஆராய்ச்சிகள் பல நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அடையாறில் 'எலெக்டிரானிக்' மற்றும் கருவிகள் தயாரிக்கும் பொருட்கள் பற்றிய ஆய்வுக்காக மட்டும் ரூ. 26 லட்சம் செலவில் ஆய்வுக்கூடம் நிறுவப்படுகிறது. இந்த ஆய்வுக்கூடம் இத்தகைய பொருட்களை நவீன முறையில் விரைவாகத் தயாரிக்க உதவுவதோடு தொழில் நுணுக்கக் கல்வி பயின்ற நூற்றுக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பினையும் அளிக்கும்.

மேற்கூறிய இருவகைத் தொழிற் கூடங்கள் தவிர, எல்லா வகைப் பொருட்களும் தயாரிக்கும் பொதுவான தொழிற் பேட்டைகள் (Conventional Industrial Estates) ஏற்கனவே 19 தொழிற்பேட்டைகள் தமிழகத்தில் உள்ளன.

1967-68ல் மொத்தம் 9.19 லட்சம் ரூபாய் செலவில் நாகப்பட்டினத்திலும் ஒசூரிலும் இரு புதிய தொழிற் பேட்டைகள் நிறுவ அரசு அனுமதி வழங்கியது.

இவை தவிர அம்பத்தூரிலுள்ள தொழிற்பேட்டையில் மேலும் 47 தொழிற்கூடங்கள் இந்த ஆண்டு அமைக்கப்பட்டுள்ளன.

1968-69ல் கடலூரில் 5 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு தொழிற்பேட்டை நிறுவவும், 1969-70ல் நாமக்கல்லில் 6 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு தொழிற்கூடம் அமைக்கவும் தமிழக அரசு அனுமதித்துள்ளது.

1970-71ல் அம்பத்தூரில் மேலும் 30 தொழிற்கூடங்கள் அமைக்கவும், கிண்டி தொழிற் பேட்டையில் மேலும் 7 தொழிற் கூடங்கள் கட்டவும் 39 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் அரசு ஒதுக்கியுள்ளது.

இவை தவிர தர்மபுரி, திருவண்ணாமலை, குமாரபாளையம் ஆகிய இடங்களில் 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் தொழிற் பேட்டைகள் அமைக்கும் திட்டமும் அரசின் ஆலோசனையிலுள்ளது. அரசு அனுமதி வழங்கியதும் 1971-72ல் இந்தத் தொழிற் பேட்டைகள் நிர்மாணிக்கப்படும்.

கூட்டுறவுக்காகவும், தனியாருக்காகவும் அரசு, தொழிற்பேட்டைகள் நிறுவி உள்ளது. சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு இரண்டு லட்சத்து இருபதாயிரம் ரூபாயும், தூத்துக்குடி கூட்டுறவுத் தொழிற் பேட்டைக்கு நான்கு லட்சத்து 61 ஆயிரம் ரூபாயும் கடனாக 1967-68ஆம் ஆண்டில் அரசு தந்துள்ளது. அவர்களது திட்டங்களை நிறைவேற்ற இந்தப் பணம் உதவும்.

1967-68ஆம் ஆண்டில் வியாசர் பாடி கூட்டுறவுத் தொழிற் பேட்டைக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து (L. I. C.) 8லட்சத்து 69 ஆயிரம் கடன் பெற்று வழங்கப்பட்டுள்ளது. அதே போல் 68-69ல் சேலம்கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து 6 லட்சத்து 66 ஆயிரம் கடன் வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

தனியார் துறையில், கே. ஆர். சுந்தரம் தனியார் தொழிற்பேட்டையில் 20 தொழிற்கூடங்களும், கோயமுத்தூர் தனியார் தொழிற் பேட்டையில் 30 தொழில்கூடமும் ஒதுக்கப்பட்டுத், தயாரிப்பைத் தற்போது துவங்கியுள்ளன.

மேற்கூறிய தொழிற்பேட்டைகளில் கட்டடங்களை எழுப்பி வாடகைக்கு வழங்குகிறது அரசு. இவை தவிர, மனைகளைச் சீர்படுத்தித் தரும் தொழிற் பேட்டைகளும் (Developed Plots Estates) உண்டு.

அம்பத்தூர், மதுரை, மேட்டூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஏற்கனவே இந்தத் திட்டமிருந்தாலும் 1966-67 வரை அம்பத்தூரில் மட்டும் தொழில் தொடங்குபவர்களுக்கு இந்த மனைகள் வழங்கப்பட்டிருந்தன. மதுரை, மேட்டூர் ஆகிய பகுதிகளிலுள்ள மனைகள் 1967-68-ல்தான் வழங்கப்பட்டன. 1970-71ல் கிண்டியில் இந்தச் சீர் படுத்தப்பட்ட மனையிலுள்ள தொழிற்பேட்டைத் திட்டம் துவக்கப்பட்டு, மனைகள் தொழில் அதிபர்களுக்கு வழங்கப்பட்டன. அரக்கோணம், மணலி, கத்திவாக்கம், சேலம், காஞ்சிபுரம், தாம்பரம் முதல் செங்கல்பட்டு வரை சாலையின் இருமருங்கிலும் இவ்வகைத் தொழிற் பேட்டைகள் அமைக்க அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இராணிப்பேட்டையில் 8 லட்சத்து 22 ஆயிரம் செலவில் இவ்வகை மனையுள்ள தொழிற் பேட்டை அமைக்க அரசு 1970ல் அனுமதி வழங்கி இதுவரை 711.52 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது.

திருவள்ளூரில் 23.33 லட்சம் ரூபாயில் 283 ஏக்கரில் தொழிற் பேட்டை அமைக்க 1970-71ல் அரசு அனுமதி அளித்துள்ளது. சிறு தொழில்களும், வேலை வாய்ப்பும் பெருக இத் தொழிற்பேட்டைகள் மிகவும் உதவுவதாகவுள்ளன.

# பேருந்தின் பெருஞ்சாதனை



**சி**வப்பு வெளிர் மஞ்சள் நிறமுள்ள பேருந்துகளைக் கண்டதும், அவை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையைச் சார்ந்த பேருந்துகள் என்று தெரிந்து கொள்ளாதார் யாரும் இருக்கமாட்டார்கள்.

ஆனால் அதனைப் பற்றிய பல தகவல்கள் அனைவரும் அறிந்திருக்க முடியாது.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தமிழக அரசின் பேருந்துக் கட்டணம்தான் மிகக்குறைந்த கட்டணம் கடந்த மூன்றாண்டுகளாகப் பேருந்துக் கட்டணத்தைத் தமிழ்நாடு அரசு உயர்த்தவில்லை என்பது சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய மற்றொரு அம்சமாகும். இன்னும் சொல்லப்போனால் விரைவு வண்டிகளுக்கான கட்டணம் முன்பு மைலுக்கு 6 காசாக இருந்ததை, 5 காசாகக் குறைத்துள்ளது அரசு.

சென்னை மாநகரில் ஓடும் பேருந்துகளில் 80 சதவீத பாதைகளில் ஓடும் பேருந்துகள் லாபகரமாகயில்லாதிருப்பினும், மக்கள் நலனை முன்னிட்டு, அரசு குறைந்த கட்டணத்தையே வசூலித்து வருகிறது.

சென்னை நகரப் பேருந்துகளில் மாணவ-மாணவியருக்குச் சலுகை முறையில் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கல்வி, கலாச்சார நிலையங்களுக்குக் குறைந்த கட்டணத்தில் பேருந்துகள் வாடகைக்குத் தரப்படுகின்றன. பார்வையிழந்தவர்களுக்கும், ஊனமுள்ளவர்களுக்கும் சிகிச்சைக் காலங்களில் மருத்துவமனை சென்றுவரக் கட்டணம் வசூலிப்பதில்லை.

தமிழ்நாடு போக்குவரத்துத் துறையைப் பற்றிய மற்றொரு சிறப்பு அம்சம், இந்தியாவிலுள்ள நான்கு மிகப் பெரிய அரசுப் பேருந்து நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறையில் மொத்தம் 2000 பேருந்து வண்டிகள் உள்ளன. மொத்தம் 20,000 ஊழியர்கள் இத்துறையில் பணியாற்றிவருகின்றனர். பேருந்துகள், கட்டடங்கள், நிலம் ஆகியவற்றோடு சேர்ந்து மொத்த மதிப்பு 20 கோடி ரூபாயாகும்.

இந்தப் பேருந்துகள் தமிழகம் முழுவதும் ஓடுவதோடு, கேரளா, மைசூர், ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களின் சில பகுதிகளிலும் ஓடுகின்றன.

## நாட்டுடைமை ஆக்குவதில் புதிய வேகம்

1947-ஆம் ஆண்டு மார்ச் திங்களில், மையக்குழுவின் பரிந்துரையின்பேரில் அரசு, பேருந்துப் போககுவரத்தை நாட்டுடைமையாக்கத் தொடங்கியது என்றாலும், கடந்த 1967முதற்கொண்டு நாட்டுடைமையாக்கும் பணி மிகவும் தீவிரமாக அமுலாக்கப்பட்டு வருகிறது. முன்பு 1959ல் வகுக்கப்பட்ட கொள்கையின்படி 120 மைல்களுக்கு மேல் உள்ள தடங்கள் அரசினால் ஏற்று நடத்தப்பட்டன. இப்போது (1967க்குப் பின்) 75 மைல்களுக்கு மேலுள்ள தடங்கள் அனைத்தும் அவை சாதாரணப் பேருந்துத் தடங்களோ, அன்றி விரைவு வண்டித் தடங்களோ ஆனாலும், அவை நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. சென்னை நகருக்குள் முடிவடைகிற அல்லது சுற்றி வருகின்ற தடங்கள் அனைத்தும், நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. அதேபோல், குமரிமாவட்டத்திற்குள் முடிவடைகிற அல்லது சுற்றி வருகின்ற தடங்கள் அனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

இதன்படி சென்னை-ஆரணி தடம் 1967-ஆகஸ்ட் திங்கள் முதல் நாள் நாட்டுடைமை ஆக்கப்பட்டது. அது முதல் 31.12.70 வரை மொத்தம் 431 பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

இப்போது எல்லா மாவட்டங்களின் தலைநகரங்களும் அரசின் விரைவு வண்டிகளால் இணைக்கப்பட்டுள்ளன.

| | நாட்டுமையாக்கப்பட்ட | |
|---|---|---|
| | தடங்கள் | பேருந்துகள் |
| 1967-68-ல் | 173 | 268 |
| 1968-69-ல் | 82 | 150 |
| 69 முதல் 31-12-70 வரை | 13 | 13 |
| | 268 | 431 |



நாட்டுடைமையாக்கும் பணி துரிதமாக நடத்தப்பட்டதால், அதற்குத் தேவையான பணிமனைகள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றையும் அரசு ஏராளமாக நிறுவியது.

மாதவரம், குமிலி, பாபநாசம், கோயில்பட்டி, விருதுநகர், உதகமண்டலம், மதுரை, திண்டுக்கல், கடலூர், தர்மபுரி, திருவண்ணாமலை, தஞ்சாவூர், வேலூர், காஞ்சிபுரம், ராணித்தோட்டம், பாளையங்கோட்டை, வந்தவாசி, ஒசூர் ஆகிய இடங்களில் பெரிய பணிமனைகளும், சென்னை நகரில் மந்தவெளி, காந்திநகர், தியாகராயநகர், அண்ணாநகர், ஆகிய பகுதிகளிலும், திருவண்ணாமலை, ஆரணி, சிதம்பரம், மேட்டூர் ஆகிய ஊர்களில் துணைப் பணி மனைகளும், சென்னையில் உயர் நீதி மன்றத்தில் ஒரு விரைவு வண்டிப் பேருந்து நிலையமும், மதுரையில் ஒரு பேருந்து நிலையமும் நிறுவியது.

## பயணிகள் வசதிக்காக

பயணிகள் தங்குவதற்காக வசதியுள்ள ஒய்வு அறைகள் பல இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இடம் பெற்ற நகரங்கள், திருச்சி, கோவை, சேலம், உதகை, தஞ்சை, கிருஷ்ணகிரி, வேலூர், திண்டிவனம், கடலூர் ஆகியவையாகும்.

மகளிர், குழந்தைகளுக்காகத் தனிப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்காகத் தனியாகப் பேருந்துகள் ஒதுக்கப்பட்டுள்ளன. புதிதாக மாடி பஸ்கள் விடப்பட்டுள்ளன. சென்னை நகரில் மக்கள் ஒழுங்காகப் பேருந்துகளில் ஏறிச் செல்லச் சீரணித் தொண்டர்கள் உதவி செய்து வருகின்றனர்.

## நான்கு மண்டலங்கள்

பேருந்துத்துறை இன்னும் திறமையாகச் செயல்பட வேண்டும் என்ற நோக்குடன் 1970ல் ஒரு முக்கிய சீரமைப்பினை அரசு மேற்கொண்டது. அதன்படி மாநிலப் போக்குவரத்து நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. இணை இயக்குநரின் மேற்பார்வையில், தொழில் நுணுக்கம் தெரிந்த துணை இயக்குநர் உதவியுடன் ஒவ்வொரு மண்டலமும் இயங்கி வருகிறது. இந்தத் திட்டம் நல்லமுறையில் செயலாகி வருகிறது.

## தொடர்ந்து பரிசு

போக்குவரத்துப் பணிமனைகள் திறமையாகச் செயல்பட்டு வருகின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது, குரோம்பேட்டையிலுள்ள மையப் பணிமனை. விபத்துக்கள் ஏற்படாமல் திறமையாகப் பணியாற்றி வருவதற்குத் தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக இப்பணிமனை மைய அரசின் பரிசினைப் பெற்று வந்துள்ளது.

உடல் குறைபாடுகள் (கைகால் இழந்தோர், கண்பார்வையிழந்தோர்....) உள்ளவர்களை அதிக அளவில் வேலைக்கு நியமித்துள்ளதற்காக மாநிலப் பரிசையும் இந்தப் பணிமனை பெற்றுள்ளது.

## தொழிலாளர் நலன்

தொழிலாளர் நலனில் இந்த அரசு மிகுந்த ஈடுபாடு காட்டி வருகிறது. அவ்வப்போது, அகவிலைப் படி, நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி, மலைப்படி, குளிர் காலப்படி ஆகியவற்றை உயர்த்தி வந்துள்ளது.

அதிக உற்பத்தி செய்வது, ஒழுங்காக வேலைக்கு வருவது ஆகியவற்றிற்காக ஊக்க ஊதியமும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்காக வியாசர்பாடியில் 138 இல்லங்களும், கோடம்பாக்கம் புதூர் குடியிருப்பில் 50 இல்லங்களும் தரப்பட்டுள்ளன.

குரோம்பேட்டை அருகில் நெமிலிச்சேரியிலும், நாகர்கோவில் அருகே நீண்ட கரையிலும், கோவையிலும், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு இல்லங்கள் அமைத்துத் தர மனை நிலங்கள் வாங்கப்பட்டுள்ளன. குரோம்பேட்டையிலும், நாகர்கோவிலிலும் இல்லங்கள் அமைக்கும்பணி தொடங்கிவிட்டது. பிறபகுதிகளிலும்விரைவில் தொடங்கும். தஞ்சையிலும் இதேபோன்று குடியிருப்புப் பகுதிகள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இல்லத்திலிருந்து தொழிலாளர்கள் வேலைக்குப் பேருந்துகளில் வர இலவச அனுமதிச் சீட்டுத் (பாஸ்) தரப்படுகிறது. எல்லாப் பணிமனைகளிலும் ஊழியர்கள் வசதிக்காகச் சிற்றுண்டி விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒய்வு அறைகளும் கட்டப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகள் மூலம், கட்டுப்பாடுள்ள எல்லாப் பொருட்களும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. கடன் வசதி, குடும்ப வைத்திய வசதி ஆகியவையும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.



## 1967 முதல் 1970 வரை போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற விவரம் :—

| | | 1967-68 | 68-69 | 69-70 | 31.12.70 வரை |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை பேருந்து எண்ணிக்கை | 1491 | 1651 | 1685 | 1718 |
| | கன்னியாகுமரி | 240 | 295 | 304 | 315 |
| 2. | சென்னை கிளை ஓடும் பேருந்துகள் | 1268 | 1432 | 1409 | 1509 |
| | குமரி கிளை | 222 | 266 | 268 | 272 |
| 3. | பயணம் செய்யும் பயணிகள் | | | | |
| | சென்னை | 9.9 லட்சம் | 9.7 லட்சம் | 11.7 லட்சம் | 12.6 லட்சம் |
| | குமரி | 1.3 லட்சம் | 2.3 லட்சம் | 2.1 லட்சம் | 1.9 லட்சம் |
| 4. | சராசரி வசூல் | | | | |
| | சென்னை | ரூ. 3.04 லட்சம் | 3.94 லட்சம் | 3.43 லட்சம் | 3.33 லட்சம் |
| | குமரி | | | 0.66 லட்சம் | 0.67 லட்சம் |

### மொத்த வருவாய்

| | | 1967-68 | 68-69 | 69-70 | 31.12.70ல் உள்ளபடி |
|---|---|---|---|---|---|
| 1. | தடங்களின் எண்ணிக்கை | 391 | 490 | 475 | 481 |
| 2. | தடத்தின் நீளம் (மைலில்) | 27,959 | 31,020 | 31,561 | 37,650 |
| 3. | ஓடிய பேருந்து எண்ணிக்கை | 1,490 | 1698 | 1677 | 1781 |
| 4. | மொத்த வருவாய் | ரூ. 1224 லட்சம் | 1643 லட்சம் | 1795 லட்சம் | |

விபத்தினுல், பெரு மழையினுல் பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு அரசு நட்ட ஈடு வழங்குகிறது.

1967-68 நிதி அறிக்கை விவாதத்தின்போது பொதுப்பணி அமைச்சர் உறுதியளித்தபடி, உயர் மட்டக்குழு ஒன்று, போக்குவரத் துத் துறையினைத் திறம்படச் செயல் படுத்தவும், தொழிலாளர் நலம் பேணவும் ஆய்வு செய்யும்படி நிய மிக்கப்பட்டது. அந்தக் குழு தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப் பித்தது. அதன்படி 15-9-1969 முதல் தொழிலாளர்களுக்கான படி, இரவுப்படி, துணிகளுக்கான படி இவைகளை அரசு உயர்த்தியுள்ளது. இதன் மூலம் அரசுக்கு ஆண்டுக்குக் கூடுதல் செலவு சுமார் 26 லட்சம் ரூபாயாகும்.

### நிவாரண நிதி

விபத்தில் மாண்ட தொழிலாளர் கள் அல்லது அவர்தம் குடும்பத் தினர், மற்றும் அரசுப் பேருந்து களினுல் விபத்துக்கு இலக்கான அனுதைகளின் இறுதிக் கடன்களை மேற்கொள்ள ஒரு நிவாரண நிதியினை அரசு ஏற்படுத்தியது. 1960-ல் இத்தொகை ரூ. 1000 மாக இருந்தது. 1967-ல் இது ரூ. 2000 ஆக உயர்த்தப்பட்டு மீண்டும் 1970ல் ரூ. 3500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### நேர்மைக்குப் பாராட்டு

பேருந்துகளில் பயணிகள் மறதி யாக விட்டுச் செல்லும் பணம், மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பத்திரமாக எடுத்துத்தரும் ஊழியர் களின் நேர்மையைப் பாராட்டி அவ் வப்போது 'நேர்மைப் பரிசு' வழங்கு கிறது. சிறுசேமிப்புப் பத்திரமாக இப்பரிசு வழங்கப்படுகிறது. மிகுந்த திறமையினைக் காட்டும் ஊழியர் களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின் றன.

போக்குவரத்துத் துறையில் பொதுமக்களின் குறைபாடுகள், குற்றச்சாட்டுக்கள், கோரிக்கைகள் உடனுக்குடன் கவனிக்கப் படுகின் றன. இதற்கெனத் தனியாக மக்கள் தொடர்புப்பிரிவு இயங்கிவருகிறது.

பொதுமக்கள் பேருந்துகளில் தொலைத்துவிடும் பொருட்கள் பத் திரமாக அவர்களுக்குத் திருப்பித் தரப்படுகின்றன. 1967-68ல் இம் மாதிரி 3,272 பொருட்கள் கிடைக் கப் பெற்று உரிமையாளரின் கோரிக் கையின் பேரில் 982 பொருட்கள் திருப்பித் தரப்பட்டுள்ளன. 1968-69ல் 2358 பொருட்களும், 1969-70ல் 1322-ம், 31-12-70 வரை 1082 பொருட்களும் இவ்வாறு கிடைக்கப் பெற்று, முறையே 602, 422, 294 பொருட்கள் உரிமை யாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளன.

அரசுப் பேருந்துகளில் விளம்பரம் செய்து பல நிறுவனங்கள் பயன் பெற்று வருகின்றன. இவ்வகையில் 1967-68ல் அரசுக்கு ஒரு லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் வருவாய் வந்துள் ளது. இது 1969-70ல் ஒரு லட்சத்து 87 ஆயிரமாக உயர்ந்துள்ளது. முக்கியப் பேருந்து நிலையங்களின் விளம்பரங்களை நிறுவிடும் திட்டமும் ஆலோசனையிலுள்ளது.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், வேடந்தாங்கல், திருக்கழுக்குன்றம் போன்ற சுற்றுலாத் தலங்களுக்குச் சென்றுவரத் தனிப் பேருந்து வசதி களைப் போக்குவரத்துத்துறை ஏற் பாடு செய்துள்ளது.

### தமிழ் மணம்

1967 வரை ஆங்கிலப் பெயரு டன் வலம் வந்து கொண்டிருந்த பேருந்துகள், அதன்பின் 'தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து' என்ற தூய தமிழ்ப் பெயரினைப் பெற்றதுடன் பெயருக்கேற்பத் தமிழ்மணம் வீசுவ தாகவும் அமைந்தன. ஒவ்வொரு பேருந்திலும், பயணிகள் அனைவரது பார்வையையும் சிந்தனையையும் கவரும் வண்ணம் உலகப் பேரொளி யாம் வள்ளுவரின் திருவுருவமும், திருக்குறளும் பொறிக்கப்பட்டன. இதன் மூலம் குறள்நெறியை மக்கள் மத்தியில் பரப்பும் பெருமையினையும் பேருந்து பெற்றது.



காந்தியடிகள் கனவை நினைவாக்க
தமிழ் நாடு வழிகாட்டுகிறது!
கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்
கதர் - கிராமத் தொழில்கள்
வளர்ச்சியும் முன்னேற்றமும்
விவசாயிகளுக்கு
ஊதியத்துடன் கூடிய
வேலைவாய்ப்பளிக்கின்றன
வெளியீடு: கதர்- கிராமத் தொழில் துறை, உ.சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.
குமார்

# உள்ளத்தை வளர்த்தோம் உயர்வை அளித்தோம்

கிராமப் புற வளர்ச்சியில் தமிழகம் கடந்த நான்காண்டுகளாக ஏறுநடை போடுகிறது. கிராம மக்கள் தான் நாட்டின் இதயம். நாட்டின் உயிர்த்துடிப்பே கிராமங்களில்தான் உள்ளது. கிராமப் புறங்களில் வாழும் எளிய மக்களுக்கு நல்ல பல திட்டங்களை அரசு தீட்டிச் செயலாற்றி வந்துள்ளது. வளர்ச்சிப் பணிகளில், கிராம மக்களை நேரடியாக ஈடுபடுத்தி — நாட்டின் வளர்ச்சியில் தங்களுக்குப் பங்குண்டு என்ற மன நிறைவை அவர்கள் பெறுகின்ற வகையில் பணிகள் ஆற்றப்பட்டுள்ளன.

கடந்த நான்காண்டுகளில் நடைபெற்றுள்ள கிராம வளர்ச்சிப் பணிகள் இவ்வுண்மையைத் தெளிவு படுத்தும் :—

## சாலை வசதிகள்

| | அன்றும் 1966-ல் மைல்கள் | இன்றும் 1970-ல் மைல்கள் |
|---|---|---|
| கிராம மண்சாலைகள் | 10660 | 13438 |
| கிராமக் கப்பிச்சாலைகள் | 4230 | 6281 |
| ஊராட்சி ஒன்றிய கப்பிச் சாலைகள் | 6200 | 6606 |

## சுகாதாரம் — துப்புரவுப் பணிகள்

| | 1966-ல் | 1970-ல் |
|---|---|---|
| மேல்நிலை நீர்த்தொட்டிகள் | 1936 | 3447 |
| குடிதண்ணீர்க் கிணறுகள் | 43200 | 60049 |
| ஒழுங்குபடுத்தப்பட்ட மருந்தகங்கள் | 252 | 274 |
| ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 207 | 349 |
| தாய்சேய் நல விடுதிகள் | 2364 | 2587 |

## விலங்கின வளர்ச்சி

| | | |
|---|---|---|
| விலங்கின மருந்தகங்கள் | 278 | 410 |
| சொந்தக் கட்டடத்தில் இயங்கும் மருந்தகங்கள் | 143 | 344 |

## குடியிருப்பு மனைகள்

| | 1966-ல் | 1970-ல் |
|---|---|---|
| வட்டார அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் | 978 | 1099 |
| ஊர்நல மகளிர் பணியாளர்களுக்கு | 447 | 595 |
| ஆசிரியைகளுக்குக் குடியிருப்புகள் | 898 | 1330 |

## கல்வி:

| | 1966-ல் | 1970-ல் |
|---|---|---|
| ஊராட்சி ஒன்றியங்களினால் நிர்வகிக்கப்படும் ஆரம்பப் பள்ளிகள் | 17659 | 18531 |
| ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் | 24.6 இலட்சம் | 29.7 இலட்சம் |

| | 1966-ல் (ஆயிரக்கணக்கில்) | 1970-ல் (ஆயிரக்கணக்கில்) |
|---|---|---|
| ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் | 75.4 | 82.8 |
| உதவிபெறுவோர் பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை | 34.1 | 35.9 |
| சொந்தக் கட்டடங்களில் இயங்கும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் | 9874 | 13109 |

## சமுதாயக் கல்வி:

| | 1966-ல் | 1970-ல் |
|---|---|---|
| ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகள் | 14,845 | 23,088 |
| மகளிர் மன்றங்கள் | 10,034 | 12,350 |
| குழந்தைகள் காப்பகங்கள் | 1072 | 1450 |
| கிராம வானொலி மன்றங்கள் | 10469 | 12200 |

**நீர்ப்பாசனம்**

| | | |
|---|---|---|
| ஊராட்சி ஒன்றியங்களின் கீழுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் | 23,300 | 24,500 |

**சுகாதாரம் கிராமத் துப்புரவு**

| | | |
|---|---|---|
| சீர்திருத்தப்பட்ட குடிதண்ணீர்க் கிணறுகள் | 1812 | 3840 |

**கிராமங்களுக்குக் குடிநீர் வசதி**

கிராமங்களுக்குக் குடிநீர்வசதி அளித்தல் நல்லாட்சியின் தலையாய கடமையாகும்.

இதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தினையே அரசு உருவாக்கியுள்ளது.

1971-72க்குள்ளாகத் தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தருவதென அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக, மாநில அளவில் குடிநீர், வடிகால் திட்ட வாரியம் ஒன்றினை அரசு நிறுவியுள்ளது. குடிநீர் வசதி ஏற்படுத்துவதெற்கென்றே இவ்வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* * *

ஊராட்சித் தேர்தல்களில், ஊராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை அமுலுக்குக் கொண்டு வந்தது இந்த ஆட்சியில்தான்.

* * *

சாலைகளைப் பேணுவதற்காக ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் நபர் ஒன்றுக்கு 40 பைசா வீதம் கணக்கிட்டுத் தல சாலை மானியம் தரப்பட்டு வந்தது. இத்தொகை போதியதாக இல்லாததினால் தல சாலை மானியம் சாலைகளின் நீளத்தை அடிப்படையாகக் கொண்டு உயர்த்தி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நெடுநாட்களாக இருந்து வந்தது. இந்தக் கோரிக்கையைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, தல சாலை மானியம் வழங்கும் முறையை மாற்றி, அதில் ஒரு பகுதி, மக்கள் தொகை அடிப்படையிலும், இன்னொரு பகுதி ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வகிக்கும் சாலைகளின் நீளத்தின் அடிப்படையிலும் மானியமாக வழங்கப்படல் வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது.

கிராம வளர்ச்சிப் பணிகளுக்கும் சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இணைப்புச் சாலைகளுக்கென ரூ. 700 இலட்சமும், பள்ளிக் கட்டடங்களுக்கென ரூ. 300 இலட்சமும், விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீன்வளம் ஆகியவற்றிற்கு ரூ. 593.26 இலட்சமும், சமூகக் கல்விக்கென ரூ. 100 இலட்சமும், மகளிர்—குழந்தைகள் நலனுக்காக ரூ. 120 இலட்சமும், கிராமக் கைத்தொழில்களுக்கென ரூ. 100 இலட்சமும் செலவிடப்படும்.

* * *

குழந்தைகள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது தமிழக அரசு. கிராமப் புறக் குழந்தைகள் படிக்க வசதியின்றி, போதுமான பாதுகாப்பின்றி இருப்பதைத் தவிர்த்து, எதிர்காலத்தில் அவர்கள் நல்ல குடிமக்களாகத் திகழத் திட்டங்கள் தீட்டிச் செயலாற்றி வருகிறது அரசு.

முன்னிலைப் பள்ளிக் குழந்தைகள் — பேறுகால மகளிர்க்குக் கிராமப் பகுதிகளில் உணவு வழங்கும் திட்டம் ஒன்றினைத் தமிழக அரசு 1970-ல் தீட்டிச் செயலாற்றுகிறது. முன்னிலைப் பள்ளிக் குழந்தைகள், பேறுகால மகளிர், கைக்குழந்தை உள்ள தாய்மார்கள் ஆகியோருக்கு நாள் ஒன்றுக்கு 1,20,000 பேருக்கு உணவு அளிக்க வேண்டுமென்பது இத்திட்டத்தின் நோக்கம். தமிழ்நாடு முழுவதிலும் 1000 குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தி அவை ஒவ்வொன்றிலும் 120 பேருக்கு ஆண்டுக்கு 300 நாட்களுக்கு உணவளிக்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டம் 'கேர்' நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும்.

**ஓராண்டுத் திட்டம்**

ஊர்வளர்ச்சிக்கென அறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் காணிக்கையாக, ஓராண்டுத் திட்டம் ஒன்றினைத் தமிழக அரசு தீட்டிச் செயல்படுத்தியது. இத்திட்டம் 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் துவக்கப்பட்டது.

டிராக்டர்கள், மருந்து தெளிக்கும் கருவிகள், தூவு கருவிகள், உழுபடைக் கருவிகள் முதலியவற்றை வாங்கி, அவற்றை உழவர்களுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலமும், சமுதாயக் கிணறுகள் வெட்டுவது போன்ற பணிகளை நிறைவேற்றியதின் மூலமும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வேளாண்மைத் திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்டன.






மருத்துவக் கல்வித் துறையில் தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் கண்டுள்ள சாதனைகள் குறிப்பிடத் தக்கவையாகும்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1,075 ஆக இருந்தது 1967-68-ல் 1,125 ஆக உயர்த்தப்பட்டது.

1968-69-ல் மருத்துவக் கல்லூரிகளுக்காக அனேக புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன.

1. சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் 102 ஆண்கள் தங்கும் விடுதி :

2. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் 'அனடமி'ப் பிரிவில் ஒரு புதிய கூடம்

3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் அவசர ஆபரேஷன் தியேட்டர்.

4. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் குழந்தைகள் பிரிவில் குளிர்சாதன வசதி.

5. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் மேலும் 50 மாணவிகள் தங்கும் விடுதி.

6. மதுரை மருத்துவக் கல்லூரியில் 50 ஹவுஸ் சர்ஜன்கள் தங்கும் விடுதி.

7. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் 42 ஹவுஸ் சர்ஜன்கள் (மகளிர்) தங்கும் விடுதி.

**1969-70-ல்**

இதே போன்று மருத்துவக் கல்லூரிகளில் பலவித புதிய கட்டடங்கள், புதிய வசதிகள் சென்னை மருத்துவக் கல்லூரியில் புதுக் 'கார்டியாலஜி' பிளாக் கட்டப்பட்டது.

கீழ்க்கண்ட மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் சித்த வைத்தியப் பிரிவுகள் அமைக்க அரசு அனுமதி வழங்கியது :—

அரசு தலைமை மருத்துவமனைகள், வேலூர், கடலூர், சேலம், இராமநாதபுரம், கோவை.

* * *

மருத்துவக் கல்விக்காக ஒதுக்கப்பட்டு வரும் தொகை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது :—

| | ரூ. |
|---|---|
| 1967-68-ல் | 6,05,11,300 |
| 1968-69-ல் | 6,91,33,100 |
| 1969-70-ல் | 7,69,21,600 |

மொத்தம் மருத்துவம்—பொதுச் சுகாதாரத்துக்காகத் தமிழக அரசு இன்று 25 கோடி ரூபாய் செலவிடுகிறது. 1966-ல் மருத்துவ நலனுக்காகச் செலவிடப்பட்டது 16 கோடி ரூபாய்தான்!

அரசு ஊழியர்களுக்கு உள்ளது போலவே, மருத்துவ வசதிகள் ஆசிரியர்களுக்கும் தமிழக அரசு வழங்கியுள்ளது.

1968 நவம்பரில், சென்னையில் குழந்தைகள் நலம் காக்கும் நிலையம்—குழந்தைகள் மருத்துவமனை எழும்பூரில் தனியாக ஆரம்பிக்கப்பட்டது. சென்னை பொது மருத்துவமனையில் இருந்த குழந்தைகள் பிரிவு—எழும்பூர் மகளிர் — குழந்தைகள் மருத்துவமனையில் இருந்த குழந்தைகள் பிரிவு — இவை இரண்டும் இந்தப் புது மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டன.

# பாலம் அமைத்தோம்

**சென்னை ஜெமினி வட்டத்தில் 45 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட விருக்கும் மேல் நிலைப் பாலம் இந்தியாவிலேயே 3 வது மேம்பாலமாகப் பல புதுமைகளைக் கொண்டதாக அமையும்.**



**சா**லை வசதி — பாலங்கள் கட்டுதல் — வளர்ச்சிப் பணி நடைபெற நாட்டின் பொருளாதாரம் பெருக — அடிப்படைத் தேவைகள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ''சமூகத்தின் ஆக்க சக்திகளாக அறிவியல் அறிஞர், பொறியியல் நிபுணர் போன்றோர்க்குப் பணி செய்யும் வாய்ப்பும், மக்களிடையே மதிப்பும் அளிப்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முதற்படியாகும்'' என்று ஒரு முறை குறிப்பிட்டார்கள்.

தமிழக அரசின் பொதுப்பணித் துறையும் நெடுஞ்சாலைத்துறையும் ஆக்கத் திட்டங்களைச் செம்மையுற நிறைவேற்றுகின்றன.

* * *

சாலைகள் வளர்ச்சியில் தமிழக அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 37 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பணிகள் நிறைவேறிய பிறகு, தமிழ் நாட்டில் உள்ள சாலைகள் நீளம் 77,947 கிலோ மீட்டர்களாக உயரும். 1-4-69ல் சாலைகளின் நீளம் 65,023 கிலோ மீட்டர்கள்.

* * *

1967-68லிருந்து 1970-71 வரை கடந்த நான்காண்டுகளில் மட்டும் கட்டப்பட்ட பெரிய பாலங்கள் —

1. திருநெல்வேலி மாவட்டத்தில் தரவிக்குளம் — சூரங்குடியில் வைப்பாறுமீது ஒரு பாலம் கட்டப்பட்டது. செலவு ரூ. 20.13 இலட்சத்திற்கு மேல்.
2. செங்கை மாவட்டத்தில் திருமுக்கூடல் அருகில் பாலாற்றின்மீது குறுக்குப் பாலம் (செலவு ரூ. 7 இலட்சம்).
3. தஞ்சாவூர் மாவட்டத்தில் கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் வேட்டாறு மீது பாலம் கட்டப்பட்டது. (செலவு ரூ. 5.50 இலட்சம்)
4. விருத்தாசலம் — தொழுதூர் சாலையில் ஒரு பாலம் (செலவு ரூ. 5.50 இலட்சம்).
5. விருத்தாசலம் — தொழுதூர் சாலையில் மற்றுமொரு பாலம் (செலவு ரூ. 5.50 இலட்சம்).
6. கடலூர் — சிதம்பரம் சாலையில் கெடிலம் நதிமீது ஒரு பாலம் கட்டப்பட்டது. (செலவு ரூ. 24.20 இலட்சம்).
7. இராமநாதபுர மாவட்டத்தில் பி.சி.சி. சாலையில் ரூ. 9.40 செலவில் ஒரு பாலம்.
8. கடலூர் — விருத்தாசலம் சாலையில் மணிமுத்தாறு மீது உள்ள பாலத்தை அகலப்படுத்துதல். (செலவு ரூ. 4.95 இலட்சம்).
9. சென்னை — திருச்சிராப்பள்ளி சாலையில் சங்கரபரணிப் பால்ம். (செலவு ரூ. 11.75 இலட்சம்).
10. திருச்சி மாவட்டத்தில் சங்கரியூர்-கள்ளிக்குடிச் சாலையில் சூலையாறு பாலத்தைத் திருத்தி அமைத்தல் (செலவு ரூ. 4.12 இலட்சம்.)
11. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை—திருப்பூர் சாலையில் ஒரு பாலம். (ரூபாய் 5.75 இலட்சம் செலவு.)
12. சென்னை நகரில் மவுண்ட் ரோட் ரவுண்ட்டானாவில் சுரங்கப் பாதை (ரூ. 13.75 இலட்சம்).
13. சென்னை நகரில் சென்டிரல் ரயில் நிலையம் அருகில் சுரங்கப் பாதை (ரூ. 4.40 இலட்சம் செலவு)

* * *

சிங்களத் தீவினைத் தமிழகத்துடன் இணைக்கும் கப்பல் மார்க்கத்தின் தொடக்கத்தில் இருக்கும் இராமேசுவரத்தில் ஒரு படகுத் துறையும், அப்படகுத் துறையினருக்கு ஒரு பாதையும் அமைப்பது 1969-ஆம் ஆண்டின் சீரிய பணிகளில் ஒன்றாய் அமைந்தது. இராமேசுவரத்தைத் தமிழகத்துடன் இணைக்கும் சாலைப் பாலம் அமைக்க ரூ. 6.52 இலட்சம் செலவாகும்.

* * *

சென்னை மாநகரின் போக்குவரத்திற்கு உதவுவான் வேண்டி, இந்த அரசு சென்ற ஆண்டு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளில் தலையாயது ஜெமினி வட்டத்தில் சுமார் 45 இலட்சம் ரூபாய் செலவில் விரைவில் கட்டப்பட விருக்கும் மேல் நிலைப்பாலம் (Fly-over) ஆகும். இது இந்தியாவிலேயே மூன்றாவது மேம்பாலமாகப் பல புதுமைகளைக் கொண்டதாக அமையும்.

* * *

## விரைவில் செய்யப்பட விருக்கும், திருத்தியமைக்கும் வேலைகள் :

1. திருச்சிராப்பள்ளியில் காவேரி பாலத்தை புதுப்பித்தல் (செல்வு ரூ. 70 இலட்சம்)
2. கோயம்புத்தூர் நகர எல்லைக்குள் ஒரு மேம்பாலம் கட்டுதல் (இதற்காகும் செலவு ரூ. 40 இலட்சம்).
3. மாயூரம் நகர எல்லைக்குள் கும்பகோணம்—சீர்காழி சாலையில் ஒரு மேம்பாலம் (செலவு ரூ. 40 இலட்சம்).
4. கும்பகோணம் நீடாமங்கலம் சாலையில் ஒரு மேம்பாலம் (செலவு ரூ. 15 இலட்சம்).
5. முசிறியையும் குளித்தலையையும் இணைக்கும் காவேரி மீது ஒரு பாலம் கட்டுதல் (செலவு ரூ. 30 இலட்சம்).
6. கொடைக்கானல்—பழனியை இணைக்க ஒரு சாலை அமைத்தல். (ரூ. 75 இலட்சம்.)
7. சென்னை, திருச்சி—திண்டுக்கல் சாலையில் இப்பொழுதுள்ளவாலாஜா பாலத்திற்குப் பதிலாகப் புதிய பாலம் கட்டுதல் (செலவு ரூ. 25 இலட்சம்).
8. சென்னையில் கூவம் வெலிங்டன் பாலத்தை அகலப்படுத்துதல். (செலவு ரூ. 25 இலட்சம்).
9. செங்கற்பட்டு நகர எல்லைக்குள் சென்னை—திருச்சிச் சாலையில் ஒரு மேம்பாலம் கட்டுதல் (செலவு ரூ. 15 இலட்சம்.)
10. வடஆர்க்காடு மாவட்டத்தில் கடலூர்—சித்தூர் சாலையில் பாலாற்றின்மீது உள்ள பாலத்தைத் திருத்தி அமைத்தல். (செலவு ரூ. 60 இலட்சம்).

* * *

## நடைபெற்றுக் கொண்டிருக்கும் முக்கிய பணிகள் :

1. மதுரை நகராட்சி எல்லைக்குள் சுப்பிரமணியபுரத்தில் மேம்பாலம். (செலவு ரூ. 37 இலட்சம்).
2. மதுரை நகராட்சி எல்லைக்குள் மீனாட்சி மில்லுக்கு அருகில் ஒரு மேம்பாலம் (செலவு ரூ. 31 இலட்சம்).
3. சென்னை நகரில் ஜெமினி வட்டத்தில் ஒரு மேல்நிலைப் பாலம் (செலவு ரூ. 45 இலட்சம்).
4. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கள்ளியூர் - கடத்தூர் சாலை அமராவதி மீது ஒரு பாலம் (செலவு ரூ. 9 இலட்சம்).
5. தஞ்சாவூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை—மிமிசல் சாலையில் அம்புலியாறுமீது ஒரு பாலம். (செலவு ரூ. 10 இலட்சம்).
6. தஞ்சாவூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை—மிமிசல் சாலையில் அக்கினியாறு மீது ஒரு பாலம் (செலவு ரூ. 10 இலட்சம்).
7. தென்னார்க்காடு மாவட்டத்தில் பாப்பனப்பட்டி—வழுதாவூர் சாலையில் சங்கரபரணி பாலம் (செலவு ரூ. 12 இலட்சம்).
8. சென்னை-கல்கத்தா சாலையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் குறட்டலையாறு மீது ஒரு பாலம். (செலவு ரூ. 29.60 இலட்சம்).

### தமிழ்நாட்டில் இரசாயன உரங்களின் உபயோகம் பெருகுதல் பாரீர்!

| ஆண்டு | உபயோகப்படுத்தப்பட்ட உரங்கள் (லட்சம் மெட்ரிக் டன்களில்) |
|---|---|
| **தழைச்சத்து உரங்கள்** | |
| 1967-68 | 0.96 |
| 1968-69 | 1.13 |
| 1969-70 | 1.48 |
| 1970-71 (டிசம்பர் '70 வரை) | 1.09 |
| **மணிச்சத்து உரங்கள்** | |
| 1967-68 | 0.30 |
| 1968-69 | 0.35 |
| 1969-70 | 0.42 |
| 1970-71 (டிசம்பர் '70 வரை) | 0.31 |

# சிறு தொழிலில்



தமிழகத்தில் சிறு தொழில்கள் வளர்ந்துள்ளனவா? கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் சிறு தொழில்கள் இரு மடங்காகப் பெருகியுள்ளன. 1967-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தொழில் — வாணிபத்துறையிடம் பதிவு செய்திருந்த தொழில்கள் சுமார் 11,000. அவை 1970-ல் 22,231 ஆக உயர்ந்துள்ளன. இந்த வளர்ச்சிக்கு ஒரே காரணம், சிறு தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு அரசு எடுத்துவரும் தனிக்கவனமே ஆகும்.

பெருகிவரும் இந்தச் சிறுதொழில்களில் 'எலக்டிரானிக்' பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், ஊர்திகளுக்கான கருவிகள், இரும்புப் பொருட்கள், உணவுப் பொருட்கள், பாதுகாப்பு இயந்திரப் பாகங்கள், மின்சாரப் பொருட்கள், ரசாயனப் பொருட்கள் போன்றவை அடங்கும். சிறு தொழில் வளர்ச்சிக்குத் தமிழ் நாடு அரசு 1967-ல் மிகத் துணிச்சலான ஒரு நடவடிக்கையை மேற்கொண்டது. மாவட்டங்களிலுள்ள தொழில்துறை உதவி இயக்குநர்களிடம் சிறு தொழில்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என்பதே அது. இந்த நடவடிக்கை அனாவசியமான கால தாமதத்தைத்தவிர்த்தது. அதோடு இந்த முறையானது நல்லமுறையில் செயல்பட்டு வருகிறதா என்பதையும் அடுத்த இரண்டு ஆண்டுகளாக அரசு மிக உன்னிப்பாகக் கண்காணித்து வந்தது. அதன் பலனாகத் தற்போது புதுத்தொழில்களைப் பதிவு செய்வது என்பது மிகவும் சுலபமாகவும் உடனடியாகவும் நடைபெறுகிறது.

அத்துடன் நிற்கவில்லை, அரசு. சிறுதொழில் பணி உதவி நிலையம், தேசிய சிறு தொழில்கள் கழகம் உற்பத்தி மன்றங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, சிறுதொழில் நடத்துபவர்களுக்குத் தொழில் நுணுக்க ஆலோசனை கூறவும் தவணைமுறையில் எளிதாக இயந்திரங்கள் வழங்கவும் நிர்வாகப் பயிற்சி, தொழில் ஆலோசனை ஆகியவை பெறவும் ஏற்பாடுகள் செய்து வந்தது.

சிறுதொழில் நடத்துபவர்கள், தொழில் நுணுக்கங்களில் புதிய உத்திகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1969-ல் தமிழ்நாடு அரசு ரூ. 5000 அனுமதி வழங்கியது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்த வகையில் இது தான் முதல் திட்டம். இந்தத் திட்டம், தேசிய உற்பத்தி மன்றம் மற்றும், தமிழ்நாடு தொழிற் பேட்டைகள் சங்கம், மாநிலஅரசு அலுவலர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் 3 ஆண்டுகளுக்கு அமுல் நடத்தப்படும்.

நிர்வாகப் பயிற்சி பெறுவதற்கான சிறு தொழில் நிர்வாக சங்கத்திற்கு ஆண்டுதோறும் 5000 ரூபாய் அளவில் நிதி உதவியாகத் தமிழக அரசு வழங்கி வருகிறது.

சேலம் தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்களில் சிறு தொழில்கள் வளர்ச்சியடைவதற்காக 1968-70 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு தீவிரத் திட்டத்தைச் செயல்படுத்தியது. சிறு தொழில்கள் பணிஉதவி நிலையம், தேசிய சிறு தொழில்கள் கழகம், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றின் உதவியுடன் இந்த மாவட்டங்களில் சிறு தொழில்கள் தொடங்கும் பணிகள் விரைவுபடுத்தப் பட்டன. அந்தந்த இடங்களிலேயே நேரடியாகச் சென்று சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டன. அதன் மூலமாக 2000 சிறுதொழில்கள் தொடங்கப் பட்டன.

அத்தொழில்கள் மூலம் நேரடியாக 4000 பேர்களும், அதனைச் சார்ந்து 8000 பேர்களும் வேலை வாய்ப்புப் பெற்றனர்.

வேலையில்லாத பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டத் தமிழ்நாடு அரசு தனி அக்கறை காட்டியது. 1969-ல் இதற்காகச் 'சிறுதொழில்தொடங்குவது பற்றித் தனிப் பயிற்சியளித்ததோடு, நாட்டுடைமையான வங்கிகள், தேசிய ஆய்வுக்கூடங்கள், ரோட்டரி சங்கங்கள் ஆகியவை நடத்திய தனிப் பயிற்சிகளில் கலந்துகொண்டு, தொழில்துறை உதவியது. அதன் பலனாக வங்கிகளிடமிருந்து அதிக அளவு நிதி உதவி பெற முடிந்தது. தமிழக அரசின் இடையறாத முயற்சிகளின் காரணமாகவும் ஆதரவின் காரணமாகவும் 1968-70-ல் 'ஸ்டேட் பாங்க்' மற்றும் பிறவங்கிகளிடமிருந்தும் சிறுதொழில்களுக்காக 5 கோடி ரூபாய்க்கு மேல் நிதி உதவி பெற முடிந்தது.

தமிழ்நாடு அரசின் முயற்சியினால் சிறுதொழில்களுக்கான இயந்திரங்களைப் பெறுவதில் கடந்த மூன்றாண்டுகளில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1967-ல் 950 சிறுதொழில்கள் 98 லட்சம் ரூபாய் மதிப்பிற்கு இயந்திரங்கள் பெற்றிருந்தன. ஆனால் இன்று, 2800 சிறுதொழில்களுக்கு 550 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன.

சிறுதொழில் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள இந்த விரைவான முன்னேற்றத்திற்குக் காரணம், தமிழ்நாடு அரசு, சிறுதொழில் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் எடுத்து வரும் முக்கிய நடவடிக்கைகளேயாகும்.

# பெரும் வளர்ச்சி!

## 1968-69

கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் திட்டத்தினைச் செயற்படுத்த முனைந்துகணிதவியல், அறிவியல் பாடங்களில் புகுமுக வகுப்பிற்கான நூல்கள் வெளியிடப் பட்டன.

இந்திய அரசுப் பணிகளுக்கு மத்திய அரசு ஊழியர் தேர்வுக் கழகம் நடத்தும் தேர்வுகளைத் தமிழிலும் எழுத ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்தியதற்கிணங்க **தமிழ்** உட்படப் பதினான்கு மொழிகளிலும் தேர்வு நடத்துவதென மத்திய அரசு முடிவு செய்தது.

தமிழ்வளர்ச்சிக்காகப் பாடுபடும் பொதுமன்றங்களுக்கு நிதி உதவி தந்து ஊக்குவிப்பதுடன் சிறப்பான தமிழ் நூல்களுக்கு அரசு பரிசுகளை வழங்கி ஆக்கம் தந்தது.

அலகாபாத், கேரளம், கல்கத்தா, உஸ்மானியா, ஆக்ரா பல்கலைக் கழகங்களுக்குத் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்ய நிதி உதவி அளித்துள்ளது இந்த அரசு.

திருக்குறள் ஆராய்ச்சிக்காக இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு நிதியிலிருந்து சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 3 லட்சம் வழங்கியது அரசு.

## 1969-70

1956ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டம் முனைப்பாகச் செயலாக்கப் பட்டது. ஆட்சிச் சொல்லகராதியைத் திருத்தி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. பி.எஸ்சி. பட்டப் படிப்புக்குத் தேவையான 31 அறிவியல் பாட நூல்கள் இவ்வாண்டில் வெளியிடப்பட்டன.

தமிழ் பட்டப்படிப்புத் தொடங்குவதற்கு வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்திற்கு ஆண்டுக்கு ரூ 10,000 வீதம் 1970-71ம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்கு இந்த அரசு மானியம் வழங்குகிறது.

தென் இந்திய மொழிகள் புத்தக நிறுவனத்திற்கு ரூ. 2,45,000 வழங்கியுள்ளது.

புதுடில்லியில் கட்டப்பட்டுவரும் தில்லித் தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்கு மேலும் ரூ 50,000 அரசு நன்கொடை வழங்கியுள்ளது.

1960ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்ட தமிழ்நாடு அரசு தமிழ்நூல் விவர அட்டவணைத் தயாரிப்புப் பிரிவு, எழும்பூரிலுள்ள ஆவணக் காப்பகத்தில் தற்போது சீரிய பணியாற்றி வருகிறது.

தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதுவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழில் சிறப்பாக வரைவுகள், குறிப்புகள் எழுதும் அரசு அலுவலருக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளது.

5 ஆண்டுகளுக்குள் எல்லா அலுவலகங்களிலும் முழுத் தமிழ்த் திட்டம் செயற்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்க்கலைக் களஞ்சியம், சிறுவர் கலைக்களஞ்சியம் தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் முதல் துணைப் பதிப்பு ஆகியவை வெளியிடும் பணியில் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டுள்ளது.






தமிழகத்தில் தொழில் வளம் பெருக வேண்டும் என்ற நோக்கத்துடன், வெவ்வேறு பணிகளுக்காக மூன்று பெரும் கழகங்களை நிறுவியுள்ளது, தமிழ்நாடு அரசு.

ஒன்று, தமிழ்நாடு சிறுதொழில் கழகம் (டான்சி); இதன் பணி அரசினரின் சிறு தொழில்களை நடத்துவதும், நிர்வகிப்பதுமாகும். இந்தக் கழகத்தின் நிர்வாகத்தில் 58 தொழில்கள் உள்ளன. கட்டடங்களுக்கு இரும்புக் கூரை; வீடுகள், அலுவலகங்களுக்கு வேண்டிய மேஜை நாற்காலிகள், பீரோக்கள், பூட்டுகள், சைக்கிள்கள், மோட்டார்கள், பம்பு செட்டுகள், தோல் பொருட்கள் போன்ற பல்வேறு பொருட்கள் இத்தொழிற்கூடங்களில் தயாரிக்கப்படுகின்றன.

1965-டிசம்பர் திங்களில் துவக்கப்பட்ட இந்தத் தொழிற்கூடத்தின் 1965-66-ம் ஆண்டு உற்பத்தி மதிப்பு 389 லட்சம் ரூபாய். இன்று (1969-70-ல்) உற்பத்தி மதிப்பு 662 லட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

இரண்டாவது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ). 10 கோடி ரூபாய் முதலுடன் துவக்கப்பட்ட இந்தக் கழகத்தின் பணி, தொழில்களை வளர்ப்பது, முன்னேற்றுவது, புதுத் தொழில்களை நிறுவுவது, பொதுத்துறையில் தொழில்களை நடத்துவது, தனியார் துறையில் தொழில் வளர்க்க நிதி உதவுவது ஆகியவையாகும்.

கடந்த மூன்றாண்டுகளில் பின்வரும் நான்கு முக்கிய தொழில்களை நிறுவுவதில் இந்தக் கழகம் முக்கிய முயற்சி எடுத்து வந்துள்ளது.

**1. அரக்கோணத்திலுள்ள வார்ப்படத் தொழிற்கூடம்**, 6 கோடியே 86 லட்சம் ரூபாய் முதலுடன் ஆரம்பிக்கப்படும், இந்தத் தொழிற்கூடம், முதல் கட்டத்தில் 50,000 டன் உருக்கு உற்பத்தி செய்யும்; இரண்டாவது கட்டத்தில் அது லட்சம் டன்னாக உயரும். 1971 ஆகஸ்ட் திங்களில் இத்தொழிற்கூடம் உற்பத்தியைத் துவங்கும்.

**2. ஆலங்குளம் அரசு சிமெண்ட் தொழிற்சாலை.** 1970 பிப்ரவரியில் உற்பத்தியைத் துவங்கிய இந்த சிமெண்ட் ஆலையின் முதலீடு 6 கோடியே 77 லட்சம் ரூபாய். இதன் தின உற்பத்தித் திறன் 1200 டன். தற்போது ஒரு சூளை செயல்படுகிறது. அதன் தின உற்பத்தி 600 டன்.

**3. முடுவத்தூர் (திருச்சி மாவட்டம்) முன்னோடி சிமெண்ட் ஆலை.** 1967-ல் அரசு வசம் ஒப்படைக்கப்பட்ட இந்த ஆலையின் உற்பத்தித் திறன் நாளுக்கு 20 டன் ஆகும். இதனை நாளுக்கு 150 டன்னாக உயர்த்த ஆய்வுகள் நடக்கின்றன.

**4. சேலம் இரும்பாலை.** 1970 செப்டம்பர் 16-ஆம் நாள் இந்திய தலைமை அமைச்சரால் துவக்கப்பட்ட சேலம் இரும்பாலை 100 கோடி ரூபாய் முதலீடு கொண்டது. இரும்பாலை மூலம் 5000 பேர்களுக்கும், சார்புத் தொழில்கள்மூலம் 50,000 பேர்களுக்கும் வேலை வாய்ப்புத்தரும் இந்த இரும்பாலை, 5 ஆண்டுகளில் செயல்படத் தொடங்கும். இதற்காகக் கஞ்சமலைப் பகுதியில் 5000 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நில ஆர்ஜித வேலைகள் முடிவடைந்துவிட்டன.

கூட்டுத்துறையில் கீழ்க்கண்ட தொழில்கள் நிறுவப்படுகின்றன.

### உர ஆலை

தூத்துக்குடியில் சதர்ன் பெட்ரோ கெமிக்கல் தொழில்கழகத்தால் நடத்தப்படவிருக்கும் உர ஆலைக்கு இந்தக் கழகம் 200 லட்ச ரூபாய் முதலீடு செய்துள்ளது.

### சோடியம் ஹைடிரோ சல்பைட் தொழிற்கூடம்

காரைக்குடியில் தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தால் நடத்தப்படும் தொழில், சோடியம் ஹைடிரோ சல்பைட் தொழிலாகும். இதில் டிட்கோவிற்கும் முக்கிய பங்குகள் உண்டு.

### டயர்-டியூப் தொழிற்கூடம்

இராமநாதபுர மாவட்டம் திருப்பத்தூரில் கூட்டுத்துறையில் தொடங்கவிருக்கும் தொழிற்கூடம் டயர்—டியூப் தொழிற்கூடமாகும். இங்கு ஆண்டுக்கு மூன்று லட்சம் டயர்களும் டியூப்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

### சோடா ஆஷ் மற்றும் அமோனியம் குளோரைட் தொழிற்சாலை

தூத்துக்குடியில் உருவாகும் மற்றொரு தொழிற்கூடம் சோடா ஆஷ், அம்மோனியம் குளோரைட் ஆகியவை தயாரிக்கும் தொழிற்கூடம். ஆண்டு உற்பத்தி 66 ஆயிரம் டன்.

இவை தவிர உப்பு சார்ந்த தொழில்களும் மற்றும் எட்டுப் புதிய தொழில்களும் நிறுவவும் டிட்கோ திட்டமிட்டு வருகிறது.

மூன்றாவது கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம். இதன் பணி, தமிழகத்திலும், பாண்டிச்சேரியிலும், வெளி வங்கிகளில் கடன் உதவி கிடைக்காத தொழில்களுக்குக் கடன் உதவி வழங்குவதாகும். பொதுவாக 10 ஆண்டுகளுக்குக் கடன் வழங்கப்படும்.

31-12-70 வரை இந்தக் கழகத்திடம் வந்துள்ள மனுக்கள் விவரம்: வந்துள்ள மனுக்கள் 819, தொகை 6,441.34 லட்சம்; ஒப்புதலளிக்கப்பட்ட மனுக்கள் 457, தொகை 3,842.81 லட்சம்; கடன் தரப்பட்டவை 375, தொகை 2,928.34 லட்சம்.



# முப்பெரும் கழகங்கள்


உங்கள் சேவை நாட்டுக்குத் தேவை!
சிறந்த சேவை செய்யும் போலீசாருக்கு ஆண்டுதோறும் அண்ணா பிறந்த நாளன்று முதலமைச்சர் பதக்கமும் ரூ.3000, ரூ.2000, ரூ.1000 என்று பணமுடிப்பும் வழங்கி வருகிறது தமிழ்நாடு அரசு! காவல் துறையினர் நலன்களுக்காக "காவல் துறை ஆணைக்குழு"வையும் அமைத்துள்ளது!
இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு
கடந்த நான்கு ஆண்டுகளில் சிறு சேமிப்பு முதலீடு அதிகமாகியுள்ளது.
துணைத் தலைவர்
வரிவேண்டாம் நன் செய்க்கு 5 ஏக்கர் வரை வரிகிடையாது!
அரசு
புன் செய்க்கு வரி நீக்கம்; நன் செய்க்கு 5 ஏக்கர் வரை வரி நீக்கம்!



“முனைப்புடனும் - உறுதியுடனும் நாம் உழைக்க வேண்டும். ஏனெனில் நாம் பல நூற்றாண்டுகளாய்க் கப்பிவிட்ட சிலந்திக் கூடுகளை அகற்ற வேண்டும்; காரண-காரிய செயல் முறை உயர்ந்த நிலையிலிருந்து ஆட்சி புரிய வைக்க வேண்டும்.

நமது நாகரிகமும் பண்பாடும் தொன்மை வாய்ந்தவை. அதில் தொய்வு உண்டாகச் செய்து விட்டோம். காலத்தால் அதில் வடுக்கள் தோன்றி விட்டன. அவற்றை நோக்கி நம்முடைய பண்பாட்டையும் நாகரிகத்தையும் மீண்டும் நிலை நாட்டுவதோடு மற்றைய நாட்டாரின் சாதனைகளிலிருந்தும் நாம் கற்றறிய வேண்டும்.”

• • •

“. . . .சாதாரண மனிதனை-கீழ்த்தட்டு மனிதனை உயர்த்தும் பணியில் நாம் எங்கிருந்தாலும் ஈடுபட வேண்டும். அந்த மனிதன்தான் இந்த நாட்டின் - பிற நாடுகளின் முதுகெலும்பாய் இருப்பவன். இந்த மனிதன் தனக்கு இழைக்கப்படும் அநீதியை உணர்ந்து கொள்ளத் துவங்கி விட்டான். அதன் விளைவாகக் கிளர்ச்சிகளும், மோதல்களும் ஏற்படுகின்றன.

உறுதி எடுத்துக் கொள்ளுங்கள் - நாம் பின் தங்கப்போவதில்லை; நமது சாமான்ய மனிதனை இடர்ப்பாடான நிலையில் விட்டுச் செல்லப் போவதில்லை.

கண்ணியமிக்க பரம்பரையின் வழித்தோன்றல்களாகிய மாணவர்கள்தான் இந்த உன்னதமான பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் மாணவர்கள் காணும் வெற்றியில்தான், இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.

அடிப்படை பலவீனமாயிருந்தால், மகுடமும் இருளில் வீழும்.

புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை - குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை - தனது குழந்தைகள் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியில் ஈடுபட வாரீர்.”

• • •

“முன்பு ஒரு காலத்தில் சமுதாயத்தின் சில பகுதி மக்கள் படிக்க முடியாது. அவர்கள் படிக்கக் கூடாது என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

நல்லவேளையாக சமூகப் புரட்சி துவங்கி விட்டது. நூற்றாண்டுக் காலங்களாகப் பழக்கத்தில் இருந்த அடக்கி வைக்கும் முறை மறைந்தது.

இப்போது எல்லோரும் படிக்கலாம். வாயில் வெள்ளிக் கரண்டியால் உணவு ஊட்டப்படும் சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளையானாலும், கலயத்தில் கஞ்சி குடிக்கும் ஏழையின் மகன் ஆனாலும் யார் வேண்டுமானாலும் சரி, இப்போது படிக்கலாம்.

இதில், மனிதனுக்கு மனிதன் பேதமில்லை, ஒருவன் கல்வி கற்றால், சமூகம் படிக்கிறது என்று பொருள்.

நமது இலட்சியங்களுக்கும், அவை நிறைவேற்றப்படுவதற்கும் இடையிலே வேறுபாடு இருக்கிறது. அதற்காகப் பெரிதிலும் பெரிதான இலட்சியங்களை வகுத்துக் கொள்வதை நாம் கைவிடவேண்டியதில்லை. லட்சியம் சிறந்ததாக உயர்ந்ததாகத்தான் இருக்க வேண்டும். நாம் அந்த இலட்சியத்தை நோக்கி முன்னேறும் போது இலட்சியத்துக்குச் சிதைவு நேராமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.”

• • •

“தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும்; தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும்!

ஆனால். . .தமிழர்கள் தமக்கென்று உள்ளதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்கள்!”

• • •





31-12-1970
1967
சிறு தொழில்கள் இரு மடங்காகின
1967-ல் பதிவுசெய்யப்பட்ட சிறு தொழில்கள் 11,000
31-12-70-ல் ” 22,231
கடந்த 4 ஆண்டுகளில் 6000 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உதவிப் பணம் வழங்கப்பட்டுள்ளது.
காந்தியடிகள், பண்டித நேரு ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களை அனைத்துக் கட்சி விழாக்களாகத் தமிழ்நாடு அரசு கொண்டாடி வருகிறது.
மருந்து
மருந்து
1966
1970
1966-ல் மருத்துவ நலனுக்காக செலவிட்டது 16 கோடி ரூபாய். இன்று அதனை 25 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது தமிழ்நாடு அரசு.

மாநகர்

# காவற்படையின்

# மகத்தான சாதனை

சென்னை மாநகரக் காவற்படையினர் அன்றாடம் செய்துவரும் அரும்பணிகள் பல உண்டு. ஆயினும் அவர்களால் செய்யப்பட்ட சாதனைகள் பல மறத்தற்கரியது. அவைகளில் சில இதோ!

இரண்டாவது உலகத் தமிழ்மாநாடு நடந்தபொழுது பெருமளவில் செய்யப்பட்டிருந்த போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள்.

சென்னையில் நடந்த தொழிற்சந்தைக்கு (I. I. T. I. F.) செய்யப்பட்டிருந்த போக்குவரத்து ஏற்பாடுகள், பாதுகாப்பு நடவடிக்கைகள்.

1967, 1968-ஆம் ஆண்டுகளில் குடிசைப்பகுதிகளில் தீப்பிடித்து வந்தது. அப்பொழுது காவற்படையினர் செய்த உதவிகள் மறத்தற்கரியது. காவற்படையினர் செய்த தீவிரக் கண்காணிப்பின் காரணமாக 1969-ஆம் ஆண்டில் குடிசைப் பகுதிகளில் தீப்பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தலைச்சேரி காவல் நிலையத்தைத் தாக்கிவிட்டு தப்பிவந்த நாராயணன், பாலன், விஸ்வநாதன் என்ற நக்சல்பாரிகளை டிசம்பர் 1968-ல் சென்னையில் கைது செய்து, அவர்களைக் கேரள மாநிலக் காவல் துறையினரிடம் ஒப்படைத்தது.

1968-ஆம் ஆண்டில் சென்னை நகரில் பல இடங்களில் கொள்ளையடித்த 'பவேரியா, கொள்ளைக் கூட்டத்தைப் பிடித்து, பயந்து கொண்டிருந்த சென்னை மாநகர மக்களுக்கு மன அமைதி ஏற்படுத்தியது.

1967-ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்ட குற்றங்கள் 76 சதமாக இருந்தது. 1970-ஆம் ஆண்டில் கண்டுபிடித்த குற்றங்கள் 87 சதமாக உயர்ந்தது. இதனால் குற்றவாளிகள் குறைந்து வருகின்றனர்.

ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த நாகிரெட்டி மற்றும் 8 நக்சல்பாரிகளைக் கைது செய்து ஆந்திர மாநிலக் காவற்படையினரிடம் ஒப்படைத்தது.

கேரளா, மற்றும் ஆந்திர மாநில நக்சல்பாரிகள் தமிழ்நாட்டில் புகுந்த உடனேயே அவர்களைக் கைது செய்து தொல்லையை முளையிலேயே கிள்ளியெறிந்து வருவது.

பொது மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களுக்கு உதவி செய்வதற்காக மக்கட் தொடர்பு அலுவலரை 1968-ஆம் ஆண்டில் நியமித்தது.

# அறநிலையப் பணிகள்





"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது சான்றோர் வாக்கு. தமிழக அரசின் அடிப்படை இலட்சியம் இதுதான். அறநிலையப் பணிகள் இந்த ஆட்சியில் யாவரும் பாராட்டத்தக்க வகையில் நடைபெற்றுள்ளன. இத்தனைக் காலமாக ஓடாது இருந்த திருவாரூர்த் தேர் ஓடியதும் இந்த அரசின் முயற்சியால்தான்! கும்பகோணம் மகாமகம் எப்பொழுதும் இல்லாதவகையில் மிகவும் சிறப்புடன் நடைபெற்றது.

* * *

தமிழக அரசு அறநிலையப்பணிகளில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறது. கோயில்களைத் தூய்மையுடன் திகழச் செய்வதிலும் ஆண்டவனைத் தரிசிக்க வருகின்ற பக்தர்களுக்கு வசதிகள் பல செய்து தருவதிலும் இந்த அரசு மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது.

கோயில்களில் திருமண மண்டபங்கள் கட்டுவதில்மிகுந்த முன்னேற்றம் கடந்த நான்காண்டுகளில் பெற்றுள்ளோம்.

இதோ புள்ளிவிவரங்கள் :—

| | அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுச் செலவு |
|---|---|
| 1967 | 82,000 ரூபாய் |
| 1968 | 62,000 ,, |
| 1969 | 4,12,000 ,, |
| 1970 | 18,42,700 ,, |

அறநிலையங்கள் அறப்பணித்துறையின் கீழ், பெருவாரியான அளவில் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. புள்ளி விவரங்கள் இதைத் தெளிவுபடுத்துகின்றன :—

| | |
|---|---|
| 1966-67-ல் | 9,747 |
| 1967-68-ல் | 9,912 |
| 1968-69-ல் | 10,102 |
| 1969-70-ல் | 10,239 ஆக உயர்ந்துள்ளது. |

* * *

காலம் காலமாக, பாரம்பரிய அர்ச்சக முறை ஒழிக்கப்பட்டது இந்த ஆட்சியின் காலத்தில்! சாதி மதப் பாகுபாடின்றி, தமிழ்நாட்டுக் கோயில்களில் அர்ச்சகர்கள் நியமிக்கப்படலாம் எனச் சட்டமே பிறப்பிக்கப்பட்டது ஆட்சியிலை.



இந்து மதத்தைச் சேராதவர்களும் தமிழகத்தில் உள்ள இந்துக் கோயில்களுக்குள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது இந்த அரசினுல்தான்! நம்முடைய கலைத் திறனை, சிற்பச் செல்வங்களை வெளிநாட்டுக்காரர்களும் கண்டு களிக்க, இதனுல் வாய்ப்பு ஏற்படும்.

கோயில்களிலிருந்து கிடைக்கும் வருமானம் கடந்த மூன்ருண்டுகளில் மிகவும் பெருகியுள்ளது.

இதோ புள்ளிவிவரங்கள் :—

| | |
|---|---|
| 1967-68-ம் ஆண்டில் | ரூ. 3,98,52,754 |
| 1968-69-ம் ஆண்டில் | ரூ. 4,99,25,142 |
| 1969-70-ம் ஆண்டில் | ரூ. 5,99,10,170 |

தமிழகத்தில் அறநிலையங்கள், கோயில்களின் வளர்ச்சியில் இந்த அரசு காட்டிய அக்கறையும் ஆர்வமுமே இந்த முன்னேற்றத்திற்குக் காரணங்கள் என்று சொன்னுல் மிகையாகாது.

அறநிலையங்கள், கோயில்களின் உபரி வருமானத்தை ஆக்கப்பணிகளுக்கும், கல்வி வளர்ச்சிக்கும் பயன்படுத்த ஆவன புரிந்து வந்துள்ளது இந்த அரசு. இத்தொகை ஆண்டுதோறும் பெருகிக்கொண்டே வந்துள்ளது.

1966-67-ல் இப்படிப் பயன்படுத்தப்பட்ட தொகை

| | |
|---|---|
| கல்விக்காக | ரூ. 3,46,000 |
| மற்ற ஆக்கப் பணிகளுக்காக | ரூ. 6,33,869 |
| மொத்தம் | ரூ. 9,79,869 |

**ஆனுல் கடந்த 3 ஆண்டுகளில் செலவிட்ட தொகை**

| | கல்விக்காக | மற்றப்பணிகளுக்காக | மொத்தம் |
|---|---|---|---|
| 1967-68ல் | 2,00,910 | 8,04,538 | 10,05,448 |
| 1968-69ல் | 14,29,337 | 4,17,121 | 18,46,458 |
| 1969-70ல் (31-12-70 முடிய) | 28,84,075 | 13,96,422 | 42,80,049 |

**பக்தர்கள் தங்கும் விடுதிகள் கட்டச் செலவிடப்பட்ட தொகை**

| | |
|---|---|
| 1969-ல் | ரூ. 1,10,700 |
| 1970-ல் | ரூ. 2,65,800 |

**பயணிகள் தங்கும் விடுதிகள் கட்ட**

| | |
|---|---|
| 1967 | ரூ. 3,95,400 |
| 1968 | ரூ. 2,73,200 |
| 1969 | ரூ. 6,34,000 |
| 1970 | ரூ. 10,60,000 |







அறநிலையப் பணி
களையும் இந்த அரசு
நல்ல முறையில் நிர்வகித்து வருகிறது. பல்
லாண்டுகளாக ஓடாதிருந்த திருவாரூர்த்
தேரினை அண்மையில் ஓடவைத்து 'பக்தர்களின்'
உள்ளங்களில் உவகையை உருவாக்கிய நிகழ்ச்சி
இதற்குச் சான்று பகருகிறது !

# எத்தனை எத்தனை இரசாயனத் தொழில்கள் இங்கே!

தமிழ் நாடு அரசு, தமிழகத்தில் எளிதாகக் கிடைக்கக்கூடிய சில இரசாயனப் பொருட்களைப் பயன் படுத்திப் பல புதிய தொழில்கள் துவங்குவதில் கடந்த 4 ஆண்டு களாகத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. அவற்றில் உப்பு சார்ந்த தொழில்கள் குறிப்பிடத்தக்கவை.

உப்பளங்களில் கடல் நீரிலிருந்து உப்புத் தயாரிக்கும்போது எண் ணெய் போன்ற கழிவுப் பொருள் கிடைக்கும். அதிலிருந்து 'மக்னீசியம் கார்பனேட்' தயாரிக்கலாம். ரப்பர், வாசனைப் பொருட்கள் முதலியவை தயாரிக்க இந்த மக்னீசியம் கார் பனேட் பயன்படும்.

எனவே, தூத்துக்குடியில் இதற் கான தொழிற்சாலையினைத் தமிழக அரசு அமைத்துள்ளது. அங்கு ஆண் டுக்கு 300 டன் மக்னீசியம் கார் பனேட் தயாரிக்கப்படும். சமீபத்தில் இந்தத்தொழிற்கூடம் தனது உற்பத் தியைத் தொடங்கியது. இதுவரை 10 டன்கள் உற்பத்தி செய்யப்பட் டுள்ளன. இந்த மக்னீசியம் கார் பனேட்டுக்கு வெளிச்சந்தையில் நல்ல வரவேற்புள்ளது.

உப்பு சார்ந்த தொழிலில் மற் ெறான்று பொட்டாசியம் குளோ ரைடு. 1967-ல் தமிழக அரசினால் அனுமதி வழங்கப்பட்ட இந்தத் தொழிலகம் தூத்துக்குடியில் மக்னீ சியம் கார்பனேட் தொழிற்கூடத் தின் அருகாமையிலேயே உள்ளது. நான்கு லட்சத்து ஐயாயிரம் ரூபாய் மூதலீட்டுடன் துவக்கப்பட்ட இந் தத் தொழிற்கூடத்திற்கான கட்ட டங்கள், இயந்திரங்கள் ஆகியவை நிறுவப்பட்டு விரைவில் உற்பத்தி யைத் துவங்கயிருக்கிறது. இத் தொழிற்கூடத்தில் ஆண்டுக்கு 300 டன் பொட்டாசியம் குளோரைடும் 900 டன் மக்னீசியம் குளோரைடும் உற்பத்தி செய்யப்படும். பொட் டாசியம் குளோரைடு இதுவரை தமிழகத்தில் தயாரிக்கப்படாத ஒரு பொருள். உரத்திற்கு மிகவும் பயன் படும் இது, இதுவரை பெருமளவில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்துள்ளது. உள்நாட் டிலேயே தயாரிப்பதால் இனி இதற்கு மிகுந்த வரவேற்பிருக்கும்.

மேற்கூறிய இரு பொருட்களின் உற்பத்தியும், கிண்டியிலுள்ள இரசாயன ஆய்வுக்கூடத்தில் பன் முறை ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் நிறுவப்பட்டவை யாகும்.

தூத்துக்குடியில் துவக்கப்பட் டுள்ள மற்ெறாரு தொழில் 'பிளாஸ் டர் ஆப் பாரிஸ்'. 1967-ல் தமிழக அரசினால் அனுமதிக்கப்பட்ட இந்தத் தொழிற்கூடம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் முதலீட்டுடன் அவ் வாண்டிலேயே நிறுவப்பட்டது. விரைவில் தயாரிப்பில் இறங்கும் இந் தத் தொழிற்கூடம் ஆண்டுக்கு 300 டன் 'பிளாஸ்டர் ஆப் பாரிஸ்' உற் பத்தி செய்யும். இந்தப் பொருள் கட்டடம் நிறுவவும், மட்பாண்ட கலைவண்ணப் பொருட்கள் தயாரிக் கவும் பயன்படும்.

தூத்துக்குடியில் நிறுவப்படயிருக் கும் மற்ெறாரு தொழில் அம்மோனி யம் குளோரைடு, சோடா ஆஷ் தயாரிப்பு ஆகும். இதில் அம்மோ னியம் குளோரைடு உரமாகவும், சோடா ஆஷ் தொழில்களுக்கும் பயன்படக்கூடியவை. கூட்டுத் துறையில் எட்டுக்கோடியே எண்பது லட்சம்ரூபாய் செலவில் நிறுவப்படும் இத்தொழிற்கூடம் நாளொன்றுக்கு, ஒவ்வொன்றிலும் 200 டன் தயா ரிக்கக்கூடியது.

தமிழ்நாட்டில் கடற்கரையோரப் பகுதிகள் வெகு நீளமாக அமைந் திருப்பதால், இவை போன்ற உப்பு சார்ந்த தொழில்கள் தொடங்கவும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய் யும் அளவிற்குப் பெருமளவில் தயாரிப்பில் இறங்கவும், நிறைய வாய்ப்பு உள்ளது. இது பற்றி ஆய்வு செய்த குருநாத் நிறுவனம் 40 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் 5 கோடி ரூபாய் முதலீட்டில் உப்புத் தயாரிக்கவும் உப்பு சார்ந்த தொழில் களமைக்கவும் வாய்ப்புள்ளதென் றும் அதன் மூலம் 16 லட்சம் டன் உப்பும், 60 ஆயிரம் டன் ஜிப்ச மும் தயாரிக்கலாமென்றும் ஆலோ சனை வழங்கியது. இதையொட்டி தூத்துக்குடியில் ஒரு ஆய்வுக்கூடத் தினை நிறுவவும், மாநில மட்டத்தில் உப்பு வாரியம் ஒன்றினை அமைக்க வும் தமிழக அரசு உத்தேசித்துள் ளது.

தமிழகத்தில் உருவாகியிருக்கும் மற்ெறாரு பெரிய கூட்டுத் தொழில், பெட்ரோ கெமிக்கல் தொழி லாகும். சென்னை மணலியிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையினால் ஏற்படவிருக்கும்துணைத்தொழில்கள்



தான் அவை. இதனைப்பற்றி ஆய்ந்து இந்தியப் பொறியாளர்கள் நிறுவனம் ஓர் அறிக்கை தந்தது. அந்த அறிக்கையினைத் திரு. டி. சி. கோதாரி தலைமையிலுள்ள குழு நன்கு ஆய்ந்து, தனது பரிந்துரையை அரசுக்கு அனுப்பியுள்ளது.

அந்தக் குழு, இதன் மூலம் பல பொருட்கள் தயாரிக்கலாமென்றும், குறிப்பாக நாப்தா கிராக்கர் (Naptha Gracker) பாலிதீன், பாலிபுரபைலின், செயற்கை ரப்பர் போன்ற தொழில்களைத் தனியார் துறையில் துவங்கலாமென்று பரிந்துரைத்துள்ளது. இந்தத் தொழில்கள் அனைத்தும் ரூ. 200 கோடி முதலீடு கொண்டதாகயிருக்கும். இரண்டு கட்டத்தில் இந்தத் தொழில்கள் நிறுவப்படும்.

நெய்வேலியிலும் பல புதிய தயாரிப்புகள் தயாரிக்கப்படுகின்றன. நெய்வேலியிலுள்ள முக்கிய மூன்று தொழிற் கூடங்களான அனல் மின் நிலையம், யூரியா உர ஆலை, நிலக்கரித் தொழிற்கூடம் ஆகியவற்றிலிருந்து துணைப்பொருட்களாக, ரோடு போடப் பயன்படும் தார், மற்றும் பினாயில், கிரசால், எக்ஸிலினால் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. இதன் மூலம் என்னென்ன தொழில்கள் அமைக்கலாமென்பதினைக் கண்டறிய தமிழ்நாடு அரசு, 'எஞ்சினியர்ஸ் இந்தியா லிமிடெட்' என்ற நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அந்த நிறுவனம் இதுபற்றி ஆய்வு செய்து, அங்கு பினாயில் ரகங்களும், வர்ணங்களும் கட்டடம் மற்றும் மின் தடுப்பிற்குப் பயன்படும் செங்கற்களும் தயாரிக்க நல்ல வாய்ப்புள்ளதாக அறிவித்துள்ளது.

## வடலூரில் புதிய தொழில்

1968-ல் வடலூரில் கரித்தொழிற்கூடம் (Active carbon unit) ஒன்றினை அரசு துவக்கியது. இதற்கு ஏற்கனவே கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மூன்று கோடி ரூபாய் மூலதனமுள்ள இந்தத் தொழிற்கூடம் 1971 ஏப்ரல் திங்கள் முதல் தயாரிப்பில் இறங்கும். இந்தக் கரி, சர்க்கரை, எண்ணெய், மருந்து ஆலைகள் ஆகியவற்றில் அவைகளை நிறமாற்றம் செய்யப் பயன்படக்கூடியது. எனவே இதற்கு மிகமிக அதிக அளவில் வரவேற்பு இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

## உயிர்ச் சத்து

உயிர்ச்சத்துள்ள (வைட்டமின்) 'ஈஸ்ட்' என்னும் பொருளைத் தயாரிக்க கிண்டியில் தொழிற்கூடம் அமைக்கத் தமிழக அரசு 1967-ல் ஒப்புதல் அளித்தது. இதற்கான முதலீடு மூன்று லட்சத்து 75 ஆயிரம் ரூபாயாகும்.

ரொட்டி, மிட்டாய் ஆகியவை தயாரிக்கவும், மதிய உணவுக்கு உயிர்ச்சத்துப் பொருளாகவும் இந்த ஈஸ்ட் பயன்படும். இந்தியாவிலே இவ்வகையில் இதுவே முதல் தொழிற்கூடமாகும். உள்நாட்டுத் தொழில்நுணுக்கத்துடன் வெளிநாட்டுக் கூட்டுறவு எதுவுமின்றித் தொடங்கப்பட்டது என்ற பெருமையும் இதற்கு உண்டு. 1971 ஜூன் திங்களில் இந்தத் தொழிற்கூடம் உற்பத்தியைத் தொடங்கும். ஆண்டுக்கு 300 டன் உற்பத்தி செய்யும்.

வாலாஜாபேட்டையில் ஒரு புதிய தொழிற்கூடம் உருவாகி வருகிறது. 1968-ல் தமிழ்நாடு அரசினால் அனுமதியளிக்கப்பட்ட இந்தத் தொழிற்கூடம், சோடியம் டைக்குரோமேட் என்ற பொருளினைத் தயாரிக்கும். தோல் பதனிடுவதற்கு இது இன்றியமையாத பொருளாகும். நான்கு லட்சத்து அறுபத்தைந்தாயிரம் ரூபாய்செலவில் கட்டப்படும் இந்தத் தொழிற்கூடம் வாலாஜாப்பேட்டை ராணிப்பேட்டை, ஆம்பூர், ஆகிய பகுதிகளிலுள்ள தோல் தொழிற்கூடங்களுக்குப் பேருதவியாக அமையும். விரைவில் இங்கு உற்பத்தி தொடங்கும்.

கடல் சிப்பிகளிலிருந்து இரசாயனத்திற்கான சுண்ணாம்பு தயாரிக்கும் தொழிற்கூடமொன்று தென் ஆர்க்காடு மாவட்டம் மரக்காணத்தில் உருப்பெற்று வருகிறது. இது சர்க்கரை, தோல், நெசவு ஆகிய தொழில்களுக்கு இன்றியமையாத பொருளாகும். 1969-ல் ஒன்றரை லட்சம் ரூபாயில் திட்டமிடப்பட்ட இந்தத் தொழிற்கூடம் விரைவில் உற்பத்தியைத் துவங்கயிருக்கின்றது. இவை தவிர இரசாயனப் பொருட்கள்பற்றி விரிவாக ஆய்வு செய்து அத்தகையத் தொழில்களை தமிழகத்தில் தொடங்கும் வாய்ப்புக்களைக் கண்டறியப் பல ஆய்வுக் கூடங்களை நடத்தி வருகிறது தமிழ்நாடு அரசு.

அதிலொன்று, கிண்டியிலுள்ள இரசாயன ஆய்வுக்கூடம். இங்கு கனிகள், தாதுக்கள், உலோகங்கள், கலப்பு உலோகங்கள், எண்ணெய்கள், கொழுப்புகள், உரங்கள், பூச்சு மருந்துகள், தொழில்களுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள், எரி பொருட்கள், வர்ணங்கள், வார்ணிஷ், உணவுப் பண்டங்கள், மற்றும் பிற வணிகப் பொருட்கள் பற்றி ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. இதில் தனியார்கூடத் தாங்கள் தயாரித்த பொருள்களின் தரம் அறியக் குறைந்த செலவில் அவற்றை ஆய்வு செய்து கொள்ளலாம். முறையான சிறு தொழிலதிபர்களுக்குக் கட்டணத்தில் 50 சதவிகிதம் சலுகையும் அளிக்கப்படுகிறது. எல்லா நவீன வசதியுமுள்ள இந்த ஆய்வுக் கூடத்தில் கடந்த நான்காண்டுகளாக ஆய்வுக்கு வந்த பொருட்களின் எண்ணிக்கை சுமார் 8,250

கிண்டி தொழிற்கூடத்தில் நடந்த ஆய்வுகளில் குறிப்பிடத்தக்கது நறுமண எண்ணெய்களைத் தயாரிப்பதாகும். மல்லிகைத் தைலம், ரோசாத் தைலம், ஐயனோன், சித்திரால், ஜெரனியம், பல்மரோசா, ரோடினால் ஆகிய தைலங்களைத் தயாரிப்பதுபற்றி இங்கு விரிவான ஆய்வுகள் நடத்தப்பட்டன. தலையில் தேய்க்கப் பயன்படும் நறுமணத் தைலங்கள், சவரம் செய்யப் பயன்படுத்தும் தைலம் (After shave lotion) எடிக்கோலன் ஆகியவையும் இங்கு தயாரிக்கப்பட்டன. காமதேனு, காவேரி போன்ற சிறப்பங்காடிகள் மூலமும் பொருட்காட்சிகளிலும் விற்பனை செய்ததில் இவற்றிற்கு நல்ல வரவேற்பு இருந்தது. சுமார் 40 ஆயிரம் ரூபாய் வரை இந்தத் தயாரிப்புகள் விற்பனை ஆகியுள்ளன.

இயந்திரம் மற்றும் வானிலை ஆராய்ச்சிக்காகக் கிண்டியில் மற்றொரு ஆய்வுக்கூடமும், மதுரையில் ஒரு மண்டல ஆய்வுக்கூடமும் உள்ளன. மதுரை ஆய்வுக்கூடம் 1971 ஏப்ரல் திங்கள் முதல் செயல்படும். திருச்சி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு இந்த ஆய்வுக் கூடம் பயன்படும்.

இந்த ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்தியதன் காரணமாக தமிழ்நாட்டில் பரவலாகச்சிறு தொழில்கள் ஏராளமாகத் தோன்றவும், நன்கு வளரவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

# எழுத்தறிவித்த புண்ணியம்





கிராமங்களில் வதியும் சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி அளிக்க எல்லா வசதிகளும் செய்து தருகிறது தமிழக அரசு.

கிராமியக் கல்வி, முன்னேற்றத்திற்கே அடிப்படை அல்லவா?

1967-க்கு முன் இல்லாத சில சிறப்புத்' திட்டங்களை அரசு கடந்த 'மூன்றரை ஆண்டுகளில் இத்துறையில் நிறைவேற்றியுள்ளது.

புறக்கணிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சமுதாயத்தை உயர்த்த, ஏழை எளிய பாமர மகனின் வாழ்விலே ஏற்றம் காண, ஏழைகளின் அரசு பாடுபடுகிறது.

ஏழையின் சிரிப்பில்தான்—பாமர மக்களின் மகிழ்வில்தான் இறைவன் இருக்கிறான்!

* * *

இதற்கு முன்பெல்லாம் ஆரம்பப் பள்ளிகளுக்கு, உயர்நிலை ஆரம்பப் பள்ளிகளுக்கு நூலகங்கள் கிடையாது. 1969-70-ல் தமிழக அரசு இப்படி நூலகங்கள் தோற்றுவிக்க, கிராமப் பகுதிகளில் உள்ள அப் பள்ளிகளுக்கு ரூ. 3,68,880 இணை மானியமாக அளித்துள்ளது. இதற்கு ஈடான தொகையை ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் அளிக்கும்.

* * *

ஆரம்பப் பள்ளிகள்-உயர்நிலை ஆரம்பப் பள்ளிகளுக்கு விஞ்ஞானக் கருவிகள் வாங்க,

| | |
|---|---|
| 1967-68-ல் | 7,30,600 ரூபாயும் |
| 1968-69ல் | 2,92,500 ரூபாயும் |
| 1969-70-ல் | 7,36,500 ரூபாயும் |
| 1970-71-ல் | 7,36,500 ரூபாயும் |

தமிழக அரசு வழங்கியுள்ளது.

* * *

ஆசிரியைகளுக்கு வீடு கட்டித்தரக் கடந்த நான்காண்டுகளில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் என்று அரசு வழங்கியுள்ளது. ஒரு வீடு கட்டச் சுமார் 4,500 ரூபாய் ஆகிறது.

* * *

கூடுதல் ஆசிரியர் திட்டத்தின் அடிப்படையில் விஞ்ஞானக் கருவிகள் வாங்க, கூடம் கட்ட 68-69ல் ரூ. 3,70,000ம், 69-70ல் ரூ. 14,90,768-ம் அரசு அளித்துள்ளது.

* * *

ஆரம்பப்பள்ளிகளில் துப்புரவு வசதிகளுக்காக (Sanitary Fecilities) இதுவரையில் எந்த ஒரு நிதி ஒதுக்கீடும் கிடையாது. 1970-71-ல் இதற்காக ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் செயல்படுத்தப்படாத சிறப்புத் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஊராட்சி ஒன்றியங்கள், அரசு உதவி பெறும் நிர்வாகத்தின்கீழ், ஊராட்சி ஒன்றியங்களின் அதிகாரத்தில் உள்ள ஆரம்பப்பள்ளிகள்-உயர்நிலை ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை 27,000க்கும் மேல். இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 1,16,500க்கும் மேல் உள்ளனர். இப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 40,40,700.

* * *

ஊராட்சி ஒன்றியங்களின் ஆரம்பக் கல்விக்கான வரவு செலவுத் திட்ட ரூபாய் சுமார் 27.42 கோடி ரூபாயாகும். இந்தத் தொகையில் சுமார் 23.50 கோடி ரூபாய் (அதாவது 86 சதவிகிதம்) சட்டபூர்வமான — சட்டபூர்வமில்லாத மானியமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசினால் அளிக்கப்படுகிறது. மிச்சமுள்ள 3.92 கோடி ரூபாயினை ஊராட்சி ஒன்றியங்களே திரட்டிக் கொள்ள வேண்டும்.

* * *

ஆரம்பக் கல்விக்காக, ஊராட்சி ஒன்றியங்கள் திரட்டும் உள்ளூர் ஆதாரங்கள் ஆண்டுதோறும் பெருகிக்கொண்டே போகிறது :—

| | ரூபாய் |
|---|---|
| 1966-67-ல் | 314 இலட்சம் |
| 1967-68-ல் | 347 இலட்சம் |
| 1968-69-ல் | 358 இலட்சம் |
| 1969-70-ல் | 373 இலட்சம் |
| 1970-71க்கு நிதி நிலை ஒதுக்கீடு | 392 இலட்சம் |

ஊராட்சி நிறுவனங்களும் கிராம மக்களும் — ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு, அறிவுக்கண்களைத் திறக்கும் திருப்பணியில் அரசுடன் தோளோடு தோள் நின்று பணியாற்றுகிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களே இதற்குச் சான்றாக அமைந்துள்ளன.



ஆரம்பக் கல்வி சம்பந்தமான நிதிகள் பற்றித் தனியாக ஒரு கணக்கே இதுவரையில் இருந்தது கிடையாது. 1969ல்-தான் இதற்கென்று ஒரு தனிக் கணக்கே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று அரசினால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. நீண்ட நெடு நாளைய தேவையை இதன் மூலம் தமிழ்நாடு அரசு தீர்த்து வைத்திருக்கிறது.

* * *

இதற்கு முன்பெல்லாம் ஆரம்பப் பள்ளிகளில் விஞ்ஞானக் கருவிகள், விஞ்ஞான ஆய்வுக்கூடச் சாதனங்களுக்கு வசதியே கிடையாது.

இப்பொழுது இதற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்ட 1,515 ஆரம்பப் பள்ளிகளுக்கும் — 282 உயர் ஆரம்பப் பள்ளிகளுக்கும் 1969-70-ல் ரூபாய் 7,36,500க்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆரம்பப் பள்ளி ஒன்றுக்கு ரூ. 300, உயர் ஆரம்பப்பள்ளி ஒன்றுக்கு ரூ. 1,000 இதன் மூலம் கிடைக்கும்.



ஆரம்பப் பள்ளிகளில் — உயர் ஆரம்பப் பள்ளிகளில் நூலகங்கள் ஏற்படுத்த — ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 8,836 ஆரம்பப் பள்ளிகளுக்கும் 1,730 உயர் ஆரம்பப் பள்ளிகளுக்கும் 1969-70ல் ரூ. 3,68,880 அரசு வழங்கியுள்ளது. இது ஓர் இணை மானியமாகும். அதே அளவுத் தொகையை ஊராட்சி நிறுவனங்கள் திரட்ட வேண்டும்.

* * *

1970-71-ல் 1,515 ஆரம்பப் பள்ளிகட்கும் 282 உயர் ஆரம்பப்பள்ளிகட்கும் சிறப்பு மானியம் ரூ. 7,36,500 வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பள்ளி ஒன்றுக்கு ரூ. 300-ம், உயர் ஆரம்பப் பள்ளி ஒன்றுக்கு ரூ. 1,000மும் கிடைக்கும்.

* * *

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் கட்ட 1968-69ல் ரூ. 33.59 இலட்சமும், 1969-70ல் ரூ. 48 இலட்சமும், 1970-71ல் ரூ. 52.60 இலட்சமும் அரசு வழங்கியுள்ளது.

* * *

ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிகள் — ஆதாரங்கள் பற்றி ஆய்வு செய்ய ஒரு தனிக் குழுவினையே — ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதி ஆய்வுக் குழு ஒன்றினையே இந்த அரசு தான் முதன் முதலாக அமைத்தது. 1958-ல் ஊராட்சிச் சட்டம் நிறைவேறிய பிறகு, இப்பொழுதுதான் முதன் முதலாக, இப்படி ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# உணவு உற்பத்தித் துறையால்
# தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ்
# வழங்கப்பட்ட கடன் தொகை

| வரிசை எண் | மாவட்டத்தின் பெயர் | 1966-67-ல் வழங்கப்பட்டது (ரூபாய்) | 1967-68-ல் வழங்கப்பட்டது (ரூபாய்) | 1968-69-ல் வழங்கப்பட்டது (ரூபாய்) | 1969-70-ல் வழங்கப்பட்டது (ரூபாய்) | 1970-71-ல் வழங்க ஒதுக்கப்பட்டுள்ள தொ (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | வட ஆர்க்காடு | 6,11,420-72 | 65,52,220 | 53,87,240 | 1,66,26,226 | 90,00,000 |
| 2. | தென் ஆர்க்காடு | 10,63,033-86 | 24,35,476 | 75,26,530 | 1,47,97,649 | 1,25,00,000 |
| 3. | செங்கற்பட்டு | 18,99,403-69 | 21,56,277 | 21,10,889 | 69,56,354 | 54,00,000 |
| 4. | தஞ்சாவூர் | 12,71,412-23 | 21,93,784 | 29,35,589 | 45,99,750 | 65,00,000 |
| 5. | திருச்சிராப்பள்ளி | 22,72,436-39 | 25,99,721 | 53,45,167 | 68,92,253 | 84,00,000 |
| 6. | இராமநாதபுரம் | 1,10,715-00 | 10,14,970 | 11,99,950 | 15,00,450 | 41,25,000 |
| 7. | மதுரை | 3,69,164-71 | 2,12,969 | 2,59,500 | 9,20,079 | 21,00,000 |
| 8. | திருநெல்வேலி | 12,93,863-23 | 10,39,267 | 16,96,955 | 24,77,738 | 68,26,000 |
| 9. | கன்னியாகுமரி | 65,475-00 | 61,275 | 2,30,220 | 2,27,480 | 2,86,000 |
| 10. | கோயம்புத்தூர் | 20,12,843-59 | 4,42,129 | 9,04,775 | 26,93,971 | 35,40,000 |
| 11. | தர்மபுரி | 3,06,580-48 | 15,24,835 | 16,33,534 | 32,33,483 | 23,33,000 |
| 12. | சேலம் | 6,63,253-45 | 2,80,000 | 3,00,004 | 7,49,927 | 14,70,000 |
| 13. | நீலகிரி | 3,515-00 | 5,000 | 7,000 | 14,000 | 20,000 |
| | மொத்தம் | 1,19,43,117-35 | 2,05,17,923 | 2,95,37,353 | 6,16,89,360 | 6,25,00,000 |

# நீர்வளம் பெருக்கிய நிலையான சாதனை

## பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள்

| ஆண்டு | திட்டங்களை நிறைவேற்ற ஆகிய செலவு (ரூபாய்) | பயன்பெற்ற ஆயக்கட்டு (ஏக்கர்) | அதிகம் உற்பத்தியாகிய உணவுதானியங்கள் (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| 1967- 68.... | 4,11,98,000 | 7,55,920 | 5,07,210 |
| 1968-69.... | 3,99,68,000 | 7,57,820 | 5,08,730 |
| 1969-70.... | 4,34,28,000 | 7,72,170 | 5,16,930 |
| 1970-71.... | 4,47,40,000 | 8,23,420 | 5,51,100 |

## சிறிய பாசனத் திட்டங்கள்

| ஆண்டு | முடிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை. | செலவு (ரூபாய்) | பயன்பெற்ற ஆயக்கட்டு (ஏக்கர்) | அதிகம் உற்பத்தியாகிய உணவு தானியங்கள். (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|---|
| 1967-68 | 766 | 3,02,26,000 | 70.960 | 41.030 |
| 1968-69 | 671 | 2,31,45,000 | 94,580 | 54,150 |
| 1969-70 | 1,016 | 2,39,82,000 | 1,28.830 | 72,370 |
| 1970-71 | 1,130 | 3,12,00,000 | 1,20,900 | 64,440 |

# நலம் பயக்கும் நற்சாதனைகள்



குடிநீர் அளித்தல், கழிவுநீர் அகற்றல் ஆகிய இவ்விரண்டும் சுகாதார வாழ்க்கையின் அடிப்படை அம்சங்கள்.

தமிழ்நாட்டில் தற்பொழுது 94 நகராட்சிகளும் 16 நகரியங்களும் உள்ளன. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பேரூராட்சிகளின் எண்ணிக்கை 202 ஆகும். 1961–ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கட் தொகைக் கணக்கின்படி இந்நகர்ப் பகுதிகளின் மொத்தமக்கட் தொகை ஏறத்தாழ 79 லட்சமாகும்.

நீர் வழங்கு—கழிவுநா அகற்று ஏற்பாடுகள் இம்மாநிலத்தில் சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே தொடங்கப்பட்டன. 1890 ஆம் ஆண்டு முதல் 1946-ஆம் ஆண்டு வரை இத்திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 300 லட்சம் மட்டுமே! 1951-ஆம் ஆண்டு இறுதியில் 36 நகராட்சிகளிலும் 5 நகரியங்களிலும் 3 பேரூராட்சிகளிலும் நீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. புதைச் சாக்கடை ஏற்பாடுகள் 3 நகராட்சிகளில் தான் இருந்தன. குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மட்டும் பயன்படும் கழிவுநீர் அகற்றுத் திட்டங்கள் 6 நகராட்சிகளிலும், 2 நகரியங்களிலும் அமுலில் இருந்தன. இந்த நீர் வழங்கு ஏற்பாட்டினாலும் புதைச் சாக்கடைத் திட்டத்தாலும் முறையே 25 லட்சம் மக்களும் 8.5 லட்சம் மக்களும் பயன் பெற்றனர்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1951-56) 2 நகராட்சிகளிலும், 3 நகரியங்களிலும், 3 பேரூராட்சிகளிலும் புதிய குடிநீர் வழங்கு திட்டங்கள் முடிக்கப்பட்டன. 2 நகராட்சிகளில் நீர் வழங்கு திட்டங்கட்கான மேம்பாட்டுத் திட்டங்கள் முடிக்கப்பட்டன. 2 நகரியங்களில் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் முடிக்கப்பட்டன. இத்திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 140 லட்சமாகும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1956-61) 11 நகராட்சிகளிலும், 1 நகரியத்திலும் 6 பேரூராட்சிகளிலும் புதிய குடிநீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 10 நகராட்சிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2 நகராட்சிகளில் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டும் பயன்படும் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 3 நகராட்சிகளில் கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்கு மேம்பாடுகள் செய்யப்பட்டன. இத்திட்டங்கட்கான மொத்தச் செலவு ரூ. 662 லட்சமாகும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1961-66) 11 நகராட்சிகளிலும், 2 நகரியங்களிலும், 6 பேரூராட்சிகளிலும் புதிய குடிநீர் வழங்கு திட்டங்கள் அலுக்கு வந்தன. 9 நகராட்சிகளில் குடிநீர் திட்டங்கட்கு மேம்பாடுகள் நிறைவேற்றப்பட்டன. கழிவுநீர் அகற்றும் திட்டம் ஒரு நகரியத்திலும் ஒரு பேரூராட்சியிலும் நிறைவேற்றப்பட்டது. ஒரு நகராட்சியில் கழிவுநீர் அகற்றும் திட்டத்திற்கு மேம்பாடு செய்யப்பட்டது. இத் திட்டங்கட்குச் செலவு செய்த தொகை ரூ. 598 லட்சமாகும்.

## நான்கு ஆண்டுச் சாதனைகள் (1967-70)

1966-ஆம் ஆண்டு இறுதியில், (அதாவது மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசியில்) குடிநீர் வழங்கு திட்டங்கள் 60 நகராட்சிகளிலும், 11 நகரியங்களிலும், 18 பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு இருந்தன. புதை சாக்கடைத் திட்டங்கள் 3 நகராட்சிகளிலும் 4 நகரியங்களிலும் 1 பேரூராட்சியிலும் அமுல் செய்யப்பட்டு இருந்தன. குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் பயன்படும் கழிவுநீர் அகற்றுத் திட்டங்கள் ஒன்பது நகராட்சிகளிலும் ஒரு நகரியத்திலும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மேலும் நகர நீர் வழங்கு திட்டங்களிலிருந்து 35 கிராமங்கட்குக் குடிநீர் வசதி செய்து

தரப்பட்டிருந்தது. நீர் வழங்கு திட்டங்களினால் 45 லட்சம் மக்களும், கழிவுநீர் அகற்றும் திட்டங்களினால் 9 லட்சம் மக்களும் பயன் அடைந்தனர்.

தண்ணீரின் அவசியத்தை நன்குணர்ந்த நம் தமிழக அரசு, பெருகி வரும் மக்கள் தொகையின் தேவையைப் பூர்த்திசெய்ய எண்ணம் கொண்டு தமிழ்நாட்டின் எல்லா ஊர்கட்கும் குறைந்த கால அளவில் குடிநீர் திட்டங்களை அமுல்படுத்தத் தீர்மானித்து இதற்கானதோர் திட்டத்தைத் தயாரிக்கத் தமிழகப் பொது சுகாதாரப் பொறியியல் துறைத் தலைமைப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டது. அதற்கிணங்க இத்துறை இச்சீரிய முயற்சியில் ஈடுபட்டது. திட்டங்கள் பல இருந்தும் நிதி பற்றாக்குறை காரணமாக இவை செயல்படுத்தப்பட முடியாத சூழ்நிலையில் இருந்தன. இப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில் பல வாயில்களை ஆராய்ந்து இறுதியில் ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் அளிக்கும் திட்டத்தினைப் பயன்படுத்திக் கொண்டது. தமிழ்நாட்டின் 22 குடிநீர் திட்டங்களுக்கும் 4 கழிவு நீர் அகற்றும் திட்டங்களுக்கும் முதல் கட்டமாக இக்கடன் உதவி பெறப்பட்டது. இந்த 26 திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ. 1,392 லட்சம் ஆகும். இத் திட்டங்களுக்குப் பிரதி வருடமும் ஒதுக்கப்படும் மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கை ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடனாக வழங்கும். மீதி ஒரு பங்கைத் தமிழக அரசே ஏற்றுத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கும்.

இந்தக் கடனுதவித் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக மேலும் 52 திட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் 49 குடிநீர் திட்டங்களும் 3 கழிவுநீர் அகற்றும் திட்டங்களும் ஆகும். இந்த 52 திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ. 1,664 லட்சம் ஆகும்.

மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்ற இந்த நடைமுறை ஆண்டில் மொத்தம் ரூ. 683 லட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த நிதியாண்டில் ரூ. 1,053 லட்சம் செலவிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஓர் ஆண்டுக் காலத்தில் மட்டும் செலவிடப்படும் தொகை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகையைக் காட்டிலும் மிக அதிகம் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

1969-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு மகத்தான சாதனையையும் இங்கு கூறுவது மிகையாகாது. அந்த ஆண்டில் பருவமழை பொய்த்ததின் காரணமாகத் தமிழகமெங்கும் வறட்சி நிலை ஏற்பட்டது. மக்கள் குடிநீருக்காக அல்லலுற்றனர். பழைய கிணறுகளை ஆழப்படுத்தியும், புதிய கிணறுகளைத் தோண்டியும் குழாய்க் கிணறுகள் அமைத்தும் வறட்சி நிலையினைப் போக்க அவசரகாலப் பணிகளை மேற்கொண்டது நம் தமிழக அரசு. இதன்படி, தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கு திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகைக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கிற்று. இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே அமுலில் இருக்கும் நகர நீர் வழங்கு திட்டங்களிலிருந்து வழிப்பக்க கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்துதரப்பட்டது.

மேற்கூறிய திட்டங்களை மேற்கொண்டதனால் வேலைச்சுமை அதிகரித்தது. அதற்காகத் தேவையான பொறியாளர்களையும் மற்ற அலுவலர்களையும் அரசு நியமித்தது. இதன் காரணமாக வேலை வாய்ப்பு நிலைமையும் பூர்த்தி செய்யப்பட்டது.

தமிழக அரசு ''தமிழ்நாடு குடிநீர் வழங்கு, கழிவுநீர் அகற்றும் வாரியம்'' ஒன்றினையும் உருவாக்கியுள்ளது. இந்த வாரியம் பொது சுகாதாரப் பொறியியல் துறைப் பணிகளை இன்னும் விரைவாக செயல்படுத்த ஆவன செய்யும்.

சென்னை நகருக்குக் காவிரி குடிநீர் திட்டம், கோவைக்கு சிறுவாணித் திட்டம், சேலம் உருக்காலைக்கு நீர் விநியோகத் திட்டம், தூத்துக்குடித் தொழில் நிறுவனங்கட்கு நீர் வழங்கு திட்டம் முதலியன தமிழக அரசினரால் எடுத்துக் கொள்ளப்பட்ட சீரிய சாதனைகளில் சில.

எல்லாத் திட்டங்களும் திறம்பட மேற்கொண்டு செவ்வனே முடிக்கப் பெற்று மக்கள் யாவரும் பயன் பெற்று வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்து விளங்குவர் என்பதில் ஐயமில்லை.



நாட்டின் செல்வங்களான இளைஞர் சமுதாயம் உயர்கல்வி பெற்று மேன்மக்களாகத் திகழ இந்த அரசு அரும்பாடு பட்டு வருகிறது.

1967-ல் மட்டும் தமிழகத்தில் துவக்கப்பட்ட புதிய கல்லூரிகளின் எண்ணிக்கை **பதினொன்று.**

இவற்றில், **அரசுக் கல்லூரிகள் இரண்டு**

(1) அரசினர் கலைக்கல்லூரி, செய்யாறு.
(2) அரசினர் கலைக் கல்லூரி, மாயூரம்.
செய்யாறு கல்லூரி ஆண்களுக்கும், மாயூரம் கல்லூரி மகளிர்க்குமானது.

**தனியார் கல்லூரிகள் — ஒன்பது.**

1. கந்தசாமி நாயுடு கல்லூரி—சென்னை
2. கந்தசாமி நாயுடு கல்லூரி—கடலூர் (பெண்களுக்காக)
3. பச்சையப்பன் கல்லூரி—காஞ்சிபுரம் (பெண்களுக்காக)
4. ஸ்ரீ வாசவி கல்லூரி—ஈரோடு
5. நேரு நினைவுக் கல்லூரி, புத்தனம்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
6. சௌராஷ்டிரா கல்லூரி, மதுரை.
7. செட்டிநாடு கரையாளர் கல்லூரி, செங்கோட்டை.
8. நாசரெத் மார்கோசிஸ் கல்லூரி, பிள்ளையான்மனை, நாசரேத்.
9. குமாரசாமி கல்லூரி, நாகர்கோயில்.

* * *

1967-68ல் மொத்தம் 11 புதிய கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன.
1966-67 வரை உள்ள கல்லூரிகள் — 105.
1967-68ல் கல்லூரிகளின் எண்ணிக்கை — 116.
1967-68ல் தனியார் துறையில் காந்தி கிராமத்தில் ஒரு பயிற்சிக் கல்லூரி துவக்கப்பட்டது.

**1968ல்**

புதிய கல்லூரிகள் — பத்து.
(அரசுக் கல்லூரிகள் — நான்கு, தனியார் கல்லூரிகள் ஆறு)

**அரசுக் கல்லூரிகள்**

(1) அரசினர் கலைக் கல்லூரி, நாமக்கல்
(2) திருவள்ளுவர் அரசினர் கலைக்கல்லூரி, இராசிபுரம்
(3) அரசினர் கலைக் கல்லூரி, விழுப்புரம்
(4) அரசினர் கலைக் கல்லூரி, வாலாஜாபாத், வடார்க்காடு மாவட்டம். (மகளிர்).

**தனியார் துறைக் கல்லூரிகள்**

1. என்.எஸ்.எஸ். வக்ஃபோர்டு கல்லூரி — மதுரை.
2. பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரி — உசிலம்பட்டி.
3. இராசரத்தினம் கல்லூரி, சிவகாசி (மகளிர்).
4. மடத்துப்பட்டி கோபால் நாயக்கர் கல்லூரி — சங்கரன் கோயில்.



# கல்வி வளர்த்தோம்

5. ஸ்ரீ தேவி கே.என்.பி. வைஷ்ணவக் கல்லூரி, குரோம்பேட்டை, (மகளிர்).
6. கோபி கலைக் கல்லூரி, கோபிச் செட்டிப்பாளையம்.

* * *

1968-69ல் பத்து புதுக் கல்லூரிகள் துவக்கப்பட்டன.
1967-68ல் கல்லூரிகளின் எண்ணிக்கை — 116.
1968-69ல் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை — 126.
1968-69ல் மூன்று பயிற்சிக் கல்லூரிகள் தனியார் துறையில் ஏற்படுத்தப்பட்டன :—

(1) திரு அவினாசிலிங்கம் செட்டியார் மகளிர் பயிற்சிக் கல்லூரி, கோயமுத்தூர்.

(2) ஸ்ரீ சாரதா மகளிர் பயிற்சிக் கல்லூரி, சேலம்.

(3) ஜஸ்டின்ஸ் மகளிர் பயிற்சிக் கல்லூரி, மதுரை.

1968-69ல் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை — 23.

அரசுக் கல்லூரிகள் — 7
தனியார் கல்லூரிகள் — 16

* * *

1969-70ல் ஆறு புதுக் கல்லூரிகள் துவக்கப்பட்டன.

## அரசுக் கல்லூரிகள்

(1) அரசினர் கலைக்கல்லூரி, நந்தனம், சென்னை

(2) திரு ஏ. கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரி, திண்டிவனம்.

(3) கே. கே. அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை.

(4) அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி, முசிறி.

(5) அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, நாமக்கல்.

(6) அரசினர் கலைக் கல்லூரி, வேலூர்.

## தனியார் கல்லூரிகள்

1. அம்பை கலைக்கல்லூரி, அம்பாசமுத்திரம்.
2. யாதவர் கல்லூரி, மதுரை
3. ஆர்.பி.சி.சி. கல்லூரி, தண்டரை, பட்டாபிராம்.
4. இந்து தேசியக் கல்லூரி, சிறுகளத்தூர், சென்னை—56.
5. மொரல்ட் ஹெயிட் மகளிர் கல்லூரி, ஆனந்தகிரி, உதகமண்டலம்.
6. மாசூலம் கலைக் கல்லூரி, ஆம்பூர்.
7. ஸ்ரீ அய்யப்பா கல்லூரி, ஆலூர், கன்யாகுமரி மாவட்டம்.
8. பூம்புகார் கலைக் கல்லூரி, மேலையூர்.
9. வள்ளுவர் கலைக் கல்லூரி, பொதிகையாடி, திருநெல்வேலி மாவட்டம்.

1969-70ல் மொத்தக் கல்லூரிகளின் எண்ணிக்கை 126லிருந்து 141 ஆக உயர்ந்துள்ளது.

1970-71ல் நான்கு அரசினர் கலைக் கல்லூரிகளும், தனியார் துறையில் 15 கல்லூரிகளும் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன.

கல்லூரிகளின் எண்ணிக்கை 1967லிருந்து இன்றுவரை 105 லிருந்து 161 வரை உயர்ந்துள்ளது. இந்த நான்காண்டுகளில் மட்டும் 56 புதிய கல்லூரிகள், துவங்கப்பட்டுள்ளன. இத்தனை ஆண்டுகளாக, 1967 வரை நீண்ட நெடுங்காலமாக இந்த மாநிலத்தில் இயங்கி வந்த கல்லூரிகள் 105 தான். இந்த நான்காண்டுகளில் மட்டும் அதற்குமேல் 56 கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. அறிவு வளர்க்கும் திருப்பணியில் தமிழகம், கடந்த நான்காண்டுகளாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது! இது மகத்தான சாதனை! மாணவர்களின் நல்வாழ்விலே, படிப்பு வசதி பெருகிடத் தமிழக அரசு எத்துணை அக்கறை கொண்டுள்ளது, என்பதைப் புள்ளி விவரங்கள் வெள்ளிடை மலைபோல் விளக்குகின்றன.

இக்கலைக் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? மொத்தம் 1,65,856 பேர் இக்கல்லூரிகளில் படிக்கின்றனர்.

இவற்றில் ஆண்கள் — 1,24,243
பெண்கள் — 41,603

* * *

பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை — 23.
படிக்கும் மாணவர்கள் — 2882

* * *

மூன்று கல்லூரிகள் பட்டப்படிப்புக் கல்லூரிகளாக உயர்த்தப்பட்டுள்ளன :

மூன்று கல்லூரிகள் பட்டப்படிப்புக் கல்லூரிகளாக உயர்த்தப்பட்டுள்ளன :

(1) அரசினர் கலைக் கல்லூரி, திண்டிவனம்.

(2) அரசினர் கலைக் கல்லூரி, முசிறி.

(3) அரசினர் கலைக் கல்லூரி— விருத்தாசலம்.

அலுவலகங்களில் பணிபுரிவோர், மேற்படிப்புப் படிக்க வாய்ப்பளிக்கும் மாலை நேரக் கல்லூரித் திட்டம், நாடு போற்றும் நல்ல திட்டமாகும். உழைக்கும் சமுதாயத்தை உயர்த்தும் நற்பணியில் அரசு முன் நிற்கிறது.

தமிழகத்தில் இயங்கி வருகின்ற மாலை நேரக் கல்லூரிகளின் எண்ணிக்கை — 20.

* * *

கல்லூரிகளின் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி எல்லோருக்கும் அளிக்கப்பட்டுள்ளது இந்த அரசினால். இது ஏழை, எளிய மக்களின் அரசு . . . . கல்வி மறுமலர்ச்சியில் இந்த நாட்டிலேயே தமிழக அரசு தலை நிமிர்ந்து நிற்கிறது.



**ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். அதுபோலச் சட்ட மன்றத்தில் நமது அரசு சாதித்துள்ள சாதனைகளில் ஒரு சில மட்டும் இங்கே இடம்பெறுகின்றன.**

தமிழ்மக்களின் நலனைப் பாதுகாக்கும் வகையிலும் அவர்களின் நீண்டகால விருப்பத்தை நிறைவேற்றும் முறையிலும் கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் தமிழ்நாடு சட்டமன்றம் வரலாற்றில் நிலைக்கும் தீர்மானங்களையும் மசோதாக்களையும் நிறைவேற்றியுள்ளது.

மறைந்த முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள், 1967, ஜூலை, 18-ஆம் நாள் சட்டமன்றத்தில், 'இம்மாநிலத்தின் பெயர், தமிழ்நாடு' என்று மாற்றப்பட வேண்டுமென்னும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

இதையடுத்து, மத்திய அரசு நாடாளுமன்றத்தில் இதையொட்டிய மசோதாவைக் கொண்டு வந்த பின்னர், இத்தீர்மானம் செயற்படுத்தப்பட்டது. தமிழர்களின் உள்ளம், நீண்டகாலக் கனவு நனவாகிய மகிழ்ச்சியில் பெருமிதம் அடைந்தது.

* * *

இந்தித் திணிப்பைத் தமிழ் மாணவர்களும் தமிழர்களும் நீண்ட காலமாக எதிர்த்து வந்துள்ளனர். 1967-ஆம் ஆண்டு நாடாளுமன்றம் நிறைவேற்றிய ஆட்சிமொழிச் (திருத்தச்) சட்டத்தின் காரணமாகத் தமிழகத்தில் பெரும் கிளர்ச்சி மூண்டது. இந்த நிலையைச் சீராக்கித் தமிழர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், 1968, ஜனவரி, 23-ஆம் நாள், கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இருமொழித் தீர்மானம் கொண்டுவந்தார்.

''பல மொழிகளும் பண்பாடும் நாகரிகமும் கொண்ட இந்த நாட்டில் வட்டார மொழிகளில் ஒன்றான இந்தியை மட்டும் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்குவதன் மூலம் இந்நாட்டின் ஒற்றுமையும் நல்லெண்ணமும் பாதிக்கப்படும். ஒரு மொழி பேசும் ஒரு வட்டாரம், மற்ற மொழிகள் பேசும் வட்டாரங்களை ஆதிக்கம் செய்யும் நிலையும் இதனால் உருவாகின்றது.''

''தமிழும் மற்ற தேசீய மொழிகளும் இந்நாட்டின் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்படும்வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.''

என்று மத்திய அரசை வலியுறுத்தி இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

''1967-ஆம் ஆண்டு ஆட்சிமொழித் (திருத்தச்) சட்டத்துடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அநீதியையும் பாதகத்தையும் அதிகப்படி சுமையையும் இந்தி பேசாத மக்களுக்கு உண்டாக்குகிறது. இச்சட்டம் செயலாக்கப்படக்கூடாது''. என்று சட்டமன்றத்தில் வலியுறுத்தப்பட்டது.

மூன்று மொழித் திட்டத்தைத் திணிப்பது, இந்தித் திணிப்பிற்கே வழிவகுக்கும் என்றும், இறுதியில் இந்தியை மட்டுமே ஆட்சிமொழியாக்குவதற்குத் திட்டமிடப்பட்ட செயலாகுமெனவும் சட்டமன்றம் கருத்தறிவித்து மும்மொழித் திட்டத்தை நீக்கித் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

தமிழும் ஆங்கிலமும் மட்டுமே கற்பிக்கப்படும் நிலையை உருவாக்கியது. தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் இந்தி அகற்றப்பட்டது. தேசீய மாணவர் படையில் இந்திக் கட்டளைச் சொற்கள் பயன்படுத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட்டது.

மத்திய அரசு, இந்திக் கட்டளைச் சொற்களை நீக்க மறுத்தால் தேசீய மாணவர் படையே கலைக்கப்படுமென்றும் வலியுறுத்தப்பட்டது.

ஐந்தாண்டுக் காலத்திற்குள் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்றுமொழியாக்கவும் மாநில அரசின் எல்லாத் துறைகளிலும் தமிழை ஆட்சிமொழி ஆக்கவும் விரைந்த நடவடிக்கை எடுக்கவும் சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது.

# சட்ட மன்றச் சாதனைகள் சில....!



அரசியலமைப்பில் இந்திக்கு அளிக்கப்பட்டுள்ள தனித் தகுதி நீக்கப்பட வேண்டுமென்றும் சட்டமன்றம் வலியுறுத்தி, தேசிய மொழிகள் அனைத்திற்கும் சமமான தகுதி அளிக்கப்படும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது.

அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும் மத்திய அரசு உதவவேண்டுமென்றும் அத்தீர்மானம் கேட்டுக் கொண்டது.

• • •

தமிழகத்தில் எதிர்பாராத முறையில் மழை பொய்த்தது. வறட்சி கண்டு, குடிநீருக்கும் அல்லற்படும் நிலையேற்பட்டது. இந்த வறட்சி நிலையைச் சமாளித்து மக்களுக்குத் துணைசெய்ய, 1969, மார்ச், 31-ஆம் நாளன்று தமிழ்நாடு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், மத்திய அரசிடமிருந்து வறட்சி நிவாரணம் கோரும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

''1968ல் பருவமழை தவறியதால் தமிழ் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் பெரிதும் இடர்ப்பட்டு வருகின்றனர். வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தமிழ்நாடு அரசு உதவியளிக்க விரைந்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உடனடியாக மத்திய அரசு உதவி செய்ததற்கு இம்மன்றம் நன்றியறிதலைத் தெரிவிக்கிறது. இம்மாநில அரசு கோரிய வறட்சி உதவித் தொகையை உடனடியாக அளிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்துமாறும் இம்மன்றம் பரிந்துரைக்கிறது.''

இத்தீர்மானத்தின் விளைவாகத் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசிடமிருந்து ரூ 14 கோடிக்கு மேல் உதவி கிடைத்தது. பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

• • •

சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் சொத்து விவரங்களை அறிவிக்கக் கோரும் தீர்மானமும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். 1969, ஆகஸ்டு, 27-ஆம் நாள் முதல்வர் அவர்கள் இத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

தமிழர்கள் நீண்ட காலமாகக் கோரி வந்த சீர்திருத்தத் திருமணம் சட்டப்படி செயல்திறனாக்கப்பட, 1967-ஆம் ஆண்டு இந்துத் திருமணங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் நிறைவேற்றப்பட்டது.

17-7-1967ல் இம் மசோதா கொண்டு வரப்பட்டு 28-11-1967ல் நிறைவேற்றப்பட்டது.

• • •

வேளாண்மைக் காரியங்களுக்குக் கடன் பெறுவதில் உழவர்கள் பெருந்தொல்லைகளுக்கு ஆட்பட்டு வந்தனர். காலதாமதமும் பெரும் செலவும் அவர்களுக்கு ஏற்பட்டு வந்ததைத் தவிர்க்கும் பொருட்டு, 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்தச்) சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனால் வங்கிகள், வட்டார அளவில் கூட்டுறவு முறையில் விரைந்து கடன் வழங்க ஏதுவாக அமைந்தது.

நெசவாலைகள் திடீரென மூடப்பட்டுத் தொழிலாளர்கள் வேலையின்றி அவதியுற்றனர். இந்நிலையைப் போக்கி, மூடப்பட்ட ஆலைகளை அரசே மேற்கொண்டு நடத்த அதிகாரம் பெறும் வகையில், 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு நிதித்துறைகள்) சட்டம் 26-8-69ல் நிறைவேற்றப்பட்டது.

• • *

இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தாயகத்திற்கு அனுப்பப்படும் தமிழர்களின் மறுவாழ்வுக்காக, 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு அகதிகள் (சட்ட நடவடிக்கைத் தடுப்புச்) சட்டம் 27-8-69ல் நிறைவேற்றப்பட்டது.

• • •

விவசாயத் தொழிலாளர்கள் அதிகக் கூலி கேட்டு ஒத்துழையாத தொல்லை இருந்து வந்தது. நில உடைமையாளர்களுக்கும் விவசாயத் தொழிலாளருக்கும் ஓர் இணக்கமான உறவை ஏற்படுத்த அரசு முனைந்தது. இதன் விளைவாக, 1969-ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டம் 13-9-1969ல் நிறைவேற்றப்பட்டது.

கிழக்குத் தஞ்சாவூரில் ஏற்பட்ட பெரும் கலவரம் இதனால் தணிக்கப்பட்டு, சாகுபடிப் பருவத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஒரு சீரான கூலி வீதம் நிர்ணயிக்கப்பட்டது.

• • •

தொழிலாளர் நலம் காக்கவும் அவர்களின் நீண்டநாள் விருப்பை நிறைவேற்றவும் மே நாளை விடுமுறை நாளாக அறிவிக்க, 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. மே நாள் — கட்டாய விடுமுறை நாளாக இதன் மூலம் அறிவிக்கப்பட்டது.

• • •

1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் 5-வது பிரிவின்படி, ஒருவர் சம்பந்தமாகவும் 5 பேருக்கு மேற்படாத ஒவ்வொரு குடும்பம் சம்பந்தமாகவும் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் உடைமையாக வைத்து வரப்படலாம் என்றிருந்தது. வேளாண்மைச் சீர்திருத்தத்தின் மற்றொருபடியாக, 30 ஸ்டாண்டர்டு ஏக்கரை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைத்து, 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பைக் குறைத்தல்) சட்டம் 9-4-1970ல் நிறைவேற்றப்பட்டது.

• • •

நீர் வழங்கல், வடிகால் வசதிகளுக்குத் தமிழ்நாட்டில் பெரும் முக்கியத்துவம் அளித்துத் திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வந்தது. மாநிலம் முழுவதிலும் இத்திட்டங்களைச் செயற்படுத்த, 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர் வழங்கல், நீர்வடிகால் வாரியச் சட்டம் சட்டமன்றத்தில் 2-12-1970ல் நிறைவேற்றப்பட்டது.




## இந்த ஆண்டில் செயல்படுத்திய திட்டங்கள்.



| திட்டத்தின் பெயர். | திட்டத்தின் மதிப்பு. |
|---|---|
| 1. பரப்பலாறு திட்டம்....... | ரூ 42·70 லட்சம். |
| 2. சின்னறு திட்டம்...... | ரூ 118·00 லட்சம். |
| 3. பாலாறு-புரந்தலாறுதிட்டம்... | ரூ 281·60 லட்சம். |
| 4. பொன்னனியாறு திட்டம்... | ரூ 50·75 லட்சம். |
| 5. தண்டரை அணைக்கட்டுத்திட்டம்... | ரூ 51·81 லட்சம். |
| 6. நந்தன்கால்வாய்புதுப்பித்தும் திட்டம். | ரூ 48·00 லட்சம். |
| 7. கறுப்பநதித் திட்டம்........ | ரூ 154·00 லட்சம். |
| 8. பிளவுக்கால் நீர்த்தேக்கத் திட்டம். ..... | ரூ 83·00 லட்சம். |

### மைய அரசு அனுமதிக்காக எதிர்நோக்கியுள்ள திட்டங்கள்.

கொல்லிமலை அருகே ஐயாறு திட்டம் ரூ 255 லட்சம் செலவில்

மருதநதித் திட்டம் ரூ 99 லட்சம் செலவில்

தொட்ட ஹள்ளி நீர்த்தேக்கத் திட்டம் ரூ 91.88 லட்சம் செலவில்

பெரியாறு கால்வாயை மேம்படுத்தும் திட்டம் ரூ 425 லட்சம்

தஞ்சை மாவட்டத்தில் காவிரிப்பாசன வாய்க்கால்களை நவீனமாக்கும் திட்டம்... ரூ- 4,900 லட்சம் செலவில்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்." மக்களின் பசிப்பிணியைத் தீர்த்து, இன்று தமிழகம் உணவுத்துறையில் தன்னிறைவு பெற்றுத் திகழ்கிறது. அமைதியானதொரு பசுமைப் புரட்சி இன்று தமிழகத்தில் நடந்தேறிவிட்டது. மக்களின் பசிப்பிணி அகற்றினால் போதுமா? அவர்களுக்குக் கல்வி அளிக்க வேண்டாமா? அவர்கள் நோய் நொடியின்றி நல்வாழ்வு வாழ வேண்டாமா? கல்வித்துறையில் இன்று தமிழகம் ஏறு நடை போடுகிறது. வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காகப் பெரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டு (1970-71-ல் மட்டும் கல்விக்காக ரூ. 66.83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.) அறிவு வளர்ச்சிப் பணிகள் அசுர வேகத்தில் நடைபெற்று வருகின்றன. ஏழை, எளிய மக்களின் அரசு, மக்கள் நோய் நொடியின்றி நல்வாழ்வு வாழ்வதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகிறது.

* * *

1966-ல் மருத்துவ நலனுக்காகச் செலவிடப்பட்ட தொகை 16 கோடி ரூபாய். இன்று அதை 25 கோடியாகத் தமிழக அரசு உயர்த்தியுள்ளது.

* * *

மாவட்ட மருத்துவ மனைகளின் வளர்ச்சிக்காக 1969-70ல் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ 5.91 இலட்சமும் 1970-71-ல் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. 17.66 இலட்சமும் ஒதுக்கப்பட்டது.

* * *

மாவட்டங்களில் மாவட்ட மருத்துவமனைகள் தான் சுகாதாரப் பணிகளின் மையம். அம் மாவட்ட மருத்துவமனைகளுக்கு மேலும் கூடுதலான வசதிகள் பல இந்த அரசினால் செய்யப்பட்டுள்ளன.

**1967-68-ல்**

மாவட்ட மருத்துவமனைகளில் 1967-68-ல் செய்யப்பட்டுள்ள கூடுதல் வசதிகள் :—

1. திருச்சிராப்பள்ளி அரசுத் தலைமை மருத்துவமனையில் 56 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டு அமைக்கப்பட்டது.

2. வேலூர் அரசுத் தலைமை மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டரில் குளிர் சாதனம் பொருத்தப்பட்டது.

3. சேலம் அரசுத் தலைமை மருத்துவமனையில் ஆபரேஷன் செய்தபிறகு கவனிக்க வேண்டிய வார்டு ஒன்று 60 படுக்கைகளுடன் அமைக்கப்பட்டது.

4. கோயம்புத்தூர் அரசுத் தலைமை மருத்துவமனையில் 60 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டு அமைக்கப்பட்டது.

**1968-69-ல்**

காஞ்சிபுரம், கடலூர், தர்மபுரி, உதகையில் உள்ள அரசுத் தலைமை மருத்துவமனைகளில் எக்ஸ்-ரே பிரிவுகள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

**1969-70-ல்**

1. சேலம் அரசுத் தலைமை மருத்துவமனையில் விசையினால் துணிகளைச் சுத்தப்படுத்தும் பிரிவு அமைக்கப்பட்டது.

2. தூத்துக்குடி அரசுத் தலைமை மருத்துவமனையில் தொத்து நோய் வார்டு (ஆறு படுக்கைகள் கொண்டது) ஏற்படுத்தப்பட்டது.

3. காஞ்சிபுரம் அரசுத் தலைமை மருத்துவமனையில் 24 மணி நேரமும் நோயாளிகளைக் கவனிக்கும் வார்டு அமைக்கப்பட்டது.

4. திருச்சிராப்பள்ளி அரசுத் தலைமை மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டரில் குளிர் சாதன வசதி அளிக்கப்பட்டது.

5 சேலம் அரசுத் தலைமை மருத்துவமனையில் 'டீசல் ஜெனரேட்டர்' அமைக்கப்பட்டது.

6. தூத்துக்குடி அரசுத் தலைமை மருத்துவமனையில் எக்ஸ்-ரே பிரிவு அமைக்கப்பட்டது.

**வட்ட மருத்துவமனைகள்**

வட்ட மருத்துவமனைகள் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதில் பெரும்பணி ஆற்றுகின்றன. அம் மருத்துவமனைகளுக்குப் போதிய மருத்துவக் கருவிகள் வழங்குதல், கூடுதலாக அலுவலர்களை நியமித்தல், படுக்கைகளை அதிகரித்தல் போன்ற வசதிகள் கடந்த நான்காண்டுகளில் மிகவும் பெருவாரியான அளவில் அளிக்கப்பட்டுள்ளன.



## வட்ட மருத்துவமனைகளுக்குக் கூடுதல் வசதிகள்

| | 1969-70 | 70-71 (30-9-70 வரை) |
|---|---|---|
| படுக்கைகளை அதிகரித்தல் | 20 | 86 |
| எக்ஸ்ரே பிரிவுகள் | 3 | — |

கடந்த நான்காண்டுகளில் வட்ட மருத்துவமனைகளுக்குப் புதிய வார்டுகள் ஏற்படுத்துதல், கூடுதலாகக் கட்டடங்கள் கட்டுதல், ஆபரேஷன் தியேட்டர்கள் அமைத்தல், குருதி சேமிப்பு நிலையங்களை ஏற்படுத்துதல், மற்றும் பல வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இதற்காக வேண்டிப் பெரும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது :—

1968-69-ல் திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகை —ரூ. 28.64 இலட்சம்.
1969-70-ல் திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகை— ரூ. 37.36 இலட்சம்.

மூன்றாவது திட்டக்கால முடிவில் தமிழகத்தில் 188 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருந்தன. 1967-68-ல் 39-ம், 1968-69-ல் 45-ம் ஏற்படுத்தப்பட்டன. டிசம்பர் 69 வரை 24 புதிதாக ஏற்படுத்தப்பட்டன. 1970-71-ல் வரையறுக்கப்பட்ட இலக்கு 33 ஆகும்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்காக நிதி ஒதுக்கீடு வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1968-69-ல் செலவிடப்பட்டது | ரூ 30.04 | லட்சம் |
| 1969-70-ல் திருத்திய மதிப்பீடு | ரூ 12.27 | ,, |
| 1970-71-ல் திருத்திய மதிப்பீடு | ரூ 28.18 | ,, |

## குருதி சேமிப்பு நிலையங்கள்

எல்லா மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் சில பெரிய, வட்ட மருத்துவமனைகளிலும் குருதி சேமிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## நடமாடும் மருத்துவப் பிரிவுகள்

மாவட்டங்கள் வாரியாக உள்ள நடமாடும் மருத்துவப் பிரிவுகள் :—

| மாவட்டம் | நடமாடும் மருத்துவப் பிரிவுகள் |
|---|---|
| தர்மபுரி | 1 |
| செங்கற்பட்டு | 1 |
| வடஆர்க்காடு | 1 |
| மதுரை | 1 |
| இராமநாதபுரம் | 1 |
| திருநெல்வேலி | 1 |
| நீலகிரி | 2 |
| கோயம்புத்தூர் | 1 |
| திருச்சிராப்பள்ளி | 1 |
| மொத்தம் | 10 பிரிவுகள் |

## தொழுநோய்த் தடுப்புத் திட்டம்

30-9-70 வரை தொழுநோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் மருத்துவ வசதி அளிக்கப்பட்டவர்கள்:

| | |
|---|---|
| 1) அரசுப் பிரிவுகளின் மூலம் | 73,00,000 |
| 2) சமூகப் பணி நிலையங்கள் மூலம் | 27,09,572 |
| 3) சர்வதேச நிலையங்களின் மூலம் | 6,85,562 |
| மொத்தம் | 1,06,95,134 |

## காசநோய்த் தடுப்பு (30-6-70 வரை)

தமிழ் நாட்டில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 7 இலட்சம்.

மாவட்ட காசநோய்த் தடுப்புத் திட்டத்தின் மூலம் மருத்துவ வசதி அளிக்கப் பெற்றவர்கள் 3,60,113.

## பி. சி. ஜி. ஊசி குத்துதல்: (30-6-70 வரை)

| | |
|---|---|
| பரிசோதனை செய்யப்பட்ட நேர்வுகள் | 1,00,90,535 |
| ஊசி குத்தப்பட்டோர் எண்ணிக்கை | 30,91,806 |

## புற்றுநோய்த் தடுப்பு

புற்றுநோய்த் தடுப்பில் தமிழக அரசு மிகுந்த அக்கறையுடன் திட்டங்கள் தீட்டிச் செயலாற்றி வருகிறது :—

தமிழகத்தில் பெரிய மருத்துவமனைகளில் புற்றுநோய்த் தடுப்புப் பிரிவுகள் உள்ளன.

காஞ்சிபுரத்தில் புற்றுநோய்த் தடுப்பு மருத்துவமனை ஒன்று புதிதாகக் கட்டப்பட்டு வருகிறது. இதற்கான கால்கோள் விழா 21-3-69-ல் நடைபெற்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய்த் தடுப்பு மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது.

## தொழிலாளர் ஆயுள்காப்பீட்டு மருத்துவமனைகள்

இத்திட்டம் (இ. எஸ். ஐ.) 1955ல் துவங்கப்பட்டது.

20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஆயுள் காப்பீடு செய்து கொண்ட, மாத வருமானம் 500 ரூபாய்க்கு மேற்படாத தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறலாம்.

தர்மபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, தற்பொழுது 35 பெரிய தொழில் நிறுவனங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

செயல்படுத்தப்படுகிற பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள், அவர்கள் குடும்பத்தினர் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர்.

கோவை நகருக்கும், அதன் சுற்றுப்புறப்பகுதிகளுக்கும் இத்திட்டம் 13-4-69-ல் விரிவுபடுத்தப் பட்டது.

ஆரணிப் பகுதிக்கு 27-4-69-லும் மதுரை நகர், சுற்றுப்புறப் பகுதிகளுக்கு 3-6-69-லும் விக்கிரமசிங்கபுரம், தூத்துக்குடிப் பகுதிகளுக்கு 1970-லும் விருதுநகர் பகுதிகளில் 26-9-70-லும் நெல்லிக்குப்பம் பகுதிகளில் 31-10-70-லும் வடலூர்ப் பகுதிகளில் 31-10-70-லும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது.

1971-72-ல் இத்திட்டம் தமிழ்நாட்டில் மேலும் பல பகுதிகளுக்கு விரிவாக்கப்படும்.

1970-71-ல் இதற்காகச் செலவிட அனுமதி வழங்கப்பட்ட திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகை: ரூ. 294 இலட்சம்.

1968-69-ல் 200 படுக்கைகள் கொண்ட இந்திய மருத்துவமனை ஒன்று சென்னை அரும்பாக்கத்தில் ''அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை'' என்ற பெயரில் கட்டத் தீர்மானிக்கப்பட்டு, எட்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் 17-9-70-ல் துவக்கி வைக்கப்பட்டது. 100 படுக்கை வசதிகள் இம்மருத்துவமனையில் உள்ளன. மேலும் 60 படுக்கை வசதிகள் தர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அரசு ஊழியர்கள் மருத்துவச் சான்றிதழ் அடிக்கடி பெறவேண்டிய அவலநிலை நீக்கப்பட்டு, நோயுற்றபோது சலுகைகள் பெற, ''மருத்துவச் சான்று அட்டை'' வழங்கப்பட்டதும் இந்த ஆட்சியில்தான்!

---

1. உழவர்களுக்குத் தேவையான தரமான விதைகளை அளித்திட விதைச் சட்டம் கொண்டுவரப்பட்டு, விதைச் சான்று வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2. வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள நவ்லாக் மாநில விதைப் பண்ணையில் சிறுதானிய விதை பக்குவப்படுத்தும் நிலையம் துவக்கப்பட்டது.

3. குடுமியான் மலைக்காடுகளில் 1017 ஏக்கர் பரப்புள்ள காடுகளைத் திருத்தி அரசு பண்ணையை அமைத்து 'அண்ணா பண்ணை' எனப்பெயரிட்டு இலாபகரமாக நடத்தி வருகிறது. சென்ற ஆண்டில் ரூ 51,221 லாபம் கிடைத்துள்ளது.

4. அண்ணா பண்ணையில் மற்றுமொரு சிறுதானிய விதை பக்குவப்படுத்தும் நிலையம் அமைக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

5. தஞ்சை மாவட்டம் சாக்கோட்டை விதைப் பண்ணையில் நெல் விதை பக்குவப்படுத்தும் நிலையம் இவ்வாண்டில் துவக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

6. மதுரையில் மற்றுமொரு விதைப் பரிசோதனை நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

7. பயிர்ப்பாதுகாப்பு மருந்துகளின் தரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மதுரையில் ஒன்றும், காஞ்சிபுரத்தில் ஒன்றுமாக 2 புதிய பூச்சிகொல்லி மருந்து ஆய்வகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

8. கோவை வேளாண்மைக் கல்லூரியில் வானவெளி மருந்து தெளிப்பது பற்றிய பள்ளிக்கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

9. புதிதாக 4 மண் பரிசோதனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

10. நவீன சாகுபடி முறைகளில் உழவர்களுக்குப் பயிற்சி அளிக்க 4 உழவர் பயிற்சி நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவைகளில் இதுவரை 66,052 உழவர்கள் பயிற்சி பெற்றனர்.

11. 1967-68 ஆம் ஆண்டில் 5 புதிய ரகங்களையும், 1968-69 ஆம் ஆண்டில் 12 புதிய ரகங்களையும், 1969-70 ஆம் ஆண்டில் 14 புதிய ரகங்களையும், 1970-71 ஆம் ஆண்டில் (நவம்பர் வரை ) 10 புதிய ரகங்களையும் வேளாண்மைத்துறையின் ஆராய்ச்சிப் பகுதி கண்டு பிடித்து வெளியிட்டுள்ளன.

12. 1966-67ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட கரும்பு 68.97 லட்சம் டன்தான். ஆனால் 1967-68 ஆம் ஆண்டில் 75.59 லட்சம் டன்னும், 1968-69ஆம் ஆண்டில் 89.60 லட்சம் டன்னும், 1969-70 ஆம் ஆண்டில் 91.10 லட்சம் டன்னும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1970-71-ஆம் ஆண்டில் 94.60 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

13. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்க முனைப்புத் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டன. இந்த ஆண்டில் 11.25 லட்சம் டன் நிலக்கடலை உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

14. நிலக்கடலை ஏற்றுமதியை ஊக்குவிக்கும் திட்டம் 1967-68ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

15. பருத்தியில் எம்.சி.யு. 4, எம்.சி.யு. 5, எம்.சி.யு. 6 ஆகிய புதிய ரகங்களை உருவாக்கி வெளியிட்டதுடன், பருத்தி உற்பத்தித் திறனை உயர்த்த முனைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. முனைப்புத் திட்டம் செயல்படும் பகுதிகளில் 80 முதல் 100 சதவீதம் அதிக அளவு உற்பத்தி கிடைத்துள்ளது. இதன் காரணமாக இந்த ஆண்டின் பருத்தி உற்பத்தி 4.9 லட்சம் பேல்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

16. பருப்பு உற்பத்தியைப் பெருக்க இந்த ஆண்டில் 5.35 லட்சம் ஏக்கரில் பருப்பு வகைப் பயிர்களைச் சாகுபடி செய்ய ரூ. 24.98 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

17. தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டம் 1967-68-ஆம் ஆண்டில் 10.21 லட்சம் ஏக்கரில் செயல்படுத்தப்பட்டது. 1969-70-ஆம் ஆண்டில் 20.68 லட்சம் ஏக்கரில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டில் (நவம்பர் வரை) 16.84 லட்சம் ஏக்கரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏற்கனவே செயல்படும் 4 மாவட்டங்களுடன், திருச்சி மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்படும்.

18. மானவாரி நிலங்களில் எச்.பி. 3 கம்பு பயிரிடும் திட்டத்தின் கீழ் 28-11-70 வரை 1.26 லட்சம் ஏக்கரில் எச்.பி. 3 கம்பு பயிரிடப்பட்டுள்ளது.

# நெசவுத் தொழிலும்

தமிழ் நாட்டில் மொத்தம் 5.50 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இந்திய நாட்டில் உள்ள மொத்தக் கைத்தறிகளில், தமிழ்நாட்டில் மட்டும் 25 சதவிகிதத்திற்கு மேல் உள்ளன. சுமார் 20 இலட்சம் மக்கள், தமிழ்நாட்டில் கைத்தறித்தொழிலையே நம்பி வாழ்கின்றனர்.

* * *

கைத்தறி நெசவாளரின் கண்ணீரைத் துடைக்க அரும்பாடு பட்டு வருகிறது தமிழக அரசு. அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அரசு தங்கு தடையின்றிச் செய்து வருகிறது.

மூன்ருவது திட்டக் காலத்தில், தமிழகத்தில் கைத்தறி வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட தொகை 7.50 கோடி ரூபாய். நான்காவது திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு 10.60 கோடி ரூபாய்.

1967-68 முதல் செலவிடப்பட்ட தொகை வருமாறு :—

| | ரூ (இலட்சத்தில்) |
|---|---|
| 1967-68 | 118.45 |
| 1968-69 | 130.69 |
| 1969-70 | 145.06 |
| 1970-71 (எதிர்பார்க்கப்படுகிற செலவு) | 211.73 |

கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காகப் பாமர மக்களின் அரசு, ஆண்டுதோறும் அதிகப்படியான தொகையினை அள்ளித் தந்திருக்கிறது.

* * *

கூட்டுறவு நூற்பு ஆலைகளின் வளர்ச்சி கடந்த மூன்ருண்டுகளில் கணிசமான அளவு பெருகியுள்ளது.

| | 1967 | 1968 | 1969 |
|---|---|---|---|
| 1. கூட்டுறவு நூற்பு ஆலைகளில் அரசு முதலீடு | 160.45 (இலட்சம்) | 179.12. (இலட்சம்) | 184.12 (இலட்சம்) |
| 2. நூல் உற்பத்தி (கிலோ கிராம்கள் இலட்சக்கணக்கில்) | 69.98 | 88.25 | 105.70 |
| 3. நூல் விற்பனை அளவு | 556.18 (இலட்சம்) | 743.06 (இலட்சம்) | 899.36 (இலட்சம்) |

* * *

சாயம், இரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்ய ஐந்து உற்பத்திப் பிரிவுகள் அமைக்கப்பட இருக்கின்றன. இதனல் நெசவாளர்களுக்குத் தேவையான சாயம், இரசாயனப் பொருள்கள் தட்டுப்பாடின்றி, ஒழுங்கான முறையில் கிடைக்கும்.

* * *

12,500 விசைத்தறிகள் ஏற்படுத்தத் திட்டமுள்ளது. 1970-71-ல் 500 விசைத்தறிகள் ஏற்படுத்தப்படும். விசைத்தறிச் கூட்டுறவுச் சங்கங்கள் அமையும் பொழுது, அவற்றில் பர்மா, இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கு வேலைவாய்ப்புகளும் அப்படிக் கூட்டுறவுகள் அமைப்பதில் அவர்கள் பங்கு பெறவும் அரசு பரிசீலித்து வருகிறது.

* * *

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அரசு மூலதனம் போட்டுப் பங்கு கொள்கிறது. இது புதிய திட்டமாகும்.

| ஆண்டு | அரசு பங்கீடு மூலதனம் போட்டுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | அரசு போட்டுள்ள மூலதனம் |
|---|---|---|
| 1967-68 | 101 | ரூ. 4.00 இலட்சம் |
| 1968-69 | 103 | 5.00 ,, |
| 1969-70 | 145 | 9.00 ,, |
| மொத்தம் | 349 | 18.00 ,, |

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு நெசவுத்தொழிலில் தீவிரப் பயிற்சி அளிக்கும் திட்டம் இன்று செயல்படுத்தப்படுகிறது. இது புதிய திட்டம். நீலகிரி, சென்னை மாவட்டங்கள் நீங்கலாக, மாவட்டத்திற்கு ஒன்று என்ற அளவில் 12 பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையமும் ஒரு சமயத்தில் 30 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும். பயிற்சிக் காலம் 45 நாட்கள். பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுவோர்களுக்கு மாதம் ரூ. 100 உதவித்தொகை அளிக்கப்படுகிறது. இது புதிய திட்டம். இந்த அரசினல் தோற்றுவிக்கப்பட்ட திட்டம்.

# நீங்கா வெளிச்சம்!



# முன்னாள் முப்படை வீரர்களுக்கு

தமிழ் நாட்டில் படைவீரர்கள் கழகம் சென்ற 50 ஆண்டுகளாகவே இருந்து வந்துள்ளது. இக்கழகம் தொழிலாளர் நலத்துறை நிர்வாகத்தின்கீழ் நிலையாக இயங்கி வருகிறது. சென்னையில் உள்ள தமிழ்நாடு தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் கழகம் 1968-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் திருத்தியமைக்கப்பட்டு, தமிழ்நாடு அற நிலைய அமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் செயல்படு கிறது. இக்கழகம் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அவர்களின் நேரடி நிர்வாகத்தில் இயங்குகிறது. இக்கழகத்திற்கு 26-2-68 முதல் ஒரு முழுநேரச் செயலாளரைத் தமிழ்நாடு அரசு நியமித் துள்ளது.

தற்பொழுது தமிழ்நாட்டில் 12 மாவட்ட தரைப் படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் கழகம் உள்ளன. மாவட்ட கழகம், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி நிர்வாகத்தில் பணி செய்கிறது. கோவை, சேலம், வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்ட கழகங்களுக்கு முழுநேரச் செயலாளர்களைத் தமிழ்நாடு அரசு 1969-டிசம்பர் திங்களில் நியமித் துள்ளது. மற்ற மாவட்டக் கழகங்களுக்கு, அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களே அலுவலால் செயலாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

தமிழ்நாடு தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர் கழகத்தின்மூலம், ஓய்வுபெற்ற படை வீரர்களுக்கு 1-4-67 முதல் 31-12-70வரை பின்கண்டவாறு உதவி செய்யப்பட்டுள்ளது.

1. ஓய்வு பெற்ற படைவீரர்களின் பராமரிப்புக்கு நிவாரணமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20 - முதல் ரூபாய் 50 - வரை அளிக்கப்பட்ட தொகை :—

| | |
|---|---|
| 1967-68 | ரூ. 49,365.00 |
| 1968-69 | ரூ. 78,416.30 |
| 1969-70 | ரூ. 39,475.40 |
| 1970-71 | ரூ. 1,08,975.00 |

2. உடனடி நிவாரண நிதியாக ஒரு தடவைக்கு ரூ. 100 - வரை அளிக்கப்பட்ட தொகை :—

| | |
|---|---|
| 1967-68 | ரூ. 1,004.28 |
| 1968-69 | ரூ. 1,539.35 |
| 1969-70 | ரூ. 8,619.83 |
| 1970-71 | ரூ. 90,862.00 |

3. அரசினர் ஒப்புதலளித்த உடல்நல மாடங்களில் (Sanatoria) அனுமதிக்கப்பட்டுள்ள எலும்புருக்கி நோயாளிகளுக்கும், தொழுநோய் பிணியாளர்களுக்கும் சில்லறைச் செலவுக்காகக் கொடுக்கப்பட்ட தொகை:—

| | |
|---|---|
| 1967-68 | ரூ. 603.09 |
| 1968-69 | ரூ. 842.05 |
| 1969-70 | ரூ. 1428.00 |
| 1970-71 | ரூ. 320.00 |

மேற்கூறிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை உடல்நல மாடங்களுக்கு எடுத்துச் செல்லுவதற்கும் நிதி உதவப்படுகிறது.

4. அங்கஹீனமுற்ற படைவீரர்கள், 45 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் அடைந்த ஓய்வுபெற்ற படை வீரர்கள், பென்ஷன் உதவி பெறாத விதவைகள் ஆகியோர் வெற்றிலை பாக்குக் கடை வைத்தல், கோழிப் பண்ணை அமைத்தல், தையற்கடை வைத்தல், தட்டச் சகம் அமைத்தல் போன்ற சிறு தொழில்கள் துவக்கு வதற்கு மொத்தமாக வழங்கப்பட்ட இலவச உதவித் தொகை:—

| | |
|---|---|
| 1967-68 | ரூ. 49,484.00 |
| 1968-69 | ரூ. 41,710.00 |
| 1969-70 | ரூ. 60,043.84 |
| 1970-71 | ரூ. 40,900.00 |

5. மீண்டும் வேலைவாய்ப்புப் பெற்ற ஓய்வுபெற்ற படைவீரர்களுக்குக் குறுகிய காலக் கடனாக வழங்கப் பட்ட தொகை :—

| | | |
|---|---|---|
| 1967-68 | ரூ. | 14,175.00 |
| 1968-69 | ரூ. | 16,905.00 |
| 1969-70 | ரூ. | 21,530.00 |
| 1970-71 | ரூ. | 6,500.00 |

6. ஓய்வுபெற்ற படைவீரர்களுக்கு மறுவாழ்க்கை ஏற்படுத்துவதற்காகப் பயிற்சி வசதிகள் செய்வதற்கு வழங்கப்பட்ட தொகை :—

| | | |
|---|---|---|
| 1967-68 | ரூ. | 16,614.29 |
| 1968-69 | ரூ. | 4,420.00 |
| 1969-70 | ரூ. | 1,446.86 |
| 1970-71 | ரூ. | 1,700.00 |

7. ஓய்வுபெற்ற படைவீரர்கள் தங்களுடைய ஒரு பெண்ணின் திருமணத்தை நடத்துவதற்கு ரூ. 300 - வீதம் உதவித் தொகையாக அளிக்கப்பட்ட தொகை :-

| | | |
|---|---|---|
| 1967-68 | ரூ. | 300.00 |
| 1968-69 | ரூ. | 600.00 |
| 1969-70 | ரூ. | 6,900.00 |
| 1970-71 | ரூ. | 15,450.00 |

8. மாவட்ட படைவீரர் கழகங்களினல் பல்வேறு நிதியிலிருந்து பெறப்பட்ட நிதி உதவிகள் :—

| | | |
|---|---|---|
| 1967-68 | ரூ. | 30,632.00 |
| 1968-69 | ரூ. | 77,183.00 |
| 1969-70 | ரூ. | 94,712.40 |
| 1970-71 | ரூ. | 1,15,602.91 |

9. மாவட்ட படைவீரர் கழகங்களால் சட்டபூர்வமான பட்டாநிலம் பெற்ற ஓய்வுபெற்ற படைவீரர்கள் :—

| | |
|---|---|
| 1967 | 161 |
| 1968 | 164 |
| 1969 | 172 |
| 1970 | 49 |

10. போர் முடிந்தபின் புத்தாக்கம் செய்வதற்கான நிதி, தேசீய பாதுகாப்பு நிதியிலிருந்து ஆண்டுதோறும் இந்திய அரசு அளித்து வரும் நிதி, தமிழ்நாடு அரசு அளிக்கும் ஈட்டு உதவிநிதி ஆகியவைகளை ஒன்று சேர்த்து இணைக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்ட உதவிகள் :—

(1) அங்கஹீனமுற்று ஓய்வுபெற்ற படைவீரர்களுக்கும், ஓய்வுபெற்ற படைவீரர்களின் குடும்பத்தவர்களுக்கும் இலவசமாக அளிக்கப்பட்டுள்ள உதவித் தொகை :—

| | | |
|---|---|---|
| 1968-69 | ரூ. | 5,550 |
| 1969-70 | ரூ. | 24,282 |
| 1970-71 (டிசம்பர்முடிய) | ரூ. | 38,166 |

2. தொழில்கல்லூரி மற்றும் தொழிற்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் ஓய்வுபெற்ற படைவீரர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட படிப்பு உதவிப்பணம் :—

| | | |
|---|---|---|
| 1968-69 | ரூ. | 20,179 |
| 1969-70 | ரூ. | 1,03,697 |
| 1970-71 | ரூ. | 48,083 |

3. வழங்கப்பட்ட பயிற்சி உதவிப் பணம்

| | | |
|---|---|---|
| 1968-69 | ரூ. | 6,519 |
| 1969-70 | ரூ. | 23,792 |
| 1970-71 | ரூ. | 33,653 |

4. வேலை வாய்ப்புப் பெருத ஓய்வு பெற்ற படைவீரர்களும், விதவைகளும் சிறுதொழில் தொடங்க அல்லது சிறிய அளவில் வியாபாரம் தொடங்கக் கொடுக்கப்பட்ட கடன் தொகை :—

| | | |
|---|---|---|
| 1968-69 | ரூ. | 25,000 |
| 1969-70 | ரூ. | 2,25,750 |
| 1970-71 | ரூ. | 10,45,982 |

5. ஓய்வுபெற்ற படைவீரர்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுறவுக் கடன் தொகை :—

| | | |
|---|---|---|
| 1967-68 | ரூ. | 80,000.00 |
| 1968-69 | ரூ. | 2,10,000.00 |
| 1969-70 | ரூ. | 90,000.00 |
| 1970-71 | ரூ. | 5,11,100.00 |

---

**பொ**துப்பணித் துறை, என்பது வருவாய்த்துறை போன்ற தாய்த் துறையாகும். முடியுடை மூவேந்தர் ஆண்ட காலத்தில் ஏரி வாரியம் போன்ற அமைப்புகள் மூலம் வேளாண்மை வளர்ச்சிக்குப் பல பாசனத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. கரிகால் பெருவளத்தான் போன்ற மன்னர்கள் ஆற்றுநீரை அணைகள் மூலம் தேக்கியும், காவிரிக்குக் கரைகள் அமைத்தும் வேளாண்மை வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டனர். ஆங்கிலேயர் ஆட்சி இம்மண்ணிலே வேரூன்றிய பின்னர் தான், முறையான பொதுப்பணித் துறை உருவானது. சிறப்பாகப் பாசன வசதிகளை முதன் முதலில் உருவாக்குவதில், இத்துறை முழுக் கவனம் செலுத்திய போதிலும், நெடுஞ்சாலை அமைத்தல், அரசுக்கு வேண்டிய கட்டடங்கள் அமைத்தல் எனும் பணியிலும் ஈடுபட்டது. மக்களிடையே தோன்றியுள்ள மறுமலர்ச்சி எண்ணங்களுக்கு ஏற்ப, அரசு பல நன்மைகளை மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டிய நிலையில், இத்துறை இன்று பெரிதும் வளர்ந்து பரந்துள்ளது.

பொதுப்பணித்துறை கட்டடப் பகுதி தமிழ்ப்பண்பு கெடாதவகையில், வளரும் பொறியியல் அறிவின் மூலம், குறைந்த செலவில், உறுதி வாய்ந்த கட்டடங்களை அமைத்து வந்துள்ளது; அமைத்து வரும்.

பொதுப்பணித்துறை, அரசின் கல்வி, பொதுநலம், காவல், விவசாயம் போன்ற பல்வேறு துறையினருக்குத் தேவையான கட்டடங்களை உருவாக்கித் தருகிறது. மைய அரசு, நகராட்சிகள், அரசு உரிமை பெற்ற நிறுவனங்கள் ஆகியவைகட்குத் தேவையான கட்டடங்களையும் உருவாக்கித் தருகின்றது. மேலும், தமிழக அரசின் எல்லாப் பொதுக்கட்டடங்களையும் பேணிப் பாதுகாத்து வருகிறது.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (66-67-ம் ஆண்டு உட்பட) பதினைந்து ஆண்டுகளில், பொதுப்பணித்துறை உருவாக்கித் தந்த கட்டடங்களின் மதிப்பு சுமார் 25 கோடியாகும். கடந்த நான்கு

ஆண்டில் கட்டடங்கள் அமைக்கச் செலவழித்த தொகை 21 கோடி ரூபாயாகும். 1950-51 முதல் 1966-1967 வரை மருத்துவமனைக் கட்டடங்களுக்காகச் செலவழித்த தொகை 11.75 கோடி ரூபாயாகும். 1967-68 முதல் 1970-71 வரை மருத்துவமனைக் கட்டடங்களுக் காகச் செலவழிக்கப்பட்ட தொகை 9 கோடி ரூபாயாகும். மேலும், முழு, மைய அரசு நிதி உதவியுடன், தமிழகமெங்கும் இந்த ஆண்டில் தொடங்கப்பட்டு 72-மார்ச் திங் களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட் டுள்ள குடும்பநலத்திட்டக் கட்டடங் களின் மதிப்பு சுமார் ஐந்து கோடி ரூபாயாகும்.

மருத்துவக் கல்லூரிகள், மருத் துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவைகளுக்கான கட்டடங்கள் அமைக்க நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 10 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இது, முதல் மூன்று ஐந்தாண்டுத்திட்டக் காலத் தில் செலவிடப்பட்ட தொகைக்குச் சமமாகும். அறுபது மாவட்ட, வட்ட மருத்துவ மனைகளில், கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணி ஆரம் பிக்கப்பட்டு, 10 இடங்களில் முடிக் கப்பட்டுள்ளன. மற்றவைகள் பல் வேறு நிலையில் உருவாகிக் கொண் டிருக்கின்றன. 45 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 374 குடும்பநலத்திட்ட நிலையங்கள், 891 துணை நிலையங் கள் அமைக்கும் பணி இந்த ஆண்டு

தொடங்கப் பட்டுள்ளது. இக்கட்ட டங்கள் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களுக்குள் முடிக்கப்படத் திட்ட மிடப்பட்டுள்ளது.

பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய வைக்கான கட்டடங்கள் அமைக்கும் பணி 67-68ம் ஆண்டுக்குப் பிறகு தான் முழுமூச்சுடன் தொடங்கப் பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டு களில் கல்விக் கட்டடங்களுக்காச் செலவிடப்பட்ட தொகை, 1947-முதல் 1967 வரை செலவிடப்பட்ட தொகையைவிட அதிகமாகும். வேலூர், சென்னை, கிருஷ்ணகிரி, இராசிபுரம், நாமக்கல், கடலூர், கும்பகோணம், பொன்னேரி, அரிய லூர், கரூர், திருச்சி, திருவண்ணா மலை, வாலாஜாபேட்டை, தஞ்சா வூர், ஆகிய இடங்களில் புதிய கல் லூரிகளுக்கான கட்டடங்கள் சுமார் 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. செய்யாறு, விருத்தாசலம், மதுரை, திண்டி வனம், இராமநாதபுரம், திருப்பூர், குடியாத்தம், ஆகிய இடங்களில் புதிய கல்லூரிக்கான கட்டடங்கள் சுமார் 50 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், புதுக்கோட்டை, தருமபுரி, திருவா ரூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் சுமார் 51 இலட்ச ரூபாய் செலவில் புதிய கல்லூரிக்கான கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. சில இடங்களில் தொடங்கப்பட்டுள் ளது.

காவல் துறையினருக்கான குடி யிருப்புகள் இதுவரை 7,500 ஆகும். சென்ற ஆண்டுவரை சுமார் 56 இலட்ச ரூபாயும், இந்த ஆண்டில் 20 இலட்ச ரூபாயும் செலவிடப்பட் டுள்ளது. சுமார் 50 இலட்ச ரூபாய் செலவில் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள் ளது. பணிகள் விரைவில் தொடங் கப்படும். எல்லாக் காவல் துறை ஊழியருக்கும் இன்னும் இரண்டு ஆண்டுகளில் குடியிருப்புகள் அமைத் துத் தருவதற்குத் திட்டமிடப்பட் டுள்ளது.

மதுரையில் இணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் 10 இலட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள் ளது. கரூரில் 'முன்சீப் கோர்ட்' கட்டடங்கள் நான்கு இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. சென்னையில், வழக்குரைஞர்கள் தங் கும் அறை கட்டடங்கள் சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டும் பணி மேற்கொள்ளப்பட் டுள்ளது.

தாம்பரம், திருவொற்றியூர், திரு வள்ளூர், ஆரணி நகராட்சிகளுக் கான அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. காஞ்சி புரம் பேருந்து நிலையமும், வேலூர் நகர் அங்காடியும் பொதுப்பணித் துறையினாலேயே கட்டப்பட்டன. திருச்சி நாளங்காடி, திருமண மண் டபம், அரக்கோணம் அலுவலகக் கட்டடம், ஆகியன தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின் றன.

மேலும், மைய அரசின், அஞ்சல் துறை, தொழிலாளர் நல ஈட்டுறுதி நிறுவனம், தமிழக அரசின் கால்

நடைத்துறை, வருவாய்த்துறை, மீன்வளத்துறை, சிறைத்துறை, பொதுநிர்வாகம் ஆகியவைகளுக்குத் தேவையான கட்டடங்களையும் உரு வாக்கித் தந்துள்ளோம்.

பொதுப்பணித்துறைக் கட்டடப் பகுதி, குறைந்த செலவில், அழகும், உறுதியும் வாய்ந்த கட்டடங்களை தற்கால தொழில் நுட்பங்களை இணைத்து ஆங்காங்கே கிடைக்கும் கட்டடப் பொருள்களைக்கொண்டு, உருவாக்கி வருகின்றது; இப்பணி மக்கள் ஒத்துழைப்புடனும், ஊழி யர்கள் உழைப்புடனும் மங்காது சிறந்து தொடங்கும்.





NAS 478
மர்பி
மினிபாய்
டிரான்ஸிஸ்டர்கள்
...லண்டனுக்கு
என்னுடைய ஆங்கிலேய
ரசிகர்களும்கூட என்னை
விரும்பத்
தொடங்கிவிட்டனர்.
பெருமைக்குரிய விஷயம்!
FOR EXPORT
BOMBAY TO LONDON
MURPHY TRANSISTORS

# தாழ்த்தப்பட்டோருக்குத் தனிச்சலுகைகள்

ஆண்டாண்டுக் காலமாகச் சமுதாயத்தின் அடித் தளத்திலேயே ஆழ்த்தப்பட்டுக் கிடக்கும் அரிசனங்கள் மற்றும் மலைசாதியினரின் நலத்தில் இன்றைய தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும் என்பதற்காக இன்றைய தமிழ்நாடு அரசு பல புதிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. அரிசனங்களுக்கும், மலை சாதியினருக்கும் அரிசன நலத்துறையின் மூலமாக அரசு செய்துள்ள நன்மைகள் பலவாயினும் அவற்றில் ஒரு சிலவற்றை மட்டுமே ஈண்டுக் குறிப்பிட்டுள்ளோம்.

1. அரிசன மாணவர்களுக்கும், மலைசாதி மாண வர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள படிப்பு உதவித் தொகை பற்றிய விவரம்.

| ஆண்டு | படிப்பு உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | படிப்பு உதவித் தொகையாக அளிக் கப்பட்ட மொத்தத் தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1967-68 | 2,67,400 | 68.25 |
| 1968-69 | 2,89,973 | 74.75 |
| 1969-70 | 3,60,539 | 82.16 |
| 1970-71 | 3,68,069 | 74.29 |

2. தமிழ்நாடு அரசின் அரிசன நலத்துறையால் நடத்தப்பெறும் பள்ளிக்கூடங்களுக்குச் செலவிடப் பட்ட தொகை:—

| ஆண்டு | செலவிடப்பட்ட தொகை (லட்சத்தில்) |
|---|---|
| 1967-68 | 112.76 |
| 1968-69 | 127.91 |
| 1969-70 | 134.74 |

தற்பொழுது தமிழ்நாட்டில் 831 அரிசனநலப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் 1,10,746 மாணவ மாணவிகள் படிக்கின்றனர்.

3. அரிசன நலத்துறையினரால் நடத்தப்பெறும் மாணவ இல்லங்களும் அதற்குச் செலவிடப்பட்ட தொகையும் பற்றிய விவரம்.

| ஆண்டு | நடத்தப்பட்ட மாணவர் இல்லங்கள் | மாணவர் இல்லங் களுக்காகச் செல விடப்பட்ட தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1967-68 | 396 | 65.43 |
| 1968-69 | 411 | 68.15 |
| 1969-70 | 427 | 74.71 |
| 1970-71 | 457 | 37.43 |

தற்பொழுது உள்ள 457 மாணவ இல்லங்களில் 136 மாணவிகளுக்காகவும், 321 மாணவர்களுக்காக வும் நடத்தப்படுகின்றன. இவ்வில்லங்களின் மூலம் 7,913 மாணவிகளும், 21,854 மாணவர்களும் பயன் பெற்று வருகின்றனர்.

4. அரிசனக் காலனிகளுக்கு மின்சார இணைப்பு அளித்தல்:—

இன்றைய தமிழ்நாடு அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு (1966-67) வரை தமிழ்நாட்டில் 2,362 அரிசனக் காலனிகளுக்கே ரூபாய் 20.10 லட்சம் செலவில் மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இன்றைய தமிழ்நாடு அரசு 1967-68 முதல் அரிசனக் காலனிகளுக்குப் பின்கண்ட வாறு மின்சார இணைப்பு அளித்துள்ளது.

| ஆண்டு | மின்சாரம் வழங் கப்பட்ட அரிசனக் காலனிகள். | மின்சாரம் வழங்க மானியமாகச் செலவு செய்யப்பட்ட தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1967-68 | 448 | 3.50 |
| 1968-69 | 480 | 7.69 |
| 1969-70 | 1,175 | 9.14 |

5. அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட்ட அளவு:—

சொந்தமாக வீடு இல்லாத அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்துக் குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் இருப்பின் அவைகளை அரிசனக் காலனிக்காக ஒதுக்கப்படுகிறது.

அரசாங்கப் புறம்போக்கு நிலங்கள் இல்லாவிட்டால், தனியாரிடமிருந்து நிலங்களை விலைகொடுத்து வாங்கி அரிசனங்களுக்கு நில ஒப்படை செய்யப்படுகிறது. நிலம் வாங்குவதற்கு ஆகும் முழுச்செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்வதுடன், சாலை மற்றும் வசதிகளை அமைத்து மனைப்பிரிவு செய்து கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 சென்ட் நிலம் வீடு கட்டுவதற்காக ஒப்படை செய்யப்படுகிறது. இவ்வகையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | வழங்கப் பட்ட மனைப் பட்டாவின் எண்ணிக்கை | மனைப்பட் டாவாக வழங் கப்பட்ட நிலப்பரப்பு | மனைப்பட்டா வழங்கிய வகையில் ஏற் பட்ட செலவு |
|---|---|---|---|
| 1967-68 | 11,166 | 815.60 ஏக் | 29.88 லட் |
| 1968-69 | 10,816 | 566.81 ,, | 16.96 ,, |
| 1969-70 | 6,643 | 679.01 ,, | 25.34 ,, |

6. அரிசனக் காலனிகளுக்குக் குடிநீர் வசதிநிலை முதலிய வசதிகளை அளித்தல்:—

ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்பட்டு வரும் கிராம வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மானியத்தில் (Village Works Grant) 20 சத அளவை அரிசனங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. அரிசனக் காலனிகளுக்குக் குடிநீர்க் கிணறுகள் அமைக்கவும் சாலைகள் அமைக்கவும் முறையே 15 சதம், 10 சதம் பங்குத் தொகையை அரிசன நலத்துறை ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுத்து உதவுகிறது. பழைய கிணறுகளைப் பழுது பார்த்தல், மயான சாலை அமைத்தல் போன்ற வேலைகள் மாவட்ட நல அலுவலர் மூலம் செய்யப்படுகின்றன. இவ்வகையில் பின்கண்ட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

| ஆண்டு | அரிசனநலத்துறை மூலம் செலவிடப்பட்ட தொகை |
|---|---|
| 1967-68 | ரூபாய் 17.76 லட்சம் |
| 1968-69 | ரூபாய் 14.39 ,, |
| 1969-70 | ரூபாய் 16.77 ,, |

7 அரிசனங்கள் சிறுதொழில் தொடங்க வட்டியில்லாக் கடனுக அளிக்கப்பட்ட தொகை:—

(அரிசனங்கள் சிறுதொழில் தொடங்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்காக வட்டியில்லாக் கடன் கொடுக்கும் திட்டத்தை இன்றைய தமிழ்நாடு அரசே முதன் முதலாக 1968-69-ஆம் ஆண்டில் துவங்கியது. இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 5000 வரை, துவங்கப்படும் தொழிலின் தன்மைக்கேற்பக் கடன் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு கடன் வாங்க, கடன் கேட்கும் தொகையைப் போல் $1\frac{1}{2}$ மடங்கு மதிப்புள்ள சொத்துக்களை ஈடுகாட்ட வேண்டும். இவ்வகையில் பின்கண்டவாறு கடன் கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | கடன் பெற்றவர் | கடனுகக் கொடுக்கப் பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1968-69 | 167 | 98,750 |
| 1969-70 | 612 | 2,61,250 |

நடப்பாண்டிற்கு ரூபாய் 2,20,000 ஒதுக்கப்பட்டுள்ளது. கடன் மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

8. பாசனக் கிணறு வெட்டவும், உழவு மாடுகள் வாங்கவும் வழங்கப்பட்ட மானியத் தொகை :—

பாசனக் கிணறு வெட்ட, கிணறு ஒன்றுக்கு ரூபாய் 1500 மானியமாகக் கொடுக்கப்பட்டு வந்தது. அது போல் உழவு மாடுகள் வாங்க ஓர் இணை மாடுகளுக்கு ரூபாய் 400 வீதம் மானியம் வழங்கப்பட்டு வந்தது. இந்த மானியங்களை இன்றைய தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு முதல் முறையே ரூபாய் 2000, ரூபாய் 500 என உயர்த்தியுள்ளது. இவ்வகையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு உள்ளது.

| ஆண்டு | வெட்டப் பட்ட பாசனக் கிணறுகள் | வழங்கப் பட்ட உழவு மாடுகள் | செலவிடப் பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1967-68 | 482 | 679 இணை | 7.79 லட். |
| 1968-69 | 707 | — | 5.73 ,, |
| 1969-70 | 1000 | 542 இணை | 9.15 ,, |
| 1970-71 | 535 | 141 இணை | 4.41 ,, |

9. அரிசனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரிசன பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இச்சங்க உறுப்பினர்கள் கறவை மாடுகள் வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் முன்பு ரூபாய் 300 நிதி உதவி (ரூபாய் 150 மானியம், 150 கடன்) கொடுக்கப்பட்டதை இன்றைய அரசு 1969-70 முதல் ரூபாய் 500 ஆக (ரூபாய் 250 மானியம், 250 கடன்) உயர்த்தியது. இத்திட்டத்தின்கீழ் அரிசனநலத்துறை மூலம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | புதிதாகத் துவங் கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் | செலவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1967-68 | 27 | 2.08 லட். |
| 1968-69 | 37 | 2.95 ,, |
| 1969-70 | 32 | 3.79 ,, |

10. அரிசனங்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக ஒற்றை வீடுகளுக்கு ரூபாய் 940 வீதமும், இரட்டை வீடுகளுக்கு ரூபாய் 1,805 வீதமும் கொடுக்கும் திட்டத்தை இன்றைய தமிழ்நாடு அரசு நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்தொகையில் ஒற்றை வீடுகளைப் பொறுத்தவரையில் ரூபாய் 250 மட்டுமே கடனுகவும், இரட்டை வீடுகளைப் பொறுத்தவரையில் ரூபாய் 500 மட்டுமே கடனுகவும் அடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

11. அரிசனக் காலனிகளைத் தூய்மையாக வைத்திருப்பதை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் சிறந்த காலனிகளுக்குப் பரிசு கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு காலனிக்கு ரூபாய் 300 மதிப்புள்ள வானொலிப் பெட்டி பரிசாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பரிசு பெற்ற காலனிகள் விவரம்.

| ஆண்டு | பரிசு பெற்ற காலனிகள் |
|---|---|
| 1967-68 | 96 |
| 1968-69 | 113 |
| 1969-70 | 107 |

ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமை அகற்றப் பாடுபடும் இரண்டு கிராமங்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் முதற் பரிசு பெறும் கிராமத்திற்கு ரூபாய் 1000-மும், இரண்டாம் பரிசு பெறும் கிராமத்திற்கு ரூபாய் 500-ம் வழங்கப்படுகிறது.

12. தமிழ்நாட்டில் அரிசன மக்களுக்குச் சமுதாயப் பழக்க வழக்கங்களைக் கற்பிப்பதற்காக 25 சமுதாய நிலையங்கள் உள்ளன. இந்நிலையங்களின் மூலம் அரிசனக் குழந்தைகளுக்குப் பாலும், மதிய உணவும் வழங்கப்படுகின்றன. முதலுதவி செய்வதற்குத் தேவையான பொருள்களும் இந்நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு.

| ஆண்டு | செலவிடப்பட்ட தொகை |
|---|---|
| 1967-68 | ரூ. 1.66 லட்சம் |
| 1968-69 | ரூ. 1.78 ,, |
| 1969-70 | ரூ. 1.83 ,, |

13. துப்புரவு வேலையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க ஒவ்வொரு வீட்டிற்கும் ரூபாய் 1500 வழங்கப்படுகிறது. இதில் ரூபாய் 750-ஐ தமிழ்நாடு அரசு மானியமாகக் கொடுக்கிறது. மீதியுள்ள ரூபாய் 750 உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ்க் கட்டப்பட்ட வீடுகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1967-68 | 44 வீடுகள். |
| 1969-70 | 1253 ,, (868 வீடுகள் முன்னேற்ற நிலையில் இருந்தன) |

14. சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபடுபவர்கள் மலத்தைச் சுமந்து செல்வதைத் தடுப்பதற்காகச் சக்கர வண்டிகள் வழங்கப்படுகின்றன. அரிசன நலத்துறைக்காகக் கிராமநலத்துறையால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், பின்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1967-68 | ரூ. 0.39 லட்சம் |
| 1968-69 | ரூ. 0.11 ,, |
| 1969-70 | ரூ. 0.98 ,, |

| ஆண்டு | கிணறுகள் | செலவு |
|---|---|---|
| 1967-68 | 106 | ரூ. 5.48 லட்சம் |
| 1968-69 | 359 | ரூ. 5.92 ,, |
| 1969-70 | 250 | ரூ. 7.62 ,, |

கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கும் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக இன்றைய தமிழ்நாடு அரசே 1968-69-ல் கொண்டு வந்தது. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளில் ஒருவர் அரிசன வகுப்பைச் சார்ந்தவராகவோ அல்லது மலைசாதி வகுப்பைச் சார்ந்தவராகவோ இருந்தால், இத்திட்டத்தின்கீழ் தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1968-69-ல் 48 தங்கப்பதக்கமும், 1969-70-ல் 35 தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கு ரூபாய் 10,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

19. அரசினர் மருத்துவமனை மற்றும் முதல்நிலை சுகாதார நிலைய டாக்டர்கள் அரிசனநலப் பள்ளிக்கூடங்களுக்கும், விடுதிகளுக்கும் சென்று மருத்துவ ஆய்வு செய்வதற்காக மாதம் ரூபாய் 50 உதவித் தொகை அளிக்கும் திட்டத்தை இன்றைய தமிழ்நாடு அரசே 1969-70 முதல், செயல்படுத்தி வருகிறது.

20. தமிழ்நாடு போக்குவரத்துத்துறையின் கீழ் கோவை திருச்சி, நகரங்களில் உள்ள ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் பெரிய மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்கு அரிசன, மலைசாதி மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை இன்றைய தமிழ்நாடு அரசே முதன்முதலாக 1970 ஜனவரி முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் ஒவ்வொரு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியிலும் 50 பேர்களுக்கு, 3 மாதகாலப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூபாய் 50 வீதம் பயிற்சி உதவிப்பணம் அளிக்கப்படும்.

---

# குடிநீர்க்கும் ஒரு வாரியம்

1972-க்குள் தமிழ்நாட்டில் கிராமங்கள் அனைத்திற்கும் மின்சாரம் வழங்கிட விரைந்து செயலாற்றுகிறது தமிழக அரசு. அதேபோல் வெகுவிரைவில் தமிழ்நாட்டின் மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழி செய்துள்ளது தமிழக அரசு.

31-3-1968 முடிய தமிழ் நாட்டில் 2821 கிராமங்களும், 9074 குக்கிராமங்களும் எவ்விதப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும் இல்லாத நிலையில் இருந்தன. இவ்வவல நிலையினைப் போக்கி இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக ஒரு சிறப்புத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, 1971-72ஆம் ஆண்டுக்குள்ளாக, தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தருவதென அரசு முடிவு எடுத்துள்ளது. இதை நல்ல முறையில் செயற்படுத்துவதற்கென, மாநில அளவில் குடிநீர் — வடிகால் திட்ட

வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. குடிநீர் வசதி அளிப்பதற்கென்றே, இந்த வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆயுள் காப்புக் கழகத்திடம் இருந்து கீழ்க்கண்ட 22 குடிநீர்த் திட்டங்களையும், 4 வடிகால் திட்டங்களையும் 1969-70ஆம் ஆண்டில் நிறைவேற்ற, ரூபாய் 192.33 லட்சம் கடனாகப் பெறப்பட்டது.

## குடிநீர் வழங்கும் திட்டங்கள்

| ஊரின் பெயர் | கடனாக வழங்கப்பட்ட ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|
| ஆலந்தூர் | 10.00 |
| செங்கற்பட்டு | 3.33 |
| தாம்பரம் | 6.67 |
| திருக்கோவிலூர் | 4.33 |
| கள்ளக்குறிச்சி | 3.00 |
| ஆம்பூர் | 8.67 |
| திருப்பத்தூர் | 5.00 |
| வாணியம்பாடி | 6.67 |
| மேல் விசாரம் | 3.33 |
| சேலம் | 33.33 |
| ஆத்தூர் | 6.67 |
| கிருஷ்ணகிரி | 8.83 |
| திருவாரூர் | 6.67 |
| ஈரோடு | 4.00 |
| பெருந்துறை, சென்னிமலை, கருமாண்டி செல்லிப்பாளையம் | 8.67 |
| பொள்ளாச்சி | 5.33 |
| உதகமண்டலம் | 14.67 |
| மதுரை | 8.00 |
| இராமநாதபுரம் | 8.00 |
| கடையநல்லூர் | 4.33 |
| கோவில்பட்டி | 17.33 |
| விக்கிரமசிங்கபுரம் | 4.00 |

## வடிகால் வசதி ஏற்படுத்தும் திட்டங்கள்

| | |
|---|---|
| காஞ்சிபுரம் | 2.67 |
| திருச்சி | 6.67 |
| கோயம்புத்தூர் | 1.33 |
| மதுரை | 1.33 |

ஆயுள் காப்புக் கழகக் கடன் உதவியுடன் 1969-70ல் 26 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், 1970-71ல் 52 புதிய குடிநீர், வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஓர் ஒருங்கிணைந்த திட்டம் தீட்டப்பட்டுள்ளது. 1970 ஜூலைத் திங்களில் 52 புதிய குடிநீர், வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூபாய் 140.83 லட்சமும், 22 முடிவு பெறாத திட்டங்களுக்காக (இரண்டாம் தவணை) ரூபாய் 155.46 லட்சமும், ஆக மொத்தம் ரூபாய் 296.29 லட்சம் ஆயுள் காப்புக் கழகத்திடம் கடனாகக் கேட்கப்பட்டது.

கடன் வழங்கப்பட்டுள்ள 50 திட்டங்களும் நிறைவேற்றப்படுவதுடன் எஞ்சியுள்ள 24 திட்டங்களும் முடிந்த அளவுக்கு நிறைவேற்றப்படும்.

## குடிநீர் வழங்கும் திட்டம்

| | உள்ளாட்சி நிறுவனத்தின் பெயர் | கடனாக வழங்கப்படவிருக்கும் ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஆலந்தூர் | 15.67 |
| 2. | செங்கற்பட்டு | 5.34 |
| 3. | கள்ளக்குறிச்சி | 0.50 |
| 4. | ஆம்பூர் | 3.76 |
| 5. | திருப்பத்தூர் | 9.99 |
| 6. | மேல்விசாரம் | 0.67 |
| 7. | சேலம் | 2.69 |
| 8. | ஆத்தூர் | 1.49 |
| 9. | திருவாரூர் | 2.95 |
| 10. | ஈரோடு | 1.17 |
| 11. | பெருந்துறை, | 2.70 |
| | சென்னிமலை, | 3.60 |
| | கருமாண்டிசெல்லிப்பாளையம் | 3.61 |
| 12. | பொள்ளாச்சி | 6.66 |
| 13. | உதகமண்டலம் | 4.90 |
| 14. | மதுரை | 3.33 |
| 15. | இராமநாதபுரம் | 2.73 |
| 16. | கடையநல்லூர் | 7.46 |
| 17. | கோவில்பட்டி | 7.72 |
| 18. | விக்ரமசிங்கபுரம் | 9.31 |
| 19. | உத்திரமேரூர் | 9.33 |
| 20. | பூந்தமல்லி | 3.00 |
| 21. | பண்ணுருட்டி | 8.00 |
| 22. | சிதம்பரம் | 1.00 |
| 23. | காவேரிப்பாக்கம் | 1.00 |
| 24. | சோளிங்கர் | 1.67 |
| 25. | சேலம் | 4.00 |
| 26. | மேட்டூர் | 3.33 |
| 27. | பள்ளிபாளையம் | 1.00 |
| 28. | மோகனூர் | 0.50 |
| 29. | அறந்தாங்கி | 1.05 |
| 30. | சிரங்கம் | 3.33 |
| 31. | புஞ்சை புகளூர் | 4.00 |
| 32. | குளித்தலை | 2.00 |
| 33. | இலப்பைக்குடிக்காடு | 0.50 |
| 34. | புஞ்சை புளியம்பட்டி | 8.67 |
| 35. | திருப்பூர் | 2.00 |
| 36. | காங்கேயம் | 12.00 |
| 37. | சிறுமுகை | 2.60 |
| 38. | நிலக்கோட்டை | 3.00 |
| 39. | ஒட்டன்சத்திரம் | 2.00 |
| 40. | காரைக்குடி | 12.67 |
| 41. | சிவகங்கை | 14.00 |
| 42. | கீழக்கரை | 6.67 |
| 43. | திருப்பத்தூர் (இராமநாதபுர மாவட்டம்) | 3.33 |
| 44. | புளியங்குடி | 2.00 |
| 45. | காயல்பட்டினம் | 2.00 |
| 46. | செட்டிகுளம் | 1.00 |

வடிகால் வசதித் திட்டங்கள்

## வடிகால் வசதித் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| 47. | காஞ்சிபுரம் | 13.33 |
| 48. | திருச்சிராப்பள்ளி | 27.98 |
| 49. | கோயம்புத்தூர் | 8.81 |
| 50. | மதுரை | 8.67 |


அரிசி கிடைக்கும்
தமிழ்நாடு அரசின் சீரிய கொள்கையால் உணவுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டு எங்கும் அரிசி குறைந்த விலையில் கிடைக்கும் நிலை.
பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வளிக்க நாற்பது லட்சம் ரூபாயில் புதிய திட்டம்.
விட்டுடு சாமி! வேலை கிடைக்கலே! அதுதான் பிச்சை எடுக்கிறேன்!
பயப்படாமே என்கூடவா! உழைச்சுச் சாப்பிடலாம்! வேலை தருகிறேன்!
கல்விக்காக
1967-ல்
44 கோடி ரூபாய்
1970-ல்
67 கோடி ரூபாய்



பாரதிதாசன்



ஜி.யு.போப்



பாரதியார்



கண்ணகி



வீரமாமுனிவர்



கம்பர்

# தமிழ் வளர்த்தோருக்குத் தலைநகரில் சிலைகள்



திருவள்ளுவர்



ஔவையார்



அண்ணா



கால்டுவெல்



வ. உ. சிதம்பரனார்



அரசியல் துறை அதிகாரங்களும், நிதித் துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது, மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டுமென்கிற ஆசையால் அல்ல; மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்டால்தான் எதிர்பார்க்கும் விதத்தில், நமது மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் - என்பதால் தான் மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதையும் தெளிவாக்க விரும்புகிறோம். மேலும்,







விஞ்ஞான யுகத்திற்கேற்ற (சமதர்மச்) சமுதாயம் அமைப்பதே நமது இலட்சியம் என்று கூறுகிற நேரத்தில், இந்த நோக்கத்தில் நமது பொருளாதாரக் கொள்கையும், சமுதாயக் கொள்கையும் இணைந்திருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம். சாதி - பேதம் நிறைந்த நிலப்பிரபுத்துவ சமுதாயம் நமது வளர்ச்சிக்குப் போடப்படும் விலங்காகும். மிகப் பெரிய சமுதாய சீர்திருத்தப் பணிகள் – ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நாம் செய்திருக்கும் சாதனைகள் சாதாரணமானதல்ல. ஆகவே சமுதாய சீர்திருத்தத் துறையில் நமது பணி தொடர்ந்து நடைபெறும். அதுவே விஞ்ஞான யுகத்திற்கேற்ற சமுதாயம் உருவாகும் வழி என்று கருதுகிறோம். சோஷலிஸ சமுதாயம் நமது இலட்சியமாக இருப்பதால் அடிப்படை

உரிமைகளை அழித்து விட்டு, வறுமையை அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுப்பது என்பது அரசின் நோக்கமல்ல. ஏழை எளிய மக்கள் வாழ்வு ஒளிபெற - சமூக நீதி நிலைத்திட - சோஷலிஸம் நடைமுறைக்கு வந்திட - தனி மனிதனின் வாழ்வுக்கான அடிப்படை சொத்து உரிமைகளைச் சீர்குலைக்காமல் அரசு சீரிய பணியாற்றும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் நான்காவது திட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று கருதுகிறோம். பெரிய தொழில்களோடு, சிறு தொழில் வளர்ச்சி, கிராமப் புற வேலையில்லாத் திண்டாட்டத்தையும் நீக்க உதவும் என்று கருதுகிறோம். சிறு தொழில்களை அமைக்கச் சிறந்த வாய்ப்புகள் இருப்பினும் போதிய நிதி வசதி இன்மையால் பலர் இதற்கு முன் வரவில்லை. இக்குறையைத் தீர்க்கத் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி வாரியத்தை உருவாக்கியிருக்கிறோம். இதன் பணியைத் தீவிரப்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு குழுவினை அமைக்க உத்தேசித்திருக்கிறோம். சிறு கடை வைப்பது - சிறு வியாபாரம் நடத்துவது - ஆகியவை யில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க உ கடை வைக்க முனைவோருக்கும், நடத்த முனைவோருக்கும் போதிய நிதி வசதிகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்திக்கொடுக்க ; சிறுதொழில் - சிறு வியாபார உதவி வாரியம் அமைக்க உத்தேசித்திருக்கிறோம். சமதர்ம சமுதாய அமைப்பில் நமது கவனத்தைக்கவர்கிறவர்கள் வாய்ப்பு வசதிகளின்றிஇருக்கின்ற பின்தங்கிய சமூகத்தவரும், தாழ்த்தப்பட்ட மக்களுமாவர்.





மக்களாட்சியின் அடித் தளங்களாக விளங்கும் ஊராட்சி மன்றங்களில் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கச் சட்டம் செய்து நடைமுறைப் படுத்தினோம். மக்களாட்சி முறை வளர்ச்சிக்கு இது ஓர் அருந் தொண்டாகும்.

உணவு உற்பத்தியில் நாம் அடைந்திருக்கும் வெற்றியே இந்த அரசு வேளாண்மைத் துறையில் காட்டிவரும் கவனத்திற்குச் சரியான எடுத்துக் காட்டாகும்.



சேலம் இரும்பாலை மூலம் பல துணைத் தொழில்கள் உருவாக முடியும். சேலம் இரும்பாலையைத் தனி வாரியத்தின்கீழ்க் கொண்டு வரவும், இதில் தமிழகத்திற்குப் பங்கு தரும்படியும் மைய அரசை வலியுறுத்துவோம். வெற்றியும் பெறுவோம். உருக்கு தேவையான அளவு இல்லாத காரணத்தால் தமிழகத்தில் பாதிக்கப்பட்ட சிறு தொழில்களின் குறை இனி மேல் இருக்காது!



மைசூர் மாநிலத்தின் அணைக்கட்டுத் திட்டங்கள், காவிரியின் கீழுள்ள பாசன நலனிற்குப் பெரிதும் தீங்கிழைக்கும் என அஞ்சுகிறோம். மாநிலங்களுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விதித்துறைகளுக்கு உட்பட்டு இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுமென்று உறுதியளிக்க மைசூர் அரசு விரும்பவில்லை. மைசூர் அரசின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கையில் எழுந்த பாதகமான சூழ்நிலையை எண்ணி, 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான நீர்த் தகராறுகள் சட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கும் மைசூர் அரசுக்குமிடையேயுள்ள தகராறை நடுவர் மன்றத்துக்கு விடுமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.







1948-ஆம் ஆண்டு தொழிலாளர் நல ஈட்டுறுதிச் சட்டத்தையொட்டி தமிழ் நாட்டில் 1955 ஜனவரி தொடக்கத்தில் செயல்படுத்தப்பட்ட தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம், தற்போது இம் மாநிலத்தில் தருமபுரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் செயலில் உள்ளது. இத் திட்டம், மாநிலத்தில் பெரும்பாலான பெரிய தொழில் பகுதிகளைக் கொண்ட 33 இடங்களில் தற்போது செயலில் உள்ளது. 10,127 ஈட்டுறுதி செய்து கொண்டவர்கள். 3,46,447 குடும்பத்தில் அடங்கி உள்ள 13,95,915 பேர்களுக்குப் பயனளிக்கும் பொருட்டு அரசுக்குச் சொந்தமான 85 அரசு மருந்தகங்கள், ஒன்பது வலம் வரும் மருந்தகங்கள், தொழிலாளர் பயனுக்கான 5 மருந்தகங்கள், மூன்று பகுதி நேர தனி மருத்துவ மனைகள், மாநில முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த அரசின் விடாமுயற்சியின் பலனாக மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் ரூ 210 லட்சம் செலவில் தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகம் ஒன்றை அமைக்க இந்தியா முன் வந்தது.

அரசினால் வகை செய்யப்பட்ட மீன்பிடி வசதிகளின் பயனாக 1970 சனவரி முடிய தமிழ் நாட்டின் துறைமுகங்களிலிருந்து ரூ 2.04 கோடி மதிப்புள்ள மீன் ஏற்றுமதி செய்யப்பட்டது மற்றொரு சாதனையாகும். இதில் ரூ 1.3 கோடி பெறுமானமுள்ள கருவாடும், ரூ 0.81 கோடி பெறுமானமுள்ள உறைய வைக்கப்பட்ட கூனி இறால், சிங்கி இறால் மீன் வகைகளும் பெச்-டி-மெ (Beche-de-mes) சுறுமீன் துடுப்புகளும், மீன் இரைப்பைகளும், தவளைக் கால்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது நமது அரசு. மே தினத்தை ஊதியத்துடன் அமைந்த விடுமுறை நாளாக்கியிருக்கிறது. பொது மக்கள், தங்களது கடமையை உணர்ந்து பணியாற்ற வேண்டும் என்று அண்ணா அவர்கள் கொண்டிருந்த எண்ணத்தைச் சீரணியினரின் துணை கொண்டு நிறைவேற்றி வருகிறது இந்த அரசு.







ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் உள்ள சின்னஞ் சிறு விவசாயிகளும் பலன் பெற வேண்டும் என்ற நோக்குடன், நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகத்தைத் தமிழகத்தில் துவக்கியுள்ளோம். இந்தியாவில் வேறு எங்கும் இது போன்ற நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம் கிடையாது; தமிழகத்தில்தான் உண்டு!

சமயச் சார்புள்ள அரசாக இருப்பினும் அல்லது சமய நெறி முறையைப் பகுத்தறிவுக் கண்ணோடு அணுகும் அரசாக இருப்பினும், கோயில்களின் நிதி தவருகப் பயன்படுவதைத் தடுத்தே ஆகவேண்டும்! வழிபாட்டு முறைகளில் தலையிடாமல் வழிபாடு ஒழுங்காக நடந்து வர வகைசெய்வதும் இந்த அரசின் தொண்டு.

அகதிகளைக் குடியேற்றுவதற்காகத் திருச்சி மாவட்டத்தில் 1,200 ஹெக்டேர் பரப்புக்குமேல் நிலத்தை அரசு ஏற்கனவே ஒப்படைத்தது. இலங்கை அகதிகளைக் குடியேற்றி, தென்னை வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர், திருவாடானை வட்டங்களிலும் உள்ள காட்டுப் பகுதிகளையும் அரசு ஒப்படைத்தது.

முன்னாள் ஊராட்சிக் காடுகள் மீட்புக்காகவும், முன்னாள் ஜமீன் காடுகளை ஏற்று நிர்வகித்து வரவும், முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாட்டம் செலுத்தப்பட்டது. மென் மரங்கள், வாட்டில், கற்பூரத் தைல மரங்கள் கொண்ட தோட்டங்களும் வளர்க்கப்பட்டன.

தமிழக முதல்வர் எழுதும்

# இனியவை இருபது



## 13. பாரிஸ் நகரின் பின்னணி

சூரிக் நகரிலிருந்து சுமார் ஒரு மணி நேரத்திற்குள் விமானம் பாரிஸ் நகர் வந்தடைந்தது. விமான நிலையத்தில் நம் தாயகத்தின் மக்களும், இந்திய 'தூதரகத்தினரும், ஏர் இந்தியா அதிகாரிகளும் பிரெஞ்சு அரசின் அதிகாரிகளும் வரவேற்றனர். அங்கிருந்து ''ஓட்டல் ஜார்ஜ்'' என்னும் விடுதிக்குச் சென்றோம்.

பாரிஸ் நகரம் 'உலகத்தின் இன்பபுரி'யாகும். நாடகம், நாட்டியம் போன்ற கலைகளுக்கு இன்றும் தாயகமாகத் திகழ்வதாகும். ஓவியம் முதல் ஒப்பனைக் கலை வரை, பாரிஸ் நகரக் கலைஞர்கள் உருவாக்குகின்ற பாணிகள் பாரெங்கும் பரவுகின்றன.

ரோமுக்கொரு டைபர், பான் நகருக்கொரு ரைன், லண்டனுக்கொரு தேம்ஸ், எகிப்திற்கு ஒரு நைல், (சென்னைக்கொரு கூவம்) என்பது போலப் பாரிஸ் நகரின் மத்தியில் சைன் நதி ஓடுகிறது. அதன் பளிங்கு நீரோட்டமும் அதில் உல்லாசப் படகுகள் மிதந்து செல்லும் காட்சியும் ரசிகத் தன்மையற்றவனையும் ரசிகனுக்கிவிடும்.

ஓங்கி வளர்ந்த அழகான கட்டடங்கள் நிரம்ப உண்டு பாரிஸ் நகரில். ரோம் நகருக்கு முசோலினி எழில் கூட்டியதைப் போல, பாரிஸ் நகரைப் பெரிதும் உருவாக்கியவன் மூன்ரும் நெப்போலியன்.

இரண்டாம் உலகப் போரின் போது இந்த எழில் நகரம் தாக்குதலுக்கு ஆளாகித் தகர்ந்துபோகும் நிலைவந்தது. பாரிஸ் அழிவதை எண்ணிப் பார்த்திடவும் சகியாத ஆட்சியாளர்கள், ஜெர்மனித் துருப்புகள், பாரிசுக்குள் தடையின்றி நுழையலாமென்றும், அதனை அழித்துக் கைப்பற்ற வேண்டும் என்ற அவசியமில்லை என்றும் அறிவிக்கவே, பாரிஸ் நகரம் பழுதுபடாமல் தப்பியது. நான்கு ஆண்டுகள் இட்லரின் துருப்புகள் பாரிசை நோக்கி நெருங்கி வந்த வேளையில் கிளர்ந்தெழுந்த பொது மக்களால் மீட்கப்பட்டது.

விண்ணினை முட்டும் மாளிகைகள்; அவற்றில் அருமையான வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்கள்; ஆனுல் அவற்றின் நேர்த்தியை அனுபவித்திட முடியாத உயரத்தில் உள்ளன. ''அவையெல்லாம் வானவீதியில் செல்லும் தேவதைகள் பார்த்து ரசிக்க அமைக்கப்பட்டவை; நாம் கண்டு களிக்க அல்ல'' என்று அங்கு வேடிக்கையாகச் சொல்லப்படுகிறது. அத்தகைய கட்டடங்களில் ஒன்றுதான் 'நாட்டர் டாம்' ஆலயம். நாட்டர் டாம் என்ருல் ''நமது தலைவி'' என்று பொருள். அது கன்னி மேரியைக் குறிக்கிறது. சைன் நதியின் இடையே உள்ள தீவுத்திட்டில் இந்த ஆலயம் அமைந்திருக்கிறது. *1163*-ஆம் ஆண்டில் இதனைக் கட்ட ஆரம்பித்தார்களாம். *1240*-ஆம் ஆண்டுதான் கட்டடப் பணி முடிவுற்றதாம். *430* அடி நீளமும் *170* அடி அகலமும் கொண்ட இந்த அற்புதக் கோயிலைப் பின்னணியாகக் கொண்டுதான் விக்டர் ஹியூகோ 'நாட்டர் டாம் கூனன்' (Hunchback of Notre dame) என்னும் அழியாத காவியத்தை எழுதியிருக்கிருர்.

''இந்திய மாளிகை''யில் (India House) இந்திய மாணவர்கள் எனக்கு வரவேற்பு ஒன்றினை நல்கினர். அவர்களில் பெரும்பாலோர் தமிழர்களாக இருக்கக் கண்டேன்.



நாட்டர்டாம் கோயில்

மாணவர்களுடன் இந்தியக் குடும்பங்களும் ஒன்று சேர்ந்து வரவேற்றனர். பாரிஸ் மண்ணில் பல தமிழ்க் குடும்பங்களைக் கண்டதில் எனக்குப் பெருமகிழ்ச்சி.

தமிழ் பரப்பிடத் தளராது தொண்டாற்றிவரும் தனிநாயகம் அடிகளும், பேராசிரியர் பில்லியோசாவும், இந்திய மாளிகையின் இயக்குநரும், இந்தியத் தூதரகச் செயலாளர் திரு. புஷ்பதாஸ் போன்ற பலரும் அங்கு கூடியிருந்தனர். மாணவர் தலைவரின் மணியான தமிழ்ப் பேச்சு என் செவிகளில் செந்தேனைப் பாய்ந்தது.

இந்திய உணவு வகைகளை எங்களுக்கு அளிக்க வேண்டும் என்ற பேரார்வத்தால் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் சென்று கருத்துடன் கல்வி பயிலும் அந்த மாணவ மணிகள் தாங்களே சமைத்த உணவை எங்களுக்கும், வந்திருந்த பாரிஸ் நகர நண்பர்களுக்கும் பரிமாறினர்.

''வெய்தாய் நறுவிதாய்
வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி
நிறையிட்டுப் பொய்யாய்
அடகென்று சொல்லி
அமுதத்தை இட்டார்
கடகஞ் செறியாதோ கைக்கு''

என்று அங்கவை சங்கவை என்பார் வீட்டில், இலைக்கறி உண்டபோது, ஔவையார் பாடியதாக உள்ள பாடல் என் நினைவிற்கு உடனே வந்தது.

விருந்துண்ட பின்னர் விக்டர் ஹியூகோ வாழ்ந்த வீட்டைப் பார்க்கக் கிளம்பினோம். ''விக்டர் ஹியூகோ இங்குதான் வாழ்ந்தான்'' என்று பலகை ஒன்று எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் என் உள்ளமும் உடலும் சிலிர்த்தன. அமைதியான சூழ்நிலையில் எளிமையான தோற்றமுடைய அந்த வீடு விக்டர் ஹியூகோவின் புகழை இன்றும் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

விக்டர் ஹியூகோ 1802-ஆம் ஆண்டு பிறந்தான். ஜே. எல். எஸ். ஹியூகோ என்பது அவன் தந்தையின் பெயர். சோஃபை என்பது அவன் தாயின் பெயர். இளம் வயதிலேயே அவன் சிறப்புமிக்க கவிதைகளை எழுதினான். தன்னுடைய உணர்ச்சிமிக்க கவிகளால் பிரெஞ்சு மக்களைக் கவர்ந்த அவன், 'பிரெஞ்சு நாட்டு இளவல்களின் தலைவன்' எனப் பெயர் பெற்றான். ஆரம்பத்தில் முடியாட்சியில் அவனுக்கு நம்பிக்கை இருந்தபோதிலும் பின்னர் சம உரிமை பெற்ற சமுதாயம் அமைய வேண்டுமென்று ஆசை கொண்டான். பிரெஞ்சு நாடாளுமன்ற அங்கத்தினனாகச் சில ஆண்டு காலம் பணியாற்றினான்.

மூன்றாவது நெப்போலியன் அதிகாரத்திற்கு வந்தபொழுது, அவனால் விரட்டப்பட்டு ஜெர்ஸி என்ற இடத்தில் சுமார் பதினெட்டு ஆண்டுகள் தனிமையில் வாழ்க்கை நடத்தினான். அவனது 'ஷார்டிமென்ட்ஸ்' என்ற நூல் ஏகாதிபத்தியத்தை வன்மையாகத் தாக்கும் கருத்துக்கள் அடங்கிய ஒன்றாகும். 1856-ம் ஆண்டு, தான் எழுதிய கவிதைகளில், தனது மகளும் மருமகளும் நீரில் மூழ்கி இறந்த சோகக் கதையை உணர்ச்சிப் பிழம்பாக வடித்தெடுத்திருக்கிறான் ஹியூகோ. மகா கவியானாலும் பாசத்திற்கு அடிமைதானே! நன்கு வாழ்ந்த மகளும் மருமகளும் காலத்தின் கோலத்தால் மாண்டதை உணர்ச்சிப் பெருக்கோடு எழுதியுள்ளான்.

பாரி மலை பறிபோன ஒரு திங்களுக்குப் பின்னர் பௌர்ணமி நிலவைப் பார்த்துப் பாரி மகளிர், சென்ற திங்களில் தாங்கள் இருந்த நிலைமையையும், இந்தத் திங்களில் தாங்கள் இருக்கின்ற நிலைமையையும் எண்ணிப் பார்த்து,

''அற்றைத் திங்கள்
அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையேம்
எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள்
இவ்வெண் நிலவில்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்
யாம் எந்தையும் இலமே''

என்ற அவலச்சுவை நிரம்பிய புறநானூற்றுப் பாடலும் அதனைத் தொடர்ந்து நினைவிற்கு வந்தது.

அரசியல் வாழ்வில் தன்னை ஈடு

படுத்திக் கொள்பவன் — கவிதை, காவியம் என்று தன் வாழ்க்கையைச் செலவிடுபவன் — இவர்களுக்குப் பொது வாழ்விலே எதிர்ப்புகளும் சொந்த வாழ்க்கையில் சிக்கல்களும் ஏற்படுவது உலகின் மரபு போலும்!

விக்டர் ஹியூகோவின் காதல் வாழ்வில் கடும் புயல் வீசிற்று. தான் மனமார நேசித்த ''ஆடில்'' என்ற பெண்ணை மணம் செய்துகொள்ளப் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை. தந்தை, நெப்போலியனின் ராணுவத்தில் பெரிய அதிகாரி. தாய் பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்தவள். ஆகவே, சாதாரணக் குடும்பத்தில் பிறந்த ''ஆடில்'' என்ற பெண்ணை மணக்கச் சம்மதம் தர மறுத்துவிட்டனர்.

உண்மையான காதலுக்குத் தோல்வியில்லை; எதிர்ப்புகள் தடைப்படுத்தியதும் கிடையாது. உண்மையான காதலின் வலிவு ரோமியோ—ஜூலியட், லைலா—மஜ்னு, அமராவதி—அம்பிகாபதி போன்றோர்களின் வாழ்க்கைக் காவியங்களில் பின்னிக் கிடக்கின்றது.

ஹியூகோவும் தான் காதலித்த பெண்ணையே மணந்து தீருவது என்று கடைசிவரை காத்திருந்தான்! அவன், தன் காதலிக்கு எழுதிய கடிதங்கள் காதலின் தூய தன்மையினை உணர்த்தும் இறவாக் காவியங்களாக அமைந்துள்ளன.

இலக்கிய நயம்பெற்ற நாடகங்களையும் சமுதாயச் சிக்கல்களைப்பற்றிய நாவல்களையும் தேச பக்தியூட்டும் பாடல்களையும் அவன் எழுதியுள்ளான்.

அவன் எழுதிய நாடகங்கள், சீர்திருத்தத்தைப் பின்னணியாகக் கொண்டும், சம தர்மத்தை அடிப்படையாக வைத்தும், சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளால் ஏழை மக்கள் படும் அவதிகளைச் சித்திரித்தும் காட்டுகின்றன. (Les Miserables) ஏழை படும் பாடு என்ற அவனது நூலே அதற்கு எடுத்துக் காட்டு; அது உலகத்திலுள்ள தலைசிறந்த நாவல்களில் ஒன்று என்று போற்றப்படுவதில் வியப்பு ஒன்றுமில்லை.

விக்டர் ஹியூகோவின் கவிதை, நாடகம், நாவல் இவை யாவும் பெரும்பாலும் இலக்கியத் தன்மை வாய்ந்தவை.

ஆனால் ஜெனீவாவில் பிறந்து, பிரான்சு நாட்டில் வாழ்ந்த ரூசோவின் எழுத்து, வறுமையால் வாடிய பிரெஞ்சு மக்களுக்கு அருமருந்தாக அமைந்தது; உணர்ச்சியை ஊட்டிற்று; உத்வேகத்தைத் தூண்டிற்று; கோழையையும் வீரனாக்கியது; பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டது.

''பிறந்தபொழுதே பெற்ற தாய் கண்ணை மூடிவிட்டாள். உற்ற தந்தையோ இந்த மண்ணைவிட்டே ஓடிவிட்டான். இன்னும் எத்தனை பேர் தலையை உருட்டப் போகிறதோ இந்தக் குழந்தை?'' என்றனர் ரூசோவைப் பார்த்து

உண்மைதான்!

அவன் பிறந்ததால்—

பின்னாளில், பிரான்சில் பலரின் தலைகள் உருண்டன.

''புரட்சியா இது? கலகமல்லவா?'' என்று கூறிய அரசனின் ஆதிக்கத் தலை உருண்டது.

''ரொட்டி கிடைக்கவில்லையென்றால் கேக் சாப்பிடுவதுதானே'' என்று கேட்ட அரசியின் ஆணவத் தலை உருண்டது.

''நத்திக் கிடக்கும் நாய்களுக்கு நாடாளும் உரிமையா?'' என்று வினவிய பிரபுக்களின் அதிகாரத் தலைகள் உருண்டன.

பதினாறாம் லூயியின் ஆட்சியின் கருவறுத்த பயங்கரமான புரட்சிக்கு வித்தாக இருந்த ரூசோ, தன் பதினாறாம் ஆண்டிலேயே தாய்நாட்டைவிட்டுக் கிளம்பிவிட்டான்.

ஏற்றுக் கொண்டிருந்த தொழிலை விட்டு விலகி, எங்கெல்லாமோ அலைந்து இறுதியில் 1741-ல் பாரிஸ் வந்து சேர்ந்தான்.

அங்கு திரும்பிய திக்கெல்லாம் அவன் கண்ட பேதங்கள் அவனுடைய நெஞ்சைப் பிளந்தன. வளமை சிலருக்கும் வறுமை பலருக்கும் என்று நிலவி வந்த கொடுமை, ரூசோவைச் சிந்திக்க வைத்தது.

செல்வச் செழிப்பில் மிதந்துவந்த பிரபுக்கள் வரிகட்டும் தேவையின்றிச் செருக்குடன் வாழ்ந்து வந்தனர். அவர்களின் சுரண்டலால் துவண்டு கிடந்த ஏழைகள் வரிச் சுமையையும் தங்கள் மெலிந்த தோளில் சுமந்து வாடினர்.

இவற்றையெல்லாம் கண்ட ரூசோவின் நெஞ்சம் ''உரிமைகளுடன் பிறந்த மனிதன் எங்கும் தளையுண்டு தவிக்கிறானே'' என்று குமுறியது. ''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்'' என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் முழங்கிய வள்ளுவனின் குரல் பதினெட்டாம் நூற்றாண்டில் ரூசோவின் கருத்தாக வடிவு கொண்டபொழுது பிரான்சு திடுக்கிட்டது.

அவனின் கருத்துக் குவியலான சமுதாய ஒப்பந்தம் (Social Contract) என்ற நூலைக் கண்டு பிரெஞ்சு அரசு நடுங்கிற்று; மடாலயங்கள் மருண்டன; மன்னரும் பிரபுக்களும் திகைத்தனர்.

''மன்னன், மகேசனின் வடிவம்'' என்ற கருத்து மக்களை ஏமாற்றி வந்த காலம் அது. ஆனால் ஆட்சி என்பது ''ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் ஏற்படுகின்ற ஒப்பந்தம். ஆளப்படுவோர் விரும்பினால் ஆள்வோனை அடைக்கலாம்; அகற்றலாம்'' என்ற ரூசோவின் கருத்து மக்களின் மனத்தில் ஆழப் பதிந்தது.

''ஆண்டவனால் அனுப்பப்பட்ட அரசன் தவறு செய்தால்—அவனைக் கண்டிக்க நாம் யார்?'' என்று நடுங்கி வாழ்ந்த மக்கள் அந்தக் கனவு கலைந்து எழுந்தனர். பாவங்களைப் பொறுத்துக் கொண்டு பணிந்து வாழ்ந்த ஏழைகள், தங்கள் பழைமைப் பார்வையை அகற்றிவிட்டு, அரசனையும் சமயக் குருக்களையும், பிரபுக்களையும், புதிய கோணத்தில் பார்க்கத் தொடங்கினர். புத்துணர்ச்சி பெற்ற மக்களுக்கு ரூசோ மூன்று புதிய முழக்கங்களை வழங்கினான்.

சுதந்திரம்!

சமத்துவம்!

சகோதரத்துவம்!

ஆம்! இந்த மூன்று நாதங்களும் ஏழையரின் இதயத் துடிப்போடு இரண்டறக் கலந்து போயின. புரட்சி பூக்கின்ற தருணம் நெருங்கிக் கொண்டிருந்தது.

மக்களை அடக்குவதற்குப் பதினாறாம் லூயி படை திரட்டிக் கொண்டிருக்கிறான் என்ற சேதி பரவிற்று, பாரிசு நகர வீதிகளில்.

ஒடுக்கப்பட்டோர் திரண்டெழுந்தனர்!

குமுறிக் கொண்டிருந்த மக்கள் கொதித்தெழுந்தனர்!

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் முழக்கங்கள் எங்கணும் கேட்டன!



ஹியோகோ



ரூசோ

பல நாட்கள் பட்டினி கிடந்தவனுக்கு எப்படி வந்தது இந்தப் புது வேகம் என்று பிரபுக்கள் மருண்டு மனம் குலைந்து பாரிஸ் மண்ணை விட்டே ஓடும்வகையில், ஏழை எளியவர்களின் பட்டாளம் நகரத்தின் தெருக்கள் எங்கும் அலைமோதிற்று. புரட்சியாளருக்கு எதிராக நின்ற அத்தனை பேரையும் ''கில்லட்டினுக்கு''ப்பலியாக்கினர்.

இத்தாலிக்கு எழுச்சி ஊட்ட ஓர் மாஜினி இருந்தான்.

வழிநடத்த ஒரு கரிபால்டி இருந்தான்.

ஆனால் பிரான்சு நாட்டிற்கோ, ரூசோவின் வடிவில் ஒரு மாஜினி கிடைத்தான். ஆனால் அவர்களின் பார்வையில் ஒரு கரிபால்டி அகப்படவில்லை.

1789-ல் பிரெஞ்சுப் புரட்சி ஆரம்பமானது முதல் 1804-ல் நெப்போலியன் ''ஐரோப்பாவின் சக்கரவர்த்தி'' என்று தன்னை முடிசூட்டிக் கொண்டது வரை பிரெஞ்சு நாட்டில் குழப்பமும், நிலையான ஆட்சியில்லாத ஒரு நிலைமையும் இருந்து வந்தது. நெப்போலியனுக்குப் பின்னர்தான், பிரெஞ்சு நாடு வேகமாக முன்னேறிற்று. வறுமையால் வாடிய மக்கள் வளம்பெற்று வாழத் தொடங்கினர்.

ஹியூகோவின் எழுத்து வன்மை பிரெஞ்சு நாட்டின் இலக்கியத்திற்குப் பெரிதும் பணி செய்தது என்றால், ரூசோவின் எழுத்து ஒரு புரட்சித் தீயையே மூட்டியது என்ற எண்ணத்தோடு மீண்டும் ஒருமுறை ஹியூகோ பெருமகனார் வாழ்ந்த வீட்டைப் பார்த்துப் பெருமூச்சு விட்டேன் — பின்னர் நாங்கள் தங்கியிருந்த விடுதிக்குத் திரும்பினோம்; பொழுதும் சாய்ந்தது.

(தொடரும்)

உழவுத் தொழிலே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மூலாதாரமானதாகும்.

தமிழ்நாட்டின் மொத்த வருவாயில் ஏறத்தாழ 41 சத அளவை வேளாண்மையும், வேளாண்மை அடிப்படையிலான தொழில்களுமே அளிக்கின்றன. வேளாண்மையும், வேளாண்மை அடிப்படையான தொழில்களுமே தமிழ்நாட்டின் மக்கட் தொகையில் 60 சத அளவுக்கு மேல் வேலை வாய்ப்புகளைக் கொடுத்து வருகின்றன.

வேளாண்மை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள சாதனைகளைப் பொறுத்தே, பொருளாதாரத் திட்டங்களின் வெற்றி அமையும். வேளாண்மைப் பொருள்களின் நிலையான விலைவாசிகளே நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும். எனவேதான், இன்றையத் தமிழ்நாடு அரசு வேளாண்மை வளர்ச்சியில் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது.

ஆட்சிப் பொறுப்பை 1967 மார்ச் மாதத்தில் ஏற்றுக் கொண்டபொழுது தமிழ் நாட்டில் உணவு நிலைமை மிகவும் கவலைக் கிடமாக இருந்தது. பொதுமக்களுக்கு உணவுப் பங்கீட்டு முறை மூலம் வழங்கப்பட்ட உணவு தானியங்களின் அளவு மிகவும் குறைவாகவே இருந்தது. சர்க்கரை போன்ற மிகவும் இன்றியமையாத பொருள்களின் விலை விஷம்போல நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே இருந்தது. எனவே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அமைச்சரவை உணவு நிலைமையில் திருப்தியான நிலைமை ஏற்பட உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் தீவிரக் கவனம் செலுத்த ஆரம்பித்தது.

. கோவில்பட்டிப் பகுதியில் முன்னோடித் திட்டமாக மானாவாரி சாகுபடித் திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

. சென்ற ஆண்டின் நவரைப் பட்டத்தில் ஐ.ஆர். 8 நெல் பயிரிடும் தீவிரத் திட்டத்தின் கீழ் செங்கற்பட்டு, வடஆர்க்காடு தென் ஆர்க்காடு மாவட்டங்களில் 3.5 லட்சம் ஏக்கர்களில் ஐ.ஆர். 8 நெல் பயிரிடத் திட்டமிடப்பட்டது. ஆனால் அந்த மூன்று மாவட்டங்களிலும் 6.15 லட்சம் ஏக்கர்களில் ஐ.ஆர். 8 நெல் பயிரிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஐ.ஆர். 8 நெல் பயிரிடுபவர்களுக்குத் தேவையான விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி பூஞ்சாள மருந்துகள் ஆகியவை லாரிகளில் ஏற்றிச் செல்லப்பட்டு உழவர்களின் வீட்டு வாசலிலேயே விநியோகம் செய்யப்பட்டன.

''உழவர்களைத் தேடிச் செல்லும் கிடங்காக'' கிராமங்கள் தோறும் லாரி, மற்ற வாகனங்கள் பயன் படுத்தப்பட்டது வரலாறு காணாத புதுமையாகும்.

மண்வளப் பாதுகாப்பில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது.

ஏற்றுமதிக்கேற்ற பூக்களை உற்பத்தி செய்யும் திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

சமவெளிகளிலும் கோதுமை, உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

வாழைச் சாகுபடியில் தீவிரக் கவனம் செலுத்தி உற்பத்தியைப் பெருக்குகிறது. வாழைப்பழம் ஏற்றுமதி செய்யவும் ஆவன செய்யப் பட்டு வருகிறது.

முந்திரிச் சாகுபடிப் பரப்பை ஆண்டிற்காண்டு அதிகப்படுத்தி வருகிறது.

வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் (1970-71) பின்கண்டவாறு 67 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யத் திட்டமிட்டு வருகிறது.

**அரிசி**

49.00 லட்சம் மெட்ரிக் டன்

**சிறு தானியங்கள் மற்றும் ஏனைய தானியங்கள்**

16.50 லட்சம் மெட்ரிக் டன்

**பருப்பு வகைகள்**

1.50 லட்சம் மெட்ரிக் டன்

**மொத்தம்**

67.00 லட்சம் மெட்ரிக் டன்






# சிறையிலும் செம்மை!

இன்றைய தமிழ்நாடு அரசு, கைதிகளுக்கும் பல சலுகைகளை அளித்து வருகிறது. கைதிகளின் நலம் பேணுவதற்காகச் சிறைச்சாலைத் துறையின் மூலமாகப் பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. சிறைச்சாலைத் துறையில் 1967-68 முதல் ஏற்பட்டுள்ள சாதனைகள் பலவாயினும் அவற்றில் முக்கியமானவற்றை மட்டும் ஈண்டுக் குறிப்பிட்டுள்ளோம்.

**1967-68**

'சி' வகுப்புக் கைதிகளும் தங்கள் சொந்தச் செலவில் சோப்பு, எண்ணெய், பற்பசை, பல்துலக்கும் தூரிகை, பவுடர் ஆகியவைகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர். 'ஏ' வகுப்பு 'பி' வகுப்புக் கைதிகளைப் போல் 'சி' வகுப்புக் கைதிகளும் கடிதத் தொடர்பு கொள்ளவும், வெளியிலிருந்து வருபவர்களை நேரில் காணவும் அனுமதிக்கப்பட்டனர். இதன் காரணமாகக் கைதிகளிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட்டன.

சிறைச்சாலையின் கண்காணிப்பாளரால் அனுமதிக்கப்பட்ட செய்திப் பத்திரிகைகளையும், வார, மாத இதழ்களையும் படிக்க 'ஏ' வகுப்பு 'பி' வகுப்புக் கைதிகள் அனுமதிக்கப்பட்டனர்.

மத்திய சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கும், பாஸ்டல் பள்ளிக் கூடத்தில் உள்ளவர்களுக்கும் பொங்கல் நாளன்று அதிக அளவு உணவு அளிக்கப்பட்டது.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை யொட்டிக் கைதிகளின் தண்டனைக் காலங்கள் வெவ்வேறு தர அளவில் குறைக்கப்பட்டன. இதனால் 2,784 கைதிகள் விடுதலை யடைந்ததுடன், 11,488 கைதிகள் பயனடைந்துள்ளனர். சிறைக்கைதிகள் எழுதிய 'சிறைதரும் தேன் கவிதை' என்ற நூல் வெளியிடப் பட்டது.

பெண் கைதிகளின் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக வேலூரில் ஒரு குழந்தை வளர்க்குமிடமும் ஒரு குழந்தை காப்பிடமும் கட்டப் பட்டன.

**1968-69**

கோடைக் காலத்தின் வெம்மையைத் தணித்துக் கொள்வதற்காகப் பனைமட்டை விசிறிகள் கைதிகளுக்கு வழங்கப்பட்டன.

கைதிகள் ஓய்வு நேரங்களில் கேரம், செஸ் விளையாட அனுமதிக்கப்பட்டனர்.

அரசின் செலவிலேயே அரசாங்கத் தேர்வுகளுக்குச் செல்ல, கைதிகள் அனுமதிக்கப்பட்டனர். பாஸ்டல் பள்ளிக்கூடத்திலுள்ளவர்கள் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர்.

எல்லா வகுப்புக் கைதிகளும் விரும்பும் வார, மாத இதழ்களை வாங்கிப் படிக்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவ்விதழ்கள் மதிப்பிற்குரியவைகளாக இருக்க வேண்டும். அரசாங்கச் செலவில் 100 கைதிகளுக்கு ஒரு பத்திரிகை வீதம் தினமணி, சுதேசமித்திரன், நவமணி ஆகிய பத்திரிகைகள் வழங்கப்பட்டன. இவ்வசதி துணை சிறைச்சாலைகளுக்கும் விரிவுபடுத்தப் பட்டது.

கைதிகள் பரிசுச் சீட்டுகள் வாங்க அனுமதிக்கப்பட்டனர். 3 கைதிகள் பரிசும் பெற்றுள்ளனர்.

பொங்கல் அன்று ஒவ்வொருவருக்கும் 50 பைசா செலவில் சிறப்பு உணவு அளிக்கப்பட்டது. இது, துணைச் சிறைச்சாலை, மத்திய சிறைச்சாலை, பாஸ்டல் பள்ளிக் கூடம் ஆகியவைகளுக்கும் நிரந்தரமாக்கப்பட்டது.

காந்தி நூற்றாண்டு விழாவை யொட்டிக் கைதிகளின் தண்டனைக் காலங்கள் பல்வேறு தர அளவில் குறைக்கப்பட்டன. இதனால் 2,687 கைதிகள் விடுதலை செய்யப்பட்டதுடன், 9,561 கைதிகள் பயனடைந்தனர். 12-11-68க்கு முன்பு மரண தண்டனை பெற்றவர்கள் அனைவருக்கும் இந்திய அரசு முடிவின்படி, மரண தண்டனை நீக்கப்பட்டு, வாழ்நாள் தண்டனை அளிக்கப்பட்டது. இதனால் 111 கைதிகள் தூக்குமரத்தில் ஏற்றப்படுவதிலிருந்து தப்பினர்.

தொழுநோயால் பீடிக்கப்பட்ட கைதிகளைச் சேலத்திலிருந்து வேலூர் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டு, வேலூர் கிறுத்துவ மருத்துவக் கல்லூரி டாக்டர் செல்வபாண்டியன் மற்றும் அவருடைய உதவியாளர்களால் சிகிச்சை செய்யப்பட்டனர். தொழுநோயால் பீடிக்கப்பட்ட கைதிகளுக்கு காலணிகள் வழங்கப் பட்டன. 12 பேர் முழு அளவில் தொழுநோயிலிருந்து குணமடைந்தனர்.




தஞ்சாவூருக்கு அருகில் நீலகிரி என்ற இடத்தில் 114 ஏக்கர் திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்கப்பட்டது. திறந்தவெளிச் சிறைச்சாலையில் குறைந்த அளவு கண்காணிப்பே இருந்தாலும் இதுவரை யாரும் தப்பித்துச் செல்லவில்லை. அங்கு கைதிகள் கிணறு வெட்டுதல், நிலம் திருத்தல், உழுதல், பயிரிடுதல் ஆகிய பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர். அங்குள்ள கைதிகளுக்கு நாளொன்றுக்கு 50 கிராம் அரிசி அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு நாளொன்றுக்கு 25 பைசா கூலியும் கொடுக்கப்படுகிறது. 6 நாள் வேலை செய்தால் ஒரு நாள் தண்டனைக் காலம் குறைகிறது. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக மாதமொன்றுக்கு 90 கிராம் நல்லெண்ணெய்யும் 45 கிராம் சீயக்காய்த் தூளும் கொடுக்கப்படுகின்றன.

சிறைச்சாலை நிர்வாகத்தை மேம்படுத்துவதற்குரிய ஆலோசனை கூறுவதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்கள் தங்கள் தங்கள் அலுவல் எல்லையில் உள்ள மத்திய சிறை, துணைச்சிறை, பாஸ்டல் பள்ளிக்கூடம் ஆகியவற்றைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

**1969-70**

1 சிறைச்சாலைத் துறையின் தொழிற்சாலைகளில் தரமான பொருள்களை உற்பத்தி செய்வதுடன் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக, அங்கு பணிபுரியும் எல்லாக் கைதிகளும் சிகரெட், பீடி அல்லது புகையிலை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர். முன்பு அனுமதிக்கப்பட்ட அளவு குறைவாக இருந்ததால், அது உயர்த்தப்பட்டது.

2. கல்வி சம்பந்தமான ஒலி பரப்புகளைக் கேட்டுக் கைதிகளும் பயனடைய வேண்டும் என்பதற்காகக் கோயம்புத்தூர், சேலம், சென்னை மத்திய சிறைகளுக்குப் புதிய வானொலிப் பெட்டிகள் வாங்கப் பட்டன.

3. சிறைச்சாலைகளில் செய்யப்படும் மனைத் துணைப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக, நாட்டு மரங்களை வளமாக்கும் நிலையம் ஒன்று வாங்கப்பட்டது. நாட்டு மரங்களைத் தேக்கு மரங்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தியதால் திருச்சி மத்திய சிறையில் குறிப்பிடத்தகுந்த அளவு செலவு குறைந்தது.

4. புதுக்கோட்டையிலுள்ள பாஸ்டல் பள்ளிக்கூடத்திற்குப் புதிய தச்சுப் பட்டறை வாங்க ரூபாய் 36,000 அனுமதிக்கப்பட்டது.

5. சேலம் மத்திய சிறையில் உள்ள அலுமினியத் தொழிற்சாலைக்குச் சுழலும் கடைசல் பொறி வாங்கப்பட்டதால் அலுமினியப் பொருள்களின் உற்பத்தி விலை குறைந்ததுடன், உற்பத்தியும் பெருகியது.

6. முன்னாள் முதலமைச்சர் டாக்டர் அண்ணா அவர்களின் 61-வது பிறந்தநாள் விழாவையொட்டி 15-9-69 அன்று 15 ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் தண்டனை அனுபவித்தவர்கள் இரக்கம் காட்டும் குறிப்பாக விடுதலை செய்யப்பட்டனர். இதனால் 21 கைதிகள் பயனடைந்தனர்.

7. புதுக்கோட்டை பாஸ்டல் பள்ளிக்கூடத்தில் உள்ளவர்களில் சிலர், புதுக்கோட்டையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு நாள்தோறும் சென்று பயிற்சி பெற்றுத் திரும்ப அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்குப் புத்தகம் வாங்க ரூபாய் 54 - அனுமதிக்கப்பட்டது.

8. புதுக்கோட்டை பாஸ்டல் பள்ளிக்கூடம், சேலம், திருச்சி மத்திய சிறைகள், மற்றும் சில துணைச் சிறைச்சாலைகளில் நீரால் எளிதில் தூய்மைப்படுகிற கழிப்பிடம் கட்டுவதற்காக ரூபாய் 2,69,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. அவை கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

9. மூன்று திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் பண்ணை வேலை செய்துவரும் கைதிகளுக்கும், மாதவரம் பால்பண்ணையில் கிணறு தோண்டும் வேலையில் ஈடுபடும் கைதிகளுக்கும் தண்டனைக்குறைப்பு, கூலி, பீடிகள், எண்ணெய், சீயக்காய்த் தூள் முதலியன வழங்கப்பட்டன.

10. துணைச் சிறைச்சாலைகளில் உள்ள எல்லாக் கைதிகளும் தங்கள் சொந்தச் செலவில் சோப்பு, எண்ணெய், சிகரெட், பீடிகள், புகையிலை முதலியவைகள் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

**1970–71**

1. சிறைச்சாலைச் சமையற்கூடங்களில் பணிபுரியும் கைதிகளுக்கும் பீடி, சிகரெட், புகையிலை வாங்கிக் கொள்ளும் சலுகை அனுமதிக்கப்பட்டது.

2. துணைச் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்குத் தலைக்கு 28 கிராம் நல்லெண்ணெய், 28 கிராம் சீயக்காய்த் தூள் வீதம் மாதந்தோறும் அளிக்கப்படுகிறது.

3. எல்லா மத்திய சிறைச்சாலைகளிலும் உள்ள குற்றவாளிக் காவலர்களுக்குத் (Convict Warder) தனிச் சமையற் கூடமும், சாப்பிடும் இடமும் அளிக்கப்பட்டுள்ளன. அவை தொடர்ந்து நிரந்தரமாகவும் ஆக்கப்பட்டன.

4. மத்தியசிறை, துணைச் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் தங்கள் துணிகளைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு அரைபார் துணி சோப்பு வழங்கப்பட்டது.

5. சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு விலங்கிடுவதை மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டதாகக் கருதி, அம்முறை விலக்கப்பட்டது.

6. நீரினால் எளிதில் தூய்மைப்படுத்தப்படுகிற கழிப்பிடங்களை வேலூர், பாளையங்கோட்டை, கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைகளிலும், சேலம், கொக்கிரகுளம் ஆகிய இடங்களில் ஆண்களுக்காக உள்ள தனித்துணைச் சிறைச்சாலைகளிலும் 5 ஆண்டுகளில் படிப்படியாகக் கட்டி முடிக்க 2,28,200 ரூபாயும், சென்னை மத்திய சிறையில் 3 ஆண்டுகளில் படிப்படியாகக் கட்டி முடிக்க 3,20,000 ரூபாயும் தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. கடலூர் மத்திய சிறைச்சாலையில் ரூபாய் 60,000 செலவில் இவ்வகைக் கழிப்பிடங்களைக் கட்டும் திட்டம் அரசின் கவனிப்பில் உள்ளது.

7. வேலூர் மத்திய சிறையில் தொழு நோயால் பாதிக்கப்பட்ட கைதிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால் எல்லாச் சிறைச்சாலைகளிலும் உள்ள தொழுநோய் கைதிகளையும் வேலூர் மத்திய சிறைச்சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

8. மத்தியசிறை மற்றும் பாஸ்டல் பள்ளிக்கூடங்களுக்குச் சமையலாளர் நியமிக்க அனுமதிக்கப்பட்டனர்.

9. கைதிகளுக்குக் கல்வி வாய்ப்பினை ஏற்படுத்த வேலூர் மத்திய சிறையில் முதன் முதலாக இரவுப் பள்ளிக்கூடம் துவக்கப்பட்டது. படித்த குற்றவாளிகளை ஆசிரியர்களாக்கி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி மாலை 7.00 மணி முதல், 9.00 மணி வரை, இரவுப் பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தேர்வு நடத்தி, முடிவும் ஆய்வு செய்யப்படுகிறது.

10. சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலை அடைந்த முன்னாள் குற்றவாளிகளுக்கு அரசாங்கத்தில் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடாது என்று இருந்த தடையை அகற்றி, அவர்களுக்கு வேலை வாய்ப்பு நல்கி மறுவாழ்வு அளிக்கவேண்டுமென்பதற்காக, முன்னாள் குற்றவாளிகள் எந்த சூழ்நிலையில் குற்றம் செய்தார்கள் என்ற உண்மைகளின் அடிப்படையில் ஆய்ந்து, தகுந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க விதியைத் தளர்த்தலாம் என்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் முன்னாள் குற்றவாளிகள் அரசாங்க வேலைகளில் சேர்ந்து பணியாற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

---

## காவலர்களுக்கு முதலமைச்சர் விருது

**காவற்படையினரிடையே கடமை உணர்ச்சியை வளர்க்க வேண்டும் என்பதற்காக இன்றைய தமிழ்நாடு அரசு, வீரச்செயல் புரிந்த அல்லது தலைசிறந்த கடமையாற்றிய காவற்படையினருக்கு ரூபாய் 3000 வரை பணமுடிப்புடன் கூடிய 'தமிழ்நாடு முதலமைச்சர் காவல் விருது' (The Tamil Nadu Chief Minister's Police Medal) வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டில் தான் முதலமைச்சர் விருது அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.**

# காத்திட்டோம்!

# கால்நடைகளைக்



நமக்கு வேண்டிய பால், முட்டை, இறைச்சி, முதலிய இன்றியமையாத பொருள்களைக் கால்நடைகளிடமிருந்தே பெற்று வருகிறோம். அதுவும் குறிப்பாக, மாடுகள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான உழவு மாடுகளையும், தொழு எருவையும் வழங்கி உழவர்களின் தோழனாக விளங்கி வருகின்றன. சத்துள்ள உணவு பெற நாம் கால்நடைகளையே பெரிதும் நம்பி இருக்கிறோம். நம் தமிழ்நாட்டில் 1966-ஆம் ஆண்டுக் கணிப்பின்படி 1,08,59,345 மாடுகளும், 27,24,017 எருமை மாடுகளும், 1,03,92,024 ஆடுகளும், 4,74,871 பன்றிகளும், 1,12,25,890 கோழிகளும், 1,18,684 இதர கால்நடைகளும் (குதிரைகள், கழுதைகள், ஒட்டகங்கள் முதலியன) உள்ளன. ஆனால் அவைகளின் தரம் குன்றியிருப்பதால், நமக்குத் தேவையான பால், இறைச்சி, முட்டை ஆகியவைகள் கிடைக்கவில்லை. எனவே, சீரியமுறையில் இனக்கலப்பு முறைகளை மேற்கொள்வதன்மூலமும், தொத்துநோய்களைத் தடுப்பதன் மூலமும், கால்நடைகளின் தரத்தை உயர்த்தி பால், இறைச்சி, முட்டை ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்குவதில் கால்நடை பராமரிப்புத் துறை பெரும்பணி ஆற்றி வருகிறது.

இனக்கலப்பு மற்றும் உயர்வழி இனப்பெருக்கம் மூலம், வகைப்படுத்த முடியாத உள்ளூர் கால்நடைகளின் பால் கொடுக்கும் திறன், பாடுபடும் சக்தி ஆகியவற்றை மேம்படுத்துவதும், கால்நடைகளின் வியாதிகளை அதுவும் முக்கியமாக வெக்கை நோயைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்துவதன் மூலமாகப் பொதுமக்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் மிக்க முட்டை, இறைச்சி ஆகியவைகளின் உற்பத்தியை உயர்த்துவதும் கால்நடைப் பராமரிப்புத் துறையின் முக்கிய குறிக்கோள்களாகும்.

கால்நடைப் பராமரிப்புத்துறையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் துணைபுரியும் முகத்தான் 1967-ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தமிழ்நாடுஅரசு, கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சீரமைப்புச் செய்யச் சிறப்புக் குழுக்களை அமைத்தது. கால்நடை ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காகக் கால்நடைக் கல்லூரி முதல்வரின் பதவி, கூட்டு இயக்குநர் பதவி நிலைக்கு முதன் முதலாக உயர்த்தப்பட்டது.

கால்நடை உதவி மருத்துவர்களின் செயல் திறனை உயர்த்த வேண்டும் என்று கருதிய அரசு 1968-69-ஆம் ஆண்டில் கால்நடை உதவி மருத்துவர்கள் அனைவருக்கும் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் தகுதியை அளித்தது. அத்துடன் இரண்டாம் நிலை கால்நடை உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்பதற்காக, ஏறத்தாழ 420 பேர்களுக்கு முதல் நிலை கால்நடை உதவியாளர் பதவி கொடுக்கப்பட்டது. பதவி உயர்வு இல்லாமல் நீண்ட காலமாக முதல்நிலை கால்நடை உதவியாளர்களாகவே உள்ளவர்களுக்கு உயர்ந்த சம்பள விகிதம் அளிக்கப்பட்டது.

அடுத்து, 1969-70-ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு கால்நடைப் பராமரிப்புத் துறையிலிருந்து கால்நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பகுதியைத் தனியே பிரித்துக் கால்நடைப் பராமரிப்புத்துறை என்றும், கால்நடைக்கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறை என்றும் இரு தனித் துறைகளாக ஆக்கியது. அதே ஆண்டில் கால்நடைப்பராமரிப்புத்துறை, சீரமைப்புச்செய்யப்பட்டது. சீரமைப்பின் காரணமாக ஒவ்வொரு வட்டாரவளர்ச்சிப் பகுதிக்கும் 2 கால்நடை உதவி மருத்துவர்களின் பணி கிடைத்தது. கால்நடைகளின் நலம்பேணுவதில் தீவிரக் கவனம் செலுத்துவதற்காக 90 கால்நடை உதவி மருத்துவர் பதவிகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. கால்நடைப் பராமரிப்புத்துறையின் வரலாற்றிலேயே இது முதல் நிகழ்ச்சியாகும். மேலும் 158 கால்நடை உதவியாளர்கள் பதவியும் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

கால்நடைப் பராமரிப்புத்துறையில் 1-4-67 முதல் செப்டம்பர் 1970 வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் விவரம் வருமாறு :—

கால்நடைப் பராமரிப்புத்துறையின் நிர்வாகத்தில் உள்ள கால்நடைப் பண்ணைகளிலிருந்து இனப்பெருக்கம் செய்வதற்காக உற்பத்தி செய்து அனுப்பப்பட்ட பொலிகாளைகள்.

1967-68-ஆம் ஆண்டில் 100 பொலிகாளைகள்
1968-69-ஆம் ஆண்டில் 156 பொலிகாளைகள்
1969-70-ஆம் ஆண்டில் 136 பொலிகாளைகள்

கால்நடைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பாலின் அளவு.

1967-68-ஆம் ஆண்டில் 15,42,542 கிலோ
1968-69-ஆம் ஆண்டில் 14,79,503 கிலோ
1969-70-ஆம் ஆண்டில் 13,47,023 கிலோ
1970-71 (செப்டம்பர்வரை) 5,65,440 கிலோ

சென்ற மூன்று ஆண்டுகளில் கருத்தரிக்கச் செய்யப்பட்ட மாடுகள் 12,50,772.

கருத்தரிக்கச் செய்ததின் மூலமாகப் பிறந்த கன்றுக் குட்டிகளின் எண்ணிக்கை 2,19,441.

அலமாதியில் உள்ள பண்ணையில் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்ட பசுக்கள் 1,889.

ஆட்டுப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஆட்டுக் குட்டிகள் 9,260.

ஆட்டுப் பண்ணைகளில் இருந்து இனப்பெருக்கம் செய்வதற்காக அனுப்பப்பட்ட செம்மறியாட்டுக் கிடாக்கள் 5,639.

ஆட்டுப் பண்ணையிலிருந்து விற்கப்பட்ட செம்மறி ஆடுகள் 4,525.

இனப்பெருக்கம் செய்வதற்காக விற்கப்பட்ட பன்றிகள் 3,789.

கோழி இனப்பெருக்க நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள் (ஆண்டு வாரியாக)

1967-68-ஆம் ஆண்டில் 25,52,823 முட்டைகள்
1968-69-ஆம் ஆண்டில் 37,13,786 ,,
1969-70-ஆம் ஆண்டில் 35,48,254 ,,
1970-71 (செப்டம்பர் வரை), 18,03.111 ,,

மேற்படி முட்டைகளிலிருந்து, கோழிக்குஞ்சு உற்பத்தி செய்வதற்காகத் தேர்ந்தெடுத்து விற்ற முட்டைகளின் எண்ணிக்கை 3,21,429.

உற்பத்தி செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகள் 5,84,433.

இனப்பெருக்கம் செய்வதற்காக விற்கப்பட்ட கோழிக்குஞ்சுகள் 3,17,166.

கோழிகளுக்கான தீவனம் உற்பத்தி செய்து லாப நட்டமின்றி விற்ற அளவு 3,789 மெட்ரிக் டன்.

கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக 1966-67-ல் இருந்த கால்நடை மருந்தகங்கள் 272.

ஆனல், தற்பொழுது (1970-71) உள்ள கால்நடை மருந்தகங்கள் 466.

இதன் காரணமாகக் கிராமப்புறங்களிலும் கால்நடைகளின் நலம் பேணப்படுகிறது.

அம்மை மற்றும் தடுப்பு ஊசி போடப்பட்ட கால்நடைகள் (ஆண்டு வாரியாக)

| | |
|---|---|
| 1967-68 | 22,90,800 |
| 1968-69 | 81,67,949 |
| 1969-70 | 61,26,480 |
| 1970-71 (செப்டம்பர்வரை) | 27,83,298 |

சிகிச்சை செய்யப்பட்ட கால்நடைகள் (ஆண்டு வாரியாக)

| | |
|---|---|
| 1967-68 | 12,14,189 |
| 1968-69 | 22,67,634 |
| 1969-70 | 19,35,814 |
| 1970-71 (செப்டம்பர் வரை) | 10,59,478 |

கால்நடைப் பராமரிப்புத்துறைமூலம் காயடிக்கப்பட்ட கன்றுக்குட்டிகளின் மொத்த எண்ணிக்கை 8,65,584.

பரிசோதனைச் சாலைகளில் பரிசோதனை செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை 2,44,751.

வெக்கை நோயை அறவே ஒழிப்பதற்கு 3 தடுப்பு நிலையங்களையும், 2 கண்காணிப்புக் குழுக்களையும் அமைத்து இந்த ஆண்டுமுதல் 3 ஆண்டுக்காலம் பணிபுரிய ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 7.72 இலட்சம்.

இப்படிப் பல்வேறு சாதனைகளை நிறைவேற்றிக் கால்நடைகளின் நலம் பேணுவதுடன், தமிழ்நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழவும் வழிசெய்து வருகிறது கால்நடைப் பராமரிப்புத்துறை.

# பால் பெருகியது

உழவர் சமுதாயத்திற்குத் துணை வருவாய் கிடைக்கச் செய்ய வேண்டும், சமுதாயத்தின் எல்லா வகுப்பினருக்கும் நியாயமான விலையில் நல்ல பால் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற இரட்டைக் குறிக்கோளுடன் கிராமப்புறங்களில் பால் உற்பத்தியை மிகுதியாக்கப் பால்பண்ணைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இக்குறிக்கோள்கள் சென்னை, மதுரை பால்பண்ணைகளின் மூலம் நிறைவேறி வருகின்றன. இவ்விரு பால்பண்ணைத் திட்டங்களுக்கும், கூட்டுறவுத் துறையினால் நிர்வகிக்கப்படும் பால் பண்ணைகள் துணை செய்கின்றன. சென்னை, மதுரை பால்வழங்கும் திட்டங்களில் 1-4-67 முதல் டிசம்பர் 1970 வரை கீழ்க்கண்ட முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

**பால் வழங்கும் திட்டங்களுக்குப் பல்வேறு இடங்களிலிருந்து நாள்தோறும் சராசரியாக வழங்கப்பட்ட பாலின் அளவு:—**

| ஆண்டு | சென்னைத்திட்டம் | மதுரைத் திட்டம் |
|---|---|---|
| 1967-68 | 30,010 லிட்டர் | 16,000 லிட்டர் |
| 1968-69 | 39,600 ,, | 20,700 ,, |
| 1969-70 | 35,921 ,, | 17,321 ,, |
| 1970-71 | 37,033 ,, | 11,080 ,, |

**பால் வழங்கும் திட்டங்களின்கீழ் நாளொன்றுக்குச் சராசரியாக விநியோகம் செய்யப்பட்ட பாலின் அளவு:—**

| ஆண்டு | சென்னையில் வழங்கப்பட்ட அளவு (லிட்டர்) | மதுரையில் வழங்கப் பட்ட அளவு (லிட்டர்) |
|---|---|---|
| 1967-68 | 33,050 | 10,000 |
| 1970-71 | 57,059 | 15,813 |
| (டிசம்பர் வரை) | | |



**பால் வழங்கும் திட்டங்களின் மூலம் பலன் பெறும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை:—**

| ஆண்டு | சென்னை | மதுரை. |
|---|---|---|
| 1967-68 | 28,200 | 16,900 |
| 1968-69 | 46,000 | 18,600 |
| 1969-70 | 47,000 | 20,300 |
| 1970-71 | 48,020 | 24,000 |
| டிசம்பர் வரை | | |

**பால் வழங்கும் திட்டங்களுக்காக அமைக்கப் பட்டிருந்த பால் கிடங்குகள்**

| ஆண்டு | சென்னை | மதுரை |
|---|---|---|
| 1967-68 | 77 | 34 |
| 1968-69 | 121 | 37 |
| 1969-70 | 135 | 53 |
| 1970-71 | 187 | 53 |
| (டிசம்பர் வரை) | | |

சென்னை மாநகருக்கு நாளொன்றுக்குச் சராசரியாக 3,00,000 லிட்டர் பால் தேவைப்படுகிறது. ஆனால் தற்பொழுது நாளொன்றுக்குச் சராசரியாக 60,000 லிட்டர் பால் மட்டுமே வழங்கப்படுகிறது. இந்த அளவு, சென்னை மாநகருக்குத் தேவைப்படும் அளவில் ஐந்தில் ஒரு பங்கேயாகும். இக்குறையை அகற்றி எல்லோருக்கும் நியாயமான விலையில் பால் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக 'ஆப்பரேஷன் பிளட்' என்ற புதிய திட்டத்தைத் தமிழ்நாடு அரசு துவங்கியுள்ளது. இத்திட்டம் இந்த ஆண்டு முதல் 5 ஆண்டுக்குள் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

தமிழ்நாடு அரசு சென்னையில் இரண்டாவது பால் பண்ணையைத் தென் சென்னைப் பகுதியில் கிண்டிக்கு அருகில் அமைக்க அனுமதி அளித்துள்ளது.

மதுரையிலும், மதுரையின் சுற்றுப்புறங்களிலும் தேவைக்குமேல் அதிகமாகக் கிடைக்கும் பாலில் இருந்து பால்பொடி தயாரிக்கும் நிலையம் ஒன்றை மதுரையில் அமைக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதனால் கிராமப்புற மக்கள் அதிகமாகக் கிடைக்கும் பாலை விற்க முடிவதுடன், அரசும் பற்றாக்குறைக் காலத்தில் பால்பொடியைப் பயன்படுத்திப் பால் உற்பத்தியைப் பெருக்க இயலும்.

பாலுடன் நிலக்கடலை புரதச்சத்துச் சேர்த்து **'லாக்டோன்'** உற்பத்தி செய்வது பரிசோதனையாகச் சென்னையில் துவக்கப்பட்டுள்ளது.

'கேர்' நிறுவனம் மாட்டுக்கொட்டகை கட்டுதல், கிணறு தோண்டுதல், பால் கறக்கும் கருவி, சோதனைக் கருவி ஆகியவைகள் வாங்குவதற்காக வழங்கும் நிதி உதவியைப் பெற்று 20 தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்

டுறவுச் சங்கங்களுக்கு வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது. முதன் முதலில் 5 கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

சென்னை பால் பண்ணையில் 1966-ஆம் ஆண்டில் இருந்த கறவை மாடுகளின் எண்ணிக்கை 165.

தற்பொழுது உள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை 1,195. இவற்றில் 910 மாடுகள் கலப்பு இனங்களையும், 16 வெளிநாட்டு இனங்களையும் சேர்ந்ததாகும்.

மதுரையில் 1967-ஆம் ஆண்டில் 'யூனிசெப்' நிறுவன நிதி உதவியுடன் ரூபாய் 115 லட்சம் செலவில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பாலைக் காய்ச்சித் தூய்மை செய்யும் நிலையம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது.

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குக் குறைந்த விலையில் பால்வழங்க வேண்டும் என்பதற்கான திட்டம் 11-10-68 அன்று சென்னையிலும், 29-12-68 அன்று மதுரையிலும் துவக்கப்பட்டது. குறைந்த விலை பால் சென்னையில் லிட்டர் 70 பைசா வீதமும், மதுரையில் லிட்டர் 60 பைசா வீதமும் விற்கப்படுகிறது. தற்பொழுது சென்னையில் நாளொன்றுக்குச் சராசரியாக 8,000 லிட்டர் குறைந்த விலை பால் 35 தனி பால் கிடங்குகள்மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இந்த அளவை 1971-72-ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 15,000 லிட்டர் வீதம்வழங்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. இதுபோலவே தற்பொழுது மதுரையில் நாளொன்றுக்குச் சராசரியாக வழங்கப்படும் 1,225 லிட்டர் குறைந்த விலை பாலின் அளவை, 1971-72-ஆம் ஆண்டில் 3,000 லிட்டருக்கு உயர்த்தப்படும். இதனால் குறைந்த வருமானம் உள்ளவர்கள் பலர் பயனடைவர்.

ஸ்வீடன் நாட்டுக் கடனுதவியின்கீழ் வரப்பெற்ற குளிர் சாதனங்கள் பல்வேறு பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சத்துவாச்சேரி என்ற இடத்தில் உள்ள பால் குளிரச் செய்யும் நிலையத்தை, காய்ச்சித் தூய்மைப்படுத்தும் நிலையமாக மாற்ற ரூபாய் லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படத் துவங்கும். கன்னியாகுமரி கூட்டுறவு பால் வழங்கும் யூனியனுக்கு, அதிக அளவு பாலைக் காய்ச்சித் தூய்மைப்படுத்துவதற்காக ரூபாய் 1.35 லட்சம் கடன் கொடுக்கப்பட்டுள்ளது. இது போலவே உதகை கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திற்கு மணிக்கு 2,000 லிட்டர் பாலைக் காய்ச்சித் தூய்மைப்படுத்தும் நிலையம் அமைப்பதற்காக ரூபாய் 3 லட்சம் கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரிசன பால் வழங்கும் சங்க உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடன் கொடுக்கப்படுகிறது. ஒருவருக்கு ரூபாய் 250 மானியமாகவும், ரூபாய் 250 கடனாகவும் அளிக்கப்படுகிறது. மானியத் தொகையை அரிசன நலத்துறையும், கடன் தொகையை பால் பண்ணை வளர்ச்சித்துறையும் வழங்குகின்றன. இச்சங்கங்களுக்குப் பால் பாத்திரங்கள், சைக்கிள்கள் வாங்கவும், நிர்வாக அலுவலர் பொறுப்புக்கு ஏற்படும் செலவுக்கு உதவி செய்யவும் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பின்கண்டவாறு மானியத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | வழங்கப்பட்ட மானியத் தொகை |
|---|---|
| 1969-69 | ரூ. 2,86,430 |
| 1969-70 | ,, 3,97,900 |
| 1970-71 (குறியளவு) | ,, 4,00,000 |

கிராமப்புறப் பால்பண்ணை வளர்ச்சிக்காக, கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக், கால்நடைத் தொழுவம், பால்பண்ணை கட்டடம் கட்டவும், வாகனங்கள், குளிர் சாதனங்கள், சோதனை செய்யும் கருவிகள் வாங்கவும், கறவை மாடுகள் வாங்கவும் கடன் கொடுத்து உதவி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பால் கூட்டுறவு சங்கங்களுக்குப் பின்கண்டவாறு கடன் கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | கறவை மாடுகள் வாங்குவதற்கு அளிக்கப்பட்ட கடன் தொகை | கிராமப்புற பால் பண்ணை வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட கடன் தொகை |
|---|---|---|
| 1967-68 | ரூ. 38,53,000 | ரூ. 3.60 லட்சம் |
| 1968-69 | ,, 32,73,500 | ,, 4.11 ,, |
| 1969-70 | ,, 25,00,000 | ,, 3.60 ,, |
| 1970-71 | ,, 22,00,000 | ,, 4.50 ,, |

கறவை மாடுகள் வைத்துள்ள தனிப்பட்டவர்களும் சென்னை பால் வழங்கும் திட்டத்திற்குப் பால் வழங்குகிறார்கள். இவர்களுக்குக் கடன் வழங்குவதற்காகத் தமிழ்நாடு அரசு ரூபாய் ஒரு லட்சம் அனுமதி அளித்துள்ளது. கடன் பெறுகிறவர்கள், ரூபாய் 1000 கடன் பெற்றிருந்தால், 25 லிட்டருக்குக் குறையாமல் பால் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், இத்திட்டம் சோதனையாகச் செயல்படுத்தப்படுகிறது.

கிராமப் புறங்களில் உற்பத்தியாகும் பாலின் தரத்தை உயர்த்தும் நோக்குடன், தரத்திற்கேற்ப லிட்டர் ஒன்றுக்கு 82 பைசா முதல் 94 பைசா வரை எருமைப்பாலுக்கும், 70 பைசா முதல் 78 பைசாவரை பசும்பாலுக்கும் விலை கொடுப்பதுடன், பால் அரிதாகக் கிடைக்கும் மாதங்களில் லிட்டருக்கு 6 பைசா உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது.

# பல்தொழில் கல்லூரிகள்
# பல்கலைக்கழகம்

**தொ**ழில்நுட்பக் கல்வியின் விரிவும் வளர்ச்சியும் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே தொழில்களுக்குத் தேவையான மக்கள் சக்தியை ஆதாரமாகக் கொண்டே எந்தத் திட்டமும் வகுக்கப்படல் வேண்டும்.

1967-68-ல் தமிழகத்தே 12 பொறி இயற் கல்லூரிகளும் 36 தொழில்நுட்பக் கல்லூரிகளும் 16 தொழில் நுட்பப் பள்ளிகளும் இருந்தன. ஆண்டுத் தொடக்கத்தில் இவற்றிலுள்ளவர்கள்:

பொறி இயல் கல்லூரிகளில் 2820
தொழில் நுட்பக் கல்லூரிகளில் 4827
தொழில் நுட்பப் பள்ளிகளில் 960

1967-68 திட்டப்படி 144.78 லட்ச ரூபாய் செலவாயிற்று.

## நிறைவேற்றப்பட்ட முக்கிய திட்டங்கள்

1. கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியின் நூல் நிலைய வசதிகளை விரிவாக்கியதுடன் கோவை அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியின் தொழில் நிலையங்களை நவீனப்படுத்தியமை.

2. சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்கு வேண்டிய தளவாடச் சாமான்களை வழங்கியதுடன் அதன் கட்டடங்களையும் கட்டியமை.

3. கோவையிலும் சென்னையிலும் மகளிர் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்குரிய விடுதிகளைக் கட்டி முடித்தமை.

4. சென்னையில் வணிகக் கல்விப் பயிற்சி நிலையக் கட்டடத்தைக் கட்டி முடித்தமை.

5. சென்னையில் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரிக் கட்டடத்தைக் கட்டி முடித்தமை.

6. தூத்துக்குடியில் அரசினர் தொழில் நுட்பக் கல்லூரிக் கட்டடத்தைக் கட்டி முடித்தமை.

7. கிண்டி பொறியியற் கல்லூரியிலும், மத்திய தொழில் நுட்பக் கல்லூரியிலுமுள்ள தளவாடச் சாமான்களை மாற்றியமைத்தமை.

8. சென்னை திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியில் நவீனப் படப்பிடிப்புக் கூடத்தையும் பதிவேடுகள் அறையையும் கட்ட மேற்கொண்டமை.

1968-69-ல் இவ்விலாகாவின் திட்டங்களுக்காக ரூபாய் 160.14 லட்சம் செலவிடப்பட்டது. இவ்வாண்டிலே சேலத்தே அரசினர் பொறியியற் கல்லூரி மாணவர் விடுதியும், அலுவலர் இல்லங்களும் கட்டி முடிக்கப்பட்டன. நெசவுத் தொழில் நுட்பக்கல்லூரிக்கும், வணிகக் கல்விப் பயிற்சி நிலையத்திற்கும் வேண்டிய தளவாடப் பொருள்கள் அளிக்கும் ஏற்பாடும் முற்றுப் பெற்றது. தமிழக அரசுக்காக மாதாந்திரத் திரைப்படச் செய்திச் சுருள் உற்பத்தி செய்யும் பணியைத் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கியுள்ளது.

பொறி இயல் வல்லுநரிடையே வேலையில்லா நிலை பெருகி வருவதை முன்னிட்டு 1969-70-ல் தொழில் நுட்பக் கல்விப் பிரிவை மேலும் விரிவாக்குவதை நிறுத்திவிட்டு இப்போதுள்ள இந்நிலையங்களை ஒருங்கிணைப் பதில் கவனம் செலுத்தப்படுகிறது.

ஏற்கனவே பலதரப்பட்ட கல்விப் பிரிவுகளை விரிந்த அளவில் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. எனவேதான் பொறியியல் கல்லூரிகளிலும் தொழில் நுட்பப் பள்ளிகளிலும் சேர்வோர் எண்ணிக்கையை அதிகரிக்கவில்லை; அன்றியும் சில குறிப்பிட்ட அளவுக்கு அவைகளின் எண்ணிக்கைகள் குறைக்கவும் பட்டன. கிண்டி பொறி இயல் கல்லூரியில் மின்சார, இயந்திர சோதனைக் கூடங்களை அபிவிருத்தி செய்வதற்கும் புதுப்பிப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1970-71-ஆம் ஆண்டிற்கான திட்ட வேலைகளுக்கு ரூபாய் 92.44 லட்சம் ஒதுக்கப்பட்டது. வேலையில்லாப் பிரச்சனைகளைப்பற்றி ஆழ்ந்து அறிந்த பிறகு தேர்ந்த நிபுணர்கள் குழுக்கள் கூடி, பட்டம் பெற்றவர், சான்றுப்பத்திரப்படிப்புப்பெற்றவர்களுக்கு வேலை தரக்கூடிய வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான வழிவகைகளை வகுக்க அமைக்கப்பட்டன. கோயம்புத்தூர் அரசினர் தொழில் நுட்பப்பள்ளியில், அணுவினுட்பட்ட நுட்பங்கள் பற்றிய பலதரப்பட்ட படிப்பு வகைகள், போக்குவரத்துப் பொறியியல் துறைகள் ஆகியவை ஆரம்பிக்கப்பட்டன. கிண்டிப் பொறியியல் கல்லூரியில் செய்திப் போக்குவரத்துப் பொறியியலில் மேல் பட்டப்படிப்புக்கான கல்விமுறை ஆரம்பிக்கப்பட்டது. திருச்சி வட்டாரப் பொறியியல் கல்லூரியில் மேல் பட்டப் படிப்புக்கான ஒரு தொழில் அபிவிருத்தித் துறையும் மிக அழுத்தமுள்ள பொறிகலத் தொழிற்சாலைக் கூட்டுறவுடன் அழுத்த பொறிகலங்களின் மாதிரி அமைப்பு உற்பத்தி இவைகளில் பொறியியல் பட்டப்படிப்பு வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சேலம் அரசினர் பொறியியல் கல்லூரியில் வேதியல் பொறியியலும், உலோகத் தொழில் பொறியியலும் ஆரம்பிப் பதற்கான திட்டம் ஒன்றும் உள்ளது. தொழில் நுட்பக் கல்வியைப் போலவே, கட்டடச் சிற்பு நிபுணர் உதவியாளர்களுக்கான சான்றுப் பத்திரப் படிப்பு ஒன்றும், சென்னையில் பெண்கள் தொழில் நுட்பப் பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கருவி நுண் தொழில்துறை கூட சென்னையிலுள்ள பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பல்வகை இணைப்பு முறையில் (சாண்ட்விச்) சர்க்கரை உற்பத்தி செய்தல் பற்றிய ஒரு சான்றுப் பத்திரப் படிப்பு (டிப்ளாமா), சென்னை இரசாயனத் தொழில் நுணுக்கத்துறைப் பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இயந்திரப் பொறியியலில் பகுதி நேரச் சான்றுப்பட்டப் படிப்பு ஒன்றும், மின்சாரப் பொறியியலில் சான்றுப் பட்டப்படிப்பு ஒன்றும், திருச்சி அரசினர் தொழில் நுட்பப் பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. விரிந்த அளவில் திரைப்படத் தொழில் நுணுக்கப் பள்ளிகளை முன்னேற்ற கீழே சான்றுப் பத்திரப் படிப்பும், மேல்பட்டத் தொழில் நுணுக்கப் பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

(1) திரைப்பட இயக்கம்
(2) திரைப்படத் தொகுப்பு
(3) திரைப்பட நடிப்பு

# எங்கும் தமிழ்!

1967-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முதற்கொண்டு தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தைச் சார்ந்த பொதுத் துறையில் உள்ள தமிழ் வளர்ச்சிப் பிரிவுகளும், ஆட்சி மொழிக் குழு, தமிழ் வெளியீட்டுக் கழகம், மொழி பெயர்ப்புத்துறை, செய்தி விளம்பரத்துறை ஆகியவற்றிலும் பெரும்பாலான கடிதப் போக்கு வரத்துகளில் தமிழைப் பயன்படுத்த வகை செய்யப்பட்டது.

தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத அரசு ஊழியர்களுக்கு ஏற்ற பயிற்சியளிக்கும் திட்டம், 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் தொடர்ந்து நடத்தப் பெற்றது. இந்தப் பயிற்சி, பெரும்பாலான ஊழியர்களுக்கு முடிந்துவிட்டதன் விளைவாக, இதற்கெனக் குறிப்பிடப்பட்ட தேர்வுகளை, ஆண்டுக்கு இரண்டு தடவை நடத்த, அரசு ஏற்பாடு செய்தது. அதாவது, சென்னை மாநகரிலுள்ள அலுவலகங்களைப் பொறுத்தவரை ஆட்சி மொழிக் குழுவும், மற்ற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இதற்குரிய தேர்வு நடத்துவது என்றும், அரசாணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், கருவூலக் கணக்கு இயக்குநர் அலுவலகம் (Director of Treasuries and Accounts), சம்பளக் கணக்கு அலுவலர் (Pay and Accounts Officer) அலுவலகம் ஆகியவைகளில் பணிபுரிவோருக்குச் சிறப்பான வகையில் தமிழ்த் திட்டம் பற்றிய பயிற்சி வகுப்பு நடத்த, 1-7-67 முதல், தனி ஏற்பாடு செய்யப்பட்டது. அதே போன்று, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியாளர்களுக்குத் தமிழில் குறிப்பும் வரைவும் எழுதுவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. இதே போன்று, அரசு அலுவலகங்களில் தேவைப்படும் தமிழ்த் தட்டச்சர்களுக்கு ஏற்ற பயிற்சியும் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இத்தகைய பயிற்சியில் தேர்வு பெறுவோருக்கு ஊக்கமூட்டும் வகையில், பதவி உயர்வு அளிக்கவும், தேர்ச்சி பெறுதவர்களுக்குக் காலமுறை ஊதிய உயர்வு தராமை, வேலையைக் காயமாக்காமல் வைத்தல் போன்ற தண்டனைகளை அளிக்கலாமெனவும், அரசு ஆணையிட்டது.

இதையடுத்து, அரசு அலுவலகங்களுக்குத் தேவையான தட்டச்சுக்களை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டு, விரைவில் அவற்றை அளிக்க எழுதுபொருள் அச்சுத்துறை வாயிலாக, ஏற்பாடு செய்யப்பட்டது.

## ஆய்வுப் பணி

ஆட்சி மொழிச் சட்டத்தின்படி, அரசு அலுவலகங்கள் அனைத்தும், ஒரு சில விதி விலக்குகள் நீங்கலாகத் தமிழ்த் திட்டத்தை அன்றாட அலுவலகப் பணியில் பயன்படுத்தி வர வேண்டும். அலுவலகங்களில் இப்பணி சரிவர நடைபெற்று வருவதை நேரில் கண்டு, ஆய்வு செய்து, ஆட்சி மொழிக் குழு தக்க ஏற்பாடுகள் செய்து வந்துள்ளது. இதற்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள வினாப்பட்டியின்படி, எல்லா விவரங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன. அலுவலகங்களில் உள்ள முன்னேற்றம், மூன்று வகையாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது. (50 விழுக்காடுகளுக்கு மேல் 'நன்று' எனவும், 35க்கு மேல் 50க்குள் 'சுமார்' எனவும், 35 விழுக்காடுகளுக்குக் கீழ் 'குறைவு' எனவும் குறிக்கப்பெறும்.) ஆண்டுதோறும் (1967 முதல்) ஆய்வு செய்யப்பட்ட அலுவலகங்களின் பட்டியை அட்டவணையில் காணலாம்.

''குறைவு'' என்ற அளவில் செயற்படும் அலுவலகங்களைப்பற்றி நேர்முகக் கடிதங்கள் வாயிலாகத் தொடர்புடைய துறைத் தலைமை அலுவலருக்கும், அரசுச் செயலாளருக்கும் செய்திகள் அனுப்பப்படுகின்றன. மேலும் இத்தகைய அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தைச் செம்மையுறச் செயல்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் அறிக்கைகள் கோரப்பட்டு, அவை பற்றியும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்நடவடிக்கைகளின் விளைவாக, மாநிலமெங்குமுள்ள அரசு அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தைச் செம்மையுறச்செயற்படுத்த வேண்டுமென்ற எண்ணம், மேலோங்கி இருப்பது தெரிய வருகிறது. தொடர்ந்து எஞ்சியுள்ள மாவட்டங்களிலுள்ள அரசு அலுவலகங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## மொழி பெயர்ப்புப் பணி

ஆட்சிமொழிக் குழுவின் கீழ்த் தமிழ்நாடு அரசு அலுவலகங்களுக்குத் தேவைப்படும் சட்டங்கள், விதிகள், நடைமுறை நூல்கள் முதலியவை ஆங்கிலத்தினின்றும் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. துறைத் தலைவர்களைக் கலந்து அவர்களுடைய பரிந்துரையின் மேல் மொழி பெயர்ப்புச் செய்யப்பட வேண்டிய நூல்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அந்நூல்களை மொழி பெயர்ப்பாளர் பட்டியலில் உள்ளவர்களுக்கு அனுப்பி அவை மொழி பெயர்க்கப்படுகின்றன. பின்னர் இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களால் கூர்ந்தாய்வு செய்

யப்பட்டு, இறுதியாக அந் நூல்களின் மொழி பெயர்ப்புகள், மொழி பெயர்ப்புத் தனி அலுவலரால் திருத்தப்படுகின்றன. அவ்வாறு திருத்தப்பட்டவை தொடர்புடைய துறைத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களால் அரசு அச்சகத்தின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. இவ்வாறு 1967-ஆம் ஆண்டில் 11 நூல்களும் 11 துறைக்கு வேண்டிய படிவங்கள், மாதிரி வரைவுகள் முதலியவைகளும் மொழி பெயர்க்கப்பட்டுத் தொடர்புடைய துறைத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## 1968

1968ல் 2-வது உலகத் தமிழ் மாநாடு விழா, தமிழ்நாட்டில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. அதையொட்டி, ஆட்சி மொழிக் குழுவைப் பொறுத்தவரையில் வரலாற்றில் பொறிக்கத்தக்க தீர்மானம் ஒன்று 23-1-68 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அன்று முதல் 5 ஆண்டுக் காலத்திற்குள் (அதாவது 22-1-1973குள்) அரசு அலுவலகங்கள் அனைத்திலும், தமிழ்த் திட்டம் முழுமையாகச் செயல்பட வேண்டுமென்ற முக்கியக் கொள்கை, வரையறுக்கப்பட்டது.

ஆட்சி மொழிக் குழு 1968 அக்டோபர் திங்கள் முதல், திருத்தியமைக்கப்பட்டது.

துறைத் தலைமை அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தின் மூன்றும் நிலையைச் செயற்படுத்துவதற்கான செயற்குறிப்பு, ஆட்சி மொழிக் குழுவால் அரசுக்கு அனுப்பப்பட்டது. சட்டத்துறை, சட்டமன்றத் துறை, நிதித் துறை, ஆகியவை தவிர ஏனைய தலைமைச் செயலகத் துறைகள் அனைத்தும் துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், உள்ளாட்சித் துறை அலுவலகங்கள் ஆகியவற்றோடு, தமிழிலேயே தொடர்பு கொள்ள வேண்டுமென்ற ஆட்சி மொழிக் குழுவின் செயற்குறிப்பினை அரசு ஏற்றுக் கொண்டது.

தமிழ்த் திட்டப் பயிற்சி வகுப்புகள், இவ்வாண்டிலும் மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (Accountant General Office) அலுவலகப் பணியாளர்களுக்கும் தொடர்ந்து நடத்தப்பெற்றன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவின் (Tamil Nadu Public Service Commission) பணியாளர்களுக்கெனத், தமிழ்த் திட்டப் பயிற்சி வகுப்பு, தனியாகத் தொடங்கப் பெற்றது.

1968-ஆம் ஆண்டிலும், அரசு அலுவலகங்களில் தமிழ்த் திட்டம் செயற்படும் முறை குறித்துத் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆட்சி மொழிக்குழுச் செயலாளர் அவர்களும் ஆய்வுத் தனி அலுவலரும் 1,287 அலுவலகங்களை ஆய்வு செய்தனர். இவற்றில் 133 அலுவலகங்களில் முன்னேற்றம் ‘நன்று’ எனவும், 708 அலுவலகங்களில் ‘சுமார்’ எனவும் எஞ்சிய 446 அலுவலகங்களில் குறைவு எனவும் இருந்தது.

இந்த ஆண்டில் 10 நூல்களும் 8 துறைகளுக்கு வேண்டிய படிவங்கள் மாதிரி வரைவுகள் முதலியனவும் மொழி பெயர்ப்புச் செய்து முடிக்கப்பட்டுத் துறைத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டன.

## 1969

அரசு அலுவலகங்களுக்கு மிகவும் பயன்தரத் தக்க வகையில் ஆட்சிச் சொல்லகராதியின் மூன்றும் பதிப்பு, தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் மேற்பார்வையில் உருவாக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலகச் சிறப்புச் சொற்கள் துணை அகராதி ஒன்று அச்சிடப்பெற்றது. அத்துடன், அன்றாட வழக்கில் வாலாயமாகப் பயன்படுத்தப் பெறும் ஆங்கிலச் சொற்களைத் தொகுத்து, அவற்றிற்கிணையான தமிழ்ச் சொற்களையும் சேர்த்து அச்சிடப்பெற்ற அட்டைகளும் தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு வழங்கப் பெற்றன.

27-9-69 முதல், துறைத் தலைமை அலுவலகங்கள் அனைத்தும் தமக்குள் கடிதப் போக்குவரத்தைத் தமிழிலேயே நடத்த வேண்டுமென்று, அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

17-10-1969 அன்று மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் அவர்களின் தலைமையில், தமிழ்த் திட்டம் செயல்படுவதில் அதிக முன்னேற்றம் காணவேண்டுமென்று, முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அவற்றுள் மொழிபெயர்ப்புப் பணியும், மொழிபெயர்ப்பு ஆய்வுப்பணியும், ஆட்சி மொழித் திட்ட ஆய்வும் விரைவாகச் செயல்படப் புதிதாக இரண்டு மொழிபெயர்ப்புத் தனி அலுவலர்கள், இரண்டு ஒப்பச்சர்கள், ஒன்பது ஆய்வுத் தனி அலுவலர் ஆகிய பதவிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

தலைமைச் செயலகத்தின் எல்லாத் துறைகளிலும் (சட்டம், நிதி, சட்டமன்றம் தவிர) தமிழ்த் திட்டம் 29-12-69 முதல், செயலுக்கு வந்தது.

அரசு அலுவகங்களில் தமிழ்த் திட்டம் செயற்படும் முறை குறித்துத் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுத் தனி அலுவலரும் ஆட்சி மொழிக் குழுச் செயலாளரும், 457 அரசு அலுவலகங்களை ஆய்வு செய்தனர். (ஆய்வுத் தனி அலுவலர் பதவி 1-3-69 முதல் 31-10-69 வரை நிரப்பப்படவில்லை) மேற்குறித்த 457 அலுவலகங்களில் தமிழ்த் திட்ட முன்னேற்றம் 148 அலுவலகங்களில் ‘நன்று’ எனும்படியும் 192 அலுவலகங்களில் சுமார் எனும்படியும் எஞ்சிய 117 அலுவலகங்களில் ‘குறைவு’ எனும்படியும் இருந்தது.

இந்த ஆண்டில் மொத்தம் 4 நூல்களும் 7 துறைகளுக்கு வேண்டிய படிவங்களும் வரைவுகளும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு தொடர்புடைய துறைத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டன.

## 1970

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆட்சி மொழிக் குழு தொடர்ந்து இயங்கி வருகிறது. 17-8-70ல் ஆட்சி மொழிக் குழுக் கூட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆட்சிச் சொல்லகராதியின் மூன்றும் பதிப்பு ஆய்வு செய்யப்பட்டு, ஆட்சி மொழிக் குழுவிற்கு முக்கிய பரிந்துரைகள் அனுப்பப்பட்டன.

துறைத் தலைமை அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தைச் செயற்படுத்துவது பற்றிய மூன்றும் நிலை, (அதாவது, துறைத் தலைமை அலுவலகங்கள், தமக்கிடையே தமிழில் கடிதப் போக்குவரத்து நடத்துதல்) முடிவுபெற்றுத் தற்பொழுது நான்காம் நிலையைச் (அதாவது, துறைத் தலைமை அலுவலகங்கள் அரசுத் தலைமைச் செயலகத் துறைகளுடன் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து நடத்த வேண்டுமென்ற நிலையைச், செயல்படுத்துவது பற்றி, ஆட்சி மொழிக் குழு அனுப்பியுள்ள செயற்குறிப்பு, அரசின் ஆய்விலுள்ளது.

1-4-70 முதல், நிதித் துறை, சட்டத் துறை ஆகியவற்றில் தமிழ்த் திட்டத்தின் முதல்நிலை செயற்படுத்தப்பட்டது. அதாவது, பொது மக்களிடமிருந்து தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் எழுதுவது, வாலாயமான பதிவேடுகளையும், குறிப்புகளையும் தமிழிலேயே எழுதுவது போன்ற நடவடிக்கைகளை எடுத்தல்.

அரசுப் பணியில் 30-11-57-க்கு முன்னர் அமர்த்தப்பட்ட அரசு ஊழியர்களில், தமிழில் போதிய தேர்ச்சி பெருதவர்களுக்கென, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தேர்வு நடத்தப் பெறுகிறது. சென்னை மாநகரில், ஆட்சி மொழிக் குழுவும் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும் இத் தேர்வுகளை நடத்துகிருர்கள். சென்னை மாநகரில் 1970 மார்ச்சு 26, 28 தேதிகளில் இத் தேர்வுகள் நடைபெற்றன.

அரசு அலுவலகங்களுக்குத் தேவைக்கேற்ப அவ்வப்போது, தமிழ்த் தட்டச்சுகள், தாமதமின்றி வழங்கப்படுகின்றன. இது தொடர்பாக, அரசு வெளியிட்டுள்ள குறிப்பாணையின் விளைவாக, தலைமைச் செயலகத் துறைகளிலும் துறைத் தலைமை அலுவலகங்களிலும் இது குறித்து நேரடியான கவனம் செலுத்தவும், காலதாமதமின்றி விரைவான நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏற்பாடு ஆகியுள்ளமை, குறிப்பிடத்தக்க செய்திகளாகும். எளிதில் தூக்கிச் செல்லும் தமிழ்த் தட்டச்சுகளை (Portable Tamil Type writiers) வாங்கி, எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர் வாயிலாக, அரசு அலுவலகங்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் திட்டத்தை ஊக்குவிப்பதற்காக, அரசு அலுவலகங்களில் பணிபுரியும் கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள், எழுத்தர்கள் போன்ற அரசிதழ் பதிவுபெரு ஊழியர்களில் நல்ல வரைவுகளும் குறிப்புகளும் தமிழில் எழுதினுல் அவற்றிற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 500- பரிசாக வழங்குவதென்றும், சென்னை மாவட்டத்திற்கு இரு பரிசுகள் வழங்குவதெனவும் அரசு முடிவெடுத்தது. இதன்படி பரிசுக்குரிய குறிப்புகளும் வரைவுகளும் ஆய்வு செய்யப் பெறுகின்றன.

## தமிழ்மாநாட்டு ஊர்வலக் காட்சி தரணி மெச்சிய தனிப்பெரும் மாட்சி






# டைதேன் எம் 45

மட்டுமே
பெரும்பான்மையான
பயிர்களைப் பாது
காக்கக்கூடியது...
மென்மையான
பயிர்களுக்கு சாலச்
சிறந்தது!

உலகெங்கிலுமுள்ள விவசாயி களிடையே மிகவும் பிரபலமான காளான் கொல்லி, டைதேன் எம் 45 தான். அது, பெரும் பான்மையான பயிர்களின் அதிகபட்ச நோய்களைக் கட்டுப் படுத்துகிறது. மழை, நீர்ப் பாசனம் இவற்றினால் கரைந்து விடுவதில்லை. டைதேன் எம் 45, விதைகளின் விதை கலவையாக உபயோ கிக்க 100 கிராம் பாக்கெட்டு களில் கிடைக்கிறது.




இண்டோக்பில் கெமிக்கல்ஸ்
லிமிடெட்
பம்பாய்-25, இந்தியா

DITHANE என்ற பெயரும் ஃப்ளாஸ்க் சின்னமும் ரோம் அண்ட் ஹாஸ் கோ/ பிலாடெல்பியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு. எஸ். ஏ. யிலும் இதர நாடுகளிலும் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.

IP. 9934

விநியோகிப்போர்

திசைன்டிபிக் பெர்டிலிசர்ஸ் கம்பெனி (பி) லிட்., சுதர்சனம்: பொன்னுரங்கம் ரோடு, ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர் 2. தொலைபேசி: 22854. தந்தி: NITROPHOS

கிளைகள்: உதகமண்டலம், சென்னை, மதுரை, கடலூர், திருச்சிராப்பள்ளி.

# அரசு ஆடவர் ஆரணங்கு பொறுப்பை உணர்த்தும்....

தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் வேரூன்றி, கடந்த நான்காண்டுகளில், நாட்டின் நல அக்கறை கொண்டுள்ளோர் பாராட்டும் வகையில் பணிகள் நடைபெற்றுள்ளன. தமிழ்நாட்டிற்கு, நான் காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 29, 20.01 இலட்சம். இதில் 88.25 இலட்சம் ரூபாய் பிரச்சாரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. குடும்பக் கட்டுப்பாட்டிற்காக ஆண்டுதோறும் செலவிடப்பட்ட தொகை :

| | | | |
|---|---|---|---|
| 1951-56 | 23,553 | 1967-68 | 1,09,89,695 |
| 1956-61 | 17,33,123 | 1968-69 | 1,19,85,000 |
| 1961-66 | 1,53,07,228 | 1969-70 | 1,84,33,181 |

குடும்பக் கட்டுப்பாட்டிற்காக 1951லிருந்து 1967 வரை 16 ஆண்டுகளில் முந்தைய ஆட்சியில் தமிழ்நாட்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 3 கோடியே 18 இலட்சம். 1967 முதல் 70 வரை மூன்றாண்டுகளில் செலவிடப்பட்ட தொகை ரூ. 4 கோடியே 14 இலட்சம். இது மகத்தான சாதனை அல்லவா? 1965-ல் 125 வட்டாரங்கள் குடும்பக் கட்டுப் பாடுப் பணியின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. 100 வட்டாரங்கள் 1969-70லும் 149 வட்டாரங்கள் 1970-71லும் குடும்பக் கட்டுப்பாடுப் பணிகளின் கீழ் கொண்டு வரப் பட்டன. குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டபின் பரிசீலனை நிலையங்கள் கீழ்க்கண்ட மருத் துவமனைகளில் இயங்குகின்றன. 1. அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை எழும்பூர், சென்னை-8. 2. அரசினர் கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனை, சென்னை-5. 3. அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை. நடப்பாண்டில் தமிழகத்தில் மேலும் ஏழு மருத்துவ மனைகளில் இந்த நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.



# சுகாதார முறையிலே சாக்கடை நீரை அப்புறப்படுத்த, உடனடியாக நிறுவத்தக்க சாதனம், இதோ.

## எவரெஸ்ட்

ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட்

## ஸெப்டிக் டாங்க்



புதை வடிகால் வசதி இல்லாத இடங்களிலே, சுகாதார முறையில் சாக்கடைக் கழிவை அப்புறப் படுத்த உதவுகிறது எவரெஸ்ட் ஸெப்டிக் டாங்குகள் (சுத்திகரிப்புத் தொட்டிகள்). கிருமிகளின் செயலால் அந்த சாக்கடைக் கழிவுகள் திரவமாகவும் ஆவியாகவும் மாற்றப்பட்டு, தேக்கக் குழிகளிலோ, பள்ளங்களிலோ விடப்படுகின்றன. தயார் நிலையிலுள்ள ஸெப்டிக் டாங்குகள் இவை, நிறுவ இலகுவானவை, சுகாதாரத் தூய்மைக்கு உறுதி தருபவை. நம் நாடெங்கும் ஏற்கெனவே உபயோகத்திலுள்ள எவரெஸ்ட் ஸெப்டிக் டாங்குகள். ஆலோசனைகளுக்கு அருகிலுள்ள எவரெஸ்ட் ஸ்டாக்கிஸ்டைப் பாருங்கள்.

## எவரெஸ்ட்

ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் தயாரிப்புகள்.

நாடுநெடுகப் பரவிய விநியோக அமைப்பையும், தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப உதவியையும் பின்பலமாகக் கொண்டுள்ளன.

**ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் லிட்,**
(டர்னர் & நியூவால் க்ரூப்பின் ஒரு உறுப்பினம்)
பம்பாய் . கல்கத்தா . ஜபல்பூர் . சென்னை . நியூ டெல்லி
போத்தனூர் (கோயம்புத்தூர் மாவட்டம்).

Focus. Q.10TM

ஏழை மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, அரசு அலுவலகங்களில் பணிபுரிவோர்க்கு வீடுகள் கட்டிக், குறைந்த வாடகையில் விடும் திருப்பணியைச் செய்து வருகிறது, தமிழ் நாடு அரசு வீட்டு வசதி வாரியம். இதற்கென்றே இயங்கி வருகிறது இந்த வாரியம். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் குடியிருப்பும் ஒன்றாகும். அடிப்படைத் தேவைகளான, உணவு, உடை, உறையுள், குடிதண்ணீர், மின்சாரம், இவையெல்லாம் எல்லா மக்களுக்கும் கிட்டுவதையே இலட்சியமாகக் கொண்டுள்ளது அரசு. நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்கள் வீடின்றித் தவிப்பதைத் தவிர்க்க, அதிக வாடகை கொடுத்து அவதியுறும் அவல நிலையினைப் போக்க, வீட்டு வசதிவாரியம் பல்வேறு குடியிருப்பு மனைகளை நகரங்களில் கட்டியுள்ளது.

1956லிருந்து 1967 வரை 11 ஆண்டுகளில் வீட்டு வசதி வாரியம் இவ்வகையில் 4,073 வீடுகளைக் கட்டித் தந்திருக்கின்றது.

ஆனால் 67லிருந்து 70 வரை, இந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் மட்டும் 6,322 குடியிருப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு (1971) மேலும் 528 இல்லங்கள் கட்டப்பட இருக்கின்றன.

குறைந்த வருமானமுள்ளவர்கள், அரசு ஊழியர்கள் போன்றவர்களுக்கு 1956லிருந்து 67ம் ஆண்டு வரை 11 ஆண்டுகளில் 8,917 குடியிருப்புகள், வீட்டு வசதி வாரியத்தினால் கட்டப்பட்டுள்ளன.

ஆனால் 67லிருந்து 70 வரை மூன்றாண்டுகளில், 10,028 குடியிருப்பு மனைகள் கட்டி முடிக்கப் பட்டிருக்கின்றன. மேலும் 1,869 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

பதினோராண்டைத் தோற்கடிக்கும் மூன்றாண்டுச் சாதனை இது!

## வீட்டு வசதி வாரியத்தினால் பல்வேறு திட்டங்களினால் நிறைவேற்றப் பட்டவைகளின் பட்டியல் இதோ:—

| வரிசை எண் | பொருள் | 1967-68 | 1968-69 | 1969-70 | 31-3-70 முதல் '70 டிசம்பர் வரை |
|---|---|---|---|---|---|
| 1. | குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான வீடுகள் | 415 | 437 | 600 | 500 |
| 2. | நடுத்தரக் குடும்பத்தினருக்கான வீடுகள் | 168 | 225 | 450 | 450 |
| 3. | குடிசை மாற்றுக் குடியிருப்புக்கள் | 1524 | 2998 | 1800 | 715 |
| 4. | மத்திய அரசின் வாடகைத் திட்டத்தில் உள்ள வீடுகள் | 1716 | 808 | 502 | 342 |
| 5. | தொழிலகங்களின் உதவி பெற்றவர்களுக்கான குடியிருப்புத் திட்டங்கள் | 60 | — | — | — |
| 6. | தீப்பிடிக்காத குடியிருப்புக்கள் | 793 | 50 | 982 | 422 |

**வீட்டு மனைகள் :**

| வரிசை எண் | பொருள் | 1967-68 | 1968-69 | 1969-70 | 31-3-70 முதல் '70 டிசம்பர் வரை |
|---|---|---|---|---|---|
| 1. | குறைந்த, நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கான வீட்டு மனைகள் | 2434 | 644 | 2000 | 1000 |
| 2. | கலைத்தொழிலாளருக்கான வீட்டு மனைகள் | 4000 | — | — | 400 |
| 3. | திறந்த வெளி மனைகள் | 523 | — | — | — |

# வீடுகள் தந்தோம்





உங்களுக்கு வேண்டிய
எல்லாமே இங்கே கிடைக்கும்
குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில்
அங்காடி
தொலைபேசி எண்கள்: 20461. 20462. 20463. 20464. 20465.
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

# நாம் வளர்த்த

# நலமான கூட்டுறவு

கூட்டுறவுத் துறையின் சேவை தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் தேவை என்று கருதிய இன்றைய தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறையில் பல சீரமைப்புகளைச் செய்துள்ளது. கூட்டுறவுத்துறைமூலம் கடன் வழங்குவதற்கு நன்முறையில் செயல்படும் கிராம கூட்டுறவு நாணயச் சங்கங்களே அடிப்படையாக அமைந்துள்ளதால், கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் நவீனமுறையில் தொடர்ந்துசெயல்படும் மூல அலகுகளாகச் சீரமைப்புச் செய்யப்பட்டன. இதனுல் அவைகள் உழவர்களின் தேவைகளையெல்லாம் கொடுத்து உதவும் உண்மையான பயன்தரும் கூட்டுறவுச் சங்கங்களாக விளங்கி வருகின்றன. முன்பெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஒரு சிலரே தொடர்ந்து பயன் பெற்று வந்தனர். அந்நிலையை மாற்றிக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பயனடையும் படிச் சட்டதிட்டங்களை மாற்றி அமைத்தது இன்றைய தமிழ்நாடு அரசு.

வேளாண்மைக்குப் போதிய நிதி வசதி அளிக்க வேண்டும் என்பதற்காகவே தமிழ்நாடு அரசு, நிறுவனக் கடன் உதவியைப் பெறுவதற்கான பல ஏற்பாடுகளைச் செய்தது. அவைகளில் முக்கியமானது நில அடமான வங்கிகளை, நில வள வங்கி என்று மாற்றி, நிலங்களை மேம்படுத்துவதற்குப் பெருமளவில் உதவி செய்ய வழி செய்ததேயாகும். நிலவளவங்கிகள், புதிய கிணறுகள் தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், பம்பு செட்டுகள் அமைக்கவும், நிலத்திருத்தம் செய்யவும், டிராக்டர் போன்ற இயந்திரங்களை வாங்கவும் கடன் கொடுத்து வருகின்றன. பழைய கடன்களை அடைப்பதற்கு நில அடமான வங்கிகள் கடன் கொடுத்து வந்ததை, நிலவள வங்கிகள் நிறுத்திவிட்டன. முன்பெல்லாம் நில அடமான வங்கியில் கடன் பெறுவதற்கு உழவர்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருந்தது. ஆனுல் இன்றைய அரசு, கடன் கொடுக்கப்படும் இடம் கூடுமானவரை உழவர்களுக்கு வெகு அருகிலே இருக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வட்டார வளர்ச்சிப் பகுதியிலும் ஒரு 'முதல் நிலை நில வள வங்கி' அமைக்கத் திட்டமிட்டு வருகிறது. முதல் நிலை நிலவள வங்கிகள் போதிய நடைமுறை மூலதனம் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகத் தமிழ்நாடு அரசு ஒவ்வொரு வங்கிக்கும் உச்ச அளவாக ரூபாய் 25,000 வரை பங்கு மூலதனம் கொடுத்து வருகிறது. 1968-69-ஆம் ஆண்டுவரை 106 நில அடமான வங்கிகளே இருந்தன. 1969-70-ஆம் ஆண்டில் 67 நிலவள வங்கிகளும், 1970-71 (30-11-70 வரை) 50 நிலவள வங்கிகளும் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன.

நிறுவன நிதிகளை நன்கு பயன்படுத்தக் கருதிய இன்றைய அரசு 1-4-68 முதல் புதிய கிணறு வெட்டுதல், பம்பு செட்டுகளை அமைத்தல் ஆகிய நீண்டகால தக்காவிக் கடன்கள் நிலவள வங்கிகள் மூலமாகவே கொடுக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. நிலவள வங்கிகளிலிருந்து எளிய முறையிலும், விரைவிலும் உழவர்களுக்குக் கடன் கிடைக்க வேண்டும் என்பதற்காகக் கடன் கொடுக்கும் நடைமுறை விதிகளை எளிதாக்கியது இன்றைய அரசு. நில வளர்ச்சிச் சட்டத்தையும் திருத்தி அமைத்தது.

அத்துடன் உழவர்களின் கடன் வாங்கும் எல்லையையும் உயர்த்தியது இன்றைய அரசு. முன்பு அடமானம் காட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50 சத அளவுக்கே கடன் கொடுக்கப்பட்டது. ஆனுல் தற்பொழுது 75 சத அளவுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. இதனுல் உழவர்களுக்குக் கிடைக்கும் கடன் தொகையும் உயர்ந்துள்ளது.

இன்றைய தமிழ்நாடு அரசே, கூட்டுறவுத்துறை மூலம் நவீன அரிசி ஆலைகளை அமைத்தது; இரசாயன உரத் தொழிற்சாலை, எழுதுபொருள் உற்பத்தி நிலையம், பாலித்தீன் பைகள் உற்பத்தி நிலையம், பழங்களைப் பக்குவப்படுத்தும் நிலையம், நறுமணப்பொருள், பொடி தயாரிக்கும் நிலையம் ஆகியவைகளையும் அமைத்துள்ளது.

இன்றைய தமிழ்நாடு அரசே இந்தியாவிலேயே முதன் முதலாக, ஏழை எளிய உழவர்களும் பயன் பெறக் கூட்டுறவு நீர்ப்பாசனச் சங்கத்தை அமைத்து, அதற்கெனச் சட்டமும் கொண்டு வந்தது. வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவியுடன் சிறிய பாசனத் திட்டங்கள், தோட்டப்பண்ணை அமைக்கும் திட்டங்கள், நிலம் திருத்தும் திட்டங்கள் அடங்கிய சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைத் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவளவங்கி, முதல்நிலை நிலவள வங்கிகள் மூலம் செயல்படுத்தவும், அரசு நிதி உதவி செய்து வருகிறது. இத்திட்டங்களுக்கு இதுவரை தமிழ்நாடு அரசு ரூபாய் 89.21 லட்சம் செலவிட்டுள்ளது.

மாநிலமெங்கும், நிலத்தின் அடியில் உள்ள நீரைப் பெருமளவில் வெளியே கொண்டு வந்து பசுமைப் புரட்சியைத் தீவிரப்படுத்த ரூபாய் 71.42 கோடி ரூபாய் மதிப்புள்ள 31 திட்டங்களைத் தமிழ்நாடு அரசு தயாரித்துள்ளது.

உழவர்கள் மின்சார வாரியத்திற்கு வைப்புத் தொகை செலுத்திப் பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புப் பெறுவதற்கு நிதி உதவும் பொருட்டு ஒரு புதிய திட்டம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், உச்ச அளவாக ரூபாய் 3000 - வரை உழவர்களுக்குக் கடனுக வழங்கப்படும்.

மேலும் புதிதாக 4 சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவுத் துறையில் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறது.

இவ்வாறு பல்வேறு பயனுள்ள திட்டங்களைக் கூட்டுறவுத் துறை நிறைவேற்றி வருவதுடன் மேலும் பல புதிய திட்டங்களை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது.

1-4-67 முதல் 30-11-70 வரை கூட்டுறவுத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் :

(1) குறுகிய, நடுத்தர காலக் கடன்கள் :—

1967-68ல் கொடுத்தது ரூ 37.26 கோடி
1968-69ல் கொடுத்தது ரூ 44.12 கோடி
1969-70ல் கொடுத்தது ரூ 42.77 கோடி
1970-71 (30-11-70 வரை) ரூ 31.74 கோடி

(1966-ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 31.44 கோடி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.)

(2) நீண்ட காலக் கடன்கள் :—

1967-68ல் கொடுத்தது ரூ. 6.96 கோடி
1968-69ல் கொடுத்தது ரூ 13.69 கோடி
1969-70ல் கொடுத்தது ரூ. 16.26 கோடி
1970-71 (30-11-70 வரை) ரூ 9.61 கோடி
(1966-67ல் கொடுக்கப்பட்டது ரூபாய் 4.27 கோடி என்பது குறிப்பிடத்தக்கதாகும்).

(3) கூட்டுறவு மத்திய வங்கியால் திறக்கப்பட்ட கிளைகள் :—

| | |
|---|---|
| 1967-68 | 13 கிளைகள் |
| 1968-69 | 20 கிளைகள் |
| 1969-70 | 51 கிளைகள் |
| 1970-71 (30-11-70வரை) | 22 கிளைகள் |

(4) புத்துயிர் அளிக்கும் திட்டத்தின்கீழ், உதவி செய்யப்பட்ட வேளாண்மைக் கடன் கழகங்கள் :—

| | |
|---|---|
| 1967-68 | 100 |
| 1968-69 | 170 |
| 1969-70 | 206 |
| 1970-71 (30-11-70 வரை) | 300 |

(5) புதிதாகத் திறக்கப்பட்ட நிலவள வங்கிகள் :—

| | |
|---|---|
| 1969-70 | 67 |
| 1970-71 | 50 |

1968-69ல் 106 நிலவள வங்கிகளே இருந்தன. தற்பொழுது மொத்தம் 223 நிலவள வங்கிகள் உள்ளன.

(6) நிலவள வங்கிகள் மூலம் புதிய கிணறு மானியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மானியத் தொகை :—

| | |
|---|---|
| 1968-69 | ரூபாய் 3.10 லட்சம் |
| 1969-70 | ரூபாய் 24.21 லட்சம் |
| 1970-71 (30-11-70 வரை) | ரூபாய் 10.22 லட்சம் |

(7) கூட்டுறவுத் துறை மூலம் விற்பனை செய்யப்பட்ட வேளாண்மைப் பொருள்களின் மதிப்பு :—

| | |
|---|---|
| 1967-68 | ரூபாய் 22.39 கோடி |
| 1968-69 | ரூபாய் 23.00 கோடி |
| 1969-70 | ரூபாய் 26.00 கோடி |

(8) கூட்டுறவுத் துறை மூலம் விநியோகம் செய்யப்பட்ட இரசாயன உரங்களின் மதிப்பு :—

| | |
|---|---|
| 1967-68 | ரூபாய் 10.50 கோடி |
| 1968-69 | ரூபாய் 11.00 கோடி |
| 1969-70 | ரூபாய் 13.50 கோடி |
| 1970-71 (30-11-70 வரை) | ரூபாய் 10.50 கோடி |

இரசாயன உர விநியோகத்திற்கு 1969-70ல் ரூபாய் 16 லட்சத்தைப் பங்கு மூலதனமாகத் தமிழ்நாடு அரசு கொடுத்துள்ளது.

(9) நவீன அரிசி ஆலைகள் அமைத்தது :—

| | |
|---|---|
| 1968-69 | 1 |
| 1969-70 | 5 |
| 1970-71 (30-11-70 வரை) | 5 |

மேலும் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இவைகளுக்குப் பங்கு மூலதனமாக ரூபாய் 135.73 லட்சத்தைத் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

(10) புதிதாகக் கட்டப்பட்டுள்ள கிடங்குகள் 128

(11) லாரிகள் வாங்க உதவி செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் 34

(12) கிடங்கு-அலுவலகம்-சேவைக் கொட்டகை கட்டுவதற்காக உதவி செய்யப்பட்ட சங்கங்கள் 10

(13) புதிதாக அமைக்கப்பட்ட பக்குவப்படுத்தும் நிலையங்கள் :

1. பழங்களைப் பக்குவப்படுத்தும் நிலையம் 1
2. தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் நிலையம் 1
3. மரவள்ளிக் கிழங்கிலிருந்து ஜவ்வரிசி தயாரிக்கும் நிலையம் 1
4. எண்ணெய் ஆலைகள் 3

(14) புதிதாகத் திறக்கப்பட்ட சிறப்பங்காடிகள் 5

(15) புதிதாகத் திறக்கப்பட்ட நவீன சில்லறை விற்பனை நிலையங்கள் 17

(16) நுகர்வோர் கூட்டுறவின் கீழ் பக்குவப்படுத்தும் நிலையங்கள் அமைக்க உதவி பெற்ற சங்கங்கள் ;—

(1) காகிதம் மற்றும் எழுதுபொருள் உற்பத்தி நிலையம் 5

(2) ரொட்டி தயாரிக்கும் நிலையங்கள் 2
(3) காப்பித்தூள் அரைக்கும் நிலையங்கள் 2
(4) பாலித்தின் பைகள் உற்பத்தி நிலையங்கள் 2
(5) சலவை சோப்பு உற்பத்தி நிலையம் 1
(6) பருப்பு ஆலை 1
(7) மணப்பொருள்பொடி செய்யும் நிலையம் 1
(8) நிலக்கடலை எண்ணெய் உற்பத்தி நிலையம் 1

(17) புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் 1353

(18) குறுணை வடிவ இரசாயன உரத் தொழிற்சாலை அமைக்கவிருப்பது 1

இத்தொழிற்சாலை மன்னார்குடி அருகில் ரூ. 25 லட்சம் மதிப்பில் அமையும். இத்தொழிற்சாலைக்கு ரூ. 8.25 லட்சத்தைப் பங்கு மூலதனமாகவும், ரூ. 10.00 லட்சத்தைக் கடனாகவும் தமிழ்நாடு அரசு கொடுத்துள்ளது.

வேளாண்மை மறுநிதிக் கழகத்தால் அனுமதிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களின் பட்டியல் :

## சிறிய பாசனத் திட்டம்

| திட்டத்தின் பெயர் | திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மூலதனம் (ரூபாய்-லட்சத்தில்) |
|---|---|

### 1. திருச்சிராப்பள்ளி மாவட்டம்

(1) புதுக்கோட்டை, கோட்டத்தில் கிணறு தோண்டும் திட்டம் 92.50
(2) லால்குடி, உடையார்பாளையம் பகுதியில் கிணறு தோண்டும் திட்டம் 49.50
(3) முசிறி வட்டத்தில் கிணறு தோண்டும் திட்டம் 102.50
(4) குளித்தலை வட்டத்தில் கிணறு தோண்டும் திட்டம் 79.00
(5) மணப்பாறைப் பகுதியில் கிணறு தோண்டும் திட்டம் 66.00
(6) கரூர் வட்டத்தில் கிணறு தோண்டும் திட்டம் 69.00

### 2. தர்மபுரி மாவட்டம்

கிருஷ்ணகிரி, ஊத்தங்கரைப் பகுதியில் கிணறு தோண்டும் திட்டம் 122.00

### 3. கோவை மாவட்டம்

(1) தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன்பாளையம் வட்டாரங்களில் கிணறு தோண்டும் திட்டம் 110.00
(2) உடுமலைப்பேட்டை வட்டத்தில் கிணறு தோண்டும் திட்டம் 125.00

### 4. இராமநாதபுர மாவட்டம்

(1) சிவகங்கை, திருப்பத்தூர் பகுதிகளில் கிணறு தோண்டும் திட்டம் (முதல் பகுதி) 9.00
(2) ,, ,, (இரண்டாம் பகுதி) 165.00

### 5. செங்கற்பட்டு மாவட்டம்

செங்கற்பட்டு, மதுராந்தகம் வட்டங்களில் கிணறு தோண்டும் திட்டம் 110.00

### 6. மதுரை மாவட்டம்

(1) திருமங்கலம், உசிலம்பட்டிப் பகுதிகளில் கிணறு தோண்டும் திட்டம் 114.00
(2) திண்டுக்கல், வேடசந்தூர் வட்டங்களில்கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம் 91.50
(3) மதுரை, மேலூர் வட்டங்களில் கிணறு தோண்டும் திட்டம் 63.00

### 7. திருநெல்வேலி மாவட்டம்

(1) சங்கரன்கோவில் வட்டத்தில் கிணறுகள் தோண்டுதல், பழைய கிணறுகளை ஆழப்படுத்தல் ஆகிய திட்டம் 134.00
(2) நாங்குனேரி வட்டத்தில் கிணறுகள் தோண்டும் திட்டம் 126.00
(3) திருநெல்வேலி, தென்காசி வட்டங்களில் கிணறு தோண்டும் திட்டம் 112.50

மொத்தம் 1,740.50

இதர திட்டங்கள் :

### 1. கோயம்புத்தூர் மாவட்டம்

(1) பரம்பிக் குளம், ஆழியாறு திட்டப் பகுதியில் நிலம் திருத்தும் திட்டம் (முதற் கட்டம்) 452.90
(2) ,, (இரண்டாம் கட்டம்) 190.00

### 2. நீலகிரி மாவட்டம்

தேயிலைத் தோட்டம் அமைக்கும் திட்டம் 25.00

### 3. தஞ்சாவூர் மாவட்டம்

தென்னந்தோப்பு அமைக்கும் திட்டம் 29.56

### 4. கன்னியாகுமரி மாவட்டம்

ரப்பர் தோட்டம் அமைக்கும் திட்டம் 24.00

### 5. சேலம் மாவட்டம்

காப்பி தோட்டம் அமைக்கும் திட்டம் 25.00

மொத்தம் 745.57

| | |
|---|---|
| சிறிய பாசனத் திட்டங்கள் | 1740.50 |
| இதர திட்டங்கள் | 745.57 |
| மொத்தம் : | 2486.07 |

# மீனே! மீனே!

புரதச்சத்து பற்றுக்குறை நிலவிவரும் இந்நாளில் புரதச்சத்து மிக்க மீன்களை வழங்கி நாட்டு மக்களின் வாழ்வை வளப்படுத்துகிறது தமிழ்நாடு அரசின் மீனளத்துறை. தமிழ்நாட்டில் குளத்து மீன் வகைகளையும், கடல் மீன் வகைகளையும் பெருமளவில் பெருக்குவதற்கு மீனளத்துறை முயன்று வருகிறது. தமிழ்நாட்டில் *1967-68*ஆம் ஆண்டில் *3.2* லட்சம் மெட்ரிக் டன் மீன்கள் உற்பத்தியாகி உள்ளன. தற்பொழுது ஆண்டு தோறும் *3.3* லட்சம் டன் மீன்கள் உற்பத்தியாகின்றன. தமிழ் நாட்டில் மீன் வகைகள் உற்பத்தியை மேலும் பெருக்குவதற்குப் பெரும் வாய்ப்பு உள்ளது. மீன்பிடித்தல், சேமித்து வைத்தல், விற்பனைக்கு அனுப்புதல் ஆகியவற்றில் அறிவியல் அடிப்படையான முறைகளை மேற்கொள்வதன் மூலமாகத் தமிழ் நாட்டின் மீன் உற்பத்தியை மேலும் உயர்த்த மீனளத்துறை பாடுபட்டு வருகிறது.

மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தமிழ்நாடு அரசு மீனளத்துறை மூலமாக ஏராளமாக மீன்பிடிக்கும் இயந்திரப் படகுகளைக் கொடுத்து உதவுவதுடன், மீன்பிடி தளங்களையும் அமைத்துக் கொடுக்கிறது. தூண்டுதல் மூலமாக மீன்களை முட்டையிடச் செய்யும் நுணுக்கத்தை மேற்கொள்ளுதல் மூலமாகவும் மீன்கள் உற்பத்தியைப் பெருக்க வழி செய்யப்படுகிறது. மீன் உற்பத்தியைப் பெருக்குவதில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக மீன் ஆராய்ச்சி நிலையங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1-4-67 முதல் 31-12-70 வரை மீனளத்துறையில் ஏற்பட்டுள்ள சாதனைகள்**

*1.* மீன்பிடிக்கும் இயந்திரப் படகுகள் பல்வேறு வகையிலும் பயனளித்து வருவதால், அவைகளின் தேவை ஆண்டிற்காண்டு பெருகி வருகிறது. மீன் பிடிப்பவர்களுக்குத் தேவையான மீன்பிடிக்கும் இயந்திரப் படகுகளைக் கொடுத்து உதவுவதற்காகத் தமிழ்நாடு அரசின் படகு கட்டும் நிலையங்களில் கீழ்க்கண்ட அளவு இயந்திரப் படகுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

மீனளத்திலும்
தமிழ்நாடு அரசின்
சாதனை மிகப்பெரிது!

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967-68 | 138 |
| 1968-69 | 104 |
| 1969-70 | 135 |
| 1970-71 (குறியீடு) | 145 |

இத்துடன் தனிப்பட்டவர்களால் 80 மீன்பிடிக்கும் இயந்திரப் படகுகள் செய்யப்பட்டு வருகின்றன. இயந்திரப்படகுகள் மானிய விலையில் மீன்பிடிப்பவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**2. மீன் பிடிப்பவர்களுக்கு மீன் வலை தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட நைலான் கயிறுகள்:—**

| | |
|---|---|
| 1967-68 | 11,300 கிலோ |
| 1968-69 | 9,415 கிலோ |
| 1969-70 | 13,360 கிலோ |
| 1970-71 (குறியீடு) | 14,000 கிலோ |

கூட்டுறவுச் சங்கங்கள் நைலான் கயிறு வாங்குவதற்காக 20 சத மானியம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் மானியம் வழங்க ரூபாய் ஒரு லட்சம் செலவிடப்படும்.

8. மண்டபத்தில் நாளொன்றுக்கு 50 டன் மூலப் பொருள்களைக் கொண்டு மீன்பொடி தயாரிக்கும் நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. விரைவில் உற்பத்தியைத் துவங்கவிருக்கும் இந்நிலையம், இந்தியாவிலுள்ள மீன்பொடி தயாரிக்கும் பெரிநிலையயங்களில் ஒன்றாகும்.

9. வேளாண்மை மறுநிதிக் கழக உதவியுடன் மீனள மேம்பாட்டிற்காக 2 திட்டங்கள் 1968-69ல் தீட்டப்பட்டன. சென்னை மீன்பிடிப்போர் கூட்டுறவு இணைப்பும் திருநெல்வேலி மாவட்ட மீன் பிடிப்போர் கூட்டுறவு இணைப்பும் இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் மீனள மேம்பாட்டிற்கு ரூ. 281.13 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 19.03 லட்சத்தை வேளாண்மை மறுநிதிக்கழகம் கடனாகக் கொடுத்துள்ளது; ரூபாய் 9.10 லட்சத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்கிறது. மீன் பிடித்தல், இருப்புவைத்தல், பதனப்படுத்தல், விற்பனைக்கு அனுப்புதல் ஆகியவைகளில் நவீன முறைகளை மேற்கொள்ளச் செய்தல், படகுகளைப் பழுதுபார்த்துக் கொடுத்தல் ஆகியவைகளின் மூலமாக மீன் மற்றும் மீனிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 10 மீன் பிடிக்கும் இயந்திரப் படகுகள், மீன்பிடிப்போர் கூட்டுறவு இணைப்புகளுக்கு வழங்கப்பட்டு, தனிப்பட்ட மீன்பிடிப்பவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அடுத்த இரு ஆண்டுகளில் மேலும் 40 மீன் பிடிக்கும் இயந்திரப் படகுகளை இத்திட்டத்தின் கீழ் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

3. ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு, மேலும் பல இயந்திர மீன்பிடி படகுகளை உபயோகிக்கத் திட்டமிட்டுள்ளதுடன் நான்கு 57 அடி நீளமுள்ள எஃகு வலைஞர் நாவாய்களையும் விரைவில் பயன்படுத்தவிருக்கிறோம்.

4. நாகப்பட்டினம், கடலூர் (இரண்டாம் கட்டம்) ஆகிய இடங்களில் மீன் பிடிக்கும் துறைமுகங்களை அமைத்து வருவதுடன், தூத்துக்குடியில் ஒரு பெரிய மீன்பிடிக்கும் துறைமுகம், ரூபாய் 225 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. சென்னையில் ரூ. 338 லட்சம் செலவில் மீன் பிடிக்கும் துறைமுகம் அமைக்க ஆரம்ப வேலைகள் துவக்கப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் என்ற இடத்தில் ரூபாய் 200 லட்சம் செலவில் ஒரு மீன் பிடிக்கும் துறைமுகம் அமைப்பது பற்றிய ஆய்வு முன்னேற்ற நிலையில் உள்ளது.

5. 54 டன் பனிக்கட்டி உற்பத்தி செய்யக்கூடிய 17 பனிக்கட்டி உற்பத்தி நிலையங்களும், 145 டன் மீன் மற்றும் மீனிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களைச் சேமித்து வைப்பதற்கு 24 குளிர்பதனக் கிடங்குகளும் கட்டப்பட்டுள்ளன. இத்துடன் எண்ணூரில் 3 டன் மீன்களைக் குளிர்ந்த நிலையில் வைப்பதற்கும், 3 டன் பனிக்கட்டிகளை உற்பத்தி செய்வதற்கும், 30 டன் மீன்களைச் சேமித்து வைப்பதற்கும் குளிரவைக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தில் சுரங்க குளிர வைக்கும் நிலையம் (Tunnel Fregeder) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் 2.5 டன் மீன்களைக் குளிர்ந்த நிலையில் வைக்கவும், 50 டன் மீனைச் சேமிக்கவும் வசதியான குளிரவைக்கும் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6. மீன்பிடிப்பதற்குத் தேவையான படகு, வலை, நைலான் கயறு ஆகியவைகள் வாங்குவதற்கும், பிடிக்கப்பட்ட மீன்களை விற்பனை செய்வதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மீன்பிடிப்பவர்களுக்குப் பின்கண்டவாறு கடன் வழங்கப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| 1967-68 | 2.62 லட்சம் |
| 1968-69 | 4.48 லட்சம் |
| 1969-70 | 2.28 லட்சம் |

7. நவீன முறையில் மீன்பிடிப்பதற்கு 310 மீன் பிடிப்பவர்களும், 21 அலுவலர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

# உயிரென மதித்தோம்

"மலைவாழை அல்லவோ கல்வி" — புரட்சிக் கவிஞரின் பொன்னேவியம் இது. பாமர மக்களின் அறிவுக் கண்களைத் திறப்பதையே தன் இலட்சியமாகக் கொண்டுள்ளது தமிழக அரசு. பட்டிதொட்டிகளிலெல்லாம் பள்ளிகளைத் திறந்து கல்வியைப் பெருக்கும் பணியில் தமிழக அரசு தலை நிமிர்ந்து நிற்கிறது. தமிழ்நாட்டில் 1970-71-ல் பொதுக் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 66.83 கோடியாகும். 1966-67-ல் பொதுக் கல்விக்கு ஒதுக்கப்பட்ட தொகையைவிட, இது 23 கோடி ரூபாய் அதிகமாகும். அறிவு வளர்ச்சிப் பணியில் ஏழை எளிய மக்களின் அரசு எத்துணை அக்கறை கொண்டுள்ளது என்பதைப் புள்ளி விவரங்கள் பட்டயம் கூறுகின்றன.

* * *

பொதுக் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை கடந்த ஐந்தாண்டுகளில் :—

| | |
|---|---|
| 1966-67 | 43.86 கோடி ரூபாய் |
| 1967-68 | 53.56 கோடி ரூபாய் |
| 1968-69 | 57.51 கோடி ரூபாய் |
| 1969-70 | 65.39 கோடி ரூபாய் |
| 1970-71 | 66.83 கோடி ரூபாய் |

துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவைகளின் எண்ணிக்கை பெருகியதுடன் படிப்பவரின் எண்ணிக்கையும் பெருகியுள்ளது. கல்லூரி புகுமுக வகுப்பு வரை (பி.யு.சி.) பி.டி.சி. எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளின் மாணவருக்கான வசதியையும், பள்ளியின் தரத்தையும் பெருக்குவதோடு ஆசிரியர்களின் வசதிகளைப் பெருக்கவும் பல திட்டங்கள் செயலாற்றப்பட்டுள்ளன.

* * *

இந்த அரசினுல் புதிய புதிய பள்ளிகள் துவக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன :—

300 மக்கள் தொகை கொண்ட ஊரில் எல்லாம் தமிழ் நாட்டில் இப்பொழுது பள்ளிகள் உள்ளன. 1966-67-ல் இருந்ததைவிட 724 துவக்க, உயர் துவக்கப் பள்ளிகளும், 263 உயர்நிலைப் பள்ளிகளும், 56 கல்லூரிகளும் இன்று அதிகமாக உள்ளன. மூன்று நிலைகளிலும் கடந்த நான்கு ஆண்டுகளில் படிப்படியாக 8.59 இலட்சம் மாணவர்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

| | துவக்கப் பள்ளிகள் | உயர்நிலைப் பள்ளிகள் | கல்லூரிகள் |
|---|---|---|---|
| 1966-67 | 31,157 | 2,372 | 105 |
| 1967-68 | 31,429 | 2,449 | 116 |
| 1968-69 | 31,712 | 2,513 | 126 |
| 1969-70 | 31,823 | 2,580 | 141 |
| 1970-71 | 31,881 | 2,635 | 161 |

1966-67ல் 31,157 துவக்க உயர்துவக்கப் பள்ளிகள் இருந்தன. இன்று 31,881 பள்ளிகள் உள்ளன. கடந்த நான்காண்டுகளில் முறையே 272, 283, 111, 58 பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன.

* * *

துவக்க, உயர் துவக்கப் பள்ளிகள் அளவில் மட்டும் பெருக்கம் நின்றுவிடவில்லை. உயர்நிலைப்பள்ளிகளும் எண்ணிக்கையில் பெருகியுள்ளன. 1966-67 முதல் 1970-71 வரை ஒவ்வொரு ஆண்டிலும் முறையே 77, 64, 67, 55 உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. 1966-67ல் இருந்த உயர்நிலைப் பள்ளிகள் 2,372. இன்று இருப்பவை 2,635. கல்லூரிகளிலும் கடந்த நான்காண்டுகளில் பெரும் வளர்ச்சியைக் காண்கிறோம். கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 56 கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டிலும் முறையே 11, 10, 15, 20 கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. இன்று 161 கல்லூரிகள் உள்ளன. 1966-67ல் 105 கல்லூரிகள் மட்டுமே இருந்தன. இவை தவிர ஓரியண்டல் பள்ளிகள் (கீழ்த்திசை மொழிப்பள்ளிகள்) மூன்றும் குறை உறுப்புடையவர்களுக்கான பள்ளிகள் இரண்டும் 1967-68க்குப் பின்னர் புதியதாகத் திறக்கப்பட்டுள்ளன.

* * *

பள்ளிகள் கல்லூரிகள் பெருகப் பெருகப் பள்ளி செல்லும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை இந்நான்காண்டுகளில் மேலும் பெருகியுள்ளது.

இந்த நான்காண்டுகளில் மட்டும் தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில் 21,700 ஆசிரியர்களும், உயர்நிலைப்பள்ளிகளில் 6,430 ஆசிரியர்களும் கல்லூரிகளில் 3,244 ஆசிரியர்களும் அதிகப்படி நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

*

பள்ளிகள் எண்ணிக்கையும் மாணவ, மாணவியர்

## உயர்நிலைக் கல்வியை

களின் எண்ணிக்கையும் பெருகியதுடன், மாணவ, மாணவியர்களுக்கு அளிக்கப்படுகின்ற வசதிகளும் நான்கு ஆண்டுகளில் விரிவாகப் பெருகியுள்ளது. 1 முதல் 8 வகுப்பு வரை துவக்க, உயர் துவக்கப் பள்ளி களில் படிக்கின்ற மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதி யினருக்கு மதிய உணவு, பள்ளியில் வழங்கப்படுகிறது. தற்போது 18 லட்சம் மாணவ, மாணவியர் பள்ளி களில் மதிய உணவு பெருகுகின்றனர். இதற்கான 1967-68, 1968-69 1969-70 ஆகிய மூன்றுண்டுகளில் அரசு செலவிட்ட தொகை முறையே ரூ. 179.29; 177.46; 196 லட்சம், 1970-71க்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 196 லட்சமாகும்.

* * *

பள்ளிக் குழந்தைகளுக்கான உணவுப் பொருள் களைச் சேகரித்து வைக்கப் பிராந்தியக் கிடங்குகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க 'கேர்' நிர்வாகத் தினரின் ஒத்துழைப்புடன் அரசு திட்டமிட்டுள்ளது. அதற்காகச் சுமார் 30 லட்சம் ரூபாய் செலவில் பிராந் தியக் கிடங்குகள் பத்து இடங்களில் கட்ட, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திலும், பள்ளிக்கூடங்களில் மதிய உணவுத் திட்டத்தினை நல்ல முறையில் செயல்படுத்த மத்திய சமையற்கூடங் கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 30 மத் திய சமையற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவ்வாண் டில் மேலும் 30 சமையற்கூடங்கள் கட்டி முடிக்கத் திட்டமுண்டு. சமையற்கூடங்களுக்காக 1969-70 முதல் நாளது வரை ரூ. 8 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதல் வகுப்பிலிருந்து மூன்றும் வகுப்பு வரை பள்ளியில் மதிய உணவு பெற்றுப் படிக்கின்ற சிறுவர், சிறுமியர்க்கு இலவசப் புத்தகங்களும், எழுது கருவிகளும் வழங்கப்படுகின்றன. 1967-68 முதல் நான்காண்டு களில் இதற்கெனச் செலவிடப்பட்ட தொகை முறையே ரூ. 3.45, 5.98, 4.69, 10.86 லட்சம் ஆகும். இதனால் பயன்பெற்ற சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை முறையே :

| | |
|---|---|
| 1967-68 | 11.06 லட்சம் |
| 1968-69 | 11.46 லட்சம் |
| 1969-70 | 11.62 லட்சம் |
| 1970-71 | 11.91 லட்சம் |

பள்ளியில், மதிய உணவு, இலவசப் புத்தகம், சிலேட்டு வழங்குவதுடன் பெற்றோர்களை ஊக்குவித்து, நன்கொடையாளர்களைச் சேர்த்துக் கொண்டு அவர் களின் ஒத்துழைப்புடன் இலவச உடையும் பள்ளிச் சிறுவர்களுக்கு வழங்கப்படும் திட்டமும் நல்லமுறை யில் ஆசிரியப் பெருமக்களின் உதவிகொண்டு செயல் படுத்தப்பட்டுள்ளது. சென்ற நான்காண்டுகளில் மாணவ, மாணவியருக்கு ரூ. 31 லட்சம் மதிப்புள்ள சீருடைகள் பள்ளிகளில் வழங்கப் பெற்றுள்ளன. இது தவிர, பள்ளிகளின் முன்னேற்றத்திற்கான சீரமைப்பு மாநாடுகள் 115 இந்நான்கு ஆண்டுகளில் நடத்தப்பட் டுள்ளன. இம்மாநாடுகள் மூலம் கடந்த நான்கு ஆண்டு களில் பெறப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 3.45 கோடி.

* * *

(1967-68 -ரூ. 57.99 லட்சம், 1968-69 -ரூ. 1 கோடி 4 லட்சம்).

(1969-70 - ரூ. 37.16 லட்சம், 1970-71ல் ரூ. 10 கோடி 46 லட்சம்).

* * *

ஆசிரியர் சமுதாயத்தை இந்த அரசு என்றுமே மறந்ததில்லை. ஆசிரியப் பெருமக்கள் மனநிறைவுடன் வாழ, இந்த அரசு எல்லாவித உதவிகளையும் அளித்து வருகிறது. பல திட்டங்களின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் ஆசிரியர்களுக்கு மேற்கொண்டும் பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களை மறந்துவிடாமல் அவர்களுக்கும் சில வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

* * *

அரசின் நிர்வாகத்திலுள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படுவதுபோல் உதவிபெறும் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் 1967-68 முதல் நகர ஈட்டுப் படி வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சித்துறை ஆசிரியர் களுக்கு வீட்டு வாடகைப்படியும், 1967-68 முதல் உயர்த்தப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது.

* * *

அரசின் நிர்வாகத்திற்குட்பட்ட பள்ளியில் பணி புரியாமல் 1-4-55க்கு முன் ஓய்வு பெற்ற ஆசிரியர் களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படாமல் இருந்தது. அக் குறையை நீக்கும் பொருட்டு அவ்வாசியர்களுக்கும் ஓய் வூதியம் அளிக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. (1968-69).

அரசுப் பணியில் இல்லாத ஆசிரியர்களுக்கும் 1-4-69 முதல் குடும்ப ஓய்வு நிதிச் சலுகை அளிக்கப் பட்டுள்ளன.

உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும்

**மாணவ, மாணவியர் எண்ணிக்கை**

| | 1966-67 | 1967-68 | 1968-69 | 1969-70 | 1970-71 |
|---|---|---|---|---|---|
| தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகள் | 50,72,093 | 53,67,327 | 54,27,290 | 55,24,730 | 56,74,296 |
| | | | | கூடுதல் :- | 6,02,203 |
| உயர்நிலைப்பள்ளிகள் | 13,04,119 | 13,49,930 | 14,31,032 | 14,46,739 | 14,86,241 |
| | | | | கூடுதல் :- | 1,82,122 |
| கல்லூரிகள் | 91,590 | 1,10,652 | 1,29,628 | 1,52,791 | 1,65,856 |
| | | | | கூடுதல் :- | 74,266 |

ஆசிரியர்களுக்கும் விடுப்பு (லீவ்) வசதிகளுக்கான விதிகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் தங்கள் கல்வித்தகுதியை உயர்த்திக் கொள்ளத் தூண்டுகோலாய் இருக்கவும், அதன் மூலம் போதித்தலின் தரத்தை உயர்த்தவும், அதிகப்படி கல்வித் தகுதியைப் பெறும் ஒவ்வொரு ஆசிரியர்க்கும் அவரது சம்பள அளவையில் இரண்டு படி உயர்வுகள் அளிக்க 10-1-69 அன்று அரசு ஆணை வழங்கியுள்ளது. இதன்படி இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்கள் பி.டி. அல்லது பி.இ.டி. பட்டம் பெறும்போதும், பி.டி. அல்லது பி.இ.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் எம்.ஏ., எம்.எஸ்ஸி., அல்லது எம்.இ.டி. பட்டம் பெறும்போதும் சம்பளநிலையில் இரு படி உயர்வுகள் பெறுவர்: இவ்வாறே மொழி ஆசிரியர்களும், இதர ஆசிரியர்களும், பி.டி. அல்லது பி.இ.டி. பட்டம் பெறும்போது சம்பள நிலையில் இருபடி உயர்வுகள் பெறுவர்.

தொடக்க, உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டு வரும் அரசாங்க விருதுகள் 1969-70 முதல் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆசிரியர் இல்லம் அமைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி 1969-70ல் வேலூரில் ஆசிரியர்களின் முயற்சியால் கட்டப்பட்ட ஆசிரியர் இல்லத்திற்கு அரசு ரூ. 50,000 அன்புடன் மானியம் அளித்து உள்ளது.

சென்ற மூன்றுண்டுகளில் ஆசிரியைகளுக்காகக் கிராமப்புறங்களில் 432 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இவ்வாண்டிலும் 86 வீடுகள் ரூ. 5 இலட்சம் செலவில் ஆசிரியைகளுக்காகக் கட்டத் திட்டம் உண்டு.

ஆசிரியர்களின் தகுதியையும், தரத்தையும் உயர்த்துவதற்கு அவ்வப்போது பணியிடைப் பயிற்சி வகுப்புகள் (Inspection Training) நடத்தப் பெற்று வருகின்றன. இதற்காக, சென்ற மூன்றுண்டுகளில் மட்டும் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 7,93,673. நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகள்எண்ணிக்கை 132.

கீழ்க்குறித்த சலுகைகளும், ஆசிரியர்களுக்கு 1970-71 முதல் வழங்கப்பட்டுள்ளன.

(1) குறைந்த பட்ச ஓய்வுச் சம்பளம் (பென்ஷன்) ரூ. 20லிருந்து ரூ. 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (2) உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி இப்பொழுது வழங்கப்படுவதுடன் சேமநிதியில் இருந்து பண்டிகை முன் பணம் பெற வசதியும், அரசினர் மருத்துவமனைகளில் இலவச மருத்துவ வசதியும், ரூ. 500க்கு மேற்படாமல் திருமணச் செலவிற்கான கடன் உதவி பெற வசதியும் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் மலைப் பகுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குத் தனியாக மலைப்படித்தொகை வழங்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது. இத்தகைய சலுகைகள் இதற்கு முன்பு அரசின் நிர்வாகத்திலுள்ள அலுவலர்களுக்கும் உள்ளாட்சித் துறையில் உள்ள அலுவலர்களுக்கும் மட்டுமே இருந்தன.

செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் பலர் தங்கள் கல்விக்கேற்ற பதவிகளில் பணிபுரிவதற்குப் பள்ளிகளில் செகண்டரி கிரேடு பணியிடங்கள் இல்லாத காரணத்தால் ஹையர் கிரேடு ஆசிரியர் நிலையில் சம்பளம் பெற்றுப் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையை மாற்ற அரசு 1967-68 முதல் படிப்படியாக ஆண்டுதோறும் செகண்டரி கிரேடு பணியிடங்களைப் பள்ளிகளில் அதிகமாக ஏற்படுத்தி செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு சம்பளம் பெற வசதி செய்துள்ளது. இதன்படி நான்காண்டுகளில் 14,000 ஹையர் கிரேடு பணியிடங்கள் செகண்டரி கிரேடு பணியிடங்களாக மாற்றப்பட்டுள்ளன.

ஆசிரியப் பயிற்சியில் தேர்வு பெற்று வேலையின்றி இருப்பவருக்கு வேலை வாய்ப்புத் தரும் நோக்கத்துடன் இவ்வாண்டு, அரசு 500 பி.டி.கள், 5000 செகண்டரி கிரேடுகள், 1000 ஹையர் கிரேடுகள் ஆக மொத்தம் 6500 பணி இடங்களை ஏற்படுத்தி 6500 பேரைத் தொழில் பயிலும் ஆசிரியர்களாக (apprentice teachers) நியமிக்க ஆணை பிறப்பித்துள்ளது. பல்வேறு பள்ளிகளில் ஆசிரியப் பணியிடங்கள் இனிமேல் நிரந்தரமாகக் காலியாகும்போது தொழில் பயிலும் ஆசிரியர் பணியிடங்களில் வேலை பார்ப்பவர்களே நிரந்தரமாக அவ்வப்பள்ளிகளில் இத்திட்டத்தின்படி வேலைக்கு அமர்த்தப்படுவர்.

* * *

அரசினர் நிர்வாகத்தில் உற்படாத பிற பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் பணிநிலை பிரச்சினைகளைப் பற்றிப் பரிசீலனை செய்து தக்க மாற்றங்கள் ஏற்படுத்தித் தர இவ்வரசு முனைந்துள்ளது. அப்பிரச்சினைகளை ஆய்வு செய்ய ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளிகளுக்குச் சென்ற நான்காண்டுகளில் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு ரூ. 60 லட்சமும், அவைகளில் நூலகங்கள் அமைப்பதற்காக ரூ. 5 லட்சமும், கட்டடங்களுக்காக ரூ. 345 லட்சமும் அளிக்கப்பட்டுள்ளன.

உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டட மான்யமாக, கடந்த நான்கு ஆண்டுகளில் (ஆய்வுக்கூடக் கட்டடத்திற்கும் சேர்ந்து) 276 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது.

உயர்நிலைப்பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைக்க 1967-68, 1968-69, 1969-70 ஆண்டுகளில் முறையே 88, 67, 108 ஆக மொத்தம் 263 பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 40,000 வீதம் மான்யம் அளிக்கப்பட்டது. இதற்கான மொத்தத் தொகை ரூ. 91.59 லட்சம், 1970-71ல் 66 பள்ளிகளுக்கு இம்மான்யம் வழங்கப்படும்.

உயர்நிலைப்பள்ளிகளில் நூலகம் அமைக்க ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 2000 வீதம் சென்ற மூன்றுண்டுகளில் முறையே 150, 213, 159 ஆக மொத்தம் 522 பள்ளிகளுக்கு மான்யம் வழங்கப்பட்டுள்ளது. மான்யம் வழங்கப்பட்ட தொகை ரூ. 6.37 லட்சமாகும்.

உதவிபெறும், தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகளின் காப்புச் செலவிற்கான மான்யம் (Maintenance Grade) 1-1-69 முதல் 10%லிருந்து 12%, ஆக உயர்த்தப்பட்டது. நகராட்சிக் கழக உயர்நிலைப்பள்ளிகளின் காப்புச் செலவிற்கான மான்யம் 1967-68 முதல் 50 விருந்து 66.66% ஆக உயர்த்தப்பட்டது.



இதென்னப்பா கல்லாட்டம் இருக்குது சுவரு! ஆணியே இறங்க மாட்டேங்குதே!
டேய்! அது என்ன சுவருன்னு நினைச்சே! அரசு செங்கல் மேலே அரசு சிமெண்டால் கட்டியதாக்கும்!
1968 எப்ரல் திங்களில் திருமழிசையில் அரசு செங்கற் சூளையும், 1970 சூன் திங்களில் ஆலங்குளத்தில் அரசு சிமெண்டுத் தொழிற்கூடமும் துவக்கப்பட்டன.
சேலம் இரும்பாலை கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலை கல்பாக்கம் திட்டம் வீராணம் குடிநீர் திட்டம், தூத்துக்குடி துறைமுகத் திட்டம் உர ஆலை இன்னும் பல...
அப்பா! டெல்லியிலிருந்து என்ன வாங்கி வந்தீங்க?
இதோ! இனிப்புகள்! பொம்மைகள்!
உங்களுக்கு நோய் ஒன்றுமில்லை! உடம்பைத்தான் குறைக்கணும்!
நில் உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக இருந்ததை தமிழ்நாடு அரசு 15 ஏக்கராக மாற்றியது.


சங்கத் தமிழெடுத்துத்
தங்கத்திலே இணைத்து
எங்கும் எழில்தந்த
தமிழ்மகன் குடிபுகுந்ததால்
பொங்குபுகழ் பெற்ற பூமி

வங்கக் கடற்கரையில் உறங்கும்
தங்கத் திருமகன் துயிலகத்தைக்
காண்பதற்கு நாள்தோறும்
தலைநகரில் கூடும் மக்கள் வெள்ளம்





எத்தனை கோடி வெற்றி இங்கே...!
உணவு உற்பத்தியில் தன்னிறைவு!
ஐந்து ஏக்கர் வரை நன்செய்க்கும் வரிவிலக்கு!
குடிசைப்பகுதிகளை மாற்றி அமைக்க தனிவாரியம்!
ஊரெல்லாம் ஒளிமயம்!
புன்செய்க்கும் வரிநீக்கம்!
தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தனிச் சலுகைகள்!
புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி!
இந்த வெற்றிகளின் முழுமையான பயனை நாடும், வீடும் நுகர நல்வாழ்வு தழைக்க.......
பெருகிவரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவோம்!
அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்
இரண்டுக்குப்பிறகு எப்பொழுதும் வேண்டாம்
வெளியீடு:
சுகாதாரம். குடும்பநலத்துறை தமிழ்நாடு அரசு.

# சீரணிப் பெருமை செப்பவும் பெரிதே!




**பொ**து நன்மைக்காக ஒன்றுபட்டு உழைக்கும் உணர்ச்சிக்குத் தமிழகத்தில் என்றுமே குறைவில்லை. இந்தக் கருத்தினை மையமாக வைத்துச் சீரணி என்ற சிறந்த அமைப்பை உருவாக்கித் தந்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதைத் தமிழகம் அறியும்.

நாட்டு விடுதலைக்குப்பின் சமூகத் தொண்டு—அறிவுத் தொண்டு வளர நல்ல பல திட்டங்கள் உருவாக்கப்பட்டன. நாட்டின் தந்தை காந்தியடிகள், உழைப்பின் உயர்வை உணர்த்திட, நிர்மாணத் திட்டத்தை நாட்டிற்குத் தந்தார். அவர் வழியிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, தான் அரசுப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டபின் இல்லாமை, போதாமை, அறியாமை என்ற இடர்ப்பாடுகளைப் போக்க எண்ணிச் சீரணி என்ற அமைப்பை உருவாக்கித் தந்தார், பேரறிஞர் அண்ணா அவர்கள்.

மக்களின் நல்வாழ்வுக்கெனத் தீட்டப்படும் திட்டங்கள் முழு அளவில் நிறைவேற்றப்பட அரசு மட்டும் முயன்றால் போதாது. அரசோடு மக்களும், தொண்டுள்ளம் படைத்த இளைஞர்களும் முன்வர வேண்டும். எல்லோரும் எல்லாக் காலத்திலும் பொதுத் தொண்டில் ஈடுபட இயலாது. தொழில் தொல்லைகள், குடும்ப பாரம், இன்னும் பல ஆசாபாசங்கள் அதற்குக் குறுக்கே நிற்கும். அவைகளை ஒதுக்கித் தள்ளி நாட்டைச் சீராக்கிச் செம்மைப்படுத்த, அதற்கென்று ஒரு சிலராவது அவசியம் பொதுப்பணிக்குத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். தங்களது குடும்ப காரியங்களைக் கவனித்தது போக மீதமுள்ள நேரத்தை வெறும் பொழுதுபோக்குக் களியாட்டங்களில் வீணாக்காமல் நாட்டு மக்களின் நல் வாழ்விற்குத் தங்களின் உழைப்பினைப் பயன்படுத்த வேண்டும். பணம் படைத்தோர் நிதியும், ஆற்றல் மிக்கோர் ஆற்றலையும் அளித்து உழைப்பின் ஒரு பகுதியைச் சமுதாயப் பணிக்கு அளித்திட வேண்டும். இத்தகைய் தத்துவத்தின் அடிப்படையில் பின்னிப் பிணைந்ததுதான் சீரணி. சீரணியின் நோக்கம் வன்முறை அல்ல. தூய தொண்டாற்றவும், தோழமை வளர்க்கவும் மக்களின் வாட்டத்தைப் போக்கவும், நாட்டின் வளத்தைக் கூட்டவும் உருவாக்கப்பட்டதுதான் சீரணி.

ஊர்தி நன்றாக ஓட, அதை ஓட்ட விசை இருந்தால் மட்டும் போதாது. அது தவறான வழியில் செல்லாமல் தடுக்கத் தடுப்பும் (பிரேக்) வேண்டும். நாடு செழிக்க நல்ல ஆறு இருந்தால் மட்டும் போதாது; அது தடம் புரண்டு ஊரை அழித்திடாமலிருக்கக் கரை வேண்டும். சமூகத்தொண்டு புரிய இளைஞர்கள் பலபேர் இருந்தால் மட்டும் போதாது; அவர்களின் ஆற்றலை, திறமையை, உணர்ச்சியை ஆக்கப்பணிக்குத் திருப்பக் கட்டுப்பாடான அணி ஒன்று தேவை. அதுதான் சீரணி.

உணர்ச்சிப் பிழம்பாய், உள்ளத் துடிப்போடு நிற்கும் இளைஞர் சமுதாயத்தை ஆக்கப் பணிக்கு ஈடுபடுத்தவும், நாடு எனக்கென்ன செய்தது என்று கேட்காமல், நாட்டிற்கு நான் என்ன செய்தேன் என்று சிந்திக்க வைக்கவும் — தன் கையே தனக்குதவி என்ற தாரக மந்திரத்தைத் தரணிக்கு நினைவுப்படுத்தி மக்களைத் தன்னலங் கருதாது பொதுப்பணிக்குத் தயார்ப்படுத்தவும், எல்லாவற்றிற்கும் அரசையே நம்பும் அவல நிலையைப் போக்கித் தன்னால் முடிந்ததை நாட்டிற்குச் செய்ய அணி ஒன்று தேவை. அதுவும், சர்க்கார் பற்றற்ற, சர்க்கார் நேரடித் தலையீட்டில் வராத, ஊதியம், பணம், உத்தியோக உயர்வு கோராத ஒருவித அணி, எல்லா நாட்டிற்கும் தேவை என எண்ணினார் அறிஞர் அண்ணா— சீரணி உருவாயிற்று. நாட்டைச் சீர்படுத்த, சிக்கல்கள் நீக்கிச் செப்பனிட, சமுதாயத்தை, மக்கள் வாழ்வைச் சீரமைக்க, அறிவைப் பரப்ப, ஆக்கப்பணிகள் ஆற்ற அமைக்கப்பட்டதுதான் சீரணி.

இந்த அமைப்பில் வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், பொறியியல் வல்லுநர்கள், பாட்டாளிகள், மாணவர்கள், தாய்மார்கள், எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அரசியலில் ஈடுபாடில்லாத முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள், ஆக 44,000 சீரணித் தொண்டர்கள் பைந்தமிழ் நாடு பல் வளம் பெறவும், சமூகம் நல்ல ஏற்றம் எய்தவும் எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி காணவும், நல்ல ஆக்கப்பணிகள் ஆற்றவும், சீரணியில் நம்பிக்கையும், கொள்கையில் பற்றும், செயலில் ஈடுபாடும் கொண்டு, உள்ளத் தூய்மையோடு, காய்தல் உவத்தல் அகற்றிக் கைமாறு கருதாது, கட்டுப்



பாடோடும், கண்ணியத்தோடும், கடமையாற்றுவேன் என்று உறுதி மொழி ஏற்று ''சீரணி பத்து'' என்ற கோட்பாடுகளை வழிகாட்டியாக அமைத்துக் கொண்டு நாட்டின் வளத்தைப் பெருக்க, காட்டைத் திருத்திக் கழனியாக்க, நீண்ட நெடுங்காலமாகச் செப்பனி






டப்படாத ஏரிகள், குளங்கள், செப்பனிட்டு, அறிவைப் பெருக்கப் பள்ளிகள் அமைத்து, கிராமங்கள் செழிக்க இணைப்புச் சாலைகள் ஏற்படுத்திக் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் உருவாக்கித் தந்த சாதனைகள் ஏராளம், ஏராளம்.

ஆக்கப்பணியில் ஈடுபட்ட அரும் பணி ஆற்றும் சீரணித் தொண்டர்களுக்குப் பொது வாழ்விற்கெனப் பொது நெறியைப் பேணவும், கடமை உணர்ச்சியோடு, கண்ணியம், கட்டுப்பாடு காக்கவேண்டி, சீரணித்துறை அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனைக்கேற்ப முதற்கட்டமாகச் சென்னை நகரச் சீரணியினருக்குக் கட்டுப்பாட்டுப் பயிற்சி அளிக்கத் திட்டம் உருவாக்கி, சுமார் 1000 சீரணித் தொண்டர்களுக்கு ஏழு நாள் பயிற்சி கொடுக்கப்பட்டது. இந்தப் பயிற்சி பயனுள்ளதாக அமைந்த காரணத்தால் மற்ற மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்தத் தமிழக முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்ததின் மூலம் சீரணிக்குத் தனது பாராட்டுதலைத் தெரிவித்தார்கள். இதனை எண்ணி எண்ணிச் சீரணித் தொண்டர்கள் தங்களின் பணியில் மேலும் முனைப்போடு ஈடுபடத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு சீரணி கண்ட செம்மலின் மணி விழா நினைவாக சென்னைக் கடற்கரையில் அனைத்துக் கட்சியின் உபயோகத்திற்காகச் சீரணி அரங்கினை உருவாக்கித் தங்களின் நன்றிக் கடனைச் சீரணி கண்ட செம்மலுக்கு அளித்துப் பெருமைப்பட்டார்கள். அதேபோன்று இந்த ஆண்டும் எளியோர்களுக்குத் தீப்பிடிக்காத மலிவு வீடுகளைக் கட்டித் தர முற்பட்டு 170 வீடுகள் முடியும் தறுவாயில் உள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழகத்தில் தங்களின் அயராத உழைப்பாலும், ஆர்வத்தாலும் உருவாக்கித் தந்த சாதனைகளை எண்ணி எண்ணி ஏறுநடை போடுகிறார்கள். இதோ அவர்களின் சாதனைகள் :

## சாதனைகள்:

1. கட்டி முடிக்கப்பட்ட பள்ளிகள் 944.
2. தூர் எடுக்கப்பட்ட கால்வாய் குளங்கள் 967.
3. அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள் 448.
4. மருந்து தெளிக்கப்பட்ட நிலங்கள் 1500 ஏக்கர்கள்.
5. விளை நிலமாக்கப்பட்ட நிலங்கள் 500 ஏக்கர்கள்.
6. வெள்ளையடிக்கப்பட்ட பள்ளிகள் 13,523.
7. பெயர்ப் பலகைகள் வழங்கப்பட்ட பள்ளிகள் 2,562.
8. அமைக்கப்பட்ட காய்கறித் தோட்டங்கள் 3,224.
9. பொது அறிவை வளர்க்க அமைக்கப்பட்ட சீரணி அறிவகங்கள் 534.
10. பள்ளிச் சுவர்களில் திருக்குறள் பொறித்தல், திருவள்ளுவர் உருவப் படங்களைப் பள்ளிகளில் வைத்தல், சாலைகளைச் சுத்தம் செய்தல், பள்ளிகளில் மின் விளக்கு அமைத்தல் போன்ற இதரப் பணிகள் 9,648.
11. சீரணித் தொண்டர்கள் மூலம் உண்ணும் உணவு முறையில் மாறுதல் செய்து கோதுமை உணவு உட்கொள்ள முன் வந்தவர்கள் 7,02,146.

இப்பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ. 69,51,781

இதற்கென அரசு செலவிட்டது ரூ. 26,13,000-தான்.

இத்தகைய சாதனைகளைக் கண்டு, மைய அரசு அமைச்சர்கள், தமிழக அரசு மேதகு ஆளுநர், சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண், எல்லைக் காந்தி, மொரிசியஸ், பிஜித் தீவு அமைச்சர்கள், வேறு பல அமைப்புகளின் பொறுப்பாளர்கள் தங்களின் பாராட்டுதல்களைத் தெரிவித்து, சீரணி என்ற அமைப்பு வாழவும் வளரவும் வேண்டியிருக்கின்றார்கள்.



மேலும், சென்னை நகரிலும், தமிழகத்திலும் பொது மக்கள் நன்மைக்காகச் சீரணியால் மேற்கொள்ளப்பட்ட—மேற்கொண்டுள்ள கீழ்க்கண்ட சிறப்பான பணிகள் பாராட்டப்பட வேண்டியவைகளாகும் :

சென்னை நகரில் காலையிலும், மாலையிலும் பேருந்துப் போக்குவரத்தில் அதிக நெரிசலின் காரணமாகப் பொதுமக்கள் பெரும்அவதிக்குள்ளாவதைத் தடுக்கும் பொருட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பது பேருந்து நிலையங்களில் சீரணித் தொண்டர்களை நிறுத்தி, பேருந்தில் ஏறும் பொதுமக்களை வரிசைப்படுத்தி, பொதுமக்களுக்கு வசதி செய்து தருகிறார்கள். இதன் காரணமாகப் பேருந்துகள் குறித்த காலத்தில் வருவதுடன், இடநெருக்கடி இல்லாமலிருக்க வழி செய்யப்பட்டுள்ளது.

அடுத்து, சென்னை நகரில் சேரி வாழ் மக்களின் குழந்தைகள் நல்ல ஊட்டச் சத்தில்லாமல் உடல்நலம் குன்றியிருப்பதை எல்லோரும் அறிவோம். இக்குறையினைப் போக்க, தமிழக முதல்வர் அவர்களின் பெரு முயற்சியால், மூன்று வயதிற்கு உட்பட்ட இளம் குடிசைவாழ் சிறார்களுக்குச் சத்துணவு வழங்கும் பொறுப்பினைச் சீரணித் தொண்டர்கள் ஏற்று, இதுவரை 60,000 குழந்தைகளுக்கு மேலாக சத்துணவு, வாரத்தில் ஐந்து நாட்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் சீரணியின் தொண்டுள்ளத்தோடு மிகவும் நல்ல முறையில் செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அனைத்துக் கட்சிக்கும் பயன்படும் வகையில், சென்னை நகரிலுள்ள மெரீனாக் கடற்கரையில், ''சீரணி அரங்கம்'' ஒன்று சீரணித் தொண்டர்களால், மிகக் குறுகிய கால அளவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மயிலை கபாலீஸ்வரர் கோயிலின தெப்பக்குளத்தில் தூர் எடுக்கும் பணியைச் சீரணியினர் மேற்கொண்டனர். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இதனைத் துவக்கி வைத்தார்கள். இதன் மூலம் ஆஸ்திகப் பெரு மக்களின் பாராட்டுதல்கள் தமிழக அரசுக்கும், சீரணி அமைப்பிற்கும் கிடைத்தன.

சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும், சீரணித் தொண்டர்கள், சென்னையிலுள்ள 60 தெருக்களில் துப்புரவுப் பணியினை மேற்கொண்டனர். இதில் அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை வட்டத்தில் உள்ள குடுமியான்மலை விவசாயப் பண்ணையில் நிலத்தைப் பண்படுத்தும் வேலையில் ஈடுபட்டதில், புதையுண்டு கிடந்த ஒரு குளத்தையே சீரணியினர் கண்டு பிடித்தனர். அதைச் சீர் செய்ததில் சுமார் 45 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்ற பான்மையை, தமிழக ஆளுநர் அவர்களே, தனது வருகையின்போது கண்டு களித்துப் பாராட்டினார்கள்.

அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 15-4-1969 அன்று தஞ்சை மாவட்டத்திலுள்ள கோட்டூரில் சீரணித் தொண்டர்களும் உள்ளூர்ப் பொதுமக்களுமாக 25,000 பேர் சேர்ந்து, ஒரே நாளில் எட்டு மைல் நீளமுள்ள சாலையை அமைத்தனர்.

திருச்சி-இராமநாதபுரம் மாவட்டங்களிலிருக்கும் வார்ப்பட்டு-ஓரத்துப்பட்டு கிராமங்களை இணைக்கும் மூன்று மைல் நீளமுள்ள சாலை 10-1-1969 அன்று, 3,000 சீரணித் தொண்டர்களால் ஒரே நாளில் அமைக்கப்பட்டது.

இத்தகைய சீரிய திட்டம் மேலும் வலிவோடும் பொலிவோடும் வளரவும், சீரணி கண்ட செம்மலின் கனவு நனவாகச் சீரணித் துறை அமைச்சர் அவர்களும், தமிழக முதல்வர் அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் வெற்றியுடன் நடைபெற, அரசியல் கண்ணோட்டமில்லாது அனைவரும் சீரணியில் அணி அணியாக வந்து ஆக்கப் பணியில் ஈடுபட்டு, ''உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு'' என்கிற நலமிகு நாட்டை உருவாக்க வாரீர், வாரீர், என்று தமிழகம் அழைக்கின்றது. வாழ்க, வளர்க, சீரணித் தொண்டு.





# ஏழைகளுக்கு எழடுக்கு மாளிகைகள்

ஏழை எளிய மக்களின் அரசு பாமர மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைக்க அரும்பாடுபட்டு வருகிறது. குடிசை வாழ் பகுதிகள், சென்னை போன்ற பெரிய நகரங்களுக்குப் பெரியதொரு களங்கமாகும். நாட்டின் முதுகெலும்பு போன்ற பாமர மகன் குந்தக் குடிசையின்றி அவதியுறும் நிலை, வளர்ந்து வரும் சமுதாயத்திற்கே ஒரு சவாலாகும்! இச்சவாலை ஏற்றுக் கொண்டுள்ளது ஏழைகளின் அரசு. குடிசை வாழ் மக்களின் குறைகளைத் தீர்ப்பதெற்கென, **குடிசைப் பகுதி மாற்று வாரியம்** என்று தனியாக ஒரு வாரியத்தையே அமைத்துள்ளது இந்த அரசு.

ஏழு ஆண்டுகளில், 40 கோடி ரூபாய் செலவில், குடிசைப் பகுதி வாழ் மக்கள் நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையில் வாழ, கட்டடங்கள் கட்டித்தரப்படும்; குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணி இதுதான்.

இந்த வாரியத்தின் முதல் கட்டப் பணி, சென்னை சைதாப்பேட்டை பகுதியில் உள்ள வெங்கடாபுரத்தில் புதிய குடியிருப்புகளை 30 இலட்சம் ரூபாய் செலவில் 402 இல்லங்களாகக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை தியாகராய நகர் தொகுதியில் மாம்பலம் ஏரிக்கரையில் சுமார் 60 மனைகளில் 500 குடியிருப்புகள் நான்கடுக்கு மாடிக் கட்டடங்களாகக் கட்டும் வேலை சுமார் 37 லட்ச ரூபாய் திட்டத்தில் ஆரம்பமாகிவிட்டது.

சைதைத் தொகுதி கோட்டூர்புரத்தில் 1,848 புதுக்குடியிருப்புகள் மூன்று அடுக்கு மாடிக் கட்டடங்களாக 130 லட்ச ரூபாய்த் திட்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது.

வட சென்னை வியாசர்பாடியில் 1,020 புதுக்குடியிருப்புகள் மூன்று மாடிகளோடு 71.20 லட்ச ரூபாயில் கட்டும் ஆரம்பவேலைகள் முடிவு பெற்றுவிட்டன. இந்த மூன்று பெரும் திட்டங்களும் ''இடைக் காலக் குடியிருப்பு'' என்னும் பெயர் கொண்டவைகளாகும். இவை தவிர குடிசை வாரியம், நொச்சிக் குப்பம், அயோத்தியா குப்பம், டொம்மிங் குப்பம், விசாலாட்சித் தோட்டம் முறையே 1000 புதுக் குடியிருப்புகள், 678 புதுக் குடியிருப்புகள் 240 புதுக் குடியிருப்புகள், 768 புதுக் குடியிருப்புகள் மற்றும் (1) பிருந்தாவனம் குடிசை நீக்கு திட்டம் (558 குடியிருப்புகள்) (2) புபேதார் தோட்டம் (330 குடியிருப்புகள்) (3) அப்பாவு நகர் (164 குடியிருப்புகள்) (4) மாம்பலம் ஏரிக் கரைத் திட்டம் (1,422 குடியிருப்புகள்) (5) வெங்கடாபுரம் (384), (6) கபாலீஸ்வரர் கோவில் திட்டம் (138), (7) புளியந்தோப்பு (282), (8) கல்யாணபுரம் (342), (9) கரிமேடு காலனி (100), (10) தாண்டவராய சத்திரம் (384), (11) ரங்கநாதபுரம் (330) போன்ற முன்பே போடப்பட்ட திட்டங்கள் புது முறுக்கோடும் ஆங்காங்கே நடந்து வருகின்றன.

இன்னும் எந்தெந்தப் பெரிய குடிசை வாழ் பகுதிகளை உடனடியாக எடுத்துக் கொள்வது என்பதற்கான 'சர்வேயும், 'புள்ளி விவரமும்' இதற்கென நியமிக்கப்பட்ட குழுவினரால்....சேகரிக்கப்பட்டு வருகின்றன. அப்படிச் சேகரிக்கும் பொழுது ஆங்காங்கு வாழும் குடிவாழ்மக்களின் குடும்பங்கள் புகைப்படம் எடுக்கப் படுகின்றன. புதிதாகச் சேரும் குடிசைகளையும் மக்களையும் தவிர்க்கவும், அதே சமயம் புது வீடுகளில் அவர்கள் குடியேறிய பின் அவர்களைத் தவிர வேறு யாரும் அந்த வீடுகளில் 'வாடகைக்குப்' புகாமல் பாதுகாக்கவும் இந்தப் புகைப்படம் ஒட்டிய 'பாஸ் புக்' ஒன்று அவர்களுக்கு வழங்கவும், அவர்களைப்பற்றிய முழு விவரமும் கொண்ட புத்தகம் ஒன்று மேற்படி புகைப்படத்தோடு வாரிய அலுவலகத்தில் எப்பொழுதும் இருக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

வறுமையால் வாடுவோருக்கு வாழ ஓர் இடம் தரும் புனிதத் தொண்டு இது!—ஏழையின் வாழ்விலே மகிழ்வு பொங்கிடச் செய்யும் திருப்பணி இது!

ஏழாண்டுகளுக்குள் எப்படியும் குடிசைகளே இல்லாமல் செய்ய வேண்டும் என்கிற நோக்கத்தோடு, பல துறைகளில் முன்னேற்றம் கண்டுவரும் தமிழக அரசுதான், இந்தியாவிலேயே இப்படி ஒரு தனி வாரியத்தையே இதற்காக உருவாக்கியுள்ளது.

ஏழையின் சிரிப்பில்தானே இறைவன் இருக்கின்றான்!



# அரசு ஊழியர்களுக்கு

**1967** நவம்பர் திங்களில் இருந்து முதல் முறையாக அகவிலைப்படி உயர்வு அளிக்கப் பட்டது.

1-10-67 முதல் நகர ஈட்டுப்படி, சென்னைக் கும் 1-3-68 முதல் மதுரை நகருக்கும் அதன் புறநகர்ப் பகுதிகளுக்கும் வழங்கப்பட்டது.

1967 டிசம்பர் உதகை, கூனூர், கொடைக் கானல் போன்ற மலைப்பகுதிகளில் பணிபுரி வோருக்குக் குளிர்காலப்படி வழங்கப்பட்டது.

பல்லாண்டுக் காலமாகப் பத்திரப் பதிவுத் துறையில் கீழ்நிலை எழுத்தர்களாகவே பணி யாற்றிக் கொண்டுவந்த 215 பேர், மேல் நிலை எழுத்தராகப் (U. D. C.) பதவி உயர்வு பெற்றனர் கள்.

அரசிதழ் பதிவுறு அரசு அலுவலர்களின் பிள்ளைகள் அனைவருக்கும் கல்லூரியில், புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி வழங்க ஆணை பிறப் பிக்கப்பட்டது.

சர்வே இலாகாவில் பணிபுரியும் சர்வேயர் களின் ஊதிய விகிதங்கள் 1959-ஆம் ஆண்டு அமைத்த, முதல் ஊதியக் குழுவில் மிகக் குறை வாக இருந்தது, கணிசமான அளவிற்கு உயர்த் தப்பட்டது.

1-6-68 முதல், 2-வது முறையாக அகவிலைப் படி உயர்வு.

கதர் ஆடை கடனுக வழங்குவது போல், கைத்தறி ஆடை வாங்கவும் கடன் வழங்கப்பட் டது.

விவசாயத்துறையில் பணிபுரியும் முதுநிலை, இளநிலை டிராக்டர் ஓட்டிகளுக்கு ஊதிய விகிதம் 75-1-85, 80-2-100 என்றிருந்ததை முறையே 90-3-105-4-125, 125-3-140-5-150 என உயர்த்தப்பட்டது.

10-9-68 முதல், ஈட்டிய விடுப்பைப் பண மாகப் பெற ஆணை பிறப்பிக்கப்பட்டது.

23-9-68 முதல், வேண்டுகோளின்படி மாற் றலாகும் அரசு ஊழியர்களுக்கும், பணியில் சேரு வதற்குக் காலம் (Joining time) கொடுக்கப் பட்டது.

11-1-69 முதல், 3-வது முறையாக அகவிலைப் படி உயர்வு அளிக்கப்பட்டது.

மருத்துவச் சான்றிதழ், அடிக்கடி பெற வேண்டிய அவலநிலையை நீக்கி, நோயுற்றபோது சலுகைகள் பெற 'மருத்துவச் சான்று அட்டை' வழங்கப்பட்டது.

1-4-69 முதல் திருமணக் கடன் ரூ. 2000- வழங்கப்பட்டது.

முந்திய அரசு 1965-ஆம் ஆண்டிலேயே அமைக்க வேண்டிய 2-வது ஊதியக் குழுவினை இந்த அரசு 4-9-69ல் அமைத்தது.

விடுப்பு ஊதியத்தைக் கணக்கிட 12 மாத ஊதிய சராசரி கணக்கில் கொள்ளப்பட்டிருந் ததை 12-7-68 முதல், 10 மாதமாகக் குறைக்கப் பட்டு, பின் அதனையும் நீக்கி, 1-11-69 முதல் கடைசி மாதம் என்ன ஊதியம் வழங்கப்பட் டதோ அதனையே வழங்க ஆணை பிறப்பிக்கப்பட் டது.

அலுவலக முன்னேற்றத்திற்கும், நிர்வாக நடைமுறையில் முன்னேற்றம் காணுவதற்கும், திட்டங்களை ஊழியர்கள் வழங்கினால் ரூ. 2000-

## எண்ணிலாச் சலுகைகள்



பரிசாக வழங்கப்படும் என அரசு 11-11-69-ல் ஆணை பிறப்பித்தது.

பத்திரப் பதிவுத்துறையில், பகுதி எழுத்தர்கள் நீண்ட காலமாக ஒரு குறிப்பிட்ட தொகையே ஊதியமாகப் பெற்றுவந்ததை மாற்றிப் புதிய ஊதிய விகிதமாக 70-2-100 என ஆண்டுக்கு ஆண்டு ஊதிய உயர்வு பெறத்தக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

1-3-70 முதல், 500 ரூபாய் ஊதியம் பெறும் அரசு ஊழியர்கள் அனைவருக்கும், இடைக்கால நிவாரணமாக ரூ. 10 - வழங்கப்பட்டது. (குறிப்பு : வேறு எந்த மாநிலத்திலும் இடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டதில்லை).

ஓய்வுக் கால ஊதியத்தையும், கிராஜுட்டியையும் கணக்கிடுவதற்கு, 1966-ஆம் ஆண்டுவரை உள்ள அகவிலைப்படியை ஊதியத்துடன் இணைத்துக் கணக்கிடல் 26-2-70 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. (இதனால் ஓய்வுக் கால ஊதியம் கணிசமான அளவிற்கு உயர்ந்தது).

ஓய்வுக்கால ஊதியத்தைக் கடைசி 3 ஆண்டுகளின் ஊதியத்தின் சராசரியைக் கணக்கிட்டு வந்ததை மாற்றிக் கடைசி 12 மாதங்களின் சராசரி ஊதியத்தைக் கணக்கிட்டு வழங்க ஆணையிடப்பட்டது. (இதனால் ஓய்வுக் கால ஊதியம் உயர்ந்தது).

குறைந்த பட்ச ஓய்வுக் கால ஊதியம் 1-3-70 முதல் ரூ. 30 - ஆக உயர்த்தப்பட்டது.

பல்லாண்டுக் காலமாகச் சேப்பாக்கத்தில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்குக் குடிநீர் இல்லாத குறையை நீக்கிட, பம்பு செட்டுகளும் குழாய்களும் அமைத்திட ரூ. 50,000 - அனுமதி வழங்கப்பட்டது. இதேபோல் தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் செங்குன்றம் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டது.

வெள்ளைக்காரன் காலத்திலிருந்து கொடுவாளாக இருந்து வந்து ரகசியக் குறிப்பேட்டு முறை 3-9-70 முதல் ஒழிக்கப்பட்டது.

ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளுக்கு 1-9-70 முதல், படி உயர்த்தப்பட்டது.

வேளாண்மைத்துறையில் 1961-ஆம் ஆண்டிலிருந்து, எழுத்தர்களில் இருந்து உதவியாளருக்குப் பதவி உயர்வு கொடுப்பதில், மண்டல சீனியாரிட்டி முறை இருந்ததால், சில மண்டலங்களில் குறைந்த ஆண்டுகள் பணியாற்றியவர்கள் பதவி உயர்வு பெற்ற பின்பு சில மண்டலங்களில், மிகுதியான ஆண்டுகள் பணியாற்றியவர்கள் பதவி உயர்வு பெறுகின்ற அவல நிலை இருந்து வந்ததை நீக்கி தமிழகம் முழுவதும் பணியாற்றும் எழுத்தர்கள் சீரான முறையில் உதவியாளர் பணிக்குப் பதவி உயர்வு பெறத்தக்க முறையை அமுலுக்குக் கொண்டுவர 26-9-70-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மூக்குக் கண்ணாடி வாங்க, ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன் பணம் ரூ. 50 - கொடுக்க 17-9-70-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

உதவியாளரிலிருந்து, துணை தாசில்தார் பதவி உயர்வுக்கும், துணை தாசில்தாரில் இருந்து தாசில்தார் பதவி உயர்விற்கும் இருந்து வந்த வயது வரம்பாகிய 40, 45-ஐ முறையே 48, 50 ஆக உயர்த்தியும், தாசில்தாரிலிருந்து துணை மாவட்ட ஆட்சியாளர் பதவி உயர்விற்கு வயது உச்ச வரம்பை 50-ல் இருந்து 52 ஆக உயர்த்தியும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ரூ. 300-ஊதியம் பெறும் ஊழியர்களுக்குத் தொழில் வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

விழா முன்பணம் (Festival Advence) ரூ. 120- ஆக இருந்தது ரூ. 150- ஆக உயர்த்தப்பட்டது.

தர்மபுரி மாவட்டத் தலைநகரில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு ரூ. 3 - வீட்டு வாடகையாக வழங்கப்பட்டு வந்திருந்ததை மாற்றி ஏனைய மாவட்டத் தலைநகருக்கு வழங்கப்படுவதுபோல் வீட்டு வாடகையினை உயர்த்திக் கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது, 24-10-70-ல். (இது முந்திய அரசால் 1965-ஆம் ஆண்டிலேயே வழங்கப்பட்டிருக்க வேண்டும்.)

வேளாண்மைத்துறையில் பணிபுரியும் டிரிலிங் பிரிவு ஊழியர்களின் ஆண்டு ஊதிய உயர்வினைக் கணக்கிடுவதில் பல்லாண்டுக் காலமாக இருந்து வந்த (Footage System) அறவே நீக்கப்பட்டுத் துன்பம் போக்கப்பட்டது.

தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் வசதிக்காக, (காரிகன் அரங்கு) என்ற இடத்தைத் திருத்தி அமைத்து 'அண்ணா அரங்கம்' என்ற ஓர் பெரிய அரங்கு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

2-வது ஊதியக் குழுவின் அறிக்கையை அரசு பெற்றுப் புதிய ஊதிய விகிதங்கள் 2-10-70 முதல் அமுல் படுத்தப்பட்டது. **(முன் தேதியிட்டுக் கொடுத்தது, தமிழக அரசின் 23 ஆண்டுக்கால வரலாற்றில் இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.)** இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஆரம்பத்தில் 21 கோடி ரூபாயும் இறுதி வாக்கில் 47 கோடி ரூபாயும் கூடுதல் செலவாகும்.

முழு அகவிலைப்படியும் ஊதியத்துடன் இணைக்கப்பட்டது.

வீட்டு வாடகைப்படி, மத்திய அரசு ஊழியர்கள் பெறுவது போலவே 15%-க்கு உயர்த்தப்பட்டது. இது 71-72-ல் 8%, 72-73-ல் 12%, 73-74-ல் 15% என மூன்று கட்டத்தில் உயர்த்தப்படும்.

தினப்படி (Daily Allowance) வெள்ளைக்காரன் காலத்திலிருந்து கடைநிலை ஊழியருக்கு 1.25 எனவும் இளநிலை எழுத்தருக்கு ரூ. 2 - என்றும்

இருந்தவை, முறையே, ரூ. 3, ரூ. 4.50 எனக் க்ணிசமாக உயர்த்தப்பட்டுள்ளன. மற்றவர்களுக் கும் உயரும்.

ஒரு பதவியில் அதிகப்படியான ஊதியத்தைப் பெற்றவர் மேலும் ஊதிய உயர்வோ அல்லது பதவி உயர்வோ இல்லாது துன்பப்படுகின்ற நிலை நீங்கிடப் பதவி உயர்வு கிடைக்கும் வரை இரண்டு ஆண்டிற்கு ஓர் ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது.

பதவியிலிருந்து ஓய்வு பெறும் ஊழியர் தன் னுடைய கணக்கிலுள்ள விடுப்பினை 120 நாட் களுக்கு ஊதியமாகப் பெற வழி செய்யப்பட்டுள் ளது.

மத்திய அரசு ஊழியர்கள் எந்த வகையில் பயணச் சலுகை பெறுகின்றார்களோ அதே சலுகை தமிழக அரசு ஊழியர்களுக்கும் வழங்கப் படும்.

ஓய்வுக்கால ஊதிய வரம்பு நீக்கப்படுகிறது.

குடும்ப ஓய்வுக்கால ஊதியம் அளிக்க கிராஜுட்டியில் இரண்டு திங்கள் ஊதியத்தைக் குறைத்துக் கொண்டிருந்ததை மாற்றி ஒரு மாத ஊதியம் மட்டுமே குறைத்துக் கொள்ளப்படும்.

குறைந்த பட்ச ஓய்வுக் கால ஊதியம் ரூ. 20 -ல் இருந்து ரூ. 50 -க்கு உயர்த்தப்பட் டது.

ஓய்வு பெறப் பணிக்காலத்தின் வரம்பு 30 ஆண்டிலிருந்து 25 ஆண்டுகளாகக் குறைக் கப்படுகிறது.

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் அனைவரும், பணிபுரியும்போது, என்னென்ன மருத்துவச் சலு கைகள் பெறுகிறார்களோ அவை அத்தனையும் பெறவும், விழா முன்பணம் பெறவும், அகவிலைப் படி பெறவும் தகுதியுடையவர்களாகின்றார்கள்.

ஏழை எளிய மக்களின், நடுத்தர மக்களின் நல்வாழ்விலே அக்கறை கொண்டுள்ளது தமிழக அரசு. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போன்ற சமுதாயத்தின் முதுகெலும்பானவர்களின் வாழ் விலே மகிழ்வு காண வேண்டும் என்பதைத் தன் இலட்சியமாகக் கொண்டுள்ளது தமிழக அரசு. கடந்த நான்காண்டுச் சாதனைப் பட்டியல் இதற் குச் சான்று பகர்கின்றது.


ARASU CEMENT TIDCO

அரசு சிமெண்ட்

பாதுகாப்புத் திறன் நிறைந்தது

இப்பொழுது எங்கும் கிடைக்கிறது

மிகச் சன்னமான தரமுடைய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட் இப்பொழுது சுலபமாகக் கிடைக்கிறது. இந்த உயர்ந்த ரக சிமெண்டை எமது ஸ்டாக் கிஸ்ட்டுகள் ஆண்டு ஒன்றுக்கு நான்கு லட்சம் டன்னுக்கும் அதிகமான அளவில் விற்பனை செய்வார்கள். ஐ.எஸ்.ஐ. நிர்ணயித்துள்ள தரத்தைக் காட்டிலும் சிறப்பான சிமெண்ட்.

கட்டுமானங்களுக்கு மிகுந்த வலுவையும் வனப்பையும் அளிக்கும் உயர்ந்த ரக அரசு சிமெண்ட் உபயோகித்துக் கட்டிடம் கட்டுங்கள்.

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)

(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)

150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம், 3வது மாடி, தபால் பெட்டி நெ. 5205, சென்னை-2.

தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்.

AC-13


நேற்று நாம் குடியரசு ஆனோம்;
ஆம், 21 ஆண்டுகளுக்கு முன் ....
உற்சாகமூட்டி நம்பிக்கை
எழுப்பிய குடியரசு.
இன்று நம் சாதனைகள் பல. ஆயினும்
பணிகள் இன்னும் பல
காத்திருக்கின்றன.
வருங்கால பாரதம் மிளிரும் பாரதம்.
அதற்காவன இன்று நம் பணி.
நேற்றும் நாளையும்
davp 70/631



# சேமிப்பிலும் சாதனை

தமிழகம், பல்வேறு துறைகளைப் போல், சேமிப்புப் பண்பை வளர்ப்பதிலும் முன்னணியில் நிற்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் பெருகிவரும் சேமிப்புத் தொகையே இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

*1967-68-ல் 38.54* கோடி ரூபாயாகவும், *1968-69-ல் 38.12* கோடி ரூபாயாகவும் இருந்தது *1969-70-ல்* ரூ. *40.34* கோர்டியாக உயர்ந்துள்ளது. *1970-71-ல்* நவம்பர் திங்கள் வரை *25.04* கோடி ரூபாய் வசூல் ஆகியுள்ளது. இந்த ஆண்டு வசூல் கடந்த ஆண்டுகளின் வசூலைத் தாண்டிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பளப் பட்டியல் சேமிப்பைப் பொறுத்தவரை தமிழகத்தின் சாதனை பெருமைப்படத்தக்கதாகும். பின்வரும் புள்ளி விவரங்கள் அதனை எடுத்துக் காட்டும்.

மாநிலத்திலுள்ள 30 நகராட்சிகளில் உள்ள ஊழியர்களில் 90 சதவீதம் சம்பளப் பட்டியல் சேமிப்பில் சேர்ந்துள்ளனர். வளரும் மாதச் சேமிப்பைப் பொறுத்தவரையில் முந்திய ஆண்டுகளைவிட இவ்வாண்டு (1-12-70 படி) 4 லட்சம் ரூபாய் கூடுதலாக வசூலாகியுள்ளது.

மாநில சிறுசேமிப்புத் துணைத்தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் இடையறாத முயற்சிகளும் வேண்டுகோளும் இப்பலன்களைத் தந்துள்ளன என்றால் மிகையாகாது. அவரது தீவிர முயற்சியால் ஆசிரியர்களும், மாணவ-மாணவியரும் லட்சக்கணக்கில் சேமிப்பில் ஈடுபட்டுள்ளனர். *1966-ல்* உயர்நிலைப்பள்ளி மாணவ-மாணவியர் இரண்டரை லட்சம் பேர்தான் சேமித்து வந்தனர். *1970-ல்* 9 லட்சம் பேர் சிறு சேமிப்பில் சேர்ந்துள்ளனர்.

*1966-ல்* ஒரு லட்சம் ஆசிரியர்கள் சிறுசேமிப்பில் முதலீடு செய்து வந்தனர். *1970-ல்* இரண்டு லட்சம் ஆசியர்கள் சிறுசேமிப்பில் பணம் போட்டு வருகிறார்கள். திருவாரூர் ஊராட்சிப்பள்ளி மாணவர்கள் மட்டும் சுமார் *3600* பேர் சேமிப்பில் சேர்ந்திருக்கிறார்கள் என்றால், துணைத்தலைவரின் முயற்சியே பெரிதும் காரணம்.

*1969-ல்* சிறுசேமிப்பில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. பிற மாநில நிறுவனங்கள் கூட தமிழகத்தில் சிறுசேமிப்பில் முதலீடு செய்யலாயினர். மராட்டியம், வங்காளம், ஒரிசா ஆகிய மாநில நிறுவனங்கள், சுமார் *10* லட்சம் ரூபாயினைத் தமிழகத்தில் சிறுசேமிப்பு நிதியில் முதலீடு செய்தனர்.



*1970*—மே திங்களில் ஒரே நிறுவனம் மட்டும் *16* லட்ச ரூபாயளவில் சிறுசேமிப்பில் முதலீடு செய்துள்ளது. சென்னை உர ஆலை, இம்பீரியல் புகையிலை நிறுவனம், பிரசாத் பிராசஸ், வாகினி ஸ்டுடியோ, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நிறுவனங்களிலுள்ள ஊழியர்கள் சுமார் *1000* பேர் சம்பளப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறு சேமிப்பு விளம்பரங்களுக்காக மாநிலம் முழுவதும் 7 ஊர்திகள் இயங்கி வருவதோடு, துணைத் தலைவரின் தனி முயற்சியால் நடமாடும் அஞ்சலக ஊர்தி ஒன்றும் புதிதாகச் செயல்பட்டு வருகிறது. பள்ளிகளுக்கும் இல்லங்களுக்கும் சென்று சேமிப்புப் பழக்கத்தை வளர்க்க இந்த ஊர்தி பெரிதும் உதவி வருகிறது. இதனை மக்கள் இயக்கமாக்கத் தமிழ்நாடு அரசு முழுமுயற்சியினை எடுத்து வருகிறது.

| ஆண்டு | சம்பளப்பட்டியல் சேமிப்பு குழுக்கள் | உறுப்பினர் | மாத சராசரி வசூல் |
|---|---|---|---|
| *1967-68* | *5,200* | *3,15,672* | *17,82,000* |
| *1968-69* | *5,680* | *3,89,520* | *21,52,000* |
| *1969-70* | *5,252* | *3,60,000* | *17,76,000* |
| *1970-71 (1-12-70ல் உள்ளபடி.)* | *6,070* | *3,60,000* | *24,00,000* |

மண் செழித்துப் பொன் விளைய

**M F காம்ப்ளக்ஸ் உரங்களை உபயோகியுங்கள்**

தற்பொழுது M F காம்ப்ளக்ஸ் உரங்கள் 15-15-15, 14-28-14 என்ற இரு ரகங்களில் விநியோகிக்கப் படுகின்றன.

சென்னையிலுள்ள மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனம்தான் முதன் முதலாகத் தமிழ் நாட்டிற்கு குறுணை வடிவமான M F காம்ப்ளக்ஸ் உரங்களை அறிமுகப்படுத்தி விநியோகித்து வருகிறது.

கிடைக்குமிடங்கள் :

**ஷா வாலஸ் கம்பெனி,**
**இ. ஐ. டி. பாரி கம்பெனியாரின்**
**விநியோகஸ்தர்கள்**
மற்றும்
**கூட்டுறவு நிறுவனங்கள்**



மதராஸ்
**பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**
சென்னை (மணலி)

## நல்வாழ்த்துக்கள்

**யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ் பிரைவேட் லிமிடெட்**
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ஜூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath

**தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்**



Dr. S. K.

கலந்துசாப்பிடுங்கள். இதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப் பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப் படுத்திப் புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம் —விலை ரூ. 60.00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி. பி. பி.-யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்

டாக்டர் S. காளிமுத்து, R.M.P. (IND), V.V.C., A.M.I.H.

பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி S.I.
போன்: 16 தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபீஸ் :
41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1
போன் : 21448

# பிற்பட்டோரைப் பேணத் தனித்துறை

சமுதாயத்தில் பிற்பட்டோர் நலனில் தமிழக அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களை முன்னேறச் செய்வதைத் தான் அடிப்படை இலட்சியமாகக் கொண்டு இயங்குகிறது தமிழக அரசு.

பிற்பட்டோர் நலத்துறை என்று ஒரு தனித் துறையே இந்த அரசினால் 1969-ல் துவக்கப்பட்டது. அதற்கு முன், பிற்பட்டோர் நலன் பற்றிக் கவனிக்கத் தனியாக ஒரு துறை கிடையாது.

முன்பெல்லாம், பிற்பட்ட வகுப்பினர் கல்வி—உதவிப் பணம் பெற வேண்டுமென்றால் 45 அல்லது 50 மதிப்பெண்கள் முந்திய தேர்வில் பெற்றிருக்க வேண்டும். பிற்பட்டோர் நலனைத் தன் கண்ணேபோல் கருதும் தமிழக அரசு இதை மாற்றி, 40 மதிப்பெண்கள் இருந்தால் போதும் என்று ஆணையே பிறப்பித்தது. இதனால் படிப்பிலே பின் தங்கியுள்ள பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவர்கள் பெரும் பயன் எய்தியுள்ளனர்.

உதவிப் பணம் பெறுபவர்கள், நிதி ஒதுக்கீடு இருக்கும் வரையில்தான், ஒரு வரையறைக்குட்பட்டு, உதவிப் பணம் பெற்று வந்தார்கள். ஆனால், இந்த ஆட்சி வந்தவுடன் இந்த முறையை மாற்றித் தகுதி படைத்த அனைவருக்கும் இந்த உதவிப் பணம் அளிக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

இந்த முறையினால் பலன் பெற்றோர் ஏராளம்! ஏராளம்!!

இதோ புள்ளி விவரங்கள் :

| | பலன் பெற்றோர் | அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகை (இலட்சக் கணக்கில்) |
|---|---|---|
| 1967-68 | 65,263 | 106.25 |
| 1968-69 | 88,006 | 129.78 |
| 1969-70 | 1,32,013 | 174.38 |
| 1970-71 | 1,84,818 | 214.16 |

பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை ஏற்பட்ட பொழுது இருந்த மாணவரில்லங்கள் 48 தான். இப் புதிய துறை ஏற்பட்ட பிறகு மாணவரில்லங்களின் எண்ணிக்கை 67 ஆக உயர்ந்துள்ளது.

| | மாணவரில்லங்கள் | இல்லங்களில் தங்கிப் படிப்போர் |
|---|---|---|
| 1967-68 | 48 | 4,598 |
| 1968-69 | 48 | 4,598 |
| 1969-70 | 48 | 4,598 |
| 1970-71 | 67 | 6,103 |

உதவிப் பணம் வழங்குவதில், சட்டம், புலவர், பட்ட மேற்படிப்பு போன்ற கல்விகளுக்கு இதற்கு முன்னால் வரையறை இருந்தது. இத்துறை ஆரம்பிக்கப்பட்டவுடன், இந்த வரையறை நீக்கப்பட்டுவிட்டது. 40 விழுக்காடு மதிப் பெண்கள் பெற்று, ஆண்டு வருமானம் ரூ. 2000க்கு உட்பட்ட எல்லா பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களுக்கும் உதவிப் பணம் அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது இந்த அரசினால்.

குறைந்த வருமானக்காரர், குற்றப் பரம்பரைச் சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட வகுப்பினருக்கென மத்திய அரசின் ஆணைப்படி ஆண்டுதோறும் ரூ. 14.84 லட்சம் ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்படுகிறது.

இத்துறை மூலம் நிர்வகிக்கப்படும் 270 குற்றப் பரம்பரைச் சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்காக நடத்தப்படும் பள்ளிகளில், மதிய உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் சுமார் 31,000 சிறுவர் சிறுமியர் மதிய உணவு பெறுகின்றனர்.

அவர்கள் அரசு மாணவரில்லங்களில் தங்கிப் படித்தால் ஆண்டுதோறும் சீருடைகள் இருமுறை வழங்கப்பட்டு வந்தன. இத்திட்டம் கடந்த ஆண்டில் இவ்வகுப்பினருக்காக நடத்தப்படும் 270 பள்ளிகளில் மூன்றும் வகுப்பு வரை பயிலும் சிறுவர் சிறுமியரும் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 9000 சிறுவர் சிறுமியர் பயன் பெறுகின்றனர்.

இவ்வகுப்பினருக்கு ஆண்டுதோறும் உழவு மாடுகள் வாங்கவும், பாசனக் கிணறுகள் வெட்டவும் முறையே ரூ. 500, ரூ. 2000 வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 2.58 இலட்சமாகும்.

மருத்துவ வகுப்பினருக்கும், சலவையாளருக்கும் ஆண்டுதோறும் (மாவட்டத்திற்குத் தொழிலுக்கு 60 பேர் வீதம்) தொழிற்கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ரூ. 75 பெறுமான தொழிற்கருவிகளை மருத்துவ வகுப்பினர்களும் ரூ. 110 – பெறுமான கருவிகளைச் சலவையாளர்களும் இதன் மூலம் பெறுகின்றனர்.

பிற்பட்டோர் நலன் பற்றி ஆய்வு செய்யத் தனி ஒரு குழுவையே, பிற்பட்டோர் நலக்குழு ஒன்றினையே அமைத்தது அரசு. இப்படி ஒரு குழு அமைக்கப்பட்டது இதுதான் முதல் தடவை. அக்குழு தன்னுடைய அறிக்கையை அரசுக்கு அளித்துவிட்டது. அப்பரிந்துரைகளை அரசு பரிசீலனை செய்து, ஆவன செய்ய இருக்கிறது.



தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு
தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டுக்காக
நாம் செலவிடும் ஒவ்வொரு ரூபாயும்
இலட்சாதிபதிகளை மட்டும்
உருவாக்கவில்லை !
ரூ
10,00,000
பள்ளிகள் கட்ட....
மருத்துவமனைகள் திறக்க...
குடிசைப்பகுதிகளை
மாற்றியமைக்கப்
பயன்படுகிறது!
நாட்டின் நல்வாழ்வையும்
உருவாக்குகிறது!


நம் நல்வாய்ப்பைச் சோதிக்க
நல்லதொரு திட்டம்
இன்றே வாங்குவீர்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு
வெளியீடு: இயக்குநர், செய்தி விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

அன்றும்

இன்றும்



# தொழிலாளர் நலன்



"வளர்க தொழில் — வாழ்க தொழிலாளர்'' என்பதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு தொழிலாளர் கொள்கை அமைந்திருக்கிறது.

நாட்டிலே தொழில் வள வேண்டும். தொழில் வளர்ந்தால் வேலைவாய்ப்புப் பெருகுவதோடு தொழிலாளரின் ஊதியமும் பெருக முடியும். தொழில் வளர, தொழில் அமைதி தேவைப்படுகிறது. இத் தொழில்அமைதியை நிலை நாட்டத் தமிழ்நாடு அரசு முழு முயற்சியும் எடுத்து வருகிறது.

## சில முக்கிய உடன்பாடுகள் :

சுமார் 17,000 தொழிலாளர்கள் கொண்ட நெய்வேலி பழுப்பு நிலக்கரித்தொழிற்சாலையின் ஊதிய உயர்வுக்கான கோரிக்கை எழுந்த சமயம், தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியும், தொழிலாளர் நல அமைச்சரும் நேரிலே நிர்வாகத்தினருடன் பேசி, அத்தொழிற்சாலைகளில் பல கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டிருந்தாலும் தொழிலாளர்கள் நன்மையைக் கருதிக் கணிசமான ஊதிய உயர்வு கிடைக்க வழி செய்தார்கள். குறைந்த பட்ச ஊதியம் 185 ரூபாய் என்றும், ஆண்டுக்கு ஊதிய உயர்வினால் அதிகமாகச் செலவாகும் தொகை 92 லட்சம் ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. மீண்டும் சில நாட்களுக்கு முன் 1969-70ஆம் ஆண்டு போனஸ் பிரச்சனை எழுந்த போது முதல்வரும் தொழிலாளர் நல அமைச்சரும் வழங்கிய அறிவுரையின் பேரில் 4 சத போனசுடன் மேலும் 1 சதம் தொழிலாளருக்குக் கிடைத்திருக்கின்றது.

மலைத்தோட்டங்களிலே உள்ள தோட்டத் தொழிலில் 1 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். இந்த காப்பி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு, போனஸ் போன்ற பிரச்சனைகளை எந்த விதமான தகராறும் ஏற்படாமல் மூன்றாண்டுக் காலத்திற்கான ஒப்பந்தம் சுமுகமான முறையில் ஏற்பட இவ்வரசு உதவி அளித்திருக்கிறது. மற்ற மாநிலங்களில் தோட்டத் தொழிலில் தகராறும், பலாத்காரமும் ஏற்படுகின்ற நேரத்தில்

நமது மாநிலத்தில் தொழிலாளர்களுக்குச் சாதகமான இவ்வொப்பந்தம் பாராட்டுதற்குரியது.

தோல் பதனிடும் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர் வேலை மிகக் கடினமானது. அதே நேரத்தில் அவர்களுக்கு மாநில ரீதியில் பலம் வாய்ந்த தொழிற்சங்கம் இல்லாத காரணத்தினுல் -அவர்களின் ஊதியம் குறைவாக இருந்ததோடு இடத்துக்கு இடம் வேறுபாடும் அதிகமாக இருந்தது. 1969-ஆம் ஆண்டு இவர்களின் ஊதியப் பிரச்சனை எழுந்தபோது இவ்வரசின் தொழிலாளர்துறை நேரிலே தலையிட்டுத் தொழிலாளர்களின் கோரிக்கையில் நியாயம் இருக்கின்றது என்று தொழில் அதிபர்களுக்கு எடுத்துக் கூறியதின் பேரில், தொழில் அதிபர்களும் அரசின் நியாயமான போக்கிலே நம்பிக்கையைத் தெரிவிக்கின்ற முறையில் இப்பிரச்சனைக்கு முடிவு காணும் வகையில் தொழிலாளர்துறை ஆணையரின் நடுத்தரத் தீர்ப்பை ஒப்புக் கொள்வதாக முன்வந்தார்கள். தீர்ப்பும் இப்போது வழங்கப்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டத்தைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் உள்ள 8,000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கணிசமான ஊதிய உயர்வு பெற்றிருக்கின்றனர். மத்தியஅரசின் ஆதிக்கத்திற்குட்பட்ட தொழில் நிறுவனங்களில் சுட்டமைதி நிலை மாநில அரசு அக்கறை காட்டி வருகின்றது. ஓவர்சீஸ் வங்கி, சென்னைத் துறைமுகம், ரயில்வே பயர்மென் இவை போன்ற பிரச்சனைகள் முதல்வர் முயற்சியால் துரிதமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன.

## பஞ்சாலைத் தொழில்

பஞ்சாலைகள் பல மூடப்பட்டன என்பது நமக்குத் தெரியும். இவற்றில் 14 ஆலைகள் முந்திய ஆட்சியிலே மூடப்பட்டன. பஞ்சாலைகள் மூடப்பட்டதற்கு அன்றைய ஆட்சியில் பரவலாகக் கையாளப்பட்ட கொள்கைதான் காரணம். தமிழ்நாட்டிலே நூற்பு ஆலைகள் மாத்திரம் ஏற்படுத்த லைசென்சுகள் வழங்கப்பட்டன. ஆனால் இந்த நூலைப் பயன்படுத்த நெசவாலைகள், விசைத்தறி ஆலைகள் தமிழ்நாட்டிலே நிறுவப்படவில்லை. ஆலைகளிலே நூற்ற நூலில் கைத்தறிக்கு வேண்டியது போக பாக்கியை வடநாட்டிலே உள்ள நெசவு ஆலைகளுக்கு அனுப்பி ஆகவேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. வட நாட்டிலே படிப்படியாகத தங்களுக்கு வேண்டிய நூற்பு ஆலைகளைப் பெருக்க ஆரம்பித்த உடனே நம்முடைய நூலை விற்பனை செய்வதில் மந்தம் ஏற்பட்டதில் வியப்பில்லை. அதோடுகூட, கூட்டுறவுத்துறையிலும் ஏராளமான பணத்தைச் செலவிட்டு இந்த நூற்பு ஆலைகளைத்தான் அன்று நிறுவினர்களே ஒழிய, நெசவு ஆலைகளையோ, விசைத்தறி ஆலைகளையோ அல்லது வேறு வேலை வாய்ப்புத் தரக்கூடிய தொழில்களையோ போதுமான அளவு நிறுவவில்லை.

### சில புள்ளிவிவரங்கள்

| 1969ஆம் ஆண்டில் | வேலை நிறுத்தங்கள் | இழக்கப்பட்ட வேலைநாட்கள் |
|---|---|---|
| தமிழ்நாடு | 171 | 6,84,500 |
| மேற்கு வங்காளம் | 352 | 97,92,036 |
| மகாராட்டிரம் | 616 | 12,07,119 |
| கேரளம் | 181 | 14,26,596 |


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கலைமிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB
உயர் ரகத்தைக் குறிக்கும்
வாட்டர் மார்க்



FDS.SPB 777 TMA

முந்திய அரசின் குறைகளால் ஏற்பட்ட விளைவுகளைச் சமாளிப்பதில் இப்போதைய அரசு பெரும் கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது. முதலாவதாக, வேலை இழந்த தொழிலாளர்களுக்கு உதவிப் பணமாக அரசு 2 லட்சம் ரூபாய் கொடுத்தது. இரண்டாவதாக, மூடிய தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு வங்கிகளிலே இருந்து பண உதவி பெறுவதற்காக அரசு உத்திரவாதம் அளித்து உதவி செய்தது. இவ்வாறு வங்கிகளில் உதவி பெற்றுத் திறக்கப்பட முடியாத நூற்பு ஆலைகளுக்குப் பரிசீலனைக் குழுக்கள் அமைத்து அக்குழுக்களின் பரிந்துரைப்படி அரசே அவ்வாலைகளை எடுத்து நடத்த முன்வந்திருக்கிறது. இம்மாதிரி ஆலைகளை எடுத்து நடத்துவதற்குத் தமிழ்நாடு அரசு ஒரு பஞ்சாலை நிறுவனத்தை (Tamil Nadu Textile Corporation) மாநில ரீதியில் ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்வாறு 1969-ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட மில்களின் எண்ணிக்கை மொத்தம் 15.

## மே தினம் — சம்பளத்துடன் விடுமுறை

மே தினம் என்பது உலகத் தொழிலாளர்களுக்கு ஒரு திருநாள். தொழிலாளர்களுக்கு உள்ள உரிமையைப் பெற்றதைக் கொண்டாடும் நாள். தொழிலாளர்கள்மேல் பற்றுதல் கொண்ட அறிஞர் அண்ணா, இந்நாளை ஊதியத்தோடு கூடிய விடுமுறை நாளாகத் தொழிலாளர்கள் பெறவேண்டும் என்று பலமுறை வற்புறுத்தியிருக்கின்றார்கள். ஆனால் அன்றைய ஆட்சியில் காந்தி பிறந்த நாளுக்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறைவிடச் சட்டத்தைத் திருத்த முன்வந்தபோது, மே தினத்திற்கும் அவ்வாறு விடுமுறை வேண்டும் என்று கேட்டது தட்டிக் கழிக்கப்பட்டது. இன்று, அண்ணா கண்ட கனவு நனவாகின்ற முறையிலே மே தினம் ஊதியத்தோடு கூடிய விடுமுறையாகத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

முந்தைய 20 ஆண்டுக்கால ஆட்சியிலே, தொழிலாளர் நலனுக்கு என்று திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லை. இப்போது, தொழிலாளர்களின் நலனுக்காகத் திட்டங்களை மேற்கொள்வதற்காகத் தொழிலாளர் நல நிதி ஒன்றைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியிருக்கிறது. அந்த நிதிக்கு தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் கொடுக்கின்ற தொகையோடு அரசு 5 லட்ச ரூபாய் வழங்கியிருக்கின்றது.

## தொழிலாளர் குடும்பத்துக்குச் சத்துணவு

தொழிலாளர்களின் குடும்பங்களில் உள்ள தாய்மார்களும் குழந்தைகளும் நோய்வாய்ப்படாமல் இருக்கவும், குழந்தைகள் நல்ல வளர்ச்சி அடையவும் அவர்களுக்கு நாள்தோறும் இலவசமாகச் சத்துணவு அளிக்கத் தமிழக அரசு இந்தியாவிலேயே முதல் முறையாகத் திட்டம் வகுத்துச் செயல்படுத்தியிருக்கிறது. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த 'கேர்' நிறுவனத்தாரின் உதவியுடனும் தொழில் அதிபர்களின் ஒத்துழைப்பாலும் இயங்கும் இத்திட்டம் ஏறக்குறைய 20,000 பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பயன் அளித்து வருகிறது.

## குறைந்த அளவு ஊதிய நிர்ணயம்

தொழிற்சங்க பலம் இல்லாத காரணத்தினாலும், நாட்டில் பரவிக் கிடக்கும் சில தொழிற்சாலைகளில் போதிய ஊதியம் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படாமல் இருக்கிறது. இதைச் சரிப்படுத்துவதற்காக, இத்தொழில்களில், குறைந்த அளவு ஊதியம் நிர்ணயம் செய்து, அந்த அளவு ஊதியத்திற்கும் குறைவாகக் கொடுக்கக்கூடாது என்று ஆணை பிறப்பித்து, அது நடைமுறையில் கொடுக்கப்படுகின்றதா என்று கண்காணிப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இப்படிப் பயன் பெற்ற தொழிலாளர்கள், பீடித் தொழில், பனியன் நெசவு, தோல் பதனிடும் தொழில், எண்ணெய் ஆலைகள், செங்கற்சூளை, உப்பளம் முதலியவற்றில் வேலை செய்பவர்கள்தான். மேலும், படகுத் தொழில், தங்க நகைத்தொழில், மரவேலை, விசைத்தறி முதலிய தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கும் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயம் செய்வது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

## தொழிலாளர் அரசு ஈட்டு உதவித் திட்டம் (இ.எஸ்.ஐ.)

இத்திட்டத்தில் தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி அளிப்பதோடு மற்ற பல உதவிகளும் அளிக்கப்படுகின்றன. 1966-67ஆம் ஆண்டு மருத்துவ வசதிக்காகச் செலவழித்த தொகை 94 லட்ச ரூபாய். 1969-70ல் இது 203 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அதே மாதிரி இத்திட்டத்தினால் பயன்பெறுகின்ற தொழிலாளர்களின் குடும்பங்களின் எண்ணிக்கையும் 1967 ஆம் ஆண்டு ஏப்ரலில் 6,36,500 ஆக உயர்ந்தது. தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதி அளித்திருக்கிறது. கோவையில், 500 படுக்கைகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவமனையும் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு நம் மாநிலத்திற்குக் கொடுக்கப்படும் உதவி குறைக்கப்பட்டிருந்தாலும் அப்படிக் குறைக்கக் கூடாது என்று மத்திய அரசுக்குப் பலமுறை முதல்வரும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் எடுத்துக் கூறி வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். கோவையில் கட்டப்பட்ட மருத்துவ மனையை விரைவிலே திறப்பதற்கும் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இம் மருத்துவ மனையைத் திறப்பதற்குத் தாமதம் ஏற்பட்டு வருகிறது. மத்திய அரசு இம்மருத்துவ மனையில் உள்ள படுக்கைகள் குறைக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. அம்மாதிரி படுக்கைகள் குறைக்கப்படாமல் அம் மருத்துவமனை திறக்கப்படவேண்டுமென்று தமிழக அரசு கருதுகிறது. அதனால் தான் தாமதம் ஆகிறது.

இ.எஸ்.ஐ. திட்ட வசதிகளைத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வடலூர், நெல்லிக்குப்பம் பகுதிகளுக்கும் செங்கல்பட்டு மாவட்டம் மீஞ்சூர் பகுதிக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் நாட்டில் தொழிலாளர் அடைந்துள்ள சம்பள உயர்வுகள் சில

தமிழக மின்சார வாரியம் ரூ. 4 கோடி

பதிவு பெறாத அரசின் ஊழியர்கள் ரூ. 6 கோடி

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ரூ. 1 கோடி (சுமார்)

1967 முதல் 1969ஆம் ஆண்டு முடிய பிராவிடன்ட் பண்டுத் திட்டத்தில் கட்டுப்பட்டுள்ள நிறுவனங்களில் மட்டும் தொழிலாளர் ஊதியத்தில் ரூபாய் இருபது கோடிக்கு மேல் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. தமிழக சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத இடைக்கால சம்பள உயர்வு இருமுறை வாங்கித்தரப்பட்டிருக்கிறது.

□□□


ஏழைகளின் முகத்தில் புன்னகை தவழச் செய்த
தமிழ்நாடு அரசின் சாதனை
நிலமற்றோருக்குச் சட்டபூர்வமாக
நிலப்பட்டா
வீட்டுமனைகள்

1134

## தஞ்சை மாவட்டத்தில்

1-3-67 முதல் 31-12-70 வரை

| | |
|---|---|
| நிலப்பட்டா பெற்றவர் | 21,417 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 23,605 ஏக்கர் |
| மனைப்பட்டா பெற்றவர் | 26,651 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 1,115 ஏக்கர் |

## இராமநாதபுரம் மாவட்டத்தில்

1-3-67 முதல் 31-12-70 வரை

| | |
|---|---|
| நிலப்பட்டா பெற்றவர் | 25,656 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 58,799 ஏக்கர் |
| மனைப்பட்டா பெற்றவர் | 3,268 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 120 ஏக் |

## மதுரை மாவட்டத்தில்

1-3-67 முதல் 31-12-70 வரை

| | |
|---|---|
| நிலப்பட்டா பெற்றவர் | 12,525 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 35,046 ஏக்கர் |
| மனைப்பட்டா பெற்றவர் | 10,071 பேர் |

## திருச்சி மாவட்டத்தில்

1-3-67 முதல் 31-12-70 வரை

| | |
|---|---|
| நிலப்பட்டா பெற்றவர் | 20,248 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 42,583 ஏக்கர் |
| மனைப்பட்டா பெற்றவர் | 29,235 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 1,062 ஏக்கர் |

## தென் ஆர்க்காடு மாவட்டத்தில்

1-3-67 முதல் 31-12-70 வரை

| | |
|---|---|
| நிலப்பட்டா பெற்றவர் | 25,550 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 47,420 ஏக்கர் |
| மனைப்பட்டா பெற்றவர் | 67,325 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 1,715 ஏக்கர் |

## வட ஆர்க்காடு மாவட்டத்தில்

1-3-67 முதல் 31-12-70 வரை

| | |
|---|---|
| நிலப்பட்டா பெற்றவர் | 32,576 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 54,499 ஏக்கர் |
| மனைப்பட்டா பெற்றவர் | 60,154 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 1,860 ஏக்கர் |

## கோவை மாவட்டத்தில்

1-3-67 முதல் 31-12-70 வரை

| | |
|---|---|
| நிலப்பட்டா பெற்றவர் | 7,271 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 20,242 ஏக்கர் |
| மனைப்பட்டா பெற்றவர் | 35,497 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 1,098 ஏக்கர் |

## நீலகிரி மாவட்டத்தில்

1-3-67 முதல் 31-12-70 வரை

| | |
|---|---|
| நிலப்பட்டா பெற்றவர் | 71 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 110 ஏக்கர் |
| மனைப்பட்டா பெற்றவர் | 962 பேர் |
| வழங்கப்பட்ட நிலம் | 28 ஏக்கர் |

## செங்கற்பட்டு மாவட்டத்தில்

| | | |
|---|---|---|
| 1-3-67 | நிலப்பட்டா பெற்றவர் | 14,455 பேர் |
| முதல் | வழங்கப்பட்ட நிலம் | 29,002 ஏக்கர் |
| 31-12-70 | மனைப்பட்டா பெற்றவர் | 22,272 பேர் |
| வரை | வழங்கப்பட்ட நிலம் | 1,014 ஏக்கர் |

## தர்மபுரி மாவட்டத்தில்

| | | |
|---|---|---|
| 1-3-67 | நிலப்பட்டா பெற்றவர் | 16,139 பேர் |
| முதல் | வழங்கப்பட்ட நிலம் | 29,442 ஏக்கர் |
| 31-12-70 | மனைப்பட்டா பெற்றவர் | 5,173 பேர் |
| வரை | வழங்கப்பட்ட நிலம் | 151 ஏக்கர் |

## சேலம் மாவட்டத்தில்

| | | |
|---|---|---|
| 1-3-67 | நிலப்பட்டா பெற்றவர் | 10,360 பேர் |
| முதல் | வழங்கப்பட்ட நிலம் | 26,777 ஏக்கர் |
| 31-12-70 | மனைப்பட்டா பெற்றவர் | 6,155 பேர் |
| வரை | வழங்கப்பட்ட நிலம் | 166 ஏக்கர் |

## திருநெல்வேலி மாவட்டத்தில்

| | | |
|---|---|---|
| 1-3-67 | நிலப்பட்டா பெற்றவர் | 5,373 பேர் |
| முதல் | வழங்கப்பட்ட நிலம் | 13,239 ஏக்கர் |
| 31-12-70 | மனைப்பட்டா பெற்றவர் | 4,715 பேர் |
| வரை | வழங்கப்பட்ட நிலம் | 176 ஏக்கர் |

## தமிழ்நாடு முழுவதும்

| | | |
|---|---|---|
| 1.3.67 முதல் | நிலப்பட்டா பெற்றவர் | 1,91,641 பேர் |
| 31.12.70 | வழங்கப்பட்ட நிலம் | 3,80,764 ஏக்கர் |
| வரை | மனைப்பட்டா பெற்றவர் | 2,71,478 பேர் |
| | வழங்கப்பட்ட நிலம் | 8,505 ஏக்கர் |

117

# கதர்-கிராமத் தொழில்கள்

## சாதனைகள்

## ஆக்கம் மிகுந்தது!

## அச்சம் அகன்றது

"இவ்வரசு ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு கதர்த் திட்டம் கை விடப்படுமோ எனும் அச்சம் பலரிடம் இருந்ததுண்டு. ஆனல் பேரறிஞர் அண்ணு அவர்கள் 'இந்தத் திட்டம் பல்லாயிரக்கணக்கான மக் களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. உழைத்து வாழும் உணர்வைப் போதிக்கிறது. ஆகவே இதை மனி தாபிமானக் கண்ணேட்டத்துடன் தான் காணவேண்டும்' என்று கூறி ஞர்கள்'' —முதல்வர் கலைஞர் கருணுநிதி அவர்கள்.

| | அன்றும் 1966-67 | இன்றும் 1969-70 | 1970-71 அக்டோபர் முடிய |
|---|---|---|---|
| அ. நூல் உற்பத்தி (சிட்டங்கள்) | 2,59,89,847 | 3,07,68,271 | 1,84,31,975 |
| ஆ. கதர் உற்பத்தி : (மதிப்பு ரூபாய்) | | | |
| 1. பருத்தி | 1,53,03,005 | 1,58,17,237 | 1,11,03,400 |
| 2. பட்டு | 36,75,993 | 49,20,978 | 39,57,430 |
| 3. கம்பளி | | 8,340 | 4,573 |
| இ. கதர் விற்பனை: | ரூ. 2,02,91,165 | 2,83,58,319 | 2,82,37,430 |
| ஈ. ஊதியம் வழங்கியது: | | | |
| 1. நூற்போர் | ரூ. 64,67,228 | 70,40,340 | 36,53,767 |
| 2. நெய்வோர் | ரூ. 42,32,008 | 48,52,526 | 31,64,349 |

இவ்வடிப்படையில் இந்த அரசு கதர்த்திட்டத்தை ஊக்குவித்து வரு வது, இங்கு தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களால் புலப்படும்.

### அடிப்படை நோக்கங்கள்

இவ்வரசு கதர் வளர்ச்சித் திட்டத்தை மூன்று அடிப்படை நோக் கங்களுடன் மேற்கொண்டது.

1) கிராமங்களிலே வேலே வாய்ப் பற்ற நிலேமையையும், போதிய வேலே வாய்ப்பில்லாத நிலேமையை யும் போக்குவது.

2) கிராமங்களிலுள்ள வேளாண் மைக் குடிமக்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை நூல் நூற்பதில் செல விட்டுத் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வகைசெய்வது.

3) கிராம மக்கள் தங்களுக்கு வேண்டிய துணிகளுக்கு மற்றவர் களே நம்பியிராமல் அவர்களேத் தன் னிறைவு உள்ளவர்களாக ஆக்குவது, ஆகியவையே ஆகும்.

### வேலே வாய்ப்பு

கதர் வேலேத் திட்டத்தில் சுமார் ஒரு லட்சம் நூற்பாளர்களும், நெச வாளர்களும் ஏனைய பணியாளர் களும் வேலே வாய்ப்புப் பெறுவதில் நல்ல முன்னேற்றம் காணப்படு கிறது. ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் தொழிலாளர் களுக்கு ஊதியம் அளிக்கப்படுகிறது.

### விற்பனே பெருகுகிறது

சென்ற நான்கு ஆண்டுகளில் இவ் வரசு எடுத்துக்கொண்ட சிறப்பு முயற்சியின் காரணமாகத் தீபாவளி, பொங்கல் பண்டிகைகளின் போது கதர் விற்பனே குறிப்பிடத்தக்க அளவு பெருகியுள்ளது. அவ்வமயங்

களில் கதர்த் துணி விற்பனைக்குச் சிறப்புத்தள்ளுபடி வழங்கப்பட்டது. 1966-67ம் ஆண்டில் ரூ. 202.91 லட்சம் விற்கப்பட்டதற்கு மாறாக, 1967-68ல் ரூ. 208.56 லட்சமும், 1968-69ல் ரூ. 221.44 லட்சமும் 1969-70ல் ரூ. 283.58 லட்சமும், 1970-71ம் ஆண்டில் அக்டோபர் மாதம் முடிய ரூ. 282.37 லட்சத்திற்கும் கதர்த் துணி விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதிலிருந்து விற்பனை வளர்ந்து வருகிறது என்பது தெளிவாகும். கதர்த் துணியின் இருப்பு தேக்கமுறாமல் இருப்பதற்காகத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 171 விற்பனை நிலையங்களை இயக்கி வருகின்றது. இவ்வரசு பொறுப்பேற்றபின் சென்னையில் பல அடுக்குகள் கொண்டதோர் 'குறளகம்' என்னும் கட்டடம் திறக்கப்பட்டு, அதில் பெரிய அளவில் கதர் - கைத்தொழில் அங்காடி ஒன்று திறக்கப்பட்டுள்ளது. திருச்சியிலும், கோவையிலும் பேரங்காடிகள் இயங்கி வருகின்றன. மற்றப் பெரிய நகரங்களிலும் பேரங்காடிகள் திறக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. மதுரையில் காந்தியடிகள் தம் ஆடை மாற்றம் செய்த இடத்தை வாங்கி அதில் பேரங்காடி துவக்க ஏற்பாடாகியுள்ளது.

## இந்தியாவிலேயே சிறந்த முறையில் இயங்கி வருவது

## பெருக்கம் சேர்க்கும் பெருமை முயற்சிகள்

கதர்த் துணியின் விலையைக் குறைத்தாலன்றி கதர் விற்பனையைக் கணிசமான அளவுக்குப் பெருக்க இயலாது. அதன் விளைவாகக் கதர் நூல், கதர்த் துணி, உற்பத்தியை அதிகப்படுத்தவும் முடியாது. இச்சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன், அனைத்திந்தியாவிலும் இதுவரையில் இல்லாத 12 கதிர்கள் கொண்ட அம்பர் இராட்டைகளைப் பழக்கத்திற்குக் கொண்டுவரும் ஒரு பெரும் திட்டத்தைத் தொடங்கியது. இதுவரையில் 65 கிராம துணி உற்பத்தித் தொழில் நிலையங்கள் செயல்படத் துவங்கியுள்ளன. இவைகளினால் நூல் உற்பத்திச் செலவு குறைவதுடன் மலிவான பருத்தி ரகங்கள் விற்பனை செய்யவும் ஏதுவாகும். மேலும் இந்த இராட்டைகளில் நேர்த்தியான தரமும் உரமுள்ள இழை நூலை உற்பத்தி செய்து கதர்த் துணியில், நல்ல நேர்த்தியான ரகங்களின் உற்பத்தியையும் பெருக்கிட முடியும். இவ்வகைத் துணி உற்பத்தியைப் பெருக்கிட ஐந்து துணி உற்பத்தி நிலையங்களை ரூ. 5.90 லட்சம் செலவில் துவக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் மற்ற மாநிலங்களிலுள்ள துணி வகைகளை நமது மாநிலத்திலும் புகுத்திப் பட்டாடை உற்பத்தியையும் அதிகரிக்க அனுமதிக்கப்பட்டு உள்ளது. பட்டு உற்பத்தியிலும் கணிசமான அளவை எய்தியுள்ளது.

இதுகாறும் கதர்த் துணிகளைப் பம்பாயில் அச்சடித்து வந்ததற்குப் பதிலாக ஈரோட்டிலும், திருப்பூரிலும் அச்சடிப்பதற்கான புதிய வசதிகள் சென்ற இரண்டாண்டுக் காலமாக செய்யப்பட்டுள்ளன. கம்பளி உற்பத்தியும் சென்ற ஆண்டு துவக்கப்பட்டுள்ளது.

## கிராமத் தொழில்கள்

கிராமப்புறங்களில் நிலவும் வறுமை நிலையைப் போக்கவும் உள்ளூரில் கிடைக்கும் மனித உழைப்புத் திறனையும் பொருள்களையும் பயன்படுத்தவும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் மக்களின் இன்றியமையாத் தேவைகளுக்கு வகை செய்யவும் கிராமத்தொழில் திட்டங்கள் வகைப்படுத்தப்பட்டு பனைவெல்லம், நாட்டுச்செக்கு எண்ணெய், தோல், தேன், நார், கைக்குத்தல் அரிசி, மட்பாண்டம், தச்சுக் கொல்லுத் தொழில் போன்ற 19 கிராமத்

| | அன்றும் | | இன்றும் |
|---|---|---|---|
| | 1966-67 | 1969-70 | 1970-71 அக்டோபர் முடிய |
| இலாகா அலகுகள் (எண்ணிக்கை) | 288 | 315 | 315 |
| கூட்டுறவுச் சங்கங்கள் (எண்ணிக்கை) | 2238 | 2403 | 2412 |
| உற்பத்தி மதிப்பு (லட்சத்தில்) | 770.62 | 933.15 | 370.59 |
| விற்பனை மதிப்பு (லட்சத்தில்) | 882.47 | 1012.86 | 402.81 |
| வேலை வாய்ப்பு (எண்ணிக்கை லட்சத்தில்) | 2.459 | 2.722 | 2.362 |

# தமிழ்நாடு கதர்-கிராமத்தொழில் வாரியமே

தொழில்களை வாரியம் நேரடியாக அலகுகளின் மூலமும் அத்தொழில்களுக்கென ஏற்படுத்தப்பட்ட கிராமத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும் இயக்கி வருகின்றது. இவைகளில் 3 லட்சத்திற்கும் அதிகமான பேர்கள் வேலைவாய்ப்புப் பெற்று மூன்று கோடி ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைப், பின்வரும் புள்ளி விவரங்களில் காணலாம்.

## பனையில் அந்நியச் செலாவணி

கதருக்கு அடுத்தபடியாகக் கிராமத் தொழில்களில் பனைவெல்லத் தொழில் முக்கியப் பங்கு பெறுகிறது. மதுவிலக்கு, செயலுக்குக் கொண்டு வரப்பட்டதனால் வேலையிழந்தவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வகை செய்யும் நோக்குடன் பனைவெல்ல கிராமத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. பனைப் பொருட்கள் பலவிதங்களில் பயன்படுத்தப்படுகின்றன. பனை ஓலைத் தொழில், நார், பழம் பக்குவப்படுத்தல், ''பாம்கோலா'' முதலிய தொழில்களில் கணிசமான முன்னேற்றம் காணப்படுகிறது. ரூ. 32.83 லட்சம் மதிப்புள்ள பனை நார்த் தும்புகள் முதலியன வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி பெறுவதற்கு வகையாய் அமைந்துள்ளன. இதேபோன்று (பிரஷ்) துடைப்பான்களை இங்கு உற்பத்தி செய்து வெளிநாடுகட்கு அனுப்புவதன் மூலம் கணிசமான அந்நியச் செலாவணியைப் பெறும் சிறந்த திட்டம் ஒன்றை வாரியம் ஆய்ந்து வருகிறது.

பதனீர் இறக்குவோர் விபத்து நலனுதவித் திட்டம் ஒன்றினை வாரியம் சென்ற ஆண்டு துவக்கியுள்ளது. இதுவரையில் ரூ. 45,900 விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

## கழிவிலிருந்து வளமை

அடுத்து, நாட்டுச் செக்குப் பிண்ணாக்கிலிருந்து மீண்டும் எண்ணெய் பிழிந்து எடுக்கும் நவீன சாதனங்களை நாமக்கல்லில் ரூ. 10.67 லட்சம் செலவில் நிறுவிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழிந்து சோப்புச் செய்யப் பயன்படுத்துவதற்கென தமிழ்நாடு எண்ணெய் மற்றும் சம்பந்தப்பட்ட பொருட்கள் சம்மேளனம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மூன்று எண்ணெய் பிழியும் கருவிகளுக்கான விலையில் 10ல் ஒரு பகுதியாக ரூ. 3 லட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

உண்ணா எண்ணெய்யிலிருந்து இதுவரையில் துணி வெளுக்கும் சோப்புகள் செய்யப்பட்டன. தற்போது குளிப்பதற்குப் பயன்படும் நறுமண சோப்புகளையும் உற்பத்தி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## பசுமைப் புரட்சிக்கு உறுதுணை

கிராமப் புறங்களிலே இயக்கிவரப்படுகின்ற இயந்திர சாதனங்களை ஆங்காங்கே அவ்வப்போது தச்சு முறையில் பழுதுபார்த்து ஆவன செய்வதற்குவேண்டி, தச்சு, கருமார் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 21 ஏற்படுத்தப்பட்டு அவைகள் சிறந்த பயனுள்ள வகையில் வேலை செய்து வருகின்றன.

கிராமங்களில் மேலும் விவசாயத் தொழில் புரட்சியை வளர்க்கு முகத்தான் ஒவ்வொரு வட்டத்திலும் கிராமீயத் தொழிற்பேட்டைகள் அமைக்கவும், அதில் மின் வசதி, தண்ணீர் வசதி போன்ற இன்னபிற வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலமும் வேலை வாய்ப்பின்றி இருக்கும் படித்தவர்கள் தங்கள் தங்கள் திறமைக்கேற்ற தொழில்களை நிறுவிட வாய்ப்பளிக்கவும் இவ்வாரியம் முன் வந்துள்ளது. அதன்படி, முதற்கண், ஒன்பது கிராமீயத் தொழிற்பேட்டைகள் ரூ. 13.53 லட்சம் மதிப்பில் அமைத்திட அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவைகளுக்கான கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

## வாரிய ஊழியர்களுக்கான சலுகைகள்:

தற்காலிக நிலையில் இருந்துவந்த வாரிய ஊழியர்களின் நிலையை நிரந்தரப்படுத்திப் பல்வேறு பதவிகளையும் நிலைப்படுத்தித் துறையை, ஊழியர்களின் நம்பிக்கைக்கு உறுதுணையான ஓரமைப்பாக இவ்வரசு செய்தது. அதையொட்டி ஆயிரக்கணக்கான வாரிய ஊழியர்களின் பணி வரன்முறைப் படுத்தப்பட்டது. மற்றும் வாரிய ஊழியர்களுக்குக் கடந்த இரண்டாண்டுகளாகத் தீபாவளிப் பருவத்தின் போது தலைக்கு ரூ. 25 மதிப்புள்ள கதர்த்துணி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

இவற்றைத் தவிர, வாரிய ஊழியர்களுக்கு அரசு அளிக்கும் பஞ்சப்படி, மற்ற சலுகைகள் யாவும் பொருந்துமாறும் செய்ததோடு வீடு கட்ட, வாகனம் வாங்க, திருமணம் செய்ய முன்பணம் வழங்கும் சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளன.

"சுதந்திரம் புது எல்லைகளுக்கு வழிகாட்டும்போது, இந்தியா
மறுபடியும் தன் மேன்மையை உணரும். அதுபோது,
துன்பங்களும், அவலங்களும் நிறைந்த கடந்த காலத்தைவிட,
எதிர்காலமே இந்தியாவை ஈர்த்துக்கவரும். தன்னுள்ளே நிலைத்து
நின்றபோதினும், பிற நாட்டினரிடமிருந்து வேண்டியன
கற்கவும், அவர்களுடன் கூட்டுறவு கொள்ளவும்
ஊக்கம்கொண்டு, நம்பிக்கையோடு இந்தியா முன்னேறிச்செல்லும்.

—ஜவஹர்லால் நெஹ்ரு

ஒரு மாண்புடை இந்தியரின் கனவு நிறைவேறியுள்ளது. மதராஸ் ரி:ஃபைனரீஸ் லிமிடெட் மூலம் வளமான எதிர்காலத்தை நோக்கி மற்றுமொரு உறுதியான அடி எடுத்து வைத்துள்ளது இந்தியா. மதராஸ் ரி:ஃபைனரீஸ், இன்று இந்தியர்களால் இயக்கப்பட்டு, இந்திய மண்ணில் நிற்கும் ஒரு இந்திய நிறுவனமாகும். எனினும், அதன் அமைப்பில், அமெரிக்க, ஈரானிய, இத்தாலிய நிறுவனங்களின் தொழில் நுட்பமும், செலாவணியும் பங்கு பெற்றுள்ளன. அவர்களின் கூட்டுறவு மூலம், தொழில் நுட்பவியல், மூலக் கச்சாப் பொருள், அன்னிய செலாவணி முதலிய நற்பலன்கள் இந்தியாவிற்குக் கிடைத்துள்ளன.

இன்று, மதராஸ் ரி:ஃபைனரீஸ் பலவகைப் பெட்ரோலிய பொருட்களைத் தயாரிக்கின்றது. இவற்றில் சில இந்தியாவில் முதன்முறையாக ஆக்கப்படுவதாகும். இப் பெட்ரோலிய தயாரிப்புகள், இந்திய இல்வாழ்க்கை, வேளாண்மை, தொழில், போக்குவரத்து முதலியவற்றூடே புதுமையைப் புகுத்தி, பலவேறு துறைகளிலும் இந்தியாவின் முன்னேற்ற வேகத்தை அதிகரிக்கின்றன.

கடினமான உழைப்புடன், நண்பர்கள் உதவியும் சேரும்பொழுது, பெருங்கனவுகளும் நனவாகின்றன.

MRL

மதராஸ் ரி:ஃபைனரீஸ் லிமிடெட்
122-D, மவுண்ட்ரோட், சென்னை-6

EP.MRL-8



ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிட்டது, வடபழனி அச்சகம், சென்னை-26.



நெசவோ ஒப்புயர்வற்றது.
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ஆடைகள்
சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு
தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்
பாலசுந்தரம் பில்டிங்ஸ்,
எழும்பூர், சென்னை-8.

பதிவு எண் M 8657



# சாதனை மலர்

பிப்ரவரி 1971 50 காசு